Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெய்வ மாக்கவிகள்

மு. இராமசாமி இராசிபுரம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

j Foundation C

தெய்வ மாக்கவிகள்

n. Gurukul Kang

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय, हरिद्वार
कृपया पुस्तक के ऊपर कोई निशान आदि
न लगायें।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

D 6855

पुस्तकालय
गुरुकुल काँगड़ी विश्वविद्यालय, हरिद्वार

वर्ग संख्या........—......—....आगत संख्या...............

पुस्तक-वितरण की तिथि नीचे अंकित है। इस तिथि सहित २० वें दिन तक यह पुस्तक पुस्तकालय में वापिस आ जानी चाहिए। अन्यथा १० पैसे के हिसाब से विलम्ब-दण्ड लगेगा।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெய்வ மாக்கவிகள்

"Forwarded free of cost, and with the compliments of the Department of Education, Govt. of India, New Delhi."

6855

DONATION

மு. இராமசாமி
இராசிபுரம்.

திருவரங்க பதிப்பகம்
இராசிபுரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதற்பதிப்பு : 10—8—89

உரிமை ஆசிரியர்க்கு

திருவரங்க பதிப்பக நூல் 18

நாமக்கல் கம்பன் கழக 28வது ஆண்டு விழாவில்
வெளியீடு செய்யப்பெற்றது.

விலை: ரூ. 25.00

நூல் கிடைக்குமிடம்:

திருவரங்கப் பதிப்பகம்
7, எல்லப்பச் செட்டியார் காலனி,
இராசிபுரம் - 637 408
சேலம் மாவட்டம்.

அச்சிட்டோர் :
சன் - மூன் பிரிண்டர்ஸ்
அம்மாப்பேட்டை, சேலம்-636 003 போன் : 66785 pp

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"Forwarded free of cost, and with the compliments of the Department of Education, Govt. of India, New Delhi."

பொருளடக்கம் :

1.	தெய்வ மாக்கவிகள்	1
2.	நாடு	31
3.	வாய்மை	45
4.	விழுச்செல்வம்	102
5.	நட்பு	149
6.	சொல்வன்மை	179
7.	செய்ந் நன்றி அறிதல்	198
8.	சான்றாண்மை	212

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ:

நீதிபதி

டாக்டர். திரு. மு. மு. இஸ்மாயில்

அவர்களுக்கு

அன்புப் படையல்

நீதியாம் தராசைக் கையினிற் கொண்டு
நித்தமும் அறத்தினைத் தேர்ந்தோன்:
ஆதியொ டந்த இல்லஅல் லாவை
அகத்துறு விளக்கெனப் பெற்றோன்:
சோதியார் கம்பன் இதயஆ ழத்து
தூயபன் மணிகளை எடுத்தோன்:
கோதிலாத் தலைவன் எங்கள்இஸ் மாயில்
கொள்கைக்குக் காணிக்கை யிந்நூலே,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூலின் பெயர்	:	தெய்வ மாக்கவிகள்
ஆசிரியர்	:	மு. இராமசாமி
பதிப்பு	:	முதற்பதிப்பு
ஆண்டு	:	10-8-1989
மொழி	:	தமிழ்
உரிமை	:	ஆசிரியர் மு. இராமசாமி
தாள்	:	டபுள் கிரவுன் 10·9
அளவு	:	1 X 16
பக்கம்	:	6+12+222+6+8=254
எழுத்து	:	10, 12 புள்ளி
கட்டு	:	அட்டைக் கட்டு லேமினேசன்
படிகள்	:	1000
விலை	:	ரூ. 25-00
அச்சிட்டோர்	:	சன்-மூன் பிரிண்டர்ஸ், சேலம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ :

ஆசை பற்றி அறையலுற்றேன்

'திருக்குறள் விரிவுரை செய்தவ போற்றி'

இது, கம்பன் மலர் வணக்கப் போற்றித் திரு அகவலுள் கலந்து இணைந்துள்ள கவிதைத் தொடர். இது அரை நூற்றாண்டுக்கு மேலாக, காரைக்குடிக் கம்பன் திருநாள் விழாவில் ஒலித்துக்கொண்டிருப்பது.

இதனை உருவாக்கியவர், வள்ளுவத்தை நன்கு உணர்ந்து தெளிந்தவர்: கம்பன் காப்பியத்தையும் கருத்தூன்றிக் கசடறக் கற்று, அது தரும் கவிதை இன்பத்தைத் துய்த்துத் துய்த்து அதனோடு ஒன்றாக இணைந்தவர்! அதனால், 'கணேசன்' என்ற தம் இயற்பெயரை 'கம்பன் அடிப்பொடி' என்று மாற்றி அமைத்துக்கொண்டவர். தேசிய சிந்தனையில் வளர்ந்த தம் உள்ளத்தை, கம்பன் தந்த காப்பியத் தேனில் குழைத்துக் கொண்டவர்: தம் பிற்கால வாழ்வில் கவிச்சக்கரவர்த்தி கம்பனையே வழிபடு தெய்வமாக்கிக்கொண்டவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவர், தமிழுக்குக் 'கதிர்' எனப்படும் இரு பெருங் கவிஞர்களது நூல்களை இணைத்து வைத்து, அதன் பொருளைத் தெளிவாக உணர்ந்தவர். அதனால் திருக்குறளுக்கு, ஒரு விரிவுரையாக அமைந்ததுதான் கம்பன். காப்பியம்' என்ற தீர்மானத்துக்கு வந்தார் இவர். ஆகவே, வழிபடு தெய்வமாகிய கம்பனைப் போற்றிப்பாடும் திரு அகவல் கவிதையுள் இத்தொடரை ஒன்றாக இணைத்து வைத்துள்ளார் கம்பன் அடிப்பொடி அவர்கள்.

அகவலாக அமைந்த இந்த இயல் தமிழை, இசைத் தமிழாக்கிப் பாடும்போது, கம்பனில் தோய்ந்த உள்ளத்தினர் அனைவரும், இதன்பால் இழுக்கப்பட்டுவிடுவார்கள்.

அப்படி இழுக்கப்பட்டவர்களுள் அடியேனும் ஒருவன் கால்நூற்றாண்டுக்கு மேலாக, காரைக்குடிக் கம்பன் விழாவில் கலந்துகொள்கின்ற அடியேன், இந்த அருந்-தொடரைச் சிந்தித்துக்கொண்டிருந்தேன்.

'திருவள்ளுவர் தந்த திருக்குறள், நீதி நூல், கம்பர் படைத்தது காப்பியப் பெருநூல், இது எப்படி திருக்குறளின் விரிவுரையாகும்?' என்பதுதான் என் சிந்தனையில் எழுந்த கேள்வியாகும்.

இத்தனை ஆண்டுக் காலச் சிந்தனை வளர்ச்சி, அந்தக் கேள்விக்கு விடைதந்தது. 'கம்பன் அடிப்பொடி அவர்களின் உள்ளத்து உதித்தெழுந்த அந்தத் தொடர், உண்மையைத் தழுவியதுதான்' என்று உணர்ந்தேன். அந்த உணர்ச்சி, அவர் தம் உள்ளக் கருத்துத் தெளிவுரைத், தொடருக்கு, ஒரு விரிவுரை எழுதத் தூண்டியது.

அந்த தூண்டுதலின் வெளிப்பாடுதான் இச்சிறு நூல் அமரராக அங்கு அமர்ந்துள்ள கம்பன் அடிப்பொடி அவர்-களின் பக்தி உள்ளத்தில் தோய்ந்து வந்த இந்தத் தொடரின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உண்மைப் பொருளை, இங்கு விரித்துப்பேசி, அவர் தம் எண்ணத்தைச்செயல்படுத்தலாம் என்ற ஆசை பற்றிதான் இதனை எழுதினேன்.

'ஆசை, குற்றம் அறியாது. ஆசையால் எழுந்த இந்நூலுள் குற்றங்கள் இருக்கலாம். அதனை, அறிஞர்கள் எடுத்துக் காட்டினால், அன்போடு ஏற்றுக்கொண்டு, திருத்தம் பெறுவேன்' என்பதைப் பணிவோடு, இதனைக் கண்ணுறும் அறிஞர் பெருமக்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூலுள்:

திருக்குறளின் சொல்லையும், பொருளையும், கருத்து வளத்தையும் கற்பனை நயத்தையும் கம்பர் எந்த எந்தக் கவிதைகளில் எடுத்து கையாண்டுள்ளார் என்பதைக் காட்டுவது இதன் நோக்கம்அன்று.

'மனித வாழ்க்கைக்கு இலக்கணமாக அமைந்த திருக்குறளுக்கு, கம்பர் தந்த காப்பியம் ஒரு இலக்கியமாக அமைந்துள்ளது' என்பதை விளக்கிக் காட்டுவதே இச்சிறு நூலின் குறிக்கோளாகும். அது எவ்வளவு நிறைவேற்றப் பட்டுள்ளது என்பதை அறிஞர் உலகம் தீர்மானிக்க வேண்டும்.

மக்களது நல்வாழ்வுக்கு, இன்றியமையாத நற்குணங்கள், இவை இவைகள் என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் எடுத்துச்சொன்னார். 'அவைகளை வாழ்க்கையில் கடைப்பிடிக்கும்போது, எத்தகைய சிக்கல்கள் வரும்? அவைகளை எப்படிச் சமாளிப்பது? என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளும் வகையில், தாம் படைத்த பாத்திரங்களின் மூலம் விளக்கினார் கம்பர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கவிச்சக்கரவர்த்தி, தம் காப்பியத்துள் படைத்துக் காட்டிய அத்தனைப் பாத்திரங்களையும், திருக்குறள் தரும் அறவுரையின்படியே இயங்கவைத்துள்ளார்' என்றா அதனை மிகையான ஒன்றாக அறிஞர் உலகம் கருதாது என நினைக்கின்றேன்.

குறள் அறம் இயக்கிய சில பாத்திரங்கள் மட்டும் இடம் பெறுகின்றன இங்கு.

வாய்மைக்கு, தசரதன்; விழுச்செல்வத்திற்கு (வேண்டாமை) பரதன்; நட்புக்கு, குகன்; சொல்வன்மைக்கு அனுமன்; செய்ந்நன்றி அறிதலுக்கு, கும்பகர்ணன்; சான்றாண்மைக்கு, இராமபிரான்.

இவர்களது வருகைக்கு முன், வள்ளுவர் வகுத்த நாட்டின் இலக்கணத்திற்கு, கோசல நாடு எவ்வாறு இலக்கியமாகத் திகழ்கிறது என்பது விளக்கப்படுகிறது.

அதற்கும் முன்னதாக 'தெய்வ மாக்கவி' யார்? என்ற சிறு ஆய்வு இங்கு இடம்பெறுகின்றது.

இது, திருவள்ளுவரைத்தான் குறிக்கிறது என்று, அமரர்களான திரு. பாஸ்கரத் தொண்டைமான் திரு. எஸ். மகராஜன் போன்ற பேரறிஞர்கள் அவ்வப்போது கூறியதைக் கேட்டுள்ளேன். அவர்கள், கம்பன் காப்பியத்தை, ரசிகமணி டி. கே. சி. யோடு சேர்ந்து நின்று நன்கு அனுபவித்து ரசித்தவர்கள்: காப்பியத்தை நல்ல முறையில் இலக்கியத் திறனாய்வு செய்தவர்களும் ஆவர்.

அவர்களது கூற்றும், பிற அறிஞர்களது, இது பற்றிய எழுத்தும், 'தெய்வ மாக்கவி' என்று கம்பரால் குறிக்கப்படுபவர் திருவள்ளுவர்தான் என்று என்னைத் துணிய வைத்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அத்துணிவுதான், இந்நூலின் முதல் ஆய்வுரையாக அமைந்துள்ளது.

அணிந்துரை:

'இந்த ஆய்வுச் சிறு நூலுக்கு நல்லதோர் அணிந்துரை வேண்டுமே' என்று எண்ணிக்கொண்டு இருந்தேன். அந்த எண்ணத்தில், இந்நூலின் தோற்றத்திற்கு எந்த ஒரு பக்தித்தொடர் காரணமாக இருந்ததோ, அந்தத் தொடரை உருவாக்கிய கம்பன் அடிப்பொடியே வந்து தோன்றினார்.

தோன்றியவர் எனக்கு வழிகாட்டினார். எப்படி ? நீ என் எண்ணத்தைச் செயல்படுத்தினாய்! "என், எண்ணத்தின் உருவாக அமைந்த இந்த நூலுக்கு அணிந்துரை நல்குபவரும், 'கம்பன் புகழைப் பரப்புவதற்கு என்ன என்ன காரியங்களைச் செய்யவேண்டும் என்று திட்டமிட்டு வைத்திருந்தேனோ, அதனைச் செயல்படுத்துவதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவராகத்தான் இருக்கவேண்டும்' என்று கூறினார். 'அவர் யார்? என்று கேட்டேன்' நான். உடனே தயக்கமின்றி, பதில் வந்தது, 'நான் யார் ஒருவரை, என் மனதில், வாரிசாக எண்ணிக்கொண்டிருந்தேனோ, அவர், என் திட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருப்பதை நீயும் கண்டு கொண்டிருப்பாயே, அவர்தான் உன் நூலுக்கு அணிந்துரை நல்கும் தகுதி படைத்தவர்: அவரிடம் போ' என்று வழிகாட்டினார் அமரர் கம்பன் அடிப்பொடி அவர்கள்.

அவர் காட்டிய வழியில் முன் நிற்பவர் திரு. பழ. பழனியப்பன் என்ற திருநாமத்தினர் என்பதை உணர்ந்தேன். இவர்தான், அவர், திட்டமிட்டிருந்த படி, வெளி மாநிலத்துப் பேரறிஞர்களும் கம்பன் காப்பியப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெருமையைத் தெரிந்து கொள்வதற்காக, அகில இந்திய இராமாயணக் கருத்தரங்கு ஒன்றை, காரைக்குடியில், அண்மையில் நடத்தினார். கம்பன் மணி மண்டபத்துத் தமிழ்த் தாய்க் கோயில் முழுமை பெறுவதற்கும் முய கொண்டிருக்கின்றார்: காரைக்குடியிலும், சென்னையிலும் நடைபெறும் கம்பன் கழகத்து விழாக்களைப் பயனும் பொலிவும் பெற நடத்தும் செயல் வீரராகத் திகழ்கின்றார் அதற்கும் மேலாக, கம்பன் காப்பியத்தை, ஒவ்வொரு காண்டங்களாக, சிறுவர்களும் பயிலும் வண்ணம் சிறுசிறு நூல்களாக எழுதி வெளியிட்டுக் கொண்டிருக்கும் எழுத்தாளராகவும் உள்ளார்.

அதனால், அணிந்துரைக்கு இவரை அணுகினேன். அன்போடு இந்நூலுக்கு அணி செய்யும் ஓர் உரையை நல்கியுள்ளார் திரு. பழ. பழனியப்பன் அவர்கள், அவரை என்றும் மறவேன். அவரிடம் என்றும் மறவா நன்றியனாய் நடந்துகொள்வேன்.

காணிக்கை:

இந்த ஆய்வு நூல், யாருக்குக் காணிக்கையாக்கப் பட்டால், இதற்கு உரிய பெருமை கிட்டும் என்று சிந்தித்தேன். அந்தச் சிந்தனையில், முன் வந்து நின்றவர், எந்த நூலையும் காய்தல், உவத்தல் அகற்றி, நடு நிலையில் நின்று திறனாய்வு செய்யும் ஆற்றல் பெற்ற ஒரு நீதிபதி. இவர், உலகியல் வழக்கு நீதி மன்றத்திலும், சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல் அமைந்து தீர்ப்பளிப்பவர்: அந்நீதி முறையை இலக்கியத் துறையிலும் அப்படியே பின் பற்றுபவர்: பல மேலை நாட்டு இலக்கியங்களையும், தமிழ் இலக்கியங்களையும் ஆழ்ந்து கற்றவராக இருந்தாலும், கம்பன் காப்பியத்தில் தனி ஈடுபாடு கொண்டவர், தம் ஈடுபாட்டை, எழுத்தாலும், சொல்லாலும் வெளிக்காட்டி, பிறரை மகிழச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்து, தாமும் மகிழ்பவர்: தம் எழுத்துக்கும் சொல்லுக்கும் கம்பன் காப்பியக் கருத்துக்களையே பொருளாக்கிக் கொள்வதில் பெருமை பெறுபவர்: சென்னைக் கம்பன் கழகத்துக்கு நிரந்தரத் தலைவராக இருந்துகொண்டு, அதனை நன்கு செயல்படுத்தும் முறையில் கம்பன் புகழைக் கன்னித் தமிழ் மூலமாகப் பரப்பிக் கொண்டிருக்கும் தமிழ்ச் செல்வர்! பத்தாயிரத்துக்கு மேற்பட்ட கவிதைகளைக் கொண்ட கம்பன் காப்பியத்தை ஒரே புத்தகவடிவில் அமைத்து, சென்னைக் கம்பன் கழகத்தில் வெளியீடு செய்தவர்: பல நூல்களுக்கு ஆசிரியராக விளங்குபவர். இவர்தான், திரு. மு. மு. இஸ்மாயில் என்ற திருப்பெயரினர்.

இந்த சால்புடைப் பெரியாருக்கு இச்சிறுநூலைக் காணிக்கையாக்குவதில் பெருமை பெறுகின்றேன்.

இதனை, நாமக்கல் கம்பன் கழக 28-வது ஆண்டு விழாவில் வெளியிடுவதற்கு அனுமதியளித்த, தலைவர் திரு ஆர். சுந்தரராஜு ரெட்டியார் உள்ளிட்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதனைக் குறித்த காலத்துக்குள் அழகுற அச்சிட்டுக் கொடுத்த அன்புத் தம்பி திரு. எஸ். சண்முகத்துக்கு நல்வாழ்த்துக்கள். 'அவரது சன்-மூன் பிரிண்டர்ஸ் மேன் மேலும் வளர்க' என உளநிறைவோடு வாழ்த்துகின்றேன்.

இராசிபுரம்,
2—7—89

அன்புள்ள,
மு. இராமசாமி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நடைதிறப்பு

கம்பன் என்ளெரு கவிஞன் இராமாவதாரம் என்ற ஒரு காப்பியத்தைத் தொட்ட தொட்ட இடமெல்லாம் சுவை பிலிற்றும் கவிதை ஊற்ருய் எப்படிப் படைத்தான்?

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுவது ஒருபுறம் இருக்கட்டும், இன்னெரு சின்ன கேள்வி வரிசைக்குப் பதில் சொல்லிப் பார்க்கலாமா?

இந்த எம். எஸ். ''குறையொன்றும் இல்லாத கோவிந்தா'' என்று குழைந்து குழைந்துருகிப் பாடிப் பரவசத்தில் திளைக்கச்செய்யும்போது அந்த ''ஸ்ரீமந் நாராயணனை'' யே நம் கண் முன் கொண்டுவந்து நிறுத்தி விடுகிருரே, அது எப்படி?

அந்த மாயனை, மன்னு வடமதுரை மைந்தனை, தூயபெருநீர் 'யமுனைத் துறைவனை, தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டி, அபிநயித்து திருத்தியமாடும்போது நம்மை எல்லாம் அந்தத் துவாரகைக்கே அழைத்துச் சென்று விடுகிருரே பத்மா சுப்பிரமணியம், அது எப்படி?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"ஓ ராமா! எந்த ருசிரு நாமம்" என்று குழலில் கொஞ்சிக் கொஞ்சி நாதப் பேரின்ப வெள்ளத்தில் நம்மை எல்லாம் சின்ன மௌலானு சாஹேப் ஆழ்த்தும்போது 'முழங்கை வழிவார மூடநெய் பெய்த' ராம நாமருசியை நாவாரப் பருகிய திருப்தி ஏற்படுகிறதே, அது எப்படி?

"எல்லாம் கலையின் மகிமை ஐயா, மகிமை" என்று நீங்கள் சொல்லுவது கேட்கிறது; சரிதான். ஆனால் எல்லாக் கலைஞர்களுடைய வெளிப்பாட்டிற்கும் இது சித்திக்கிறதா? இல்லையே! அப்படியானால் பாடுகின்ற எல்லோரும் எம். எஸ். ஆகிவிட முடிகிறதா?

இல்லை, ஆடுகின்ற எல்லோரும்தான் பத்மா ஆகிவிட முடிகிறதா? ஆகவே இது வெறும் கலையின் மகிமை மட்டுமல்ல என்பது தெளிவாகிறது. அந்த வேறொன்று என்னவாக இருக்கமுடியும்? அதுதான் கலையை விளக்கம் செய்கிற கலைஞனுடைய தனியான ஈடுபாடு.

இன்றைக்குப் பேரோடும் புகழோடும் விளங்குகின்ற எந்தக் கலைஞரை நீங்கள் கவனித்தாலும் ஒன்று நிச்சயமாய்த் தெரியவரும். அவர் தன்னை மறந்து. அந்தக் கலையிலேயே தலைப்பட்டுலயித்து தானே அதுவாக ஆகிவிடும் போதுதான் அந்தக் கலையை நீங்கள் வெகுவாக விரும்பிப் பருக முடிகிறது, இல்லையா? ஆகவே, தான் இன்புற்று விரும்பிய கலையை எந்த ஒரு கலைஞன் வெளிப் படுத்துகிறானோ அப்போதுதான் அதைக் கேட்கிற, பார்க்கிற, பருகுகிற உலகத்தவரும் நிச்சயம் இன்பம் அடைவார்கள். இது, எப்படி மேலே நாம் பார்த்த மூன்று கலைஞர்களுடைய வெளிப்பாட்டில் நிச்சயமாய்த் தெரிகிறதோ, அப்படித்தான் கம்பனுடைய இலக்கியக் கலை வெளிப்பாடும். அப்பாடா! ...... முதல் கேள்விக்கான விடையை நெருங்கினமாதிரி இருக்கிறதா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கலை என்பதே கலைஞனுடைய அனுபவத்தின் வெளிப்பாடு என்கிற மொழிமாற்ற ரசவாத வித்தை என்று சொல்லலாம். தாம் அனுபவித்த, பூரணமாக ஈடுபாடுகொண்ட எந்த ஒன்றையும் ஒரு லயிப்போடு ஆழ்ந்து, சலிக்காது, சத்யமான வேட்கையோடு 'தாமே அதுவாய்' என்று சொல்லும்படிக்கு மூழ்கி முத்தெடுக்-கின்றார்கள் உன்னதமான கலைஞர்கள். இதைத்தான் வள்ளுவன் சொன்னான்:

''தாமின்புறுவது உலகு இன்புறக் கண்டு''

கம்பன் வள்ளுவனைக் காமுற்றான்–'காமம்' என்றாலே 'விடுதல் அறியா விருப்பம்' தானே? தான் இன்புற்ற வள்ளுவத்தை உலகத்தவரும் இன்புறச் செய்யவேண்டும் என்ற பேரவாவோடு இராம காதையாம் முக்கனிச்சாற்றில் வள்ளுவமாம் கற்கண்டை விரவி உலகு இன்புறக் கூட்டித் தந்தான். வள்ளுவன் படைத்த இலக்கணத்திற்கு இலக்கியம் அமைத்தான் கம்பன். இதனால்தான் ''திருக்குறள் விரிவுரை செய்தவ போற்றி'' என்றும் ''வள்ளுவன் நெறிசெலும் வள்ளலே போற்றி'' என்றும் கம்பனைப் போற்றி வணங்கி மகிழ்ந்தார்கள் கம்பன் அடிப்பொடி அவர்கள்.

அதைரிய கருவாகக் கொண்டு ''தெய்வ மாக்கவிகள் என்ற அழகிய திருநாமம் இலங்கும் இந்நூற் குழவியை ஈன்று புறந்தந்துள்ளார்கள் புலவர் மு. ரா. அவர்கள்.

அவர்களே சொல்லிவிடுமாப்போல 'ஆசை பற்றி அறைய லுற்ற' இந்நூல் திருக்குறளை எங்கெங்கு எல்லாம் கம்பன் எடுத்தாண்டுள்ளான் என்று பட்டியல் போடும் வித்தை செய்யவில்லை. பின்னே? வள்ளுவன் வடித்துச்சொன்ன குணங்களை வாழ்க்கையில் கடைப்பிடிக்கும்போது ஏற்படும் சிக்கல்களையும் அவைகளை வென்று வருவதுமான வழி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முறைகளேயும் கம்பன் காட்டிய வழியில் நின்று காட்ட முயலும் கையேடு ஆகும் இந்நூல்.

'வாய்மையும் மரபும் காத்து மன் உயிர் துறந்த' தசரதன், 'தூஉய்மை என்பது அவாவின்மை' என்று போற்றிய பரதன்,

'தோழமை' என்று இராமன் சொல்லிய சொல்லாலே நினைந்துருகும் குகன், 'சொல்லின் செல்வமாக' இராமனு லேயே பாராட்டப் பெறும் பேறுபெற்ற அநுமன்.

'நெடிதுநாள் வளர்த்தார்க்கு உயிர்கொடுத்த' கும்பகர்ணன், 'தீயள் என்று தயரதன் துறந்த தன் தெய்வமான கைகேயியும் அவள் மகன் பரதனும் தனக்கு தாயாகவும், தம்பியாகவும்' மீண்டும் அங்கீகரிக்கப் பெற வேண்டும் என்று தயரதனிடம் வரம் வேண்டி சான்ருண் மையின் உச்சிக்கே குறியிட்டுக் காட்டிய இராமன்.

என்று இப்படியாக அறுவர் – கோனுட்டில் இருவர், கானுட்டில் இருவர், கடல் நாட்டில் இருவர் – குறளறம் போற்றி 'வாழ்வாங்கு வாழ்வதை' அழகு ஒழுகும் அணி தரளத் தனக்கே உரித்தான நடையில் படம்பிடித்துக் காட்டுகிருர் மு. ரா. அவர்கள்.

'ஸ்ரீ வைஷ்ணவச் செல்வம்' அவர்கள் பலகாலும் ஆழ்வார்களில் ஊறித் திளைத்து ஆழங்காற்பட்ட நெஞ்சினர் ஆதலால், கம்பனே அணு அணுவாக ரசித்து நிரம்பப் படித்தவர்கள் ஆவார்; அதனுலேயே நெஞ்சத்தின் மாசு குறையப் படித்தவர் என்பதும் விளங்குமாப் போலே, வான்மீகியின் மீதோ ஆதிகாவியத்தின் மீதோ எந்த ஒரு தாழ்ப்புணர்ச்சியும் நிழல்கூடப் படியாத விதத்தில் 'தெய்வ மாக்கவி' என்று கம்பன் குறிப்பிடுவது வள்ளுவனையே என்று மிக அறிவார்ந்த நயத்தோடும், அதேசமயம் ஆணித் தரமான பவ்யத்தோடேயும் நிறுவியுள்ளார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''பொய்யில் கேள்விப் புலமையிஞேர் புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிவிக்கவே''

என்ற பாடல் அடிகளுக்குப் பொருள் விளக்கம் காண முற்படும்போது இடஞ்சுட்டி காண்டல் எவ்வளவு நயமுடைத்து என்பது விளங்குமுன் பாடலைக் காட்டி அதன் ஈற்றடியில் வரும் 'செய்தவன் சொல் நின்ற தேயத்தே' என்ற சொற்களைத் துணையாகக் கொண்டு வான்மீகியின் சொல்லாகிய இராமகாதை நிற்கின்ற (இன்றும் நின்று நிலவுகின்ற) இந்த நாட்டிலே அவர் புகழைத் தெரிவிக்கவே, என்பதைவிட வேருெரு கவிஞன் புகழைப் பறைசாற்றத்தான் இருக்கமுடியும் என்பதை மிகுந்த வாதத் திறமை நயத்தோடு நிறுவுகின்ற அவர்தம் கூர்த்த நுண்ணறிவும், நுணுகியறிந்து, அறிந்ததைப் பல்லோரும் அனுபவிக்க அள்ளிப்பொழிந்து தருகின்ற 'வள்ளல் தன்மையும் பன்னிப், பன்னிப் பாராட்டப்பெற வேண்டியன. இன்னும் இதுபோன்ற பல காப்பிய விருந்துகளை தமிழ் உலகம் உவந்துகொள்ள, அவர்கள் அள்ளித்தர அலகிலா விளையாட்டுடையான் அருளை இறைஞ்சி வாழ்த்துவோமாக.

''இந்த நூலைத் தொடுமுன், ஒரு எச்சரிக்கை! தொட்ட தொட்ட இடமெல்லாம் கற்பூர வாசனை அடிக்கும்; சந்தன மணம் வீசும்; ஜவ்வாது மணம் கிறங்கவைக்கும். தெய்வ மாக்கவிகளின் சந்நிதிக்கு நம்மை அழைத்துச் சென்றல், பின் எப்படித்தான் இருக்குமாம்?

27—6—89
''கற்பகச் சோலை''
சென்னை 600085

பணிவன்புடன்,
பழ. பழநியப்பன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ:

1

தெய்வ மாக் கவிகள்

கவிகள் :

கவிக்கு உருவம் கொடுப்பன சொற்கள். சொற்களுக்கு உயிர் கொடுப்பன உணர்வுகளும் உண்மைகளும்.

உண்மையின் அடிப்படையில் தோன்றும் சொற்கள், கவியைக் காலங்கடந்து இடம் கடந்து வாழ வைக்கின்றன.

உணர்வில் தோய்ந்து வந்த சொற்கள், கேட்பாரைத் தன்வயப்படுத்தும் ஆற்றலை அளிக்கின்றன கவிக்கு.

கால வெள்ளத்தை எதிர்த்து நீந்திவந்த ஒரு கவிதை, நாடுகள் பலவற்றிலும் பரந்துவிரிந்து, பண்பட்ட உள்ளங்களில் எல்லாம் தங்கி நிற்கின்றது என்றால், தன்னை உருவாக்கிய சொற்கள், எந்த அடிப்படையில் தோன்றியவை என்பதை வெளிப்படுத்திவிடும்.

தன்னைக் கற்பவரை, தன்பால் இழுத்துக் கொள்ளும் தன்மை பெற்ற ஒரு கவிதை, தான் உருப்பெறுதற்குக் காரணமாக இருந்த சொற்கள், எந்த உணர்வில் தோய்ந்து வந்தன என்பதை உலகுக்கு உணர்த்திவிடும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உண்மையில் ஊறிய சொற்கள், சீர்களாக உருண்டோடி வருகின்றன கவிதைக்குள், அந்தக்கவிதை, காலம் பலகடந்து வாழும் சிரஞ்சீவித்துவத்தைப் பெற்றுக்கொள்கின்றது.

உணர்வுச் சொற்களைச் சீர்களாகக் கொண்ட கவிதை, கேட்பாரைத் தன் காலத்திற்கு அழைத்துச் சென்று தன்வயப் படுத்திக் கொள்ளும் வன்மையைப் பெற்றுக்கொள்கிறது.

உண்மைக் கவிதை :

எல்லாக் காலத்து மக்களுக்கும் ஏற்புடையனவாக அமைந்த கருத்துக்களைத் தாங்கிய சொற்களைச் சீர்களாகப் பெற்ற கவிதையை உண்மைக் கவிதை எனக்கொள்ளலாம். இது, மக்களை அறவாழ்வுக்கு அழைத்துச் செல்லும்.

அறவுரை நல்குதலைக் குறிக்கோளாகக் கொண்ட இந்த உண்மைக்கவிதை, கற்பாருடைய கவர்ச்சிக்கு உரியதாக அமைவதில்லை.

பொதுவாக, மக்கள் உள்ளம், அறவோர் கூறும் நல் உரைக்கு அவ்வளவு எளிதாகச் செவிசாய்க்க விரும்புவதில்லை.

இருப்பினும், மக்களின் அறவாழ்க்கையையே சிந்திக்கும் சான்றோர்கள், வாழ்க்கைத் தத்துவத்தை, தம் கவிதைகளின் மூலம், எக்காலத்தும் நிற்கும்படியாக வழங்கிச் சென்று உள்ளனர்கள்.

செல்வத்துப் பயன் :

அத்தகைய சான்றோர்களுள் ஒருவர் நக்கீரர் இவர், மக்கள் எதை நாளும் வேண்டிவேண்டிப் பெற்றுக்கொள்கின் றார்களோ, அந்த, செல்வத்தைப் பெற்றிருப்பதால் பெற வேண்டியபயன் யாது என்பதை மக்களுக்குச் சொல்ல எண்ணு கின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தப் புலவர் பெருமான். செல்வவளம் கொழிக்கும் மதுரை மாநகரத்தை, வாழும் இடமாகக் கொண்டவர்: 'மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்' என அழைக்கப்படுபவர்.

'சேர்க்கும் செல்வம் அனைத்தும் தமக்கே உரியது' என்ற எண்ணத்தினராய் வாழும் செல்வர்களைப் பார்க்கின்றார் புலவர்.

அவர்களுக்கு உணர்த்த வேண்டிய உண்மையை ஒரு கவிதையாக வடித்தார் புலவர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உருவாகிய அந்தக் கவிதை, புறநானூறு என்ற சங்க இலக்கியத்தில் இடம்பெற்று இன்றும் மக்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றது.

'செல்வத்துப் பயனே, ஈதல்': இருத்தி வைத்துக் கொள்வது அல்ல.

செல்வத்தை யாரெல்லாம் சேர்த்து வைத்திருக்கிறார் களோ, அவர்கள் அதன் பயனை அனுபவிக்க வேண்டும் என்றால், யார் யாருக்கெல்லாம் அது தேவைப்படுகிறதோ அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருக்கவேண்டும்.

பிறருக்குக் கொடுக்க மனம், இடம் தருவதில்லை பெரும்பாலான மக்களுக்கு.

அவர்களை நல்வழிப்படுத்த், எச்சரிக்கையோடு வரு கிறது, அடுத்த கவிதைத் தொடர்.

'துய்ப்பேம் எனினே தப்புந பலவே.'

'செல்வம் முழுவதையும் நாமே வைத்துக்கொண்டு, யாருக்கும் கொடுக்காமல் அனுபவிக்கலாம்' என்று எண்ணி னால், அந்த, தன்னல எண்ணத்தின் காரணமாக, அடைய வேண்டிய பல நல்ல பலன்களை இழந்துவிட வேண்டிவரும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த வாழ்க்கைத் தத்துவத்தைக் காரணகாரியத்தோடு புலப்படுத்துகிறது நக்கீரரது உண்மைக் கவிதை

'தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்,
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்,
உண்பது நாழி: உடுப்பவை இரண்டே:
பிறவும் எல்லாம் ஓர்ஒக் கும்மே:
செல்வத்துப் பயனே ஈதல்:
துய்ப்பேம் எனினே தப்புந பலவே,' (புறம் 189)

உலகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் வைத்து ஆளும் பெரிய சக்கரவர்த்திக்கும், காட்டில் வேட்டையாடித்திரியும் கல்வி வாசனையேயில்லாத ஒரு மனிதனுக்கும் தேவை என்ன? உண்பதற்குச் சிறிது உணவு: உடுத்திக் கொள்வதற்கு இரண்டு உடைகள். இந்தத் தேவைப் பூர்த்திக்குமேல் உள்ளன எல்லாம், பிறருக்குக் கொடுப்பதற்குத்தான்.

அதனால், 'செல்வத்துப் பயனே, ஈதல்'

இல்லையென்றால், 'துய்ப்பேம்' எனின் தப்பு நபலவாகும் என்று கவிதை நிறைவு பெறுகிறது.

வாழ்க்கைத் தத்துவத்தைத் தெளிவாக உணர்த்தும் உண்மைக் கவிதையாக இருப்பதால், இது காலம் பல கடந்து நிலையாக நிற்கின்றது.

வளாகம் - உலகம்! துஞ்சான் - உறங்காமல்: மா - மிருகம்: நாழி - படி (உணவு): துய்த்தல் - அனுபவித்தல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உணர்வுக் கவிதை :

உண்மையை உணர்ந்து, அதன்படி செயல்படுகின்ற மக்களைக் காண்பது அரிது, சாதாரண மக்கள் என்ன? நாட்டை ஆளும் மன்னர்கள் கூட உண்மையை உணர்வது இல்லை, உணராத மன்னர்களுக்கு உணர்த்த வருவது உணர்வுக்கவிதை.

வெளிமான் :

தமிழ்நாட்டுச் சிற்றரசர்களுள் ஒருவன் 'வெளிமான்' என்பவன். இந்த அரசன் 'செல்வத்துப் பயன் ஈதல்தான்' என்ற உண்மையை உணராது வாழ்ந்திருந்தான். இவனிடம் பெருஞ்சித்திரனார் என்ற பெரும் புலவர் சென்றார்.

புலவரை, நன்குமதிக்க வேண்டிய அரசன், அவருக்கு மரியாதை காட்டாமல், தன் தம்பியிடம் சிறிது பொருள் கொடுத்தனுப்பினான். புலவர் அதனைப் பெற்றுக்கொள்ளாமல், அரண்மனையைவிட்டு வெளியேறினார்.

அவனைப்போன்ற, வேறு ஒரு சிற்றரசனாகிய 'குமணன்' என்பவனிடம் சென்றார் புலவர். 'செல்வத்துப் பயன் ஈதல் என்ற உண்மையை உணர்ந்தவன் இந்த அரசன். அதனால் வந்த புலவரைப் போற்றிப் பாராட்டிச் சிறப்பிக்கும் வகையில் ஒரு யானையையே, அந்தப் புலவருக்குப் பரிசாகக்கொடுத்தான் அரசன்.

யானையைப் பரிசாகப்பெற்ற பெருஞ்சித்திரனார், தன் வீட்டுக்குச் செல்லவில்லை, பரிசு கொடுக்க மறுத்த வெளிமானிடம் நேராகப் போனார்.

தன் பெருமித உணர்வையும், அரசனது, ஈயாத் தன்மையாகிய இழிகுண உணர்வையும் புலப்படுத்த எண்ணினார் புலவர். அவ்வெண்ணம் ஒரு கவிதையாக உருவெடுத்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'இரவலர் புரவலை நீயும் அல்லை;
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்:
இரவலர் உண்மையும் காண் இனி: இரவலர்க்கு
ஈவோர் உண்மையும் காண், இனி; நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்துயாம் பிணித்த
நெடுநல் யானை எம் பரிசில்:
கடுமான் தோன்றல்! செல்வல் யானே'

(புறம் 162)

'அரசனே! இரவலர்க்கு உதவும் புரவலனும், நீ அல்லன் இரப்பவர்க்கு உதவுபவர் இல்லாதும் போய் விடவில்லை, இனி, உலகில் இரவலரும் புரவலரும் என்றும் இருக்கின்றார்கள் என்று உணர்ந்து கொள். உன் ஊரில் உள்ள காவல் மரம் வருந்த, நான் கொண்டுவந்த யானையைக் கட்டிவைத்துள்ளேன். அது நான் உனக்குக் கொடுக்கும் பரிசில்: இனியான் போகின்றேன் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார் புலவர்.

மனித உள்ளம், ஒன்றை ஒன்று சந்திக்கும் போதுதான் உணர்வு தோன்றுகின்றது.

'யானை எம் பரிசல்! செல்வல் யானே! என்பதுதான், புலவனது பெருமித உணர்வைப் புலப்படுத்தும் கவிதைத் தொடர்.

இரவலர்க்கு ஈவோர் உண்மையும் காண்? என்பது, வெளிமானுடைய ஈயாத இழிதகைமை உணர்வைப் புலப் படுத்துவது.

இவ்வுணர்வுக் கவிதை, நம்மை, இந்நிகழ்ச்சி நடந்த அந்தக் காலத்திற்கு அழைத்துச் செல்கிறது.

இரவலர்-யாசிப்பவர்; புரவலர்-பாதுகாக்கும் மன்னர்கள்; ஈவோர்-கொடுப்பவர்; கடிமரம்-காவல் மரம்; பிணித்த-கட்டிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'உண்மைக் கவிதை நம் காலத்திற்கு வருகிறது: உணர்வுக் கவிதை நம்மை அந்தக் காலத்திற்கு அழைக்கிறது. இரண்டும் கவிகளே. இந்த இரண்டும் எட்டுத் தொகை நூல் களுள் ஒன்றான புறநானூறு என்ற சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன.

இக்கவிதைகளை உருவாக்கிய நக்கீரனாரும், பெருஞ் சித்திரனாரும், இந்தக் கவிகளைப் பொருத்த அளவில் கவிஞர்கள்தான் - கவிகள்தான்.

மாக்கவிகள்:

உண்மையின் அடிப்படையில் எழுந்துவரும் சொற்கள் உணர்வுத் தேனில் தோய்ந்து, சீர்களாக உருப்பெற்று, கவிக்கு வடிவம் கொடுக்கின்றன. அப்படிப்பட்ட கவியே மாக்கவி எனப்படும்.

இத்தகைய கவிதையை நல்குபவர்களே, மாக்கவிகள் (மா - சிறந்த) என்று கவிதைத் திறனாய்வாளர்களால் மதிப்பிடப்படுவார்கள்.

இளம்பெருவழுதி :

பாண்டியர் குலத்தவர் இளம்பெருவழுதி. இவர் நல்ல கவித்துவம் நிரம்பப் பெற்றவர்: யாது காரணத்தாலோ, கடலுள் மூழ்கி மாய்ந்தார். ஆனால், அவர் பாடிய உண்மைக் கவிதை அவரது உணர்ச்சியைப் புலப்படுத்திக்கொண்டு, என்றும் மாயாமல் நிலைத்து நிற்கின்றது. ஏன் மாயவில்லை?

'இந்த உலகம், மாயாமல் (அழியாமல்) இருப்பதற்குக் காரணம் எதுவாக இருக்கும்' என்ற உண்மையைக் காண முற் பட்டார் புலவர், 'நிலை இல்லாத உலகம் நிலைத்து நிற்பது எதனால்?' இது புலவரின் ஆய்வுப் பொருள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்த உண்மையைக் கண்டுபிடித்து விட்டார் புலவர். உடனே ஒரு வியப்பு (ஆச்சரியம்) உணர்வு உதித்தது புலவர் உள்ளத்தில்.

அந்த வியப்பு உணர்வோடு கவிதை தோன்றுகிறது.

'உண்டால் அம்ம! இவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் 'இனிது' எனத்
தமியர் உண்டலும் இலரே: முனிவு இலர்:
துஞ்சலும் இலர்: பிறர் அஞ்சுவது அஞ்சி,
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்: பழிஎனின்,
உலகுடன் பெறினும் கொள்ளலர்: அயர்விலர்:
அன்ன மாட்சி அனையர் ஆகி,
தமக்குஎன முயலா நோன்தாள்,
பிறர்க்குஎன முயலுநர் உண்மை யானே (புறம்-182)

'இந்த உலகம் மாயாமல் (அழிந்து போகாமல்) இருக்கிறது (உண்டு) அம்ம! அம்ம! என்ன ஆச்சரியம்' இதுதான் புலவரின் உள்ளத்து உதித் தெழுந்த உணர்வு.

தன்னலம் பேணாது, பிறர் நலம் காண உழைக்கும் பெரியோர்கள் இவ்வுலகத்தில் வாழ்வதால்தான் உலகம் அழியாமல் இருக்கிறது. அந்தப் பெரியோர்கள், சுவைமிகுந்த அமிழ்தமே, தனக்குக் கிடைத்தாலும், அதனைத் தனித்து நின்று உண்ணமாட்டார்: கோபம் இல்லாதவர்: பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சி. சோம்பியிருக்கமாட்டார்:

முனிவு-வெறுப்பு: துஞ்சல்-சோம்பியிருத்தல்: அயர்வு-சோர்வு: நோன் தாள்-வலிய முயற்சி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புகழுக்கு உரிய காரியம் என்றால், அதைச் செய்வதற்குத் தம் உயிரையே கொடுப்பார்கள். பழியோடு வருவதென்றால், உலகமே வந்தாலும் அதனை எற்கமாட்டார்: காரியம் செய்வ தற்குத் தளர்ச்சியின்றியிருப்பர்.

இத்தகைய பண்புகள் நிறைந்த பெரியோர்களின் இருப்புதான் உலகத்தின் இருப்பாகும்.

'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்: அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்' (திருக்குறள் 996)

என்ற வள்ளுவத்தின் விரிவுரையாக அமைந்தது, இளம் பெருவழுதியின் கவிதை.

பண்புடையாரின் இயல்புகளை விவரிக்கின்ற இந்தக் கவிதை, உண்மைப் பொருளில் ஊறிய் உணர்வோடு, புலவரின் செந்நாவினின்றும் வெளிவந்ததால் 'மாக்கவி' ஆகின்றது: மாயாமல் நிற்கின்றது.

இளம் பெருவழுதி கடலுள் மாய்ந்தார். ஆனால் அவர் தந்த மாக் (சிறந்த) கவி' மாயவில்லை. காரணம், வள்ளுவர் கண்ட வாழ்க்கைத் தத்துவ உண்மையை உணர்ச்சியோடு தந்ததால், அதனால் அவரும் 'மாக்கவி' ஆகின்றார். (மாக் கவிஞர்).

தெய்வ மாக் கவிகள் :

உண்மை வெளிப்பாட்டுக்காக வருவதும், உணர்வின் உந்துதலால் வருவதும் கவி (தை) கள்: இரண்டையும் ஒன்றாக்கிக் கொண்டு உலாவுவது மாக்கவி.

இவைகளைக் காட்டிலும் மேம்பட்டு நிற்பது 'தெய்வ மாக் கவி' ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உண்மைக்கும் உணர்வுக்கும் அறிவுக்கும் மேம்பட்ட ஒரு சக்தி, மனித உள்ளத்தில் ஒட்டிக் கொண்டிருக்கின்றது, அந்த சக்தி, விறிட்டெழுந்து கவிஞனை ஆட்டிப்படைக்குமானால், அப்போது உருவாகி வெளிவருவது தெய்வ மாக்கவி ஆகும்.

இக்கவி(தை)யில், பகுத்தறிவுக்கு உட்பட்ட உண்மையும் இருக்கும்: உணர்ச்சியும் உலாவிக் கொண்டிருக்கும்: அதற்கும் மேம்பட்ட ஒரு அற்புதமான கற்பனா சக்தி ஒளிவிட்டுக் கொண்டிருக்கும்.

'கவி தன்னைத் தெய்வக்கருவியாக வைத்துக்கொண்டால் அதில் தெய்வ நாதம் கேட்கும்: அதில்தெய்வக்காட்சி மலரும் வேத காலச் சான்றோர்கள் தங்களுடைய உணர்ச்சிகளையும் ஆசாபாசங்களையும் அடக்கிய காரணத்தால்தான் தெய்வ ஒலிகள் அவர்களுடைய சிந்தனையில் முரன்றன' +

என்ற கவிதைக் கலைத் திறனாய்வுப் பேருரை இங்கு நம் சிந்தனைக்கு உரியதாகும்.

இந்த ஆய்வுரையை நல்கியவர் பேராசிரியர் திரு ரா. ஸ்ரீ. தேசிகன் அவர்கள் ஆவார்.

இத்தகைய கவிதா இலக்கணத்துக்கு உட்பட்ட கவிகளைத் தமிழில் வழங்கிய கவிஞர்கள் இருவர். ஒருவர் வள்ளுவர்: மற்றொருவர் கம்பர்.

இந்த இருபெருங் கவிஞர்களைத்தான், தமிழ்ப் பெரும் புலவர்கள் பலரும் தெய்வத்தன்மை வாய்ந்த கவிகள் எனப் பாராட்டிப் போற்றினர்.

+ கவிதைக் கலை:
இரண்டாம் பாகம்: பக்கம் 120. ரா. ஸ்ரீ. தேசிகன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருவள்ளுவர் :

"தப்பா முதற்பாவால் தாம்மாண்ட பாடலினால்
முப்பாலின் நாற்பால் மொழிந்தவர்—எப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனம்மகிழத்
தெய்வத் திருவள் ளுவர்." (சீரந்தையார்)

"தேவிற் சிறந்த திருவள் ளுவர்குறள் வெண்
பாவீற் சிறந்திடும்முப் பால்பகரார்—நாவிற்கு
உயவில்லை சொற்சுவை ஓர்வில்லை மற்றும்
செயல்இல்லை என்னும் திரு."
(உறையூர் முதுகூற்றனார்)

"பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின: பொய்அல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே—முப்பாலின்
தெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து."

"திருத்தகுதெய் வத்திரு வள்ளுவ ரோடு
உருத்தகு நற்பலகை ஒக்க—இருக்க
உருத்திர சன்மர் எனஉரைத்து வானில்
ஒருக்கவோ என்றதோர் சொல்." (அசரீரி)

இந்த நான்கு பாடல்களும் திருவள்ளுவ மாலையில் உள்ளன வாகும். திருவள்ளுவர் 'தெய்வ மாக் கவி' என்றே சிறப்பிக்கப் பெற்றுள்ளார் இந்த வெண்பாக்களில்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கம்பர் :

"வாழ்வார் திருவெண்ணெய் நல்லூர்ச்
சடையப்பன் வாழ்த்துப் பெறத்
தாழ்வார் உயரப் புலவோர்
அக இருள் தான்அகலப்
போழ்வார் கதிரின் உதித்த
தெய்வப் புலமைக் கம்பநாட் (டு)
ஆழ்வார் பதத்தைச் சிந்திப்பவர்க்கு
யாதும் அரிய தன்றே." +

ஆதவன் புதல்வன் முத்தி
அறிவினை அளிக்கும் ஐயன்,
போதவன் இராம காதை
புகன்றருள் புனிதன் மண்மேல்
கோதவம் சற்றும் இல்லான்
கொண்டல்மால் தன்னை ஒப்பான்,
மாதவன் கம்பன் செம்பொன்
மலரடி தொழுது வாழ்வாம்."

(பெரியதவம் உடைய கம்பன், மேகம்போன்ற நிறத்தினனாகிய திருமாலை ஒத்தவன்)

இந்த இரண்டு கவிகளும், கம்பருடைய தெய்வப் புலமையை வெளிப்படுத்தி கவிஞரைச் சிறப்பிக்கின்றன.

வள்ளுவரும் கம்பரும் :

தமிழ்ப் பெரும் புலவர்கள் பலருள்ளும், இந்த இரு பெருங்கவிஞர்களை மட்டும் தெய்வப் புலவர் என இணைத்துச் சொல்வதை ஒரு வழக்கமாக்கி வைத்துள்ளனர் கவிதைத் திறனாய்வு உளம் படைத்த கவிஞர்கள்.

+ கம்பராமாயணம்: சிறப்புப்பாயிரம் 2. 5.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியார் :

செந்தமிழ்க் கவி பாரதியார், தமிழ்ப் புலவர் மூவரை ஒரு வரிசைப்படுத்துகின்றார். அதில் இந்த இருவரை ஒருவர் பின் ஒருவராக வைத்துப் பேசி மகிழ்கின்றார்.

'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல்..........பிறந்ததில்லை'
'கல்விசிறந்த தமிழ்நாடு புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு'
'வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'

இந்த இருபெருங் கவிஞர்களிலும் கம்பர் முதலில் நிறுத்தப்படுகின்றார்: வள்ளுவர் பின்னால் வைக்கப்படுகின்றார்.

பாரதியின் திறனாய்வுக் கவிதை உள்ளம் இவ்வாறுதான் எடை போடுகிறது ஏன்?

வள்ளுவர் கவிதை, வாழ்க்கைத் தத்துவத்தை உள்ளபடி எடுத்துக் காட்டி, மக்களுக்கு அறவுறை கூறுகிறது. உபதேசக் கவிதை, எவ்வளவு இலக்கியச் சுவை நிறைந்ததாக இருந்தாலும், மக்கள் மனத்தைக் கவர்ந்து, அவர்கள் உள்ளத்தில் தங்கிக் கொள்ள முடிவதில்லை.

வள்ளுவர் தந்த அறவுரைகளுக்கெல்லாம் மனித உணர்ச்சி ஊட்டி, அவைகளை உயிர் உள்ளதாக்கி, பாத்திரங்களாக உலாவவிட்டால், அது, சமுதாய மக்களின் கவர்ச்சிக்கு உரியதாகி அவர்கள் உள்ளத்தில் நிலையாகத் தங்கிக்கொள்கிறது: மக்களைச் சிந்திக்க வைக்கிறது: வாழ்க்கையைத் திருத்துகிறது,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த ஒரு பெரும்பணியைச் செய்ய கவிதையை, உரிமையாக்கிக் கொண்டார் கம்பர்.

வள்ளுவரின் உள்ளக் கருத்தைத் தெள்ளிதாக்கி, அதனை வளப்படுத்துவதற்கு, ஒரு பெரிய கதையே தேவைப் பட்டது கம்பருக்கு.

அதற்கு ஏற்றதாக இராமகதையை எடுத்துக்கொண்டு, அதனைச் செந்தமிழ்க் காப்பியமாக்க முற்பட்டார் கம்பர்: அதில் வெற்றியும் கண்டார்.

'வள்ளுவத்தின் அறம், கம்பனில் உயிர்பெற்று உலாவிக் கொண்டிருக்கிறது' என்று கண்டார் போலும் பாரதி! அதனால், உருவம் அற்ற ஒன்றுக்கு, உருக்கொடுத்து உயிர் தந்த கம்பரை மேலே வைத்து மதிக்கின்றார் பாரதியார்.

கவிமணி :

இந்த இரண்டு தெய்வப் புலவர்களையும், தம் கவிதா ரசனைத்திறனாய்வு கொண்டு அளந்து பார்த்தார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

'வள்ளுவர் தந்த திருமறையைத்-தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே-என்றும்
உத்தம ராகி ஒழுகுவமே'

''பாவின் சுவைக்கடல் உண்டெழுந்து-கம்பன்
பாரிற் பொழிந்ததீம் பாற்கடலை
நாவின் இனிக்கப் பருகுவமே-நூலின்
நன்னயம் முற்றும் தெளிகுவமே''

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வள்ளுவம், தமிழ்த்தாயின் உயிர் நிலையாக விளங்குகிறது: மக்கள் உத்தமராக வாழ்வதற்கு உதவுகிறது.

கம்பன் காப்பியம், இனிமை நிறைந்த பாற்கடலாகக் காட்சியளிக்கிறது: நாக்கு இனிக்கப் பருகுவதற்கு உரியதாக உள்ளது.

இது, கவிமணியின் மதிப்பீடு.

கதி:

பேராசிரியர் செல்வக் கேசவராய முதலியார் அவர்கள் இந்த இரண்டு நூல்களையும் தம் நுண்மாண் நுழைபுலம் கொண்டு ஆராய்ந்து பார்த்தார், அந்த ஆய்வின் பயனாக ஒருமுடிவுக்கு வந்தார். அம்முடிவு, தமிழ்மொழிக்கு, கதியாக விளங்குபவர், கம்பரும் திருவள்ளுவரும் ஆகிய இந்த இருவர் தான் என்பது.

இந்த இருபெரும் தெய்வப் புலவர்களின் தலையெழுத்து (முதல் எழுத்து, க.தி) தான், தமிழ் மொழிக்கே. தலையெழுத்தாகும் (கதி ஆகும்) என்பது முதலியார் அவர்களுடைய முதன்மைக் கருத்தாகும்.

இந்தக் கருத்தை அடிப்படையாக்கிக் கொண்டு 'க-தி' தரும் காதற்சுவை' என்ற நல்லதோர் படைப்புத் தோன்றி உள்ளது.

இந்நூலைப் படைத்தவர் 'முத்தமிழ்ச் செல்வர்' என்ற பட்டம் பெற்றவர்: 'இராமசாமி' என்ற இயற்பெயரினர்.

இவர் தம் நூலின் முகவுரையில் சொல்லியிருப்பது, இதனை மேலும் வலியுறுத்துகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"தமிழ்க் கவிதைக்கே மாமேதையாக-கவிச்சக்கரவர்த்தியாக விளங்குபவர் மகாகவி கம்பர் "தமிழ்மொழியின் கதியாவார் கம்பரும் திருவள்ளுவரும்" என்றார் பேராசிரியர் செல்வக் கேசவராயர். தமிழ் மொழியை வாழ்வித்த முப்பெருங் கவிஞருள் கம்பரே முதல்வராக விளங்குகிறார். அவருக்கு அடுத்து விளங்குபவர் மக்களின் நல்வாழ்வியலுக்குத்தக்கதொரு பெருநூலாம் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர்."+

கம்பர் பெருமை :

'தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார்,' 'தெய்வப் புலமைக் கம்ப நாட்டாழ்வார்' என. வேறு எப்புலவர்க்கும் இல்லாத தெய்வப் புலமைச் சிறப்புள்ள இருவர்களுள்ளே, கம்பர் ஒருவராயிருப்பதும் அவருடைய பெருமையை வலியுறுத்தும்.' + என்பது. கம்பராமாயண சாரம்' படைத்த வெ. ப சுப்பிரமணிய முதலியார் அவர்களது ஆய்வுரையாகும்.

டி. கே. சி. யும், பெரியாரும் :

பெரியார் ஒருமுறை, திருக்குற்றாலத்தில் டி. கே. சி. அவர்களுடைய இல்லத்திற்குச் சென்றிருந்தார்.

பெரியாரிடம், இரண்டு திருக்குறளைச் சொல்லி விளக்கம் கொடுத்தார் டி. கே. சி. அவர்கள்.

அதைக் கேட்ட பெரியார், "நீங்கள் குறளைச் சொல்லும் பொழுது அப்படியே அதன் கருத்து விளங்குகிறது. அப்படியிருந்தும், ஏன் குறளை ஜனங்கள் அனுபவிக்க முடியாமல் திணறுகிறார்கள் ?'

+ 'க-தி' தரும் காதற்சுவை - திரு. ரெ. இராமசாமி. முகவுரை.
+ கம்பன் கவிதை - பக்கம் 102.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்படி மனம் திறந்து கேட்டுவிட்டார் ராமசாமிப் பெரியார்.

உடனே, டி. கே. சி. சொன்னார்கள்.

'உங்களுக்கு விளங்குகிறது. நீங்கள் ஒரு லட்சியத்தில் நின்று உழைக்கிறீர்கள். உண்மையோடு உழைக்கிறீர்கள். அதனால் உங்களுக்கு விளங்குகிறது. மற்றவர்கள் அப்படி உழைக்கிறார்களா? உண்மையில் நிற்கிறார்களா? இல்லையே! வெறும் சோம்பேறிப் பயல்களுக்குக் குறள் எங்கு விளங்கும்? பிறரை ஏமாற்றிப் பிழைப்பு நடத்துகிறவர்களுக்கு, குறள் விளங்காது.

''நம்ம பயல்களுக்குக் கம்பராமாயணமே விளங்கவில்லையே? பிறகு, குறள் எப்படி விளங்கும்? ராமாயணத்தில் கதை இருக்கிறது அது எளிதில் விளங்கக் கூடியது. அதுவே புரியவில்லை நம்மவர்க்கு, பிறகு குறள் புரியுமா.

'குறள் புரியவேண்டுமானால், இதயத்தில் உண்மை இருக்கவேண்டும். அது லட்சிய வடிவம் பெற்று செயல்பட வேண்டும். தங்களிடம் உண்மை இருக்கிறது. லட்சியம் இருக்கிறது. செயல் வேகம் இருக்கிறது.

அழுத்தம் திருத்தமாக டி. கே. சி. சொல்லியதைக் கேட்ட நண்பர்கள் வியந்து போனார்கள். பெரியார் ராமசாமி நாயக்கரும் அசந்து போனார்.

கம்ப ராமாயணம் என்றால், நாயக்கருக்கு வேப்பங்காய். அதைத் தீயிட்டுக் கொளுத்தவேண்டும் என்று படைதிரட்டியவர் நாயக்கர். அவரிடமே நேருக்கு நேராக ''கம்பரே விளங்கவில்லையென்றால் குறள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எப்படி விளங்கும்?" என்று, யாதொரு களங்கமும் இல்லாமல் கேட்கிறார் டி. கே. சி. +

இந்நிகழ்ச்சி எதைக் காட்டுகிறது? திருக்குறளைப் புரிந்துகொள்ளவேண்டுமானால், முதலில் கம்பன் காவியத்தைப் படித்து ரசித்து அனுபவிக்கத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற உண்மையை வெளிப்படுத்துகிறதல்லவா?

ஒப்புமை :

'திருவள்ளுவரும், கம்பரும் தெய்வப் புலவர்கள் இவர்களுள், முன்னவரை, பின்னவர் நன்கு அனுபவித்து தன் மயமாக்கிக்கொண்டவர்.'

'அதனால் வள்ளுவர் தந்த திருக்குறளின் அறவுரை பொருளை உள்ளபடி உணர்ந்து தெரிந்துகொள்ள வேண்டுமானால், கம்பர் பாடிய இராமாயணக் காப்பியத்தை நன்கு அனுபவிக்கத் தெரிந்துகொள்ளவேண்டும்.'

கம்பன் காப்பியம், வள்ளுவத்திற்கு ஒரு விரிவுரையாக அமைந்துள்ளது.'

இரண்டு நூல்களையும். வாழ்க்கைத் தத்துவக் கண்கொண்டு பார்த்து, ஆராய்ந்த, கவிதைத் திறனாய்வாளர்கள் கண்ட முடிவு இது.

தெய்வ மாக்கவி :

'தெய்வம், மா, கவி' என்ற மூன்று சொற்களை ஒரே சொற்றோடராக இணைத்தும், அவைகளை

+ டி.கே. சிதம்பரநாத முதலியார்–என். சண்முகசுந்தரம் பக்கம்-140, 141.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'தெய்வ மாக்கவி' என்ற இரண்டு சீர்களாக உருவாக்கியும், கவிதையுள் முதன்முதலாக இதனை நுழைத்தவர் கம்பர்தான்.

கவிஞரின் கைவண்ணம் பெற்று, கவிதைக்குள், இடம் பிடித்துக்கொண்ட சொல், எதுவாயினும், அதற்குத் தனி மகத்துவம் வந்துவிடும்.

'தெய்வ மாக்கவி' என்ற சொற்றொடரோ, தனித்து நிற்கும்போதே சிறப்பிற்கு உரியதாக உள்ளது.

அதற்கு மேலும் ஒரு கவிச் சக்கரவர்த்தியின் கவிதையில் சீர்களாக நடமாடும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றால், அதன் பெருமையை அளவிட்டு உரைக்க முடியுமா?

"வையம் என்னை இகழவும். மாசுஎனக்கு
எய்தவும் இது இயம்புவது யாது எனின்,-
பொய்இல் கேள்விப் புலமையி னோர் புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே."
(கம்-6)

கம்பர் தாம், இராமாயணம் பாடுதற்குரிய காரணத்தைத் தெரிவிக்கின்றார் இந்தக் கவிதையின் மூலம்.

இராம சரிதத்தைக் கம்பர் காப்பியமாக உருவாக்குவதற்கு, அவர் கூறியுள்ள காரணம் யாது? 'இது தான்' என்பதைத் தெளிவாக்குவதில் புலவர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது.

கருத்து வேறுபாட்டுக்குக் காரணம், கவிதையில் கலந்துள்ள பாட பேதங்களும், கம்பரின் உள்ளக் கருத்தைத் தெளிவாக உணராமையும் ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'இது இயம்புவது யாது? என்பது கம்பரது கேள்வி, இது, 'வாய்மை எனப்படுவது யாது?' என்ற திருவள்ளுவரது கேள்வித் தொடரை நினைவுபடுத்துகிறது.

சொல்ல வேண்டிய பொருள் பொதிந்த கருத்தை கேட்பவர்களது உள்ளத்தில் பதிய வைப்பதற்கு, கவிஞர்கள் கையாளுகின்ற உத்திகளுள் இது ஒன்று.

கேள்வியின் மூலம். கேட்பவர்களது உள்ளத்தில் ஒரு சிந்தனையைத் தூண்டுவித்து, அதற்குமேல், தக்க விடையைக் கூறுவது ஒரு உத்தியாகும்.

இந்த நல்லதோர் உத்தியைத் திருவள்ளுவர் முதன்முதலாகக் கையாண்டு, தம் கவிதையை வளப்படுத்திக் காட்டினார் திருக்குறளில்.

"வாய்மை எனப்படுவது யாது? எனின்
யாதொன்றும்
தீமை இலாத சொலல்."

என்பது வள்ளுவப்பெருந்தகையாரது கவிதை அமைப்பு.

இந்த நல்ல அமைப்பை முன் உதாரணமாக்கிக் கொண்ட கம்பரும், 'இது' இயம்புவது யாது? எனின், என்று, கேட்பவர் உள்ளத்தில் ஒரு வினாவை எழுப்பி. அதற்குரிய விடையைப் பின் இரண்டு அடிகளில் கூறுகின்றார்.

'இது' என்ற சுட்டுச் சொல் இராமசரிதத்தைக் காட்டுகின்றது. இதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'இந்த சரிதத்தை நான் காப்பியமாக உருவாக்கிக் கொடுத்தால், உலகத்துப் பெரியோர்கள் (வையம்) என்னை இகழ்வார்கள்: (இவ்வளவு உயர்ந்த இராமாயணத்தைச் செய்வதற்கு இவன் யார்?) பெரியோர்கள் என்னை ஏளனமாக இகழ்ந்து பேசுவதால் எனக்குக் குற்றம் வரும் (மாசு எனக்கு எய்தவும்) இவற்றை உணர்ந்திருந்தும், நான் இக்காப்பியம் செய்வது எதற்கு என்றால், அந்தக் காரணம் இதுதான்' என்று பின் இரண்டு அடிகளில் சொல்கின்றார் கம்பர்.

இந்த இரண்டு அடிகளில், எந்தப் புலவர்களுக்கும் கருத்து வேறுபாடு இல்லை.

पुस्तकालय
कांगड़ी विश्वविद्या
6855

வை. மு. கோ. :

'பொய் இல் கேள்விப் புலமையினோன் குற்றமற்ற நூற்கேள்விகளும் பாண்டித்திய முமுடையவன், புகல் (இராமபிரான் விடயமாகச்) சொல்லிய, தெய்வம் மா கவி- தெய்வத் தன்மையுள்ள சிறந்த பாடல்களின் மாட்சி-பெருமையை தெரிவிக்கவே:- (எ.று)

'பொய்யில் கேள்விப் புலமையினோன்' என்ற தொடர் வான்மீகியைக் குறிக்கும் என்க. +

'புலமையினோர்'-பன்மை 'புலமையினோன்' என ஒருமையாக்கப்பட்டு, வான்மீகிக்கு உரிமையாக்கப்பட்டு உள்ளது.

'தெய்வ மாக்கவி'-எந்தப் பாடல்கள் என விளக்கப் படவில்லை; 'கவி' யார்? என்றும் தெளிவாக்கப்படவில்லை.

+ கம்பராமாயணம், வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியர் உரை பக்-21, 22

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அ. ப. க. பதிப்பகத்தார் :

'பிழைபடாத கேள்வியறிவுடன் நூலறிவுமுடைய புலவர் இயற்றிய தெய்வத்தன்மை வாய்ந்த சிறந்த (இராமாவதார) கதையின் மாண்பினைத் தெரிவித்தற்கே. +

'தெய்வ மாக்கவி' என்பது 'தெய்வமாக்கதை' என்று மாற்றப்பட்டு இராமகதைக்கு ஏற்றப்பட்டுவிட்டது.

இராமகதையை இயற்றிய புலவர் யார்? என்று தெளிவாக்கப்படவில்லை இங்கு.

'பொய்இல் கேள்விப் புலமையினோர் புகல்
தெய்வமாக் கவி மாட்சிதெரிக்கவே'

என்ற பாடம். மர்ரே அண்டு கம்பெனி பதிப்பிலும், சென்னை கம்பன் கழகப் பதிப்பிலும் காணப்படுவது.

இந்த இரண்டு பதிப்புக்களும், முன்னைய இரண்டு பதிப்புக்களுக்கும் பின்னால் வந்தவை. அதனால், இவைகளின் பாடமே. குறை, களையப் பெற்று உண்மையைத் தழுவியதாகக் கொள்ளலாம்.

இந்த இரு பதிப்புக்களும், கம்பர் படைத்த காப்பியத்திலேயே, தம் வாழ்நாள் முழுமையும் ஆழ்ந்து தோய்ந்த அமரர் குருதேவர், திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், கம்பனடிப்பொடி முதலிய பேரறிஞர்களால் ஆராய்ச்சி செய்து வெளியிடப்பட்டவைகளாகும்.

+ அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு - கம்பராமாயணம் பக்-38.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதனால். இந்தப் பாடமே இங்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

இந்த இரு பதிப்புக்களும் கம்பராமாயணச் செய்யுட்களை மட்டுமே வெளியிட்டுள்ளன, உரை எழுதப் படவில்லை.

கதையா? கவியா?

தெய்வமாக்கதை, தெய்வமாக்கவி, இவ்விரண்டனுள் எது, பாடல் பொருளுக்குச் சிறப்பளிப்பதாகவும் நூலாசிரியரின் உள்ளக் கருத்தை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது என்பதைக் காணவேண்டும்.

'இது' இயம்புவது யாது? என்ற வினாவைஎழுப்பிக் கொண்டு, அதற்கு விடை கூறுவதாக அமைந்துள்ளது இந்தக் கவிதை.

'இது' என்ற சுட்டுச்சொல் இராமாயணக்கதையை குறிக்கிறது என்பதில் யாருக்கும் ஐயம் இல்லை.

'இராமாயணத்தை நான் இயம்புவது எதற்கு என்றால், தெய்வமாக்கதை - இராமாயணக் கதையின் பெருமையைத் தெரிவிப்பதற்குத்தான்' என்று பொருள் படும் 'கதை' என்று பாடம் கொண்டால்.

கவிச்சக்கரவர்த்தியின் கவிதைச் சிறப்பிற்கு உரிய பொருளாக இது அமையவில்லை என்பதை நன்கு உணரலாம்.

'இது'வும் கதை: 'தெய்வமாக்கதை'யும் கதை' ஒன்றைச்சொல்வது, அதனைக் கொண்டு' வேறு ஒன்றன் பெருமையைக் கூறுவதாக அமைவதுதான் பொருள் சிறப்புடைய கவிதையாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதனால் 'இது' இராமகாதை இயம்புவது தெய்வமாக் கவியின் பெருமையைத் தெரிவிப்பதற்கே ஆகும் என்று கொள்வதே பொருள் சிறப்புடையதாகும்.

'கவி: வான் மீகரா? :

'தெய்வ மாக்கவி' என்ற கவிதைத் தொடருக்கு பொருள் காண்பது எப்படி? இதற்கு முந்தைய கவிதையின் பொருளை முன் நிறுத்திக் கொண்டு, இதன் பொருளைக் காண்பதே சிறப்புடையதாகும்.

'நொய்தின் நொய்யசொல் நூற்கலுற்றேன். எனை!
வைத வைவின் மராமரம் ஏழ்துளை
எய்த எய்தவற்கு எய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொல் நின்ற தேயத்தே
(கம்-5)

'மரா மரங்கள் ஏழும் துளைபடுமாறு அம்பு எய்த இராமபிரானது சிறந்த கதையை வடமொழியில் செய்த வான்மீகரது புகழ் நிலைத்து நின்ற இந்த நாட்டில், சாதாரண சொற்களைக் கொண்டு அந்தக் கதையைப் பாடத்தொடங்கினேன். என்னே என் பேதைமை!' என்று, வான்மீரது பெருமையையும், அந்த முனிவரது வடமொழி இராமாயணக் கவிதைப் பெருமையையும் கூறி தனது சொல்லின் சிறுமையையும் எடுத்துக்காட்டித் தம் அவையடக்கத்தைப் புலப்படுத்துகின்றார் கவிச் சக்கரவர்த்தி இந்தக் கவிதையில்.

வான்மீகியின் வடமொழிக்கவிதைச் சிறப்பையும் அவரது பெருமையையும் நன்கு உணர்ந்த தேயம்(நாடு) இது.

வைத-சபித்த: செய்தவன்-தவம்செய்தவான்மீகி:
சொல்-புகழ்: நொய்து-மெல்லிது:
நூற்கலுற்றேன்-நூல் செய்யத் தொடங்கினேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதனால் அவரது (வான்மீகர்) சொல் - புகழ் நிலைத்து நிற்கும் தேசமாக அமைகிறது இது.

'வான்மீகரது புகழ் நிறைந்த இந்த நாட்டில், மேலும் அவரது பெருமையைத் தெரிவிப்பதற்காகவே நான் இராமகாதை பாடுகின்றேன்' என்றால் அதில் பொருள் சிறப்பு இருக்கிறதா!

அதனால் 'தெய்வ மாக்கவி' என்பது, வான்மீகரை அன்றி வேறு ஒருவரைக் குறிப்பதாகப் பொருள் கொள்வதே சிறப்புடையதாகும்.

வடமொழிக் கவிஞனது பெருமையை உணர்ந்த தமிழ்நாட்டில், அந்தக் கவிஞனது மாட்சியை-பெருமையைத் தெரிவிப்பதற்காகவே இராமாயணம் பாடுவாரா கம்பர்?

ஆகவே, 'தெய்வ மாக்கவி' என்ற தொடரால் குறிக்கப்படுபவர் யார்? என்பதைத் தெளிவாகக் காண வேண்டும்.

தெளிவுக்கு வழி :

சென்னைக் கம்பன் கழகப் பதிப்புக் குழுவின் பேரறிஞர்களுள் ஒருவராக இருந்து பணியாற்றியவர் பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள். இப்பேராசிரியர், கம்பன் காப்பியத்தை முழுமையாகப் பலமுறை ஆய்ந்து ஆய்ந்து எழுதிய நூல்கள், பலப்பல.

அவற்றுள் ஒன்று 'கம்பன் - புதிய பார்வை' 1984 இந்நூலுள், கம்பர், எந்த நூலை அடிப்படையாக்கிக் கொண்டு தம் காப்பியத்தைத் தொடங்கி உள்ளார் என்று தன் நுண்நுழை புலம் கொண்டு ஆராய்ந்து வெளியிடு கின்றார் பேராசிரியர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'முதற்பாடல் (உலகம் யாவையும்) கடவுள் பற்றிக் கூறி, மனிதன் அவனிடம் சரணம் புகுவதே முறை என்பதனை வலியுறுத்திற்று, இரண்டாவது பாடல் (சிற்குணத்தர்) இறைவனுக்கு அடுத்த நிலையில் உள்ள ஞானிகள், சித்தர்கள் என்பவர்களாகிய பெரியோர்கள் பற்றிக்கூறி, மானுட சமுதாயம் அவர்கள் பற்றி அறிவதும், சிந்திப்பதும் பயனுடைய செயலாகும் என்று கூறிற்று, மூன்றாவது பாடல் (ஆதிஅந்தம்) கல்வி ஒன்றின் மூலமாக அறிவைப் பெருக்கிக்கொள்ள முயலும் மனிதர்கள் பற்றிக் கூறி அவர்கள் கல்வி உண்மையானதாக இருப்பின், மெய்ந்நெறி நன்மையனாகிய இறைவன் திருவடிப்பற்று உடையவர்களாக இருத்தல் வேண்டும்' என்று கூறிற்று, இம்மூன்று பாடல்களும் மூன்று குறள்களை மனத்துட்கொண்டு பாடப் பெற்றவை என்பனதை எளிதில் அறியலாம்.

'மலர்மிசை ஏகினான் மாணஅடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.'

'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்.'

'கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்' (குறள் 3, 28, 2)

என்ற குறள்களுடன் கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை என்ற இரண்டு அதிகாரங்களின் முழுக்கருத்தும், இம்மூன்று பாடல்களில் இடம் பெற்றிருப்பதை அறியலாம். இறைவன் பெருமை, அடியார் பெருமை, கற்றவர் கடமை என்ற மூன்றையும் கடவுள் வாழ்த்து என்ற தலைப்பில் கூறி விடுகிறான் கவிஞன். கடவுள் வாழ்த்துப் பகுதியில், வாழ்த்துடன் மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூறி, மனிதன் கடமை என்ன என்பதையும் உணர்த்திய பெருமை கம்பனுக்கே உண்டு.' +

இப்பேராசிரியரது ஆய்வுக் கருத்துரை, 'கம்பர், திருவள்ளுவரது திருக்குறளை அடிப்படையாக்கிக் கொண்டு தான், தமது காப்பியத்தைத் தொடங்கியுள்ளார்' என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

இந்தத் தெளிவு, 'தெய்வ மாக்கவி' என்று 'கம்பரால் குறிப்பிடப்படுபவர் எவர்?' என்பதைத் தெரிந்துகொள்வ தற்கு வழி வகுக்கின்றது.

கம்பர் இயம்புவது (பாடுவது) நடையில் நின்று உயர் நாயகன் (ஒழுக்கத்தால் உயர்ந்த தலைவன் இராமன்) சரிதம்.

இந்தச் சரிதம், காப்பியமாக உருப்பெறுவதன் தொடக்கமே, திருவள்ளுவர் தந்த, ஒழுக்க நூலாகிய திருக்குறளை முன்நிறுத்திக் கொண்டதாகும்.

அற நூல் :

'செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம் பாடிற்றே ஆயிழை கணவ!'+

என்பது புறநானூற்றுச் செய்யுள் தொடர்.

இந்தச் செய்யுளைப் பாடியவர் 'ஆலத்தூர்கிழார்' என்ற சங்க காலச் சான்றோர்.

இவர்திருக்குறளை, 'அறநூல்' என்றே குறிப்பிடு கின்றார்.

கம்பன்–புதிய பார்வை: திரு. அ. ச. ஞானசம்பந்தன் பக் 87, 88. புறநானூறு - 34.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மக்களுக்கு, அறவாழ்க்கையின் வழிகாட்டவந்த திருக்குறளைப் பார்க்கின்றார் கம்பர்.

தெய்வப்புலவர் திருவள்ளுவர் தந்த திருக்குறளின் அறத்தை, கம்பர், தம் உள்ளத்தில் இருத்திக்கொண்டு, 'அறம்தலை நிறுத்தவந்த இராமசரிதத்தைக் காப்பியமாக இயம்பத் தொடங்குகின்றார்.

புலவர் பெருமான் உள்ளத்தில், சந்தேகம் ஒன்று எழுகின்றது.

'மாக்கதை செய்த, செய்தவன் சொல்நின்ற தேயம்' இது. - 'சிறந்த கதையாகிய இராமாயணத்தை வடமொழியில் செய்த, தவம் செய்தவனாகிய வால்மீகியின் புகழ் ஓங்கி நிற்கின்ற இந்த நாட்டில், நான், அற நூலின் அடிப்படையில் அந்தக் கதையை இயம்பினால் வையம் (பெரியோர்) ஏற்குமா ?

இது, கம்பரின் உள்ளத்தில் உதித்த ஐயம்.

"இந்த இராம கதை, 'வாங்கரும் பாதம் நான்கு வகுத்த வான்மீகி' வடமொழியில் பாடித்தந்த உயர்ந்த காவியம்தான்' ஆயினும், தெய்வ மாக்கவி (ஞான) திருவள்ளுவர் தந்த திருக்குறளின் அற நெறிக்கும் தமிழ்ப் பண்பாட்டு நெறிக்கும் முரணாக அமைந்த நிகழ்ச்சிகளைக் கொண்டதாக உள்ளதே, ஆதிகவி வான்மீகி தந்த வடமொழி ராமாயணம்? அதனால், நான் இயம்ப (பாடுவதற்கு) இருக்கும் தமிழ் இராமாயணக் காப்பியம், முந்தைய வடமொழி இராமாயணக் காவியத்திற்கு ஒரு எதிர் நூலாக அமைந்துவிடுமோ? + ஆகவே, 'ஆதிகவிக்கு ஒரு எதிர்க் கவியா?' என்று என்னை உலகப் பெரியோர்கள் (வையம்) இகழலாம்: அதனைத் தொடர்ந்து, என்னைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(இராமாயணக்) குற்றவாளியாகவும் கூடக் காணலாம்." அதனால் என் செய்வது என்று சிந்தித்தார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

சிந்தனையின் முடிவில், ஒரு தெளிவு பிறந்தது புலவர் பெருமானுக்கு. உடனே, துணிந்து, தன் கருத்தை வெளிப்படுத்திவிட்டார் கவிச்சக்கரவர்த்தி.

எப்படி? யான் இயம்புவது (சொல்வது) இராம காதைதான். அதில் ஐயம் இல்லை ஆனால், அதை எதற்குச் சொல்கின்றேன் என்றால், தெய்வத் தன்மை நிரம்பப் பெற்ற கவிஞராகிய திருவள்ளுவர், உலக நன்மைக்காக வழங்கிய அற நூலாகிய திருக்குறளின் பெருமையை விரிவாகத் தெளிவுபடுத்துவதற்குத் தான்.

ஏன் என்றால், இப்புலவர் பெருமான்தான், பொய் யில்லாத (பிழையே சிறிதும் இல்லாத) நல்ல கேள்வி ஞானமும், புலமைத்திறமும் ஒரு சேரக்கலந்து நிரம்பப் பெற்ற தமிழ்ப் புலவர் பெருமக்களால், 'தெய்வ மாக்கவி' என புகழ்ந்து சொல்லப்படுகின்றார். அதனால், நான் இது இயம்புவது, 'தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே' என்று இவ்வாறாக, தம் கருத்தை வெளிப்படுத்தினார் கம்பர் பெருமான்.

ஏன்? அவர், 'என்றும் உள தென்தமிழை இயம்பி இசைகொள்ள வந்தவர்' அல்லவா ?

கம்பர் பாடிய இராமாயணம் வான்மீகியின் நூலை நோக்க வழிநூலுமன்று :

+ சார்புநூலுமன்று : இஃது எதிர்நூல் ஆகும். 'கம்பருக்குக் கதைகொடுத்தவர் வான்மீகியா ?' பக். 20. கு. திருமேனி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழின் ஆழம் அளந்து கண்ட கவிச்சக்கரவர்த்தி கம்பர், வள்ளுவர் தந்த திருக்குறளின் பெருமையை, உலகுக்கு எடுத்துக் காட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டார். அதனை முழுமையாக நிறைவேற்றுவதற்கு, வான்மீகி தந்த இராம சரிதத்தைச் சிறந்த கருவியாக்கிக் கொண்டார்.

'இது (இராமாயணம்) இயம்புவது, தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே'-இறுதியில் அமைந்துள்ள 'ஏ' தேற்றப் பொருளில் அமைந்தது.

கம்பரது பாடல் பொருளாக அமைந்தவரும் (திருவள்ளுவர்) தெய்வ மாக்கவி: அவரது (திருவள்ளுவர்) பெருமையைத் தெரிவிக்கக் காப்பியம் பாடிய கம்பரும் ஒரு தெய்வ மாக்கவி ஆவார்.

கம்பராகிய தெய்வ மாக்கவியின் காப்பியம். திருவள்ளுவராகிய தெய்வ மாக்கவியின் பெருமையை எப்படி விவரித்துள்ளது ?

இதனைக் கம்பர் காப்பியத்துள் காண்போம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ:

2

நாடு

வாழ்க்கை வளம்:

மக்களின் அறவாழ்க்கைக்கு அடிப்படையாக அமைவது, அவர்கள் வாழும் நாட்டின் வளம்.

இயற்கை வளம் நிறைந்த நாட்டில் வாழும் மக்கள் தான், நூல்களில் கூறியுள்ள அறத்தை நெறிபிறழாமல் கடைப்பிடிக்க முடியும்.

அதனால், அறவாழ்க்கைக்கு வழிகாட்ட வந்த வள்ளுவப் பெருந்தகையார், அந்த மக்கள் வாழவேண்டிய நாடு எப்படி இருக்கவேண்டும் என்று ஆராய்ந்து பார்த்து, நாட்டுக்கு இலக்கணம் வகுக்கின்றார் தம் தெய்வத் திருக்குறளில்

'மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்து அறன்' என்று அறத்தின் இலக்கணத்தை, வரையறுத்துக் காட்டியது போன்றே, 'நாடு' என்பது எது என்பதைத் தெளிவுபடுத்து கின்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு." (திருக்குறள் 731)

விளைவு :

நாடு முதன்மையாக விளங்கவேண்டுமானால், மூன்று சேர்ந்திருக்கவேண்டும்.

நாட்டை முதன்மையாக்கும் மூன்றனுள் முதலாவது விளையுள். அது, தள்ளாததாக இருக்கவேண்டும். எந்தக் காலத்திலும் குறைவு என்பதே இல்லாத உணவுப் பொருள் களின் பெருக்கம் - குறைவிலா நிறைவைக் காட்டும் விளைவுதான், மக்களின் இன்றியமையாத அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

மழை பெய்யாத காலத்தும் சாவி போகாத விளை நிலம் வேண்டும். அந்நிலத்தில், எல்லாவகையான உணவுப் பொருள்களையும் உற்பத்தி செய்து கொடுக்கும் உழவர்கள் வேண்டும்.

உழவர்களின் உழைப்பு, எங்கு, நிலத்தோடு இயைந்து நிற்கிறதோ, அங்கு, தள்ளா (குன்றாத) விளையுள் தானாகவே பெருகி நிற்கும்.

நாட்டு மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்தற்குரிய விளைவுகளை உற்பத்தி செய்து கொடுக்கக் கூடிய உழவர்கள்தான். நாட்டில் முதல் இடம்பெறுகின்றனர்.

'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்று. உழவுத் தொழிலில் ஈடுபட்டவரது பெருமையைப் பின்னால் கூறப் போகும் தெய்வப்புலவர், 'தள்ளாவிளையுள்' என்ற தொடரின் மூலம், 'நாடு நாடாவளத்தன' வாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விளங்குவதற்கு. முதல் சேவை (தேவை)யாளர்கள் உழவர்கள்தான் என்று, முதலிலேயே குறிப்பிடுகின்றார்.

தள்ளாவிளையுள்' என்ற தொடர்க்கு, குன்றாத விளையுளைச் செய்வோர்-விளையுள் என்பது உழவர்மேல் நின்றது' என்றும், 'தப்பாமல் விளையும் நிலங்கள்' என்றும் 'மாறாதுவிளையும் விளைச்சலும்' என்றும், 'மழையில்லாத காலத்தும் சாவி போகாத நிலம்' என்றும் உரையாசிரியர்கள் தம் நுண்ணறிவிற்கு உகந்த வண்ணம் பொருள் செய்துள்ளனர்.

அத்தனையையும் உள்ளடக்கிக்கொண்ட கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெருமான், இதற்கு ஓர் விரிவுரையாகக் கவிதைகளை உருவாக்கி, தாம் கண்ட கோசலநாட்டில் இணைத்து வைத்துள்ளார்.

தக்கார் :

கனியும் கிழங்கும் தானியங்களும் கணக்கின்றித்தரும் நாடாக இருந்தாலும், அவைகள் அனைவர்க்கும் போய்ச் சேரவில்லையென்றால், நாட்டின் இலக்கணம் குறைவு பட்டதாகவே ஆகிவிடும்.

நிலம் நல்கும் விளைவுகளை, அங்குவாழும் அனைவரும் பெற்று நுகரச் செய்யுமாறு அறத்தை எடுத்துக்கூறும் அறவோர்கள் சேர்ந்திருக்க வேண்டும் நாட்டில்.

தக்கார் - தகுதியுடையவர், என்ன தகுதி? மக்கள் ஏற்கும் வண்ணம் அறவுரைகளைச் சொல்லும் தகுதி. இத்தகுதி உடைய அறவோர்கள் நாட்டில் இரண்டாவது இடம் பெறுகின்றனர். அதாவது எல்லோராலும் ஏற்கப் பட்ட நடுநிலையாளர் ஆகின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செல்வர் :

நாட்டில் மூன்றாவது (நிறைவான) இடத்தைப் பெறுபவர் செல்வர். அவர்கள் 'தாழ்விலாச்செல்வர்களாக இருக்கவேண்டும்.

'தாழ்வு-கேடு (அழிவு) கேடு இல்லாமை - வழங்கத் தொலையாமை' என்பது பரிமேலழகர்தரும் விளக்கம்.

'நாட்டில், செல்வர்கள் சிலர் என்றால், வறியவர்கள் பலர்' என்றுதானே பொருள்படும்.

பலர் வறியவர்களாக வாழ்வது நல்ல நாடாகுமா?

இப்படி நாட்டின் இலக்கணம் சொல்லுவாரா உலகப் பெருங்கவிஞர் வள்ளுவர்? என்ற வினாவை எழுப்பிக் கொண்டு, இதற்கு ஒரு விளக்கம்காண முற்படுகின்றார் டாக்டர். திரு. மு. வரதராசனார் அவர்கள்.

'செல்வர் சிலர் என்ற அளவிலேயே வறியவர்பலர் இருக்கநேரும். அத்தகைய நாடு சிறந்த நாடு அன்று வறுமை என்பது எந்த மூலை முடுக்கிலும் இல்லாமல் எல்லாரும் செல்வராக விளங்கும் நாடே நல்ல நாடு……… நாட்டுமக்கள் எல்லாரும் தாழ்விலாச் செல்வராக இருப்பதாகக் கொள்ளுதல் பொருந்தும். ஒரு சிலர் செல்வராக விளங்கி, மற்றப் பெரும் பாலோரைச் சுரண்டி, அதனால் தம் செல்வத்தை மென்மேலும் பெருக்கிக் கொள்ளும் வாழ்வு குறை உடைய வாழ்வுதான்: தாழ்வுடைய வாழ்வுதான். வறியவர் பெரும் பாலோராக உள்ள நாட்டில் பொருள் குவித்து வைத்திருக்கின்றவர்களைச் 'செல்வர்' என்ற சொல்லால் குறிப்பதும் பொருந்தவில்லை. அவர்களிடம் உள்ள பொருள் மற்றவர்களிடமிருந்து வந்து சேர்ந்துள்ள தொகுதியே அல்லாமல், நாட்டின் பெருமைக்கு ஏற்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செல்வமாகக் கொள்ளத்தகாதது.........வறியவர் பலரிடமிருந்து ஒரு சிலரிடம் குவிந்துள்ள செல்வம் தாழ்வுடைய செல்வமே ஆகும். எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தும் காட்சியே தாழ்விலாச் செல்வக் காட்சியாகும்.' + என்பது, திருக்குறளை எளிய முறையில் தமிழ் உலகுக்கு உணர்த்திய மு. வ. அவர்கள் தரும் விளக்கமாகும்.

தாழ்வும் வாழ்வும் :

நாட்டின் தாழ்வு எது? வாழ்வு எது? என்பதை, விளக்கமாகக் காட்டுவதற்கு, கைகொடுத்த நூல் எது என்பதை அவரது உரை நடையே காட்டிவிடுகிறது.

கவிச்சக்கரவர்த்தி காட்டியுள்ள கோசல நாட்டு வாழ்வுக் கவிதைதான், மு. வ. அவர்களை, இப்படிச் சிந்திக்க வைத்துள்ளது.

வள்ளுவர் கருத்துப்படி, நாடு எவ்வாறு இருக்க வேண்டும் ?

நிலத்தின் இயற்கை வளத்தோடு, தம் உழைப்பினை இணைத்துக் கொண்டு, விளைவினைப் பெருக்கிக் கொடுக்கின்ற உழவர்களும், அந்த நல்ல விளைவுகளை அனைவரும் நுகரும் வண்ணம் அறம் கூறும் அறவோர்களும், அவர் தரும் அறவுரைகளைக் கேட்டு, விளைவுச் செல்வம் ஒரு சிலர் மட்டும் குவியும் தாழ்வு இல்லாது, அனைவரும் பெற்று வாழும் செல்வரும் ஒரு சேர இயைந்து இருப்பதுதான் நல்ல நாடாகும்.

+ திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் - மு. வ. பக்கம் 170 - 171.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வள்ளுவப் பெருந்தகை கொடுத்த இந்த நாட்டின் இலக்கணத்திற்கு, இலக்கியமாகக் காட்டுகின்றார் தமது காப்பியத்துக் கோசல நாட்டை. யார்? 'தெய்வ மாக்கவி மாட்சி தெரிவிக்க' வந்த கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெருமான்.

கோசல நாடு, காப்பியத் தலைவன் இராமபிரான் அவதாரம் செய்வதற்கு ஏற்ற பெருமை பெற்றிருக்க வேண்டும். அந்தப் பெருமை, 'தள்ளா விளையுளும் (உழவர்கள்) தக்காரும், தாழ்வு இலாச் செல்வரும் சேர்ந்திருப்பது தான்.'

கோசல நாட்டில் சேர்ந்துள்ள இந்த மூவரின் பெருமையை விளக்குவதற்கு, நயமான பல கவிதைகளை வழங்குகின்றார் கவிச்சக்கரவர்த்தி. அவ்வளவும், இதற்கு முன் எந்தப் புலவனும் வழங்காத நவ நவமான (புதுமை) கருத்து வளம் பொதிந்த உணர்வுக் கவிதைகளாகும்.

உள்ளவையும் உழவர்களும் :

"கதிர்படு வயலின் உள்ள, கடிகமழ் புனலின் உள்ள,
முதிர்பயன் மரத்தின் உள்ள, முதிரைகள் புறவின் உள்ள,
பதிபடு கொடியின் உள்ள, படிவளர் குழியின் உள்ள,-
மதுவளம் மலரில் கொள்ளும் வண்டுஎன-மள்ளர்.
கொள்வார். + (கம் - 52)

கோசல நாட்டில் உள்ள 'தள்ளா விளையுளை' விவரிக்கின்றது இந்தக் கவிதை. அவைகளைப் பெற்றுக் கொள்பவர் யார் என்பதையும் சுட்டிக் காட்டுகிறது இது.

+ புனல்-தண்ணீர்: முதிரை-அவரை துவரை முதலிய புன்செய்த்-தானியம்: புறவு-முல்லை நிலம்: பதி-பதியம் இடப்பட்ட: படி-நிலம்: மள்ளர்-உழவர்: மது-தேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிலத்தில், கதிராக விளையும் உணவுத் தானியங்கள் உள்ளன: நிலத்தில் தேங்கியுள்ள நீரில், வாசனை மிகுந்த நீர்ப்பூக்கள் உள்ளன: முதிர்ந்த பயன்தரும் மரங்களில் பழங்கள் உள்ளன: கொல்லை நிலத்தில், அவரை துவரை முதலிய புன்செய்த் தானியங்கள் உள்ளன: நிலத்தில் பதிந்து, கீழே படர்ந்துள்ள கொடிகளில், பூசணி முதலிய காய் வகைகள் உள்ளன: நிலத்தில், தோண்டிப் பெயர்த்து எடுக்கவேண்டிய குழிகளில் மஞ்சள், இஞ்சி முதலிய மணப் பொருள்கள் உள்ளன.

நாடாவளத்தனவாகிய கோசல நாட்டில் இயற்கையாகக் கிடைக்கும் இந்த விளைவுகளைப் பெறுபவர்கள் உழவர்கள். (மள்ளர்கள்)

இவைகளைப் பெறும்போது, இந்த விளைவுகளுக்கு மூலகாரணமாக இருக்கும், மரம், கொடி, முதலியவற்றிற்கு எந்தவிதமான தொல்லைகள் நேராதபடி, பயன்களைப் பெற்றுக்கொள்வர் மள்ளர்கள்.

வளப்பம் உள்ள மலர்களில் நிறைந்து வழியும் தேனை, வண்டுகள் எவ்வாறு மெல்ல மெல்ல எடுத்துக் கொள்கின்றதோ, அதைப்போல மள்ளர்கள் அந்த விளைவுகளைப் பெற்றுக்கொள்வார்கள்.

உவமையாக வந்த வண்டுகள், கோசல நாட்டு உழவர்களின் இடைவிடாத முயற்சியையும் வெளிப்படுத்து கின்றன.

பல மலர்களில் உள்ள தேனை, வண்டுகள், தாம் மட்டும் உண்டுவிடவில்லை. அவைகளைச் சேகரித்துக் கொண்டு வந்து, வெறும் கூட்டைத் தேன்கூடாக ஆக்குகின்றன வண்டுகள். வண்டுகளால் கொண்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரப்பட்ட தேன், மற்றவர்களுக்கும் பயன்படுகின்றது.

அதைப்போல, நாட்டின் பல இடங்களில் கிடைக்கும் விளைவுப் பொருள்களை, தேடி எடுத்துவந்து, அவைகளை அனைவர்க்கும் பயன் படச் செய்வர் கோசல நாட்டு மள்ளர்கள்.

'தள்ளா விளையுள்' என்பதற்குக் கவிச்சக்கரவர்த்தி கொடுத்த விரிவுரை இது.

தக்கார் : (அறவோர்)

நாட்டில் கிடைக்கும் விளைவுப் பொருள்களை அனைவரும் நுகர்ந்து இன்புற வேண்டும் என அறவுரை கூறும் அறவோர்கள் கோசல நாட்டில் வாழ்ந்தனர்.

அதனால், கோசலத்தில் ஏற்றமே பெருகிற்று. இழிவு என்பதே இல்லை.

செம்மையுடைய நற் சிந்தனையாளர்களின் அறவுரைகளை, மக்கள் கேட்டு, அதற்கு ஏற்ப அவர்கள் நடந்து கொள்வதால், அந்நாட்டில் நல்லறமே ஆற்றப்படுகின்றது.

"ஆற்றல் நல்அறம் அல்லது இலாமையால்,
ஏற்றம் அல்லது, இழித்தகவு இல்லையே."
(கம். 70)

மக்கள், செய்தல் என்பது நல்ல அறத்தைதான். வேறு பாவச் செயல் என்பது அங்கு இல்லை. அதனால் உயர்ந்த புகழே (ஏற்றம்) கோசல நாட்டில் நிலவும். சிலர் மட்டும் விளைவுப் பொருளை நுகரும் (இழித்தகவு) தாழ்மையாகிய பழிப்பு அங்கு இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கிடைப்பதை அனைவரிடமும் சேர்க்கும் நல்ல அறச் செயல், ஏற்றம். சிலர் மட்டும் அவைகளை அனுபவிப்பது இழித்தகவு'

தான்கண்ட கோசல நாட்டில் ஏற்றமே (உயர்ந்த புகழ்) காட்ட விழைகின்றார் கம்பர் பெருமான்.

தாழ்விலாச் செல்வர்:

நாட்டில் பெருகிவளரும் செல்வம், ஒரு சிலரிடத்து மட்டும் சென்று சேர்ந்தால், அது தாழ்வு இல்லாச் செல்வம் ஆகாது. அது நாட்டின் நல்வாழ்வைக் காட்டுவதாக அமையாது.

நாட்டின் நல்வாழ்வு என்பது, சிலரிடத்துச் செல்வத்தையும் பலரிடத்து வறுமையையும் சேர்ப்பிப்பது அல்ல. 'நாட்டில் வறியவர்கள் என்பவர்கள் எங்கும் இல்லை' என்று சொல்லப்படுவதுதான் நல்வாழ்வுக்குரிய நாடாகும் என்று, வள்ளுவத்தை ஒட்டி, தம் சிந்தனையை ஒட்டினார் கவிஞர் பெருமான் கம்பர்.

அந்த சிந்தனை ஓட்டத்தில் புதியதொரு நாடுமிதந்து வருகின்றது. அந்நாட்டில், உலகில் எங்கும் அதுவரை கண்டிராத புத்தம் புதிய பொருளாதார சமத்துவ சமுதாய நல்வாழ்வு உருவெடுக்கின்றது.

அந்த நல்வாழ்வின் உருவத்தை, கவிச்சக்கரவர்த்தி, தமக்கே உரிய தனித்துவத்தின் ஆற்றலால், ஒருகவிதையில் தீட்டிக் காட்டுகின்றார்.

'இல்லை' என்ற சொல்லைக் கொண்டே, நாட்டின் உடைமைக்கு உருவம் கொடுப்பதென்றால், அது எவ்வளவு அற்புதமான, ஆழ்ந்த கருத்தை, தன்னுள் அடக்கிக்கொண்ட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிதையாக இருக்கும்.

'இல்லை' என்பது தனித்து நிற்கும்போது, சொல், அது. கவிதைக்குள் நுழைந்ததும் 'சீர்' (சிறப்பு) ஆகிவிடுகிறது.

சொல்லாக நின்ற 'இல்லை' என்பது, சீர் உருப் பெற்றுக் கவிதைக்குள் புகுந்ததும், அந்தக் கவிதையை கருத்துச் செறிவுள்ளதாக்கி, அதனை, காலம்கடந்து இடம் கடந்து வாழச்செய்துவிடுகிறது.

எங்கோ ஒதுக்குப்புறத்தில் கிடக்கும் சாதாரணமான சொற்களைக் கொண்டே, கற்றார் இதயத்தைக் களிக்கச் செய்யும் கவிதைகளை உருவாக்கி, அதன் மூலம், சமுதாய நல்வாழ்வுக்கு ஏற்ற கருத்துக்களை வாரிவழங்கும் ஆற்றல் கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெருமானுக்கே உண்டு.

'வண்மை இல்லை' என்று கவிதை தொடங்குகிறது. (வண்மை-வள்ளல் தன்மை)

'நல்வாழ்வு மலர்ந்துள்ள நாட்டில் வள்ளலே யாரும் இல்லையா? இது என்ன நல்லநாடு?' என்று கேட்பாரைத் திகைக்க வைக்கிறது கவிதைத் தொடர்.

கேட்பாரின் திகைப்பைத் தெளிவிக்க மேற்கொண்டு தொடர்கிறது கவிதை.

'வண்மை இல்லை,ஓர் வறுமை இன்மையால்'

வண்மைக்குஎதிர்மறை வறுமை. வறுமைதான், வண்மையை நாட்டில் வாழவைக்கிறது: வண்மைதான், நாட்டில் வறுமையை, வீழவைத்துப் பெருமை பெற்றுக்கொள்கின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பசி என்னும் தீப்பிணி நாட்டில் பலரைத் தீண்டும் நிலையிருந்தால்தான், 'பசிப்பிணி மருத்துவர்களாகிய' வள்ளல்களுக்கு அங்கு வேலை உண்டு.

கம்பர் காணும் புதுமைக் கோசலத்தில் அத்தகைய வள்ளல்களுக்கு வேலையே கிடையாது.

'ஓர் வறுமை' என்ற தொடர் மிக ஆழ்ந்த கருத்துப் பொதிந்த ஒன்றாகும்.

ஒரு விதமான வறுமையும் கோசலநாட்டில் இல்லை, ஏதோ ஒருவகையில் வறுமையிருந்தாலும், வண்மைக்கு இடம் கிடைத்துவிடும்.

'வறுமை' என்றால் இன்மை என்று பொருள். வாழ்க்கை வளத்திற்குத் தேவையான பொருள் எது ஒன்று இல்லை என்றாலும் வறுமைதான்.

வளமான வாழ்க்கைத் தேவைப்பொருள்கள் அனைத்தையும் 'செல்வம்' என்ற சொல்லாலேயே குறிப்பிடுகின்றார் வள்ளுவப்பெருந்தகையார்.

அருட்செல்வம், பொருட்செல்வம், கல்விச்செல்வம், செவிச்செல்வம், மக்கட்செல்வம், வேண்டாமை என்னும் விழுச்செல்வம், சொற்செல்வம் என்பன போன்ற பல செல்வங்களைக் காட்டுகின்றார் தெய்வ மாக்கவி திருவள்ளுவர்.

இந்த செல்வத்தில் எது ஒன்று இல்லையானாலும், மனிதன் அதைப் பொறுத்த அளவில் அவன் வறியவன்தான்.

'நல்கூர்ந்தார் செல்வ மகள்' என்ற கலித் தொகைச் செய்யுள் தொடருக்கு, நச்சினார்க்கினியர் எழுதியுள்ள

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'பிள்ளையான் மிடிப்பட்டாருடைய செல்வத்தையுடைய மகள்' என்ற பொருள் பொதிந்த உரை இங்கு சிந்தித்தற்கு உரியதாகும். +

அந்தக் குடும்பத்துக்கு பொருட்செல்வம் ஏராளமாக உண்டு. ஆனால் மக்கட் செல்வம் இல்லாததால் வறுமை (மிடிப்பட்டார்) யாளராயினர் என்பது கருத்து.

கோசலத்தில், ஒருவர் கல்விச் செல்வமோ, செவிச் செல்வமோ இல்லாதிருந்தால், கல்விமுற்றவல்லார் ஒருவர், அவர்க்குக் கல்வியைக் கொடுத்து, வறுமையைப் போக்கிய வள்ளலாக உயர்ந்து விடுவார்.

கோசல நாட்டில், எந்த விதமான வறுமையாளர் களும் இல்லாததால்தான், யாரும் எந்த விதத்திலும் வள்ளல்களாக உயர்வதற்கு வாய்ப்பு இல்லை.

'எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தி யவர்? அதனால் ஒரு விதத்திலும் வறுமையாளர்கள் அங்கு இல்லை.

எல்லாவகையான செல்வத்தையும், எல்லாரும் நிரம்பப் பெற்றிருப்பதால், கோசல நாட்டார் அனைவரும் தாழ்வு இலாச் செல்வர்களாக நல்வாழ்வு வாழ்கின்றனர்.

வாழ்க்கைத் தேவைப் பொருள்கள் அனைத்தும் நிரம்பப்பெற்ற நாட்டில், களவுக்கு வேலையே இல்லை. அதனால் பொருட் காவலுக்கும் வேலை இல்லை.

கொள்வார் ஒருவரும் இன்மையால், கொடுப்பார்க்கு அங்கு என்ன வேலை?

+ கலித்தொகை - 50

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விரிவுரைக் கவிதைகள் :

'தாழ்விலாச் செல்வர்' என்ற வள்ளுவத்தின் கவிதை தொடருக்கு விரிவுரை வழங்க எண்ணிய கவிச்சக்கரவர்த்தி 'வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்' என்ற கவிதை தொடரில் முன்னுரை வகுத்துக்கொண்டு, அதனைப் பல கவிதைகளில் விவரிக்கின்றார். அவற்றுள் சில.

1 'வண்மை இல்லை,ஓர் வறுமை இன்மையால்;
திண்மை இல்லைநேர் செறுநர் இன்மையால்;
உண்மை இல்லை,பொய் உரைஇலா மையால்;
ஒண்மை இல்லைபல் கேள்வி மேவலால்,
(கம் 85)

2 தெள்வார் மழையும், திரைஆழியும் உட்க நாளும்
வள்வார் முரசம்அதிர் மாநகர் வாழும் மாக்கள்
கள்வார் இலாமைப் பொருள் காவலும் இல்லை
யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும்
இல்லை மாதோ.
(கம் 165)

3 கல்லாது நிற்பார் பிறர்இன்மையின் கல்வி முற்ற
வல்லாரும் இல்லை: அவைவல்லர் அல்லாரும்
இல்லை:
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே,
இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை
மாதோ.
(கம். 166)

திண்மை-வலிமை: (பராக்கிரமம்) செறுநர்-பகைவர்: பொய் உரை-பொய்ப் பேச்சு, ஒண்மை-அறிவுடைமை: தெள்வார் மழை-தெளிந்த நீரைச் சொரிகின்றமேகம்: முற்ற-முழுவதும்: கள்வார்-திருடர்:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாட்சி :

'நாட்டில் சேரவேண்டியது மூன்று: சேரவேண்டாதது மூன்று' என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

'தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.' (திருக்குறள் 731)

'உறுபசியும், ஓவாப் பிணியும், செறுபகையும்
சேராது இயல்வது நாடு.' (திருக்குறள் 734)

நாடு, நன்னாடாக விளங்குவதற்குக்கொள்ள வேண்டிய மூன்றினையும், தள்ள வேண்டிய மூன்றினையும் தனித்தனியாக எடுத்துவிளக்கிக் காட்டியதோடு, 'இல்லை' என்ற ஒரு எதிர்மறைச்சொல்லை வைத்துக்கொண்டே, நயமான - நவநவமான கவிதைகளின் மூலம், கோசல நாட்டின் மாட்சியைத் (பெருமை) தெரிவித்துவிட்டார் கவிச்சக்கரவர்த்தி.

'இது (இராமகதை) இயம்புவது, தெய்வ மாக்கவி (திருவள்ளுவர்) மாட்சி தெரிக்கவே' என்ற கம்பநாட்டாழ்வாரது உறுதிமொழி, கோசலநாட்டுக் கவிதைகளில் உண்மை பெற்று விளங்குவதைக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"Forwarded free of cost, and with the compliments of the Department of Education, Govt. of India, New Delhi."

ஸ்ரீ:

3

வாய்மை

அறம் :

மக்கள், வையத்தில் வாழ்வாங்கு வாழ்தற்கு ஏற்ற வழிகளை வகுத்துக் கூற வந்த வள்ளுவப் பெருந்தகையார், அதற்குக் குறள் வெண்பாவைக் கருவியாகக் கொண்டார்.

குறள் வெண்பா, தமிழ் யாப்பு அமைப்பில் மிகக் குறுகிய வடிவம் கொண்டது: ஓதுவதற்கு மிக எளிமை யானது.

ஓதுவதற்கு எளிமைவாய்ந்த இந்தக் குறள் வெண்பாவில், அறிஞர்களாலும் உணர்வதற்கு அறிய வாழ்க்கைத் தத்துவத்தை அடக்கி வைத்துள்ளார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

அடக்கப்பட்டுள்ள வாழ்க்கைத் தத்துவம் அனைத்தும், அறத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

வள்ளுவர் தந்த திருமறை, ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறள் வெண்பாக்களால் நிரப்பப் பெற்றதாகும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்தக் குறள் வெண் பாக்கள் அனைத்தும், அறத்தின் கூறுபாடுகளையே விவரிக்கின்றன.

எந்தக் குறளைத் தொட்டாலும், அதில், அறத்தின் கூறுபாடு ஏதோ ஒருவகையில் ஒட்டிக் கொண்டிருக்கும்.

அதனால், இது (திருக்குறள்) 'அற நூல்' என்றே அறிஞர்களால் பெயரிட்டு அழைக்கப்படுகிறது.

அறநூலாக விளங்கும் இது, தொடக்கத்திலேயே, அறத்திற்கு இலக்கணம் வகுத்துக் காட்டுகிறது.

'மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்து
அறன்'

அறச்செயல்கள் அனைத்துக்கும் பிறப்பிடமாக இருப்பது மனம். பிறப்பிடம் தூய்மையாக இருந்தால் தான், அங்கிருந்து வெளியேறும் செயல்கள் அனைத்தும் அறத்தைச் சார்ந்ததாக அமையும்.

அறத்தின் ஊற்றிடமாகிய மனத்தில் சிறிது அழுக்கு இருந்தாலும், செய்யும் செயல்கள் எவ்வளவு உயர்ந்ததாக இருப்பினும், அவைகள் அறத்திற்கு உரியதாக அமையாது.

ஆகவே, மனத்தின் கண் மாசு (குற்றம்) எந்த வகையானும் வந்து சேராதிருப்பதே அறம் எனப்பட்டது.

மாசு அகன்றால் மனம் தூய்மை பெறும்.

மனத்தின் மாசுகளை அகற்றி (கழுவி) அதனைத் தூய்மை செய்வது எவ்வாறு?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவ்வழியையும் அழகாகக் காட்டுகின்றது வள்ளுவம்.

வாய்மையாகிய தண்ணீரை விட்டுக் கழுவினால், மாசு அகன்று மனம் தூய்மை பெறும்.

உடல் அழுக்குப் போக்க நீர்: உள்ளத்தின் அழுக்குப் போக்க வாய்மை.

'புறந்தூய்மை நீரான் அமையும்: அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்'

'புறந்தூய்மைக்கு நீரல்லது காரணம் இல்லாதவாபோல' அகந்தூய்மைக்கு வாய்மையல்லது காரணம் இல்லை என்றவாறாயிற்று.' என்பது பரிமேலழகர் தரும் விளக்கம்.

ஆகவே, மனம், தூய்மை பெறுதற்குக் காரணமாக இருக்கின்ற வாய்மையே நல்லறம் என்கிறது வள்ளுவம்.

பல அறக் கூறுபாடுகளையும் விளக்கிக் கொண்டு வந்த திருவள்ளுவர், வாய்மையைப் பற்றிச் சொல்லும் போது, தாமே, மக்கட் சமுதாயத்தின் முன் நின்று பேசுவது போலச் சொல்கின்றார்.

"யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை. எனைத்து ஒன்றும்
வாய்மையின் நல்ல பிற." (திருக்குறள்-300)

நல்ல அறம் :

தெய்வப்புலவர், அறச் செயல்கள் பலவற்றையும், அவைகளை விளக்கவந்த மெய்ந்நூல்கள் பலவற்றையும் தம் நுண்ணறிவு கொண்டு ஆராய்ந்து பார்த்தார். அந்த ஆராய்ச்சியின் முடிவாக, அவர் தீர்மானமாகச் சொல்வது, 'வாய்மையைக் காட்டிலும் உயர்ந்த நல்ல அறம் என்பது எதுவும் இல்லை' என்பதாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதுவும், ஒவ்வொரு அறக் கூறுபாட்டுக்கும் பத்துக் குறளை ஒதுக்கியது போன்றே, இதற்கும் (வாய்மைக்கும்) பத்துக்குறளைத்தான் ஒதுக்கினார் திருவள்ளுவர்.

'வாய்மை' அதிகாரத்தின் நிறைவாகத் (10 வது) தான் இந்த, தமது முடிவைத் தெரிவிக்கின்றார் புலவர் பெருமான்.

'நல்ல அறம் என்பது வாய்மைதான்' என்பது வள்ளுவப் பெருந்தகையாரது வாய்மை மொழியாகும்.

இந்த இறுதித் தீர்மானத்திற்கு முன்னால் ஒன்பது குறள்களில், வாய்மை, மனித வாழ்க்கையில் பெறவேண்டிய இன்றியமையாமையை உணர்த்தினார் புலமைச் செல்வர்.

வாயில் வரும் சொல் வாய்மை: உள்ளத்தில் அது உதிக்கும்போது உண்மை: மெய்யில் (உடலில்) செயல்படும் போது மெய்ம்மை.

உள்ளம் (மனம்) மாசு அகன்று தூயதாக இருந்தால் தானே, அங்கு உதிக்கும் எண்ணம் உண்மையானதாக இருக்கும்? அது வாய்வழியாக வெளியேறும்போது, 'வாய்மை' என்ற பெயருக்கு உரியதாக இருக்கும் ?

உண்மை உள்ளத்தினின்றும் ஊற்றெழுந்து ஓடிவரும் எண்ணம், வாய்வழியாக வழியும்போது, அந்தச்சொல் யாருக்கும் எந்த வகையிலும் தீமை தராததாகத்தான் அமையும்.

வாய்மொழிச்சொல், யாருக்கேனும் சிறிது தீமை தருவதாயினும், அது வாய்மையின் பாற்படாது: அதன் தோற்றத்துக்குக் காரணமான உள்ளமும் மாசுபடிந்ததாகவே இருக்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதனால், 'வாய்மை' எனப்படுவது, யாது ஒன்றும் தீமையில்லாதனவற்றை சொல்லுவதுதான்' என்று அழுத்தம் திருத்தமாக, வாய்மைக்கு இலக்கணம் வகுத்துக்காட்டி விட்டார் வள்ளுவப்பெருந்தகையார்.

தீமை இல்லாத வாய்ச்சொற்களின் பெருமையை, மேலும் விவரித்துப் பேசுகின்றார் மற்றைய குறள்களில்.

'வாய்மை' - வாய்ச்சொல் - மெய்யின் மூலம் செயல் படும்போது மெய்ம்மை என்ற பெயருக்கு உரியதாகின்றது.

'மெய்' - இதற்கு எதிரானது பொய், நடந்ததை நடந்தபடியே சொல்வதும். உள்ளதை உள்ளபடியே சொல்வதும் மெய்; நடவாதனவற்றை நடந்ததாகச் சொல்வதும் இல்லாதவனவற்றை இருப்பதாகச் சொல்வதும் பொய்.

மனிதன், இந்தப் பொய்யைச் சொல்வதற்குக் காரணம் என்ன? உள்ளத்தில் ஆசையாகிய மாசுபடிந்திருப்பது தான்.

மனிதன், தன்நலத்தால் கவரப்பட்டு, தனது ஆசையை நிறைவேற்றிக்கொள்வதற்காகக் கூறும் சொற்கள் அனைத்தும், பொய்யின் பாற்படும். இவை பிறர்க்குத் தீமையைத்தான் தரும்.

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இந்த நான்கும் உள்ளத்தின் தூய்மையைக் கெடுக்கவந்த அழுக்கு மாசு என்பார் வள்ளுவர்.

இவைகளுள் எந்த ஒன்று சேர்ந்தாலும், அகத்தின் தூய்மை அகலும். தூய்மையற்ற உள்ளத்தினின்றும் தோன்றி வெளிவருவது, பொய்யைத்தான் சேரும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாய்வழிவந்த சொற்கள், அதன்பிறப்பிடமாகிய உள்ளம், இப்போது எந்த உணர்வால் (மாசு) விழுங்கப் பட்டிருக்கிறது என்பதை நன்றாகக்காட்டிக் கொடுத்து விடும்.

அந்தசொற்கள் (மாசுபடிந்த உள்ளத்து எழுந்தவை) எவ்வளவு கவர்ச்சிக்கு உரியதாக இருந்தாலும் அவை வாய்மையாகாது. அறமும் ஆகாது.

வாய்மை, நல்ல அறமாக அமைவது எப்போது? மாசு அகன்ற மனத்தினின்றும் தோன்றும் போதுதான் வாய்மை நல்லறமாக விளங்கும் என்பது வள்ளுவர் கருத்து.

பொய் கலந்தது அறம் அன்று: கலவாதது அறம். மெய்கலந்தது அறம்: அது கலவாதது எதுவும் அறம் அன்று.

'வாய்மை' என்ற சொல்லின் மறுவடிவம் 'பொய் யாமை' என்னும் சொல், அந்த, சொல்லை முதன்மை யாக்கிக்கொண்டு உருவாக்கப்பட்ட குறளில் அறத்தைப் பற்றிய இந்தக் கருத்தைத் தெளிவாக்கியுள்ளார் வள்ளுவப் பெருந்தகையார்.

'பொய்யாமை பொய்யாமை ஆற்றின், அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.' (திருக்குறள் 297)

இந்தத் திருக்குறளில், அகராதியின் துணைகொண்டு பொருள் காண வேண்டிய சொற்களாக எதுவும் இல்லை, அவ்வளவும் உலக வழக்குச் சொற்களே: எளிமையான வைகளே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எளிமைச் சொற்களையே சீர்களாக்கிக்கொண்ட இந்தக் குறளும் ஓதுவதற்கு எளிமையானதே. ஆனால், இந்தச் சொற்களின் சேர்க்கைக்கிடையில் புதைந்துள்ள கருத்தைக் காண்பதுதான் அருமையாக உள்ளது.

சொற்களின் நெருக்கத்தில், வாய்மை அறத்தின் பெருக்கத்தைதான் வள்ளுவர் புகுத்தி வைத்திருக்கவேண்டும் அதனை, எந்த அமைப்பில் நூலாசிரியர் வைத்துள்ளார் என்பதைக் காண்பதற்கு உரையாசிரியர்கள் தம் நுண்ணறிவின் துணை கொண்டு தேடிப் பார்க்கின்றனர்.

உரையாசிரியர்களின் மதி நுட்பத்திற்கு ஏற்ப ஒவ்வொரு வகையான அமைப்பே கிட்டுகிறது,

உரையாசிரியர்கள் கண்ட அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால், 'பொய்யாமையைப் பொய்யாமல் செய்யின், பிற அறம் செய்கை நன்று.' என்று பொழிப்பாக்கிக் கொண்டு, பொய் கூறின், பிறஅறம் செய்கை நன்றாகாது என்ற பொருள் கொள்ளலாம்.

பிறஅறங்கள் தரும் பயனை இந்தப் பொய்யாமையே தரும் ஆற்றல் பெற்றது.

அதனால்,

'பொய்யாமை அன்ன புகழ்இல்லை: எய்யாமை
எல்லா அறமும் தரும்.' (திருக்குறள் 296)

என்றார் தெய்வ மாக்கவி வள்ளுவர்.

மனிதனுக்கு, இம்மைக்குரிய புகழைத் தருவதும் மறுமைக்குரிய அறத்தைத் தருவதும் பொய்யாமையே ஆகும். பொய்யாமை என்பது ஒன்றே, எல்லா அறப்பயனையும், அவன் அறியாமலேயே அவனுக்குக் கொடுக்கவல்லது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனிதன், பிறஅறங்களைச் செய்ய முயலா திருக்கவும், அந்த அறத்தின் பயன்களை எல்லாம் ஒருசேரக் கொடுக்கும் ஆற்றல் பெற்றது இந்தப் பொய்யாமை என்ற ஒன்றுதான்.

ஆகவே, 'வாய்மை - (பொய்யாமை)யைக்காட்டிலும் உயர்ந்த-பெரிய-நல்ல அறம் எதுவும் இல்லை' என்பது வள்ளுவப் பெருந்தகையாளரின் திண்ணிதான கருத்தாகும்.

இதனை, பொய்யாமை, செய்யாமை, எய்யாமை என்ற சாதாரணமான சொற்களைக் கொண்டே வலியுறுத்திக் காட்டிவிட்டார் திருவள்ளுவர்.

தெய்வப்புலவர், இந்தச் சொற்களுக்கெல்லாம் நல்லநடை கற்பித்து, அவைகளைத் தமது கவிதையுள் புகுத்திவிட்டதால், வாய்மை, நல்ல அறம் ஆனது போன்று, இந்தச் சாதாரண சொற்களும் ஆழ்ந்த பொருள்களைத் தாங்கிக்கொண்ட உயர்ந்த-நல்ல சொற்களாகிவிட்டன.

வள்ளுவரால் நடை கற்பிக்கப்பட்ட சொற்களை எல்லாம், கவிச்சக்கரவர்த்தி கம்பர், தமது கவிதையுள் விரைந்து ஓடச் செய்து, அவைகளின் வேகத்தைக் காட்ட முற்பட்டுவிட்டார்.

வாய்மையே நல்ல அறமாக வரையறுத்துக் காட்டப் பட்டது வள்ளுவப் பெருந்தகையாளரால், அது வாழ்க்கையில் கடைப்பிடித்தற்கு உரியது, அது

ஆனால், மனித வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்படும் போதுதான் எத்தகைய சிக்கல்கள் வரும் என்பது தெரியும்.

பெருஞ்சிக்கல்களுக்கிடையிலும் இந்த வாய்மையைக் கடைப்பிடித்து வாழ்ந்த ஒருவரது வரலாற்றின் மூலம்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வள்ளுவரது வாய்மை அதிகாரத்துக்கு விரிவுரை நல்க எண்ணினார் கம்பர்.

கவிச்சக்கரவர்த்தியின் எண்ணம் எவ்வாறு செயல் பட்டுள்ளது என்பதை அவரது காப்பியத்துள் காண்போம்

தசரதன் :

வள்ளுவரது வாய்மையாகிய நல்லறத்தால் கவரப் பட்டார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். தமது கவிதாஞானத்தால் எல்லையொன்றில்லாத அந்த நல்லறத்துக்கு, ஓர் உருக் கொடுத்து உயிரூட்டி, உலாவவிட்டு, அதன் பெருமையை உலகுக்கு உணர்த்த விரும்பினார் அப்புலவர் பெருமான்.

அவரது விருப்பமே, இராமாயணக் காப்பியத்துள் தசரதன் என்ற பாத்திரமாக வடிவெடுத்தது.

காப்பியத்தலைவன் இராமன், அறம் தலைநிறுத்த வந்த அறத்தின் மூர்த்தி: நடையில் (ஒழுக்கம்) நின்று உயர் நாயகனாக வாழ்ந்தவன் அவன்.

அவனுக்குத் தந்தையாக அமையும் தகுதி உடையவன் தசரதன் என்பதை, எடுத்த எடுப்பிலேயே - முதல் அறிமுகத்திலேயே காட்டிவிடுகின்றார் கவிச்சக்கரவர்த்தி.

வள்ளுவத்தின் நாட்டு இலக்கணத்திற்கு ஒரு இலக்கியமாக அமைந்தது கோசலநாடு. அந்நாட்டை ஆளும் அரசனும், வள்ளுவத்தின் நல்லறத்தைக் கடைப் பிடித்து வாழ்பவனாக இருக்கவேண்டும் அல்லவா!

கோசல நாட்டுத் தலைநகர் அயோத்தி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"அம்மாண் நகருக்கு அரசன், அரசர்க்கு அரசன்:
செம்மாண் தனிக்கோல் உலகுஏழினும் செல்ல
நின்றான்:
இம்மாண் கதைக்குஓர் இறையாய இராமன் என்னும்
மொய்ம்மாண் கழலோன்.தரு நல் அற மூர்த்தி
அன்னான்."
(கம்-168)

அறிமுகம் :

காப்பியப் பாத்திரங்களுள் முதன் முதலாக அறிமுகப் படுத்தப்படுவது தசரதன் என்ற பாத்திரமே.

தசரதனை அறிமுகம் செய்யும் இந்தக் கவிதையே, பாத்திர அறிமுகக் கவிதைகளுள் முதலாவதாக அமைந்து உள்ளது.

இந்த முதல் கவிதையே, வடிவம் அற்ற வள்ளுவத்தின் வாய்மையாகிய நல்லறத்திற்கு ஒரு வடிவம் கொடுத்துவிடுகின்றது.

வாய்மைக்குணம் உருவம் அற்றது, அது, இங்கு தசரதனாகிய உருவத்தைப் பெற்றுக்கொண்டுவிட்டது.

மூர்த்தி-வடிவம்: எதற்கு வடிவம்? நல்ல அறமாகிய வாய்மைக்கு வடிவம்.

நல்ல அறமாகிய வாய்மையின் வடிவத்தை ஒத்தவன் தசரதன். 'நல்லறமூர்த்தி அன்னான்' என்று தசரதனை அறிமுகம் செய்கிறது கவிதை.

மாண் நகர்-பெருமைக்குரிய அயோத்தி! மாண் தனி செங்கோல்-மாட்சிமைப் பட்ட ஒப்பில்லாத செங்கோல்: இறை-காப்பியத் தலைவன்: கழலோன்-வீரக்கழல் அணிந்த திருவடியை உடைய இராமன்: மூர்த்தி-வடிவம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தக் கவிதை, தசரதனை மூன்று விதத்தில் அறிமுகம் செய்கின்றது. ஒன்று: அவன் பெற்றுள்ள பதவி: மற்றொன்று அவனுடைய நடைமுறை: பிறிதொன்று அவனுக்கு இயல்பாக அமைந்துள்ள குணம்.

இம்மாண் நகருக்கு (அயோத்தி) அரசன்தான் தசரதன். ஆனாலும். மற்றைய அரசர்களுக்கெல்லாம் பேரரசனாக விளங்கினான், (அரசர்க்கு அரசன்)

ஆளும் சிறப்பினால் (நடைமுறையால்) தனது செங்கோல் ஏழ் உலகங்கட்கெல்லாம் செல்ல ஆட்சி செலுத்தினான்.

இந்த சிறப்பிற்கு எல்லாம் காரணம், அவனுக்கு இயல்பாக அமைந்திருந்த வாய்மைக் குணமே. இந்த வாய்மைக் குணமே, செய்வதை எல்லாம் நல்லறமாக விளங்கச் செய்தது.

குணவெளிப்பாடு:

மனிதனிடத்தில் எத்தனையோ குணங்கள் இருக்கலாம். அவைகள் நல்லனவாகவும் இருக்கலாம்; தீயனவாகவும் இருக்கலாம். அவைகளுள் எந்தக்குணம் வலிமை உடையதாக இருக்கிறதோ, அதுதான் அம் மனிதனை இயக்கிக்கொண்டிருக்கின்றது.

மனிதனது இயக்கத்தைக்கொண்டு, அவன் உள்ளத்துள் அடங்கிக்கிடக்கும் குணத்தை வெளிப்படையாக தெரிந்துக்கொண்டுவிடலாம்.

செயல், குணவெளிப்பாட்டுக்குக் காரணமாகும்.

தசரதனது வாய்மைக்குணம் வெளிப்படுதற்கு, அவனுடைய அரச வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி காரணமாக அமைந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசன் கடமை:

பழங்காலத்து அரசர்களது கடமைகளுள் ஒன்று, காட்டில் கொடிய மிருகங்களை வேட்டையாடிக் கொன்று, வேளாண்மைப் பயிர்கள் வளர்வதற்கு உதவுவது.

அந்தக் கடமையைச் செய்வதற்கு, காட்டுக்குப் புறப்பட்டான் தசரதன். நல்லது செய்ய எண்ணிச்செயல் பட்டாலும், எதிர்பாராத ஒன்று வாழ்க்கையில் ஏற்பட்டு விடுகின்றது.

காட்டில் வேட்டையாடிவிட்டு, மகிழ்ச்சியோடு நாட்டுக்குத் திரும்பவேண்டிய தசரதன், துன்பத்தோடு மீளவேண்டியவனானான். ஏன்?

தசரதன் வேட்டையாடச் சென்ற காடு, கொடிய மிருகங்களுக்கு மட்டும் உரியதாக அமையவில்லை, நல்ல மனிதர்கள் தங்கிச் செல்வதற்குரியதாகவும் அமைந்து இருந்தது.

சாபம்:

வழிப்போக்கர்களுக்கு வாழ்வளிப்பதாக அமைந்து இருந்த அந்தக்காடு, தசரதனது வாழ்க்கைப் போக்கிற்கு ஒரு சாபக்காடாக அமைந்துவிட்டது!

மனிதன், தான் செய்யும் செயலுக்கு என்னவிளைவு கிடைக்கும் என்பதை முன் கூட்டி அறியும் அறிவை, கடவுள் மனிதனுக்குக் கொடுக்கவில்லை. அதனைத் தன் கையில் வைத்துக்கொண்டார் அந்தக் கடவுள். என் செய்வான் மனிதன்?

தசரதன், அரச கடமையை நிறைவேற்றுவதற்குத்தான் வில்லையும் அம்பையும் கருவியாகக் கொண்டிருந்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடமையைச் செய்வதற்குக் கருவியாக அமைந்த சாபமே (சாபம்-வில்) தசரத மன்னன் சாபம் பெறுவதற்குரிய கருவியாகிவிட்டதே !

காட்டுக்குளத்தில் நீர் குடிக்கும் யானையெனக் கருதிய தசரதன், மறைந்திருந்து அம்பு எய்தான், வில்லினின்றும் விரைவாகப் புறப்பட்ட அந்த அம்பு, குறிதவறாமல் மன்னன் விட்ட இடத்திற்குச் சென்றது: தன்வேலையையும் அது செய்து முடித்துவிட்டது.

அம்பு செய்து முடித்த வேலை, மன்னனது வேலையைச் (கடமையை) செய்து முடித்ததாக அமையவில்லை நேர்மாறாக முடிந்துவிட்டது.

கொடிய மிருகத்தின்மேல் பாயவேண்டிய அம்பு நல்ல மனிதன்மேல் பாய்ந்துவிட்டது.

அம்பு பட்டு வலிதாங்காது அலறிய குரல் கேட்டு, குளம் நோக்கிச் சென்றான் தசரதன். அங்கு அவன் கண்ட காட்சி, அம்மாமன்னனைத் திகைப்பில் ஆழ்த்தியது, இல்லை! இல்லை!! துக்கத்தில் ஆழ்த்தியது: அச்சத்திலும் ஆழ்த்தியது.

அம்பு பட்டு மரணதசையில் கிடந்தது யானை அல்ல! அந்த இறுதி நிலைக்குச் சென்று கொண்டிருந்தவன் சிறுவன் ஒருவன்: இளமை தவழும் இன்முகத்தினன்! சுரோசனன் என்னும் திருப்பெயரைக் கொண்டவன் சலபோசனன் என்னும் திருநாமம் கொண்ட பிறவிக் குருடருக்கு மைந்தனாகப் பிறந்தவன்: தந்தையைப் போன்றே தாயையும் பார்வையற்றவளாகக் கண்டவன்: கண் பார்வையற்ற தன் பெற்றோர்களுக்குத் தானே கண்ணாக இருந்து, அவர்களுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடமையாகக் கொண்டவன்: பெற்றோர்களுக்கு ஏற்பட்டு இருந்த தாகத்தைத் தீர்ப்பதற்காகத் தண்ணீர் மொண்டு கொண்டிருந்தபோது இந்த சோகத்திற்கு உள்ளானவன்.

இந்த விவரம் எல்லாம் அச்சிறுவனுடைய மரண வாக்கு மூலம்.

இதைக் கேட்ட தசரதன் துடித்துப்போனான். 'பெற்றோர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையைச் செய்து கொண்டிருக்கும் போதே, எனது அரச கடமைச்செயல் இச்சிறுவனைச் சோகத்திற்கு உள்ளாக்கிவிட்டதே' என் செய்வது!

அம்பு விட்டவனும், தனக்குரிய அரச கடமையைச் செய்த தூயோன்: அம்புப் பட்டவனும் தனக்குரிய பெற்றோர் கடமையைச் செய்த, இளைஞன்.

அம்பைச் செலுத்தியவன் 'நல்லற மூர்த்தி': அம்பை வாங்கிக்கொண்டவன் 'பொய் ஒன்று அறியா மைந்தன்.

தசரதனும், எண்ணத்தாலோ, சொல்லாலோ, செயலாலோ தவறு செய்யாதவன்: பார்வையற்ற பெற்றோர்களின். தனயனும் (மைந்தன்) நெறிதவறாதவன்.

தவறு செய்யாதவர்களுக்கு ஏன் இந்தத் தண்டனை வந்தது? சூழ்நிலையே தண்டனை பெறுவதற்கு வழி வகுத்து விட்டது.

தசரதனுடைய வாய்மையை வெளிப்படுத்துவதற்கு காலத்தேவன் ஏற்படுத்திய சூழ்நிலையே இது.

இறக்கும் தருவாயில் இருப்பவன் சாதாரணமான சிறுவன். இதற்குக் காரணமானவன் மாபெரும் மன்னவன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மன்னவனின் செயலால்தான், சிறுவன் மரணம் அடைந்தான் என்பது யாருக்கும் தெரியாது. அப்படியே தெரிந்தாலும் மன்னவன் செயலில் யாரும் குறைகாண மாட்டார்கள்.

பிறகு, எதற்காகத் தன் செயலுக்கு வருந்த வேண்டும் தசரதன் ?

பிறர் யாருக்கும் தெரியாத செயல்தான், கடவுளுக்கு, நன்றாகத் தெரியும்: செய்த மனிதனது நெஞ்சிற்கும் நன்றாகத் தெரியும்.

'தன் நெஞ்சு அறிவது பொய்யற்க' என்ற வள்ளுவத்தை வாழ்வில் கடைப்பிடிப்பவன் கம்பரால் படைக்கப்பட்ட தசரதன்.

அதனால், அந்தச் சிறுவனிடம்,

'புக்குப் பெருநீர் நுகரும் போதகம் (யானை) என்று,
ஒலிமேல்
கைக்கண் கணை(அம்பு) சென்றதுஅலால், கண்ணின்
தெரியக் காணேன்'

என்று சொல்லி, மனம் நொந்து அயர்ந்து போனான் தசரதச் சக்கரவர்த்தி.

இதனைக் கேட்ட மரணவாயில் நிற்கும் சிறுவன், தன் செயலுக்கு வருந்தும் தசரதனைப் பார்த்து சொன்ன வார்த்தை, அவன் எவ்வளவு உயர்ந்தவன் என்பதைக் காட்டுகிறது.

'இபம் (யானை)என்று உணராது எய்தாய்!
உருகும் துயரம் தவிர்,நீ: ஊழின்செயல் ஈது.'

என்பது சிறியவன், தசரதப் பெரியவனுக்குக் கூறிய ஆறுதல்மொழி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேலும், தசரதன் என்ன செய்யவேண்டும் என்பதை தெரிவிக்கின்றான் மரணத்தைத் தொட்டுக்கொண்டிருக்கும் மைந்தன்.

'உண்நீர் வேட்கைமிகவே உயங்கும்எந்தைக்கு, ஒரு நீ,
தண்ணீர் கொடுபோய் அளித்து, என்சாவும் உரைத்து,
உம் புதல்வன்
விண்மீது அடைவான் தொழுதான்' எனவும் அவர்
பால் விளம்பு,
என்று சொல்லிவிட்டு,
எண் நீர்மையினனான் விண்ணோர் எதிர்கொண்டிட
ஏகினனால் (கம் - 1683)

மரணத்தைத் தழுவிக்கொண்டிருக்கும் மைந்தன், மன்னனிடம் விடுத்த வேண்டுகோள் இரண்டு, ஒன்று, செய்யவேண்டியது, ஒன்று சொல்லவேண்டியது.

தாகத்தால் வருந்திக்கொண்டிருக்கும் பெற்றோர்களுக்குத் தண்ணீர் கொண்டு போய் கொடுப்பது செய்யவேண்டிய செயல்.

சொல்லவேண்டியது இரண்டு செய்தி. ஒன்று சிறுவனின் மரணச் செய்தி: மற்றொன்று, சிறுவன் பெற்றோர்களுக்குச் செய்த வணக்கம். (விண்மீது அடைவான் தொழுதான்)

சிறுவன் சொல்லுக்கு, ஒரு மாபெரும் நாட்டு மன்னன் கீழ்ப்படிய வேண்டும் என்று யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள்.

உயங்கு - வருந்துகின்ற: அடைவான் - அடைவதற்காக: எண் நீர்மையினான் - புகழத்தக்க குணம் உண்மையினால்: ஏகினனான்-அடைந்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருப்பினும், சிறுவன் சொன்னவண்ணமே செய்தான் தசரதச் சக்கரவர்த்தி. ஏன்? 'நல்லறமூர்த்தி' யாக இருப்பதால்.

தாகத்தால் வருந்திக்கொண்டிருக்கும் பெற்றோர்களிடம் சென்று, இந்தச் சோகச்செய்தியைச் சொன்னான் வாய்மைதவறாத மாமன்னன்.

"ஐயா! யான் ஓர் அரசன்: அயோத்தி நகரத்துஉள்ளேன்
மை ஆர் களபம் துருவி, மறைந்தே வதிந்தேன்,
இருள்வாய்
பொய்யா வாய்மைப் புதல்வன் புனல் மொண்டிடும்
ஓதையின்மேல்
கை ஆர் கணை சென்றதுஅலால், கையில்
தெரியக் காணேன்." (கம்-1685)

என்று செய்தியைச் சொல்லி, 'பொறுத்தருள்வாய்' என்று அவர்களுக்கு வேண்டுகோள்விடுத்து, அவர்களது திருவடிகளில் பணிந்தான் தசரதன். அத்தோடு நில்லாமல், "யானே, இன்று உம் புதல்வன்: இனி, நீர் ஏவும்பணி செய்திடுவேன்! ஒன்றும் தளர்வுற்று அயநீர்: ஒழிமின்இடர்" என்றும் சொன்னான்.

மைந்தன் மரணச் செய்தியைக்கேட்ட பெற்றோர்கள் துக்கம் தாழாமல், மன்னனுக்குச் சாபம் கொடுத்தார்கள்.

"ஏவா மகவைப் பிரிந்து, இன்று எம்போல் இடர் உற்றனை நீ போவாய், அகல் வான்" என்பது பெற்றோர் இட்ட சாபம்.

மை-கருமை: களபம்-யானை: துருவி-ஆராய்ந்து: புனல்-நீர்: கணை-அம்பு! ஓதை-ஓசை. இடர்-துன்பம். ஏவும் பணி-இடும் கட்டளை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'பொறுத்தருள்வாய்' என்று வேண்டிக் கொண்டு அவர்களது திருவடிகளைப் பிடித்துக் கொண்டதனால், மன்னனுக்குக் கடிய சாபம் கொடுக்கக் கருதவில்லை பெற்றோர்கள்.

இந்தப் பெற்றோர்களிடம் தசரதனைப் போக வைத்தது, அவனது வாய்மைக் குணம்தான். அந்த நற்குணத்தால்தான். மகவைப் பிரியும், பிரிவாற்றாமையால், உயிர் விடவேண்டிய சாபத்தையும் பெற்றுக் கொண்டான்.

தசரதனது அரச வாழ்க்கையில், வாய்மையின் விளையாட்டு இது.

தன் நெஞ்சு அறிந்த ஒன்றை பொய்க்காமல் பெற்றோர்களிடம் சொன்னதால், சாபச்சூடு கிடைத்தது, சொல்லாமல் இருந்திருந்தால், தன் நெஞ்சு அவனை எப்போதும் சுட்டுக் கொண்டே இருக்குமே ?

"தன்நெஞ்சு அறிவது பொய்யற்க : பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்."

என்ற வாய்மைத் திருக்குறளுக்கு விளக்கமாக அமைந்தது தசரதன், தனது அரச கடமையை ஆற்றும்போது நடந்த நிகழ்ச்சி.

முனிவரின் சாபம், தசரதனுக்கு அகாலமரணத்தை கொடுக்கத்தான் செய்யும். அந்த சாபத்தைப் பலிக்க வைப்பது அவன் கடைப்பிடித்து வந்த வாய்மைக் குணம் தான் என்பதைக் கவிச்சக்கரவர்த்தி, தன் காப்பியத்துள் படிப்படியாகக் காட்டிச் செல்வார்.

ஏவாமகவு - ஏவாமுன் குறிப்பறிந்து செய்யும் மகன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதல்படி :

சொன்ன சொல்லை, வாழ்க்கையில் செயல்படுத்திக் காட்டுவது வாய்மை. சொல்லிய வண்ணம், செயல்பட முடியாத நிலை ஏற்பட்டாலும், சொன்ன சொல்லைக் காப்பாற்றுபவனே வாய்மையாளன் ஆவான்.

வாய்மையைத் தவறாது கடைப்பிடிப்பவனுக்குத் தான், வாழ்க்கையில் சோதனைகள் ஏற்படும்.

எதிர்கால வாழ்வில் நடக்கப்போகும் வேதனைதரும் சோதனைகளைப் புரிந்து கொள்ளாததால் தான், மனிதன் நிகழ்காலத்தில் தன் மனத்திற்கு இயைந்த வண்ணம் சொல்லை உதிர்த்து விடுகின்றான்.

நிகழ்கால இன்ப வாழ்வை நிறைவேற்றிக் கொள்வதற்காகச் சொல்லப்பட்ட சொற்களே, எதிர்கால நல வாழ்விற்குப் பெருந்தடையாக அமையும் போதுதான் 'எற்றென்று இரங்குவ சொல்லிவிட்டோமே' என்று மனிதன் ஏங்குகின்றான்,

சாதாரண-சராசரி மனிதனுக்கே இந்த நிலை என்றால், நாடாளும் மன்னனுக்கு அது, எத்தகைய பெருஞ் சோதனையாக அமைந்து, அவனை எவ்வளவு பெரிய தொல்லைக்கு உள்ளாக்கி அலைக்கழிக்கும் என்பது சொல்லத் தேவையில்லை.

சோதனைகளும் வேதனைகளும். வாய்மையையே, வாழ்க்கையில் சாதனையாக்கிக் கொண்டு வாழும் சால்புடைப் பெருமக்களுக்குத்தான் ஏற்படும்.

அந்த சான்றோர்களுக்குத்தான், பொய்யாமை என்ற நல்லறமே. விளக்காக. நிற்கும். அதுவே, அவர்களை, உலகுக்கு, காலம் கடந்தும் இடம் கடந்தும் விளக்கிக் காட்டிக் கொண்டிருக்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அத்தகைய சால்புடைப் பெருமகனாகிய தசரத சக்கரவர்த்தி, பொய்யாமையாகிய நல்லறமே, தன் நல்வாழ்வுக்கு வழிகாட்டும் விளக்காகயிருக்கும் என நம்பி வாழ்ந்து வந்தவன்.

எது ஒன்று, தன் வாழ்வுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கும் என்று நம்பினானோ, அதுவே (பொய்யாமை-வாய்மை) தனது எதிர்கால வாழ்வில் 'இன்னது செய்வது என்று அறியாமல் திகைக்க வைக்கும்' என்பதை முன்கூட்டி அறிந்தானில்லை மாமன்னன் தசரதன்.

அதனை அறியாமல், அவன் கால் எடுத்து வைத்த முதல்படி, கன்யாசுல்கம் என்னும் கருங்கல்லாகும்.

'கன்யாசுல்கம்' என்ற பெயரில் அமைந்த இந்தக் கருங்கல்லே, தான் வாழ்க்கையில் மேலேறிச் செல்வதற் குரிய முதல்படியாக அமைந்திருக்கும் எனநம்பி, யாரையும் கலக்காமலும் கேட்காமலும் இதன்மேல் கால் வைத்து விட்டான் கோசல நாட்டு மன்னன்.

ஆனால், இதுவே, தனது எதிர்கால வாழ்வில் பெருஞ்சிக்கலை உண்டாக்கி தன்னை மீளாத்துயரில் ஆழ்த்திவிடும் என்பது அப்போது எப்படித்தெரியும் தசரதனுக்கு?

கன்யா சுல்கம்:

ஒருவர் மனையில் கன்னியாக வாழும் ஒருத்தியை, ஒருவன் தனது மனைவியாகப் பெற்றுக்கொள்வதற்கு அவன் கொடுக்கும் சீதனத்துக்குக் கன்யா சுல்கம் என்று பெயர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அமரர் திரு. ச. சோமசுந்தரபாரதி அவர்கள் இத் தொடருக்கு அளித்துள்ள விளக்கத்தை நாம் இங்கு கவனிக்கவேண்டும்.

" 'கன்யா சுல்கம்' என்ற சொற்றொடரும் அதன் பொருளும் கவனிக்கவேண்டும். மனுவாதி வழக்கற நூற் பழக்கமுடைய வாத வல்லுநர் பலரும் இவ்வறத் தொடர்புடைய (அறம் - விதி - Law சட்டம்) சொற்றொடராக்கமும் பயனும் நன்கறிவர். வழக்கிடை வழுக்கியுமிழுக்கப் படாத தமிழர் இச்சொற்பொருள் கேட்டிருக்கக் காரணம் இல்லை. (வழக்கு-இறைவரால் நிறுவப்பெற்ற வழக்கறம். (Civil Law-விதி) கன்னியொருத்தியை மணக்கும் காதலன் மணமகள் தன்னகம் விழைந்து வருமாறு விரும்பித்தரும் பொருளே 'சுல்க' மெனப்படுகிறது. 'சீதனம்' எனும் பொதுப்பெயர் கொண்ட பெண்டிர் நிதி வகுப்பில் ஒன்றே 'சுல்க'மாகும்"+ என்பது சோமசுந்தர பாரதி அவர்கள் தந்த விளக்கம்.

இந்த முறைப்படி, கோசல நாட்டு மன்னன் தசரதன் கேகய நாட்டு மன்னன் மகளாகிய கைகேசியை மனைவியாக ஏற்றுக்கொண்டான்.

தசரதன் கைகேசியைத் தன் மனைவியாகப் பெற்றுக் கொள்வதற்கு, அவனுடைய நாட்டையே சுல்கமாகக் கொடுத்துவிட்டான்.

கைகேசிக்குத் தசரதன் கொடுத்த சுல்கத்தை விளக்கவந்த பாரதி, 'பண்டைத்தமிழர் போலாது, ஆரியருள் ஆடவர் மடவாரை மணமாடத்தன்றி முன்காணகில்லாராகவே, மணமகளான கைகேசிக்காக, அவள் தந்தையான

+ தசரதன் குறையும் கைகேயி நிறையும், பக். 20.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கேகய மகாராஜனிடம் தசரதன் சுல்கப்பிரதிஞ்ஞை பண்ணித் தந்ததாக வான்மீகி விசதமாகக் கூறியுள்ளார். ஆரிய தர்ம சாஸ்திரக் கிரமப்படி, அயோத்தியரசு, அன்று முதல் கைகேயியின் 'சுல்க' சீதனச் சொத்தாகி, அவளுக்காக அவள் கணவனால், ஆளப்பட்டதாக வேண்டுவதன்றி, தன்னிலையற்ற தசரதனுக்கு அவ்வரசில் எவ்வித சுவாதீனமும் ஏற்பாடுமாறில்லை........ கைகேயி வயிற்றுதிக்கும் தநயனுக்கும், அவன் மைந்தருக்குமே, அவள் 'சுல்க' நிதியாம் அவ்வரசுவரன் முறை வழக்கால் உரிமையாகும்'+ என்று வான்மீகத்தையொட்டி, தசரதன் கொடுத்த சுல்கத்தைத் தெளிவாக்குகின்றார்.

வான்மீகியால் படைக்கப்பட்ட தசரதன் ஆரிய முறைப்படி, 'சுல்கப்பிரதிஞ்ஞை'யினால்தான் கைகேசியை மனைவியாகப் பெற்றான்.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் தம் காப்பியத்துள் எங்கும், தசரதனது 'கன்யா சுல்க' நிகழ்ச்சியைப் பற்றி வெளிப்படையாகக் கூறவில்லை.

ஆரிய முறைப்படி வந்த 'கன்யாசுல்க' நிகழ்ச்சியை வள்ளுவத்தமிழ் நெறியில் படைத்த தசரதனிடம் ஏன் காட்டவேண்டும் எனத் தயங்கினார் போலும் செந்தமிழ்க் காப்பியம் பாடிய கவிச்சக்கரவர்த்தி!

இருப்பினும், தசரதனது வாய்மை தவறா நன்னெறியை உலகுக்குப் புலப்படுத்துவதற்கு இது உதவியாக இருப்பதால், 'கன்யாசுல்க' நிகழ்ச்சியில் தம் உடன்பாட்டைக் கதைப் போக்கில் குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளார் கம்பர் பெருமான்.

+தசரதன் குறையும் கைகேயி நிறையும். பக். 21.
வரன்முறை-பழைய நெறி: Tradition — வழக்கு = நீதி. சட்டம் (Law)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிச்சக்கரவர்த்தியின் கருத்துப்படி, 'தசரதன் கேகய நாட்டரசனிடம், அவன் மகள் வயிற்றுப் பிள்ளைக்கே. தனக்கு உரிமையான கோசல நாட்டைக் கொடுப்பது'—இதுதான் கம்ப ராமாயணக் 'கன்யாசுல்கம்.'

'கைகேசியின் மகனுக்கே, கோசல நாட்டைக் கொடுப்பேன்' என்பது தசரதன் கொடுத்த வாக்குறுதி.

இந்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் தனக்கு எதுவும் தடைவராது என நம்பினான் தசரத சக்கரவர்த்தி.

ஏன் ? முன்னைய மனைவியரிடத்தில் (கோசலை, சுமத்திரை) மகப்பேறு இல்லை. அதனால் இப்போது பட்டத்து ராணியாக வரும் கைகேசியின் பிள்ளைக்கு அரசைக் கொடுப்பதில் எந்தக் குறுக்கீடும் வராது என உறுதியாக நம்பினான் அப்பேரரசன்.

தன் நம்பிக்கைக்குச் சோதனை வரும் என்பது, வாக்குறுதி கொடுக்கும்போது எப்படித் தெரியும் தசரதனுக்கு?

மனிதனுக்கு, அவனது எதிர்காலச்செயலை உய்த்து உணரமுடியாத அறியாமையைக் கொடுத்திருப்பது இறைவன் அவன்மேல் கொண்ட கருணையால்தான், அதைப்போல, இறந்த கால நிகழ்ச்சியை மறந்துவிடக் கூடிய மறதியைக் கொடுத்திருப்பதும் இறைவனது அருட்பெருக்கால்தான்.

ஒரு நாட்டு மன்னன், எவள் ஒருத்தியை மனைவியாகப் பெற விரும்புகின்றானோ, அவ்விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள, அவள் வயிற்றுப் பிள்ளைக்கே, தனது அரசு உரிமையைக் கொடுக்க இசைவு தரும் நிகழ்ச்சி நடைமுறையில் இருந்தது என்ற உண்மையை, பாரதக் காப்பியமும் தெளிவாக்குகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சந்தனு:

குருநாட்டு மன்னன், 'சந்தனு' எனும் பெயர்த் தரணி காவலன் வேட்டையாடச் சென்ற இப்பேரரசன் யமுனை நதிக்கரையில் 'சத்தியவதி' என்ற மீனவன் மகளைக் கண்டான். அவள் அழகில் ஈடுபட்ட அரசன், அவளைத் தன் இல்லத்தரசியாக்கிக் கொள்ளவிரும்பினான். அவளது தந்தை, அரசன் விருப்பத்தை ஏற்றுக்கொள்ள எண்ணினாலும், அதற்கு ஒரு நிபந்தனை விதித்தான்.

'என்மகள் சத்தியவதிக்குப் பிறக்கும் பிள்ளைக்கே, உமது அரசைக் கொடுக்கவேண்டும்' இந்த வாக்குறிதியை இப்பொழுதே கொடுக்கவேண்டும். 'என்பதுதான் பரதவர் பதி (சத்தியவதியின் தந்தை) விதித்த நிபந்தனை.

சந்தனுவுக்கு, ஏற்கனவே, 'தேவவிரதன்' என்ற கங்காதேவியின் வழிப்பிறந்த மைந்தன் ஒருவன் இருந்தான்.

அதனால், மீனவர் தலைவனுக்கு வாக்குறுதி கொடுக்கமுடியவில்லை சந்தனுப் பேரரசனால்.

இருப்பினும், தேவவிரதன், வீடுமனாக (பீஷ்மனாக) மனஉறுதி பெற்று, நாட்டு உரிமையை விட்டுக்கொடுக்க இசைந்ததனால், சந்தனுவின் விருப்பம் நிறைவெய்தியது.

சத்தியவதியின் தந்தை விருப்பமும் நிறைவெய்தியது சத்தியவதிக்குப் பிறந்த மைந்தன் சித்திராங்கதனை குரு நாட்டு மன்னனாக்குவதில் சந்தனுவுக்கு எந்தத் தடையும் இல்லை.

தசரதனுக்குப் பிள்ளை எதுவும் இல்லாததால், கேகய மன்னனுக்கு, 'கைகேசியின் மைந்தனைக் கோசல நாட்டு அரசனாக்குவேன்' என்ற வாக்குறுதியைக் கொடுக்க முடிந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாக்குறுதி கொடுக்க இயலாதிருந்த சந்தனு சத்தியவதியின் மைந்தன், சித்திராங்கதனுக்கு, அரசைக் கொடுத்து, மீனவர் தலைவன் விருப்பத்தை நிறைவேற்றினான்.

வாக்குறுதி கொடுத்த தசரதனோ, கைகேசிக்குப் பிறந்த மைந்தன் பரதனுக்கு, தனது அரசைக் கொடுத்து, கொடுத்த வாக்குறுதியை (சொன்ன வாய்மையை) காப்பாற்ற இயலாத ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றான்.

இந்த வாய்மையை நிறைவேற்றுவதற்குத் தடைக்கல்லாக அமைந்தது கோசல நாட்டு இரகு வம்ச மரபு.

மரபையும் காக்கவேண்டும்: வாய்மையையும் காக்கவேண்டும். இது தசரதனது அரச வாழ்வில் ஏற்பட்ட பெருஞ்சிக்கல்.

மகாபாரதத்துச் சந்தனுப் பேரரசனுக்கு, வாய்மையும் மரபும் ஒத்துப்போயிற்று, அதனால், அவன் வாழ்க்கையில் சிக்கல்எதுவும் இல்லை: சிக்கலைத் தீர்த்து வாய்மையைக் காத்தான் என்ற பெரும்புகழும் இல்லை.

தசரதன் வாழ்க்கையில் பெரும் போராட்டம். இந்தப் போராட்ட வீரர்கள் யார்? வாய்மையும் மரபும். வாய்மையை அணைத்துக் கொண்டால், மரபு, மன்னனை மதிக்காது வெளியேறிவிடும்: மரபுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை ஏற்றுக் கொண்டாலோ வாய்மை வழுவி விடும்.

தசரதனை, கோசல நாட்டுப் பேரரசனாக வீற்றிருக்கச் செய்வது 'வாய்மையும், மரபும், ஆகிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரண்டும்தான். ஆனால், இந்த வாய்மை என்ற நல்லறமும் மரபு என்ற அரசு நடைமுறையும் ஒன்றுக்கு ஒன்று முரணாக நின்று மோதிக்கொள்ளும் சூழ்நிலைக்கு உரியவனானான் தசரதன். இந்தக் கடுமையான சூழ்நிலையிலும் வாய்மையைக் கடைப்பிடித்தான் தசரதன். அதனால்தான் தசரதன் பெரும் புகழுக்குரியவனாகின்றான்.

மரபு:

ஒவ்வொன்றிற்கும் மரபு (முறை) என்பது ஒன்று உண்டு. அதனைக் கடைப்பிடித்து வாழ்பவர்தான், 'உலகத்தோடு ஒட்ட ஒழுகும் கல்வி கற்றவர்' எனப் பெரியோர்களால் மதிக்கப்படுவர்.

ஒரு நாட்டு மன்னனது மக்களுள் மூத்த மைந்தன் தான், தந்தைக்குப் பிறகு, அந்நாட்டை ஆளும் உரிமைக்குரியவன். இதுதான் அரச மரபு. இம்மரபே கோசல நாட்டிலும் வழிவழியாகக் கடைப்பிடித்து வரப்பட்டது.

தசரதனது மூத்த மைந்தன் கைகேசியின் வயிற்றுப் பிள்ளையாகத் தோன்றியிருந்தால், அப்பேரரசனது வாய்மைக்குச் சோதனை ஏற்பட்டிருக்காது.

இவனை வாய்மை மன்னனாக உலகுக்கு விளக்கிக் காட்டுவதற்காகவே போலும், மூத்த மைந்தன் கோசலை வயிற்றுப் பிள்ளையானான்: இளையவன் கைகேசி வயிற்றுப் பிள்ளையானான்!

தசரதன், தன் வாய்மைக்குச் சோதனையாக அமைந்த இந்தச் சூழ்நிலையைக் கண்டு துவண்டு விடவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாய்மை வழுவாமல் இருக்கவும், மரபு முறை பிறழாமல் இருக்கவும் என்ன செய்வது என்று சிந்தித்தான் தசரத சக்கரவர்த்தி.

அப்பேரரசன் பெற்றிருந்த அரசியல் அறிவும், அனுபவ ஞானமும் அவனது சிந்தனையில் ஒரு தெளிவை ஏற்படுத்திற்று.

அறிவெனும் அமைச்சன் காட்டிய தெளிவான வழியே. 'நாம் வாய்மை மரபு ஆகிய இரண்டையும் காப்பதற்குத் துணிவாக நடந்து செல்லவேண்டிய வழி' என்பதை உணர்ந்தான் கோசல நாட்டு மன்னன்: அவ்வண்ணமே செயல்பட்டான்.

தெளிவான வழி :

மூத்த மைந்தன் இராமனைக் கோசல நாட்டு மன்னனாக்கினால், அரச மரபு காக்கப்படும். பரதன் இளைய மைந்தனானாலும், கைகேசி வயிற்றுப் பிள்ளையாதலால், அவனுக்குக் கோசல நாட்டு முடிசூட்டினால், வாய்மை காக்கப்படும்.

இதில் ஏதாவது ஒன்றைத்தான் செய்ய இயலும். செய்ய இயலுவது இரண்டையும் காப்பதற்குரிய வழியாக இருக்கவேண்டும்.

அவ்வழி தெளிவாகப் புலப்பட்டது தசரத மாமன்னனுக்கு. அதில் நடப்பது எளிதாகவும் ஆயிற்று அரசனுக்கு.

தெளிவாகப் புலப்பட்ட அந்நல்வழி மன்னனுக்கு எளிதானதற்குக் காரணம், கைகேசியிடம் இவன் கொண்ட நம்பிக்கையும், மன்னனிடம் கைகேசி வைத்திருந்த அளவற்ற அன்புமேயாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அன்பும் நம்பிக்கையும் துணையாக நிற்க, அவ்வழியில் துணிவோடு நடை போட்டான்! அதில் வெற்றியும் பெற்றான், தசரதப் பேரரசன்.

கைகேசி, யாரைத் தன் மைந்தன் என்று அழைக்கின்றாளோ, அவனுக்கு முடிசூட்டினால் வாய்மை வழுவாது: அவனே மைந்தர்களுள் மூத்தவனாக அமைந்தால் மரபும் முறை பிறழாது.

ஆகவே. இதனைத் தன் நெஞ்சத்தில் இருத்திக் கொண்ட தசரதன், இராமனைக் கைகேசியின் அந்தப்புரத்திற்கும், பரதனைக் கோசலையின் அந்தப்புரத் திற்கும் மாற்றினான் அங்கேயே வளரச் செய்தான்.

அரசிமார்கள் மூவரிலும், தசரதனது அன்பையும் நம்பிக்கையையும் முழுமையாகப் பெற்றிருந்தவள் கைகேசிதான்.

கைகேசியும், 'தங்கள் நாயகரின் தெய்வம்தான் பிறிதுஇலை என்று எண்ணும்' தெய்வக் கற்பினளாக இருந்தமையால், தசரதன்பால் எல்லையற்ற அன்புடைய வளாகவே வாழ்ந்தாள்.

கோசலை வயிற்றுப்பிள்ளை, தன் அன்பிற்குப் பாத்திரமான கைகேசியின் கையில் வளர்ந்ததால், தசரதனுக்கு இராமனிடமும், அதிக அன்பு வளர்வதாயிற்று.

மைந்தர்கள் நால்வரில் இராமனிடம் மட்டும் தசரதன் அளவற்ற அன்பு கொள்வதற்குக் காரணம், தன் அன்புக்குரிய கைகேசி, அவனைத் தன் அந்தப்புரத்தில் வைத்து வளர்த்ததுதான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனைவிபால் கொண்ட அன்பு, அவளால் வளர்க்கப் பட்ட மைந்தன்பால் செல்வது இயல்புதானே!

இந்த இயல்புதான், தசரதனை, இராமன்பால் அளவற்ற அன்புகொள்ளச் செய்திருக்க வேண்டும்,

இந்த அந்தப்புர மாற்றத்தால், தசரதன் ஏமாற்றம் பெறவில்லை; ஏற்றமே பெற்றான் என்று கூறலாம்.

வெற்றி :

நாட்டுப் போரில் வெற்றியையே கண்டு மகிழும் தசரதன், இந்த வீட்டுப் போரிலும் வெற்றியே கண்டான் என்று சொல்லவேண்டும்.

தசரதன் வெற்றி, கைகேசியின் கையில்தானே! அவளது கை, தன் கணவனுக்கு வீட்டிலும் வெற்றிக்கு உதவியது. நாட்டிலும் வெற்றிக்கு உதவியது தன் காதல் கணவனுக்கு அவ்வளவு நன்றாற்றும் கையினளாக வாழ்ந்தாள்கைகேசி.

கைகேசி, கோசலை வயிற்றுப் பிள்ளையைத் தன் வளர்ப்புமகன் என்று கருதவில்லை: தன் வயிற்றுப் பிள்ளையாகவே எண்ணிச் செயல்பட்டாள். அது மட்டும் அல்ல, தன் வயிற்றுப் பிள்ளை பரதனைக் கோசலையின் மைந்தனாகவே கருதும் அளவிற்குத் தூயவளாக வாழ்ந்தாள் அவள்.

''பராவ அரும் புதல்வரைப் பயக்க, யாவரும்
உராவ அருந் துயரை விட்டு உறுதி காண்பரால்;
வீராவ அரும் புவிக்குஎலாம் வேதமே அன
இராமனைப் பயந்த எற்கு இடர் உண்டோ?''

என்றாள் (கம் 1453)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"அன்னவள் அவ்உரை உரைப்ப, ஆயிழை
மன்னவர் மன்னனேல் கணவன்' மைந்தனேல்
பன்ன அரும்பெரும் புகழ்ப் பரதன்: பார்தனில்
என் இதன்மேல் அவட்கு எய்தும் வாழ்வு?'' என்றாள்
(கம் 1455)

என்ற கூற்று, கைகேசி வாய்வழிவந்த, தூய சிந்தனை ஊற்றாகும்.

சகக்கிழத்தி, கோசலையின் வயிற்றுப் பிள்ளையைத் தன் சொந்த மைந்தனாகவும், தன் வயிற்று உதித்த பரதனை சகக்கிழத்தையின் மகனாகவும் உளமாரப் பாவித்தாள் கைகேசி, என்றால், அவளது தூய சிந்தனையை என்ன வென்று வியப்பது!

இராமனைத் தன் சொந்த மைந்தனாகவே, எண்ணிக் கைகேசி வளர்ந்த இந்த நற்செயலை, அயோத்திவாழ் மக்களும் நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தார்கள்.

இராமன்,

''தாய் கையில் வளர்ந்திலன்: வளர்த்தது தவத்தால் கேகயன் மடந்தை'' என்பது நகரத்துப் பொதுமக்கள் கூற்று.

மைந்தருள் மூத்தவனான இராமனைத் தன் சொந்த அன்பு மகனாகக் கைகேசி ஏற்றுக்கொண்டு விட்டதால், வாய்மையையும் மரபையும் காக்க எண்ணிய தசரதனது திட்டத்திற்கு முழுவெற்றியே கிடைத்துவிட்டது என்னலாம்.

பராவுதல்-புகழ்தல்: உராவ அருந்துயர்-பிறரால் நீக்குதற்கு அரிய வலிய துன்பம்: பயந்த-பெற்றெடுத்த:
ஆயிழை-கோசலை பன்ன அருப்பெரும்புகழ்-சொல்லுவ தற்கு அருமையான நிறைபுகழ்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராமனையும் பரதனையும் அந்தப்புரங்களில் தசரதன் மாற்றி வளரச்செய்த இந்த நிகழ்ச்சி, கவிச் சக்கரவர்த்திக்கு, கன்யா சுல்கத்தின் உடன்பாட்டைக் காட்டுகிறது என்று கூறலாம்.

இரண்டாம் படி :

தன் ஐம்புலன் இன்ப வேட்கையால், 'கன்யாசுல்கம்' என்ற முதல் படியில் கால்வைத்த தசரதன், பிறர் துன்பம் துடைக்கும் வேட்கையால் இரண்டாம் படியில் கால் வைக்கத் தொடங்கினான்.

தசரத சக்கரவர்த்தியை, 'வாய்மை மன்னனாக' உலகிற்கு விளக்கிக்காட்டுவதற்காக அவனது வாழ்க்கையில் 'சம்பராசுரப்போர்' இரண்டாம் படியாக வந்து அமைந்தது.

இந்த இரண்டாம் படியும், அவன் வாழ்க்கையில் இடர் உறாமல் மேல் ஏறிச்செல்வதற்கு உதவும் என நம்பினான் அரசன்.

சம்பராசுரப்போர் :

சம்பரன் என்பவன் ஆற்றல்மிக்க ஒரு அசுரன்: தேவேந்திரனையும் வென்றவன்: படை பலமும் தவபலமும் பெற்றவன். இவனிடம் தன் அரசாட்சியை இழந்த இந்திரன் அதனை மீட்டுக்கொடுக்குமாறு தசரதனிடம் வந்துவேண்டிக் கொண்டான்.

'இன்தளிர்க் கற்பக நறுந்தேன் இடை துளிக்கும் நிழல் இருக்கை இழந்து போந்த' இந்திரனுக்காகச் சம்பரனிடம் போருக்குச் சென்றான் தசரதன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சம்பராசுரப் போருக்குச் சென்ற மாமன்னன், தனது குறிப்பறிந்து, போர்க்களத்தில் தேர் ஓட்டும் சாரதியாக யாரை அழைத்துச் சென்றான்?

வாழ்க்கைப் போர்க்களத்தில், தன் இல்லறத் தேர் வெற்றிகரமாக ஓடுவதற்கு யார் காரணமாக இருக்கின்றாளோ, அந்தக் கைகேசியையே, அசுரப் போர்க்களத்தில் ஓடும் தேருக்குச் சாரதியாக்கிக் கொண்டான் தசரதன்.

கடுமையான போர் நடந்துகொண்டிருந்த நேரத்தில் தசரதனது தேர் அச்சாணி கழன்றுவிட்டது.

தன் கையையே, கடையாணி ஆக்கிக்கொண்டு கைகேசி தேர் ஓட்டியதால் அந்த சம்பராசுரப் போரில், வெற்றி கிட்டியது தசரதனுக்கு.

தன் வெற்றிக்கு உதவியது, தன்னலம் சிறிதும் கருதாத கைகேசியின் கைதான் என்பதை உணர்ந்தான் தசரதன்.

கைகேசியின் நற்செய்கையால், தசரதன் போரில் வெற்றி பெற்றான்! தேவேந்திரன் இழந்த செல்வத்தைத் திரும்பப் பெற்றான். கோசலநாடு தனித்ததோர் பெருமை பெற்றது.

வரம்:

எல்லா இன்பப் பேற்றுக்கும் காரணமாக விளங்கும் கைகேசியைத் தன் செய்கையால் மகிழ்விக்க விரும்பினான் தசரதன்.

தன் மகிழ்ச்சிப் பெருக்கிற்குக் காரணமாக இருப்பவர் யாரோ, அவருக்குத் தானும் ஏதேனும் கொடுத்து மகிழ்வது தசரதனது இயல்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்த நல்ல இயல்பிற்கு ஏற்ப, தசரதசக்கரவர்த்தி, தன் அன்புக் காதலியாகிய வீராங்கனை கைகேசிக்கு. அவள் விரும்புவதைத்தந்து அவளை மகிழ்விக்க எண்ணினான்.

தசரதன், 'என் அன்பிற்குரியவளே! என் வெற்றிக்குக் காரணமான நீ, என்னிடம், ஏதேனும் விரும்பிப் பெற்றுக் கொள்ளவேண்டும்.' என்று கைகேசியிடம் கேட்டுக் கொண்டான்.

கைகேசியோ, ''சக்கரவர்த்தியாக விளங்கும் தாங்கள் என் அன்புக் கணவனாராக அமைந்திருக்கும்போது, வேறு என்ன வேண்டும்? நான் தொழும் தெய்வமாகத் தங்களைப் பெற்றுக்கொண்டபிறகு, வேறு எது எனக்கு இன்பமளிக்கப் போகிறது?'' என்று தன் கணவன்பால் கொண்ட அன்பை உறுதிப்படுத்திக் கூறினாள்.

இருப்பினும், தசரதன் விடுவதாக இல்லை. 'என்னை வெற்றியில் களிக்கச் செய்த உனக்கு, இப்போது இரண்டு வரம் கொடுக்கின்றேன். தேவையானபோது இவைகளைப் பயன்படுத்திக்கொள்க' என்று வாக்குறுதி கொடுத்தான் தசரத மன்னன்.

இந்த வாக்குறுதியே (வரம்) அவளுக்குப் பெரு வெற்றியையும், மன்னனுக்குத் தாங்க முடியாத பெருந் தோல்வியையும் கொடுக்கப் போகிறது என்பது, அப்போது. எப்படித் தெரியும் தசரதனுக்கு?

இரண்டு வரமாகத் தந்த இந்த வாக்குறுதி, கைகேசி கேட்காமலேயே கொடுக்கப்பட்டதாகும். பிறகு, அவள் கேட்டும், கொடுக்கமுடியாத சங்கட நிலைக்குதான், தள்ளப் படவேண்டிவரும் என்பது தசரதனுக்கு அப்போது புரியாததுதான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கைகேசியைப் போர்க்களத்துக்கு அழைத்துச் சென்றதும், அவள் விரும்பாமலேயே அவளுக்கு வரம் இரண்டு கொடுத்ததும் எதைக்காட்டுகிறது? தசரதன் அவளிடம் கொண்ட அளவற்ற நம்பிக்கையையும், எல்லையற்ற அன்பையும் வெளிப்படுத்துகின்றன அல்லவா?

இரண்டு வரமாகிய வாக்குறுதி கொடுத்தது கைகேசிக்கு: 'கன்யாசுல்க'மாகிய வாக்குறுதி கொடுத்தது அவளுடைய தந்தை கேகயனுக்கு. இந்த இரு வாக்குறுதிகளும் தசரதன் தனிப்பட்ட முறையில், அவரவர்களுக்குக் கொடுத்தவைகளாகும்.

மூன்றாம் படி:

தசரதன், மூன்றாம் படியில் கால் எடுத்துவைப்பது கோசல நாட்டு மன்னன் என்ற முறையில்.

தசரதன், கேகய மன்னனுக்கு மருகன்: கைகேசிக்கு ஆராக்காதலன்: இராமன், பரதன், இலக்குவன் சத்துருக்கனன் ஆகியோருக்கு அன்புத் தந்தை: கோசலநாட்டு மக்களுக்கு மன்னன்.

கோசல நாட்டுத் தலைநகர் அயோத்தியில் - அரசப் பேரவையில் சீரிய சிங்காதனத்தில் அமர்ந்து கொண்டு, யாவரும் அறிய ஒருவாக்குறுதி கொடுக்கின்றான் தசரதன். இந்த வாக்குறுதி கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றாகும்.

இதன் நிறைவேற்றத்தில் வீட்டார், நாட்டார் அனைவரும் மகிழ்வெய்துவர் என்பது தசரதனுக்குத் தெரியும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெரிந்த ஒன்றை, நாட்டார் அனைவரும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளும் வகையில் தசரதன் அறிவிக்குங்காலம் வந்தது.

முடிசூட்டுவிழா :

அறுபதினாயிரம் (ஐ இரண்டு ஆயிரத்து ஆறு தாங்கினேன்) ஆண்டுகள் கோசல நாட்டை ஆண்டு வந்த தசரதன், தன் ஆட்சிப் பொறுப்பை. வேறு ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு, தான் அரச பதவியிலிருந்து விடுதலை பெற்றுக்கொள்ளும் காலம் தன்னை நெருங்கி வந்ததை உணர்ந்தான். உடனே, தன் அமைச்சரவையைக் கூட்டினான். அந்த அமைச்சர்கள் 'உற்றது கொண்டு, மேல் வந்து உறுபொருள் உணரும் கோளார்: பிறப்பின் மேன்மைப் பெரியவர்: அரிய நூலும் கற்றவர். மானம் நோக்கின் கவரிமா அனைய நீரார்.

இத்தகைய உயர்ந்த அமைச்சர்கள் கூடிய அவைக் களத்தில், தசரதப் பேரரசன் தன் கருத்தைத் தெரிவித்தான்.

'அமைச்சர்களே! முதுமைக் காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நான், உங்களிடம் வெளியிட வேண்டிய செய்தி ஒன்று உண்டு. அதனைக் கேட்டு உங்கள் உள்ளக் கருத்தைத் தெள்ளிதாகத் தெரிவிக்க வேண்டும்' என்று முன்னுரை அமைத்துக்கொண்டு, பேசத் தொடங்கினான் தசரதன்.

"பெருமகன் என்வயின் பிறக்க, சீதைஆம்
திருமகள் மணவினைத் தெரியக் கண்டயான்,
அருமகன் நிறைகுணத்து அவனி மாதுஎனும்
ஒருமகள் மணமும் கண்டு உவப்ப உன்னினேன்"

(கம். 1341)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"ஆதலால், இராமனுக்கு அரசை நல்கி, இப்
பேதைமைத் தாய்வரும் பிறப்பை நீக்குறு
மாதவம் தொடங்குவான், வனத்தை நண்ணுவேன்;
யாது நும் கருத்து?"
(கம் 1343)

என்பது தசரதனது முடிவுரை,

பெருமையிற் சிறந்த இராமன் எனக்கு மகனாகப் பிறந்தான் சீதையாகிய திருமகளோடு அவனது திருமண விழாவினைக் கண்ணாரக் கண்டேன் நான். அம்மண விழாவினைக் கண்ட நான், அவனோடு, குணம் நிறைந்த நிலமகள் என்னும் ஒப்பற்ற மகளைச் சேர்க்கும் திருமணத் தையும் கண்டு மகிழ எண்ணினேன். அதனால், அவனிடம் கோசல நாட்டு ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்துவிட்டு, நான் அறியாமையால்வரும் இந்தப்பிறப்பை நீக்கிக்கொள் வதற்குத் தவம் செய்யவேண்டிக் காட்டுக்குச் செல்வேன். 'இது பற்றிய உங்கள் கருத்து என்ன?' என்பது அரசனது வினா?

இவ்வினாவிற்கு, அரசன் எதிர்பார்த்த விடையே வந்தது, அமைச்சர்களிடமிருந்து. அமைச்சர்கள் அனைவரின் கருத்தையும் வசிட்டமாமுனிவன் எடுத்துக் கூறினான்.

"முரைசம் ஆர்ப்ப, நின்முதல் மணிப்புதல்வனை,
முறையால்
அரைசன் ஆக்கி, பின்அப்புறத்து அடுத்தது புரிவாய்."

என்பது, அவையில் உள்ளார் அனைவரின் ஒருமித்த கருத்தாகும்.

பெருமகன்-இராமன்: என் வயின்-என்னிடம்:
அருமகன்-இராமன்: அவனி-நிலம்; (பூமி)மாது-பெண்:
பேதைமை-அறியாமை:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒருமித்த கருத்தைக் கேட்டு மனம் மகிழ்ந்த தசரதன் உடனே, இராமனை அவைக்கு வரவழைத்தான்.

அரசன் அழைப்பை ஏற்று அவைக்கு வந்த மூத்த மைந்தன் இராமனிடம்,

"புனையும் மாமுடி புனைந்து, இந்த நல்அறம் புரக்க
நினையல் வேண்டும்: யான் நின்வயின் பெறுவதுஈது"

என்று தசரதன் வேண்டிக்கொண்டான்.

இதனைக் கேட்ட இராமன்,

'யாது கொற்றவன் ஏவியது அது செயல் அன்றோ நீதி எற்கு?' என நினைந்து, அப்பணியை ஏற்றுக் கொண்டான்.

வசிட்ட மாமுனிவன் நாள் கணித்துக்கொடுக்க, அதன்படி நாளை, முதல் மணிப்புதல்வன் இராமனுக்கு முடிசூட்டுவிழா நடைபெறும் என்று, நாடும் நகரமும் நன்கு அறியும் வண்ணம் தெரிவித்துவிட்டான் தசரதப்பெரு மன்னன்.

'அனைவரின் அன்புக்கும் பாத்திரமான இராமனுக்கு, முடிசூட்டு விழாவை நாளை நடத்துவேன்' என்று தசரதன் கொடுத்த வாக்குறுதி சோதனைக்குள்ளாகும் என்பதை, யாரும் கனவிலும் கருதியிருக்கமுடியாது.

சோதனை :

அரசவையில் அமைச்சர் முன்னிலையில் நாட்டு நன்மைக்காகக் கொடுத்த வாக்குறுதிக்கு, அன்றைய இரவே அந்தப்புரத்தில் பெருஞ்சோதனை ஏற்பட்டுவிட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதுவும், எந்த அந்தப்புரம்? தசரதனை, இன்மொழி கூறி, அன்பு தவழ அன்றாடம் வரவேற்றுக் கொண்டு இருக்குமோ, அந்த, அந்தப்புரம்தான், இவன், பகலில் அரசவையில் கொடுத்திருந்த வாக்குறுதிக்குப் பெருஞ்சோதனை நிகழ்த்த தயாராகிக் கொண்டிருந்தது.

அப்படித் தயார் செய்தவள் 'துன்னரும் கொடு மனக் கூனி' என்பவள்தான்.

அன்பே தவழும் அந்த அந்தப்புரத்துக்கு உரியவள் தூய சிந்தைளாய கைகேசி தீயமந்தரை, தேவியின் தூய சிந்தையைத் திரிப்பதற்காகவே அங்கு சென்றாள்.

சென்றவள், வென்றாள். யாரை எப்படி வென்றாள்? தசரதனது அளவற்ற அன்புக்கும், எல்லையற்ற நம்பிக்கைக்கும் யார் ஒருத்தி முழுப் பாத்திரமாக விளங்கினாளோ அந்தத் தெய்வக் கற்பினளாய கைகேசியை, தன் மனத்து நினைத்து செய்யும் கொடுமையளாக மாற்றுவதில் வெற்றி கண்டாள் கொடுமனக் கூனி.

தூய்மையே நிறைந்த அந்த அந்தப்புரத்தை, தசரதனின் வாய்மைக்குப் பெருஞ்சோதனைக் களமாக மாற்றுவதற்கு அந்த நள்ளிரவில் தீயமந்தரை தனது முழு ஆற்றலையும் பயன்படுத்திவிட்டாள். உள்ளமும் கோடிய கொடியாள் அல்லவா அவள்?

தோழியாக வந்த தீயமந்தரை, தனது தலைவியாகிய தூய சிந்தைக் கைகேசியை, 'தீயவையாவையினும் சிறந்த தீயவளாக மாற்றுவதற்கு, அவள் கையாண்ட உத்திகள் அனைத்தும், தசரதனது வாய்மையைச் சோதனைக் குள்ளாக்கும் கருவிகளாக அமைந்துவிட்டன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராமனையே தன் சொந்த மைந்தனாக நினைத்துக் கொண்டிருந்த உள்ளத்தில், பரதனை மைந்தனாக அமர வைத்தாள்: கன்யா சுல்கத்தை அடிப்படையாக்கினாள்: சம்பராசுரப் போரில் கொடுத்திருந்த இரண்டு வரங்களை நினைவுபடுத்தினாள்: இனி, கோசல நாடு பரதனுக்கு என்று உரிமை பாராட்டச் செய்தாள், கூனி.

கொடுமனக் கூனியின் இந்த மாய சொல் வலையில் சிக்குண்ட நங்கை கைகேசி, 'நாகமெனும் கொடியாளாக மாறிவிட்டாள் அந்த நள்ளிரவில்.

'இந்த நள்ளிரவு, நாளை இராமனுக்கு முடிசூட்டு விழா என்னும் நற்செய்தியைக் கைகேசியிடம் தெரிவித்து மகிழ்ந்து கொண்டிருக்கும் நல்லிரவாக அமையும் என்றுதானே நம்பியிருந்திருப்பான் தசரதன் !

எந்த ஒரு நள்ளிரவு, அனைத்துலகப் பெருவாழ்வின் நற்செய்தியைத் தாங்கும் நல்லிரவாக அமையும் என நம்பினனோ, அதுவே, இவனே அழிக்கவந்த அல்லிரவாக மாறிவிட்டால் என்செய்வான் தசரத மாமன்னன்!

தன் அன்பிற்குரியவள் மாறிவிட்டாள்: நல்லிரவும் அல்லிரவாக மாறிவிட்டது.

அல்-இருட்டு: இருட்டில் என்ன தெரியும்?

இன்பம் கொடுப்பவள், துன்பம் கொடுப்பவளாக மாற்றப்பட்டபிறகு, தசரதனுக்கு ஏமாற்றமே முன்வந்து நிற்பதாயிற்று.

என்றும், கைகேசியின் நகைமுகமே கண்டு மகிழ்ந்த தசரதன், இன்று பகைமுகம் கண்டான்: பதைத்துப் போனான்: இந்த முகமாற்றம், அகமாற்றத்தை வெளிப் படுத்துவதாக உணர்ந்தான்: உணர்ச்சியை வெளிப்படுத் தினான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'நீ திசைத்தது உண்டோ? பொய்ந்நிலையோர்கள் புணர்த்த வஞ்சம் உண்டோ? உன்நிலை சொல்.' என்பது தசரதன், கைகேசியைப் பார்த்துக்கேட்ட உணர்ச்சிக் கேள்வி.

'திசைத்ததும் இல்லை: எனக்குவந்து தீயோர் இசைத்ததும் இல்லை.' என்பது கைகேசியின் அப்பட்டமான பொய்யில் மிதந்து வந்த பதில் வார்த்தை.

பொய் என்பதை என்றும் பேசி அறியாத அவளது வாய், மெய்ம்மைக் கணவனுக்கு முன்னால், தன் நெஞ்சு அறிந்த ஒன்றை இல்லை என்று மறைத்துப் பேசும் அளவிற்கு, கைகேசியைக் கொடியவளாக மாற்றிவிட்டாள் கொடுமனக் கூனி.

முன்னிரவில், கூனி சூழ்ச்சியால்தான், தன் அன்புக் காதலி கைகேசி வஞ்சம் புணர்க்கப்பட்டாள் என்பது பின்னிரவில் அங்குவந்த வாய்மை மன்னனுக்கு எவ்வாறு தெரியமுடியும்?

தசரதன் வருகைக்குமுன், அந்தப்புரத்தில் நடந்த சூழ்வினைச் செயலை மறைக்கின்றாள் கைகேசி, அதனால் கள்ளக் கைகேசி ஆகின்றாள்.

சோதனைத் தொடக்கம் :

கைகேசியின் பொய்ம்மைத் தொடக்கப் பேச்சு, தசரதனது மெய்ம்மைப் பெருவார்த்தையைச் சோதனைக் குள்ளாக்குவதற்கு அமைந்த தொடக்கமாயிற்று.

'முன்ஈந்த இவ்வரங்கள். குசைப்பரியோய்! தரின், இன்று கொள்வென்: அன்றேல், வசைத்திறன் நின்வயின் வைத்து, மாள்வென்' என்று எச்சரிக்கை விடுத்தாள் கைகேசி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''ஏய வரங்கள் இரண்டின், ஒன்றினால், என்
சேய் அரசு ஆள்வது: சீதை கேள்வன் ஒன்றால்
போய் வனம் ஆள்வது.''

என்பதுதான், வரங்களுக்குக் கைகேசி கொடுத்த விளக்கம்.

'முதல் மணிப்புதல்வன் இராமனுக்கு நாளை முடிசூட்டுவேன்' என்று பலர் அறியச் சொன்ன வாக்குறுதிக்குப் பெருஞ்சோதனை வந்துவிட்டதே என உள்ளம் கலங்கிய மன்னன், என்றும் சொல்லி அறியாத சொற்களைச் சொல்பவனான்: செல்லவேண்டாத நிலைக்குச் செல்பவனான்.

"ஆ கொடியாய்!' எனும்: ஆவிகாலும்: 'அந்தோ!
ஓ கொடிதே அறம்!' என்னும்: 'உண்மை ஒன்றும்
சாக!' எனா எழும்: மெய்தளாடி வீழும்-
மாகமும் நாகமும் மண்ணும் வென்ற வாளான்,

''நாரியர் இல்லை இஞ்ஞாலம் எங்கும்'' என்ன
கூரிய வாள்கொடு கொன்று நீக்கி' யானும்
பூரியர் எண்ணிடை வீழ்வென்' என்று பொங்கும்
வீரியர் வீரம் விழுங்கி நின்ற வேலான்.

(கம் 1515, 16)

மெய்ம்மைச் சோதனைக்குத் தள்ளப்பட்டு, தள்ளாடி கொண்டிருக்கும் புவிச்சக்கரவர்த்தியின் சொல்லையும் செயலையும் வெளிப்படுத்த வந்த கவிச்சக்கரவர்த்தியின் கவிதைகள் இவை.

ஆவி-உயிர்: மெய்-உடல்: மாகம்-விண்ணுலகம்: நாகம்-நாகலோகம்: நாரியர்-பெண்கள்: ஞாலம்-உலகம்: பூரியர்-கீழ்மக்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாய்மையையே நல்லறமாகக் கொண்டு வாழ்க்கை நடத்திவந்த தசரதன், இப்போது, 'ஓ கொடிதே அறம்' என்று சொல்கின்றான். அதுமட்டும் அல்ல! 'உண்மை ஒன்றும் சாக' என்றும் கூறுகின்றான்.

மேலும். 'பெண் இனத்தையே உலகில் இல்லாதபடி ஒழித்து விடுவேன்' என்று பழிச்சொல் பேசுகின்றான் கைகேசி என்ற ஒரு பெண்பால் கொண்ட வெறுப்பினால்.

இதற்குக் காரணம் என்ன? தான் நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போகிறதே என்ற வாய்மை உணர்வுதான்,

பெருஞ்சிக்கல் :

கன்யாசுல்க வாக்குறுதி கேகய மன்னனுக்குக் கொடுத்தது: சம்பராசுரப் போர்க்களத்தில் வரமாகக் கொடுத்த வாக்குறுதி கைகேசிக்குரியது: இராமன் முடிசூட்டு விழா வாக்குறுதி அரசனாக இருந்து நாட்டு மக்களுக்குக் கொடுத்தது.

இவைகளில் எந்த வாக்குறுதி வலிமை பெற்றதாக இருக்கும்? வலிவு பெற்றது எதுவோ, அது மெலிவுற்றதை அகற்றிவிடும். இது உலக இயல்பு.

வன்மையையும் மென்மையையும் உள்ளபடி அளந்துகாட்டும் கருவி எது?

அந்தக்கருவி வெளியில் இல்லை.

பிறரால், இந்தச் சிக்கலில் இப்படிச் செய்யலாம் என்று யோசனை சொல்லமுடியாத ஒரு கடுமையான சூழ்நிலையில் அகப்பட்டுக்கொண்ட ஒருவரது உள்ளத்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உணர்வுதான், வன்மை மென்மையை உள்ளபடி அளந்து காட்டும் கருவியாகும்.

அத்தகைய கருவி, தசரதனிடம் இருந்தது. அவனுடைய அளவுகருவி, நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியையே வலிவு பெற்றதாகக் காட்டியது.

அதன்படியே துணிந்து செயல்பட்டிருக்கலாமே வாய்மை மன்னன்? இப்படிச் செயல்பட்டிருந்தால், யாரும், மன்னனைக் குறை கூறியிருக்கமாட்டார்கள். அதற்கு மாறாக அவனைப் போற்றிப் புகழ்ந்திருப்பார்கள்.

ஏன் செயல்படவில்லை?

வள்ளுவர் வகுத்துத் தந்த வாய்மை அறத்திற்கும் மேம்பட்ட கொள்கையனாகத் தன்னைத் தசரதன் வகுத்துக்கொண்டதால்தான், எல்லோரும் எதிர்பார்ப்பதைச் செய்யமுடியாதவன் ஆனான்.

தெய்வப்புலவர் வள்ளுவர், வாய்மை நல்லறத்திற்கு விதிவிலக்கு ஒன்று கொடுக்கின்றார்.

அதனை 'வழுவமைதி' என்று கூறலாம். வழு-குற்றம் அறத்திற்குக் குற்றமாக இருந்தாலும் அதனை ஏற்றுக் கொள்ளலாம். நன்மை பயப்பதாக இருந்தால், வாழ்க்கையில் அமைத்துக் கொள்ளலாம்.

பொய்பேசுவது வழு, (குற்றம்) மெய் பேசுவது வழாநிலை (குற்றம் இல்லாதது) பொய்யாக இருந்தாலும் அதனை ஒரு நன்மை கருதி ஏற்றுக்கொள்வது வழுவமைதி.

இலக்கணத்தில் கூறப்படும் 'வழு, வழாநிலை, வழுவமைதி' என்ற மூன்றையும், வாழ்க்கை இலக்கண

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அறநெறியிலும் கண்டுகொள்ளுமாறு திருக்குறள்களை அமைத்துத்தந்துள்ளார் வள்ளுவப் பெருந்தகை.

"பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்" (திருக்குறள்-292)

என்பது வள்ளுவர் தந்த வாய்மை வழுவமைதிக்குறள்.

நிகழாதவற்றை நிகழ்ந்ததாகச் சொல்வதும், நிகழ்ந்ததை நிகழாததாகச் சொல்வதும் பொய்தான்: (வாய்மைக் குற்றம்தான்: வழு) இருப்பினும் அந்தப் பொய் வார்த்தையால், குற்றம் அற்ற பெருநன்மை கிடைக்குமானால், அது வாய்மையைச் சார்ந்துவிடும்.

அனைவரின் நன்மைக்காக, தன் நெஞ்சு அறிந்த ஒன்றை, 'இல்லை' என்று பொய்யைச் சொல்லலாம் என்பது வள்ளுவரின் வாய்மை விதிவிலக்கு.

வள்ளுவத்தின் வளர்ச்சி :

முதல் மணிப்புதல்வன் இராமனுக்கு முடிசூட்டுவிழா நடத்தினால், இரகு வம்சமரபும் காக்கப்படும்: நாட்டாருக்கு கொடுத்த வாக்குறுதியும் காக்கப்படும்: மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி ஏற்படும்.

குற்றம் அற்ற (புரைதீர்ந்த) இவ்வளவு நன்மைகள் கிட்டுவதாக இருந்தும்-தசரதன் இதனைச் செய்ய முற்படவில்லை, இதனைச் செயல்படுத்துவதாக இருந்தால், கைகேசிக்குக் கொடுத்த வாக்குறுதியை மறுக்கவேண்டும்.

கேகய மன்னனுக்குக் கொடுத்த கன்யா சுல்க வாக்குறுதியையும் மறைக்கவேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனைவிக்குக் கொடுத்ததை மறுக்கவும், மாமனாருக்கு கொடுத்ததை மறைக்கவும் தசரதன் மனம் இடம் கொடுக்க வில்லை.

முடிசூட்டுவிழாவாகிய புரைதீர்ந்த நன்மையைப் பார்க்கும்போது, தன் நெஞ்சு அறிந்த ஒன்றைப் பொய்த்து விடலாம் என்று தசரதனுக்கு வழிகாட்டுகிறது வள்ளுவரின் வாய்மை வழுவமைதிக்குறள்.

ஆயினும், தசரதனோ,

'தன் நெஞ்சு அறிவது பொய்யற்க: பொய்த்தபின்
தன் நெஞ்சே தன்னைச் சுடும்" (திருக்குறள்-293)

என்ற வாய்மை வழாநிலையைத் தவறாது பின்பற்றி வாழ்ந்த தால், வழுவமைதியை ஏற்றுக்கொள்ளவில்லை மாமன்னன்.

கைகேசியின் வரத்தை மறுத்தலும், கேகயனின் கன்யாசுல்கத்தை மறைத்தலும், வள்ளுவத்தின்படி பொய்யைச் சேராது. தசரதனின் தூய உள்ளத்தின்படி அவை பொய்ம்மைக்குரியனவே ஆகும்.

அவனுடைய தூய உள்ளம், வேறு ஒரு வகையிலும், எடை போட்டுப் பார்க்கிறது.

ஒருவன் தனித்துச் (ஒருவருக்கும் தெரியாமல்) சொல்கின்ற சொல், செய்கின்ற செயல், பிறர்க்குத் தெரியாது: ஆனால் கடவுளுக்குத் தெரியும். கடவுளுக்குத் தெரிந்த ஒன்றை மறைப்பதே பெரும் பொய்யாகும்.

கன்யாசுல்கமும், கைகேசி வரமும், கடவுள் தெரிந்து வைத்திருக்கும் மெய்ம்மைப் பெருவார்த்தையாக, தசரதன் மனம் மதித்து எடைபோடுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதனால், தன் நெஞ்சு அறிந்த, கடவுள் தெரிந்த ஒன்றைப் பொய்யாக்க விரும்பவில்லை தசரதப்பேரரசன்.

வள்ளுவத்தில் வளர்ந்த கவிச்சக்கரவர்த்தி கம்பரால் படைக்கப்பட்டவன் அல்லவா இந்தத் தசரதமாமன்னன்!

ஆகவே, வழுவமைதி வாய்மையை ஏற்றுக் கொள்ளாது.

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின், உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்."
(திருக்குறள் 294)

என்ற வழாநிலை வாய்மையைப் பின்பற்றியவனாய், வாழ்ந்து, உலகத்தார் உள்ளத்துள் என்றும் நிற்கும் நிலைக்கு உயர்வு பெற்றுள்ளான் தசரதச் சக்கரவர்த்தி.

'ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பது ஒன்றுஇல்." (திருக்குறள்-233)

நிலையில்லாத உலகத்தில், அழியாது நிலைத்து நிற்பது உயர்ந்த புகழ் அன்றி வேறு எதுவும் இல்லை. அந்தப் புகழும் பொய்யாமையால் வருவது- ,பொய்யாமை அன்ன புகழ் இல்லை'- என்ற வள்ளுவத் தத்துவத்தின்படி உயர் புகழ்பெற்று விளங்குகின்றான் தசரதப் பேரரசன்.

வாய்மையும் அன்பும்:

இந்த உயர் புகழைப் பெறுவதற்குத் தசரதன் விலையாகக் கொடுத்தது என்ன? ஒன்றைக் கொடுத்துதான் ஒன்றைப் பெற முடியும்.

ஒன்றா-நிலையில்லாத: பொன்றாது-அழியாது:
வழாநிலை-குற்றம் அற்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெறுவது எவ்வளவு உயர்விற்குரியதாக இருக்கிறதோ அந்த அளவிற்குக் கொடுப்பதும் உயர்வுடையதாக இருக்க வேண்டும்.

கொண்டது, பிறரால் பெறுதற்கு அரிய உயர் பெரும் புகழ்: கொடுத்தது, அறுபதினாயிரம் ஆண்டுகள் வாய்மை வாழ்விற்காகவே உடலை இயக்கிக் கொண்டிருந்த உயிர்.

வாய்மை நல்வாழ்விற்காகவே இயங்கிக் கொண்டிருந்த உடலிலிருந்து உயிர் தானாகப் பிரிந்ததா? தசரதனே உயிரைப் பிரித்தானா ?

நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற இயலாத நிலையில் மன்னனாக எப்படி வாழ்வது? அரச வாழ்விற்கு உதவாத உயிர் இருந்து என்ன பயன்? என்று கருதி, தானே உயிர்விடத் துணிந்தானா தசரதன் ?

இத்தகையதொரு இக்கட்டான சூழ்நிலையில், மன்னனின் மனப்போக்கு, புவிச்சக்கரவர்த்தியாகிய அவனை எவ்வாறு கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தது என்பதைக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் அருமையாகச் சித்திரித்துக் காட்டுகின்றார்.

ஒன்றைப் பிழிவதற்கு இரண்டு பொருள்கள் வேண்டும். தசரதன் மனத்தைக் கசக்கிப் பிழியும் வேலையைச் செய்தது, முறை பிறழா வாய்மையும், இராமன்பால் கொண்ட அளவற்ற அன்பும்.

இந்த இரண்டும் மன்னனுக்கு உயிர் போன்றவைகள் 'மைந்தன் அலாது உயிர் வேறு இலாத மன்னன்' என்றும், 'உம்பரும் உலகும் பரவும் மெய்யினுக்கு உயிர் அளித்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உறுபுகழ் படைத்தான்' என்றும் கவிச்சக்கரவர்த்தியால் உருக்கொடுக்கப் பெறுகின்றான் தசரதன்.

இரண்டும் இரு வேறுபட்ட போக்கிற்கு இழுக்கின்றன மன்னன் மனத்தை.

இருபாற்பட்ட தசரதனது மனநிலையை வடித்துக் காட்டவந்த கவிச்சக்கரவர்த்தி, அதற்கு முன்னால், சங்கச் சான்றோர் ஒருவரது கவிதையால் கவரப்பட்டார் போலத் தோற்றுகின்றது.

சங்க காலத்துக் காதலன் ஒருவன், பொருள் சம்பாதிப்பதற்காக, தன் அன்பிற்குரிய அருமைக் காதலியை வீட்டில் இருக்க வைத்துவிட்டு வெளியில் புறப்பட்டான், காட்டின் நடுவழியில் செல்லும்போது, அன்பு உணர்வு. 'பொருள் வேண்டாம், காதலியிடம் செல்லவேண்டும்' என்று அவனை அழைக்கிறது: அறிவு, பொருள் பெறுவதற்கு வெளியிடம் செல்லுமாறு அவனைத் தள்ளுகிறது.

இது எப்படி இருக்கிறது? ஒரு கயிறு. அதன் இரண்டு பக்கத்து நுனியையும் இரண்டு யானைகள் பற்றிக்கொண்டு வெவ்வேறு திசையில் இழுத்தால், எந்தக் கயிறு என்ன ஆகும்? அறுந்துதான் போகும்.

தலைவனை, அன்பு, இன்பம்காண வீட்டுக்கு இழுக்கிறது; அறிவு, பொருள்தேட காட்டுக்கு இழுக்கிறது.

'யானை பற்றிய தேய்புரிப் பழங்கயிறு' தலைவனது வருந்திய மனம் தாங்கிய உடம்புக்கு உவமையாக்கப் பட்டுள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"புறந்தாழ்பு இருண்ட கூந்தல் ....
....
உள்ளம் பிணிக்கொண்டோள் வயின் நெஞ்சம்
'செல்லல் தீர்கம் செல்வாம்' என்னும் :
'செய்வினை முடியாது எவ்வம் செய்தல்
எய்யாமையோடு இளிவுதலைத் தரும்என,
உறுதி தூக்காத் தூங்கி, அறிவே
சிறிதுநனி விரையல்' என்னும் : ஆயிடை
ஒளிறுஏந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
வீவதுகொல் என் வருந்திய உடம்பே."

(நற்றிணை-284)

இதனைப் பாடிய சங்கச் சான்றோர் 'தேய்புரிப் பழங்கயிற்றினார்' என்றே பெயர் பெற்றார்.

தலைவிபால் கொண்ட காதல் ஒரு பக்கமும், பொருள் வேண்டிச் செல்லும் அறிவு ஒரு பக்கமும் இழுக்க, இடை தடுமாறும் தலைவன், களிறு (யானை) மாறு பற்றிய தேய்புரிப் பழங்கயிறு போல வீயும் (அழியும்) நிலைக்கு உள்ளாகின்றான்.

வாய்மை ஒரு பக்கமும் இராமன்பால் கொண்ட அன்பு ஒரு பக்கமும் இழுக்க இழுப்புண்டு கிடக்கும் தசரதன் நிலையைக் கூற வந்த கம்பர், தேய்புரிப் பழங்கயிற்றினார் பழங்கவிதையால் இழுக்கப்பட்டிருப்பதை, அவரது கவிதையில் உணரலாம்.

தசரதன், தன் நிலைமையைக் கைகேசியிடம் எடுத்துச் சொல்லிப் புலம்புவதாகக் கவிதை அமைந்துள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"மெய்யே: என்தன் வேர்அற நூறும் வினைநோக்கி
நையா நின்றேன்: நாவும் உலர்ந்தேன்: நளினம்போல்
கையான், இன்று என்கண் எதிர்நின்றும் கழிவானேல்
உய்யேன்: நங்காய்! உன்அபயம் என்உயிர்" என்றான்
(கம்-1527)

'சத்தியம் தலைகாக்கும்' என்பது சான்றோர்கள் உரைத்த அனுபவ முதுமொழி.

அது தன்னுடைய வாழ்க்கையில் பொய்யாகின்றதே என்று நினைக்கின்றான் தசரதப் பெருமன்னன்.

அந்நிலையில், கைகேசியிடம் தன் நிலையை எடுத்துப் பேசிப் பேசிப் புலம்புகின்றான் அவன்.

'நான் கடைப்பிடித்து வாழ்ந்துவந்த சத்தியமே (மெய்யே) என்னை அடியோடு அழிக்க வந்ததாக உணர்கின்றேன். இல்லை! இல்லை!! என் தீவினை, வாழ வைக்கவேண்டிய சத்தியத்தை-வாய்மையை, என்னை வீழ வைக்குமாறு செய்துவிட்டது. அந்தத் தீவினையை நினைத்துப் பார்க்கின்றேன்: அதனால் தளர்கின்றேன். நான் செய்த தீவினை, மெய்யையே (சத்தியத்தை) எப்பொழுதும் பேசிக்கொண்டிருந்த எனது நாக்கைப் பசையில்லாமல் உலர (வறட்சி) வைத்துவிட்டது.'

என்று (வினை நோக்கி) தனது தீவினையை நொந்து கொள்கின்றானே அன்றி, சத்தியத்தைப் பழிக்கவில்லை தசரதன்.

மெய்-உண்மை: (சத்தியம்) வேர் அற-அடி இல்லாமல், நூறுதல்-அழித்தல்: நைதல்-தளர்தல்:, உலர்தல்-வறட்சி; நளினம்-தாமரை: அபயம்-அடைக்கலம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'சத்திய நெறியில் நிற்பதால்தான், தன் அன்பிற்குரிய மைந்தன் வனம் செல்லும் நிலை ஏற்படுகின்றது. தான் வானகம் செல்லும் நிலை உருவாகின்றது' என்று உணர்ந்த மாமன்னன், தன் மனைவியிடம் 'உய்யேன்' நங்காய்! உன் அபயம் என் உயிர், என அடைக்கலம் புகுகின்றான்.

இந்திரன் முதலியோர்க்கே அடைக்கலம் தந்த மாமன்னன், தன் மனைவியிடம் அடைக்கலம் புகுந்தாயினும், வாய்மையைக் காப்பாற்றிக் கொண்டு, அன்பு மைந்தன் இராமனைத் தன்னோடு இருத்தி வைத்துக் கொள்ளலாம் என எண்ணிச் செயல்பட்டான்.

தனது வாய்மையை-உரைகுன்றா நேர்மையை முதலில் உறுதிப்படுத்திவிட்டுதான், மன்னன் தன் மனைவியிடம் இரந்து கேட்டுக்கொண்டான்.

"நின்மகன் ஆள்வான்; நீ, இனிது ஆள்வாய்; நிலம்எல்லாம்
உன்வயம் ஆமே: ஆளுதி: தந்தேன்: உரைகுன்றேன்:
என் மகன், என் கண், என் உயிர், எல்லா உயிர்கட்கும்
நன்மகன், இந்த நாடு இறவாமை நய' என்றான்"
(கம் - 1526)

என்பது தசரதனது வாய்மையும் அன்பும் கலந்த பண்பு நிரம்பிய மொழி.

முதல் இரண்டு அடிகளும் தசரதனது வழுவிலா வாய்மைப் பெருவாழ்க்கையையும், பின் இரண்டு அடிகளும், மைந்தன் இராமன்பால் கொண்ட அளவற்ற அன்பு வாழ்க்கையையும் காட்டுகின்றன.

நின் மகன்-பரதன்: என் மகன்-இராமன்: இறவாமை-கடக்காமல்: நய-விரும்பு: இரந்து-யாசித்தன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'உரை குன்றேன்' (சொன்ன சொல் தவற மாட்டேன்) என்ற, தசரதனது உள்ளத்து எழுந்த உணர்ச்சித் தொடர், அவன் பின்பற்றிய சத்திய வாக்குக்கு-சத்தியப் பெருவாழ்வுக்கு எடுத்துக் காட்டாகும்.

'உரை குன்றா என் வாய்மைப் போக்கால், நின் மகன் (பரதன்) நாடு ஆள்வான்: என் மகன் (இராமன்) காடு ஆள்வான்.'

'உன் மகனோடு நீ நாடு இனிது ஆள்வாய் என் மகனோடு நான் இருக்கவேண்டும் அல்லவா? 'பரதன் உனக்குமட்டும் மகன்: ஆனால் என் மகன் இராமன், எனக்குக் கண்: எனக்கு உயிர்: எல்லா உயிர்கட்கும் நன் மகன். அவன் நாடு கடக்காமல் என்னுடன் இருக்க நீ விரும்பி அருள்புரிவாய்.' என்று தன் மனைவியிடம் இரந்தான் (யாசித்தான்) தசரதன். மன்னனை யாசகனாக்கியது, மைந்தன்பால் கொண்ட அன்பு.

'அன்பின் வழியது உயிர்நிலை' தசரதன் உயிர் நிலை, இராமன்பால் கொண்ட அன்பை இருப்பிடமாகக் கொண்டது.

'நளினம் போல் கையான் (தாமரை மலர் போன்ற சிவந்த கைகளை உடைய இராமன்.) இன்று, என் கண் எதிர் நின்றும் கழிவானேல், உய்யேன் (பிழைக்கமாட்டேன்) நங்காய்' என்று தனது உண்மை நிலையைப் புலப்படுத்தினான் தசரதன்.

'இரந்தான் சொல்லும் இன்னுரை கொள்ளாத' கொடியவளாகவே நீட்டித்தாள் கைகேசி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உரை குன்றா நேர்மைப் போக்கும், அன்பு உணர்வும், மன்னன் மனத்தை எவ்வளவு அழுத்தமாக நின்று உருக்கியுள்ளன என்பதை, அவனது வாய்ச் சொற்கள் காட்டுகின்றன.

உரை குன்றா வாய்மையால்தான், தன் அன்பு மைந்தன் இராமன் பிரிகின்றான். அதனால்தான் தசரதன் உயிர் பிரிகின்றது.

'வேய் உயர் கானம், தானும், தம்பியும், மிதிலைப் பொன்னும்,
போயினன், என்றான்: என்ற போழ்தத்தே ஆவிபோனான்'

என்பது, தசரதன் உயிர் நீத்ததைக் காட்டும் கவிதைத் தொடர்.

புவிச்சக்கரவர்த்தி தசரதனை, எந்த உணர்வுகள் இயக்கிக்கொண்டிருந்தன என்பதை, கவிச்சக்கரவர்த்தி கம்பர் இந்த இரண்டு கவிதைகளின் மூலம் காட்டிவிட்டார்.

வாய்மையையும் விடமுடியவில்லை! அன்பையும் அகற்ற முடியவில்லை. அதனால் உயிரைவிட்டான்.

உயிர் கொடுத்துப்புகழ் கொள்பவனாக உயர்கின்றான் தசரதன்.

'பொய்யாமை அன்ன புகழ்இல்லை' என்ற, வள்ளுவத்தை வாழ்க்கையில் மெய்ப்பித்துக் காட்டவேண்டுமானால் எவ்வளவு தடைகளைச் சந்திக்கவேண்டிவரும் என்பதை, கம்பர் பெருமான், தனது தசரதப் பாத்திரப் படைப்பின் மூலம் காட்டிவிட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காப்பியத்தின் தொடக்கத்தில் 'நல்லறமூர்த்தி' என்று அறிமுகம் செய்யப்பட்ட தசரதன், அதன் இறுதியிலும், அவன் பெற்ற புகழோடு பேசப்படுகின்றான்.

அவன் புகழ்பெற்றது எவ்வாறு? கவிச்சக்கரவர்த்தி அதனை நயமாகக் கூறுகின்றார்.

வள்ளுவர் தந்த வாய்மை (மெய்) உலகில் இயங்க (நடமாட) வேண்டும். உயிர் உள்ளதுதான் உலகத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் வாய்மை என்ற நல்லறம், உயிர் பெற்றால், அது இயக்கம் பெறும்.

தேவர்களாலும் மனிதர்களாலும் (விண்ணவராலும் மண்ணவராலும்) போற்றப்படும் நிலைக்கு வாய்மைக் குணம் உயர்வுபெற்றிருந்தாலும், அதற்கு உயிர் இல்லாததால் உலகத்தில் நன்கு இயங்க (செயல்பட) முடியவில்லை.

தசரதன் அந்த மெய்யினுக்கு (வாய்மைக்கு) உயிர் கொடுத்தான், அதனால் அது இயக்கம் பெற்றுவிட்டது. உயிர் அற்ற ஒன்றுக்கு, உயிர் கொடுத்ததனால் தசரதன் உறுபுகழ் பெற்றான்.

'உம்பரும் உலகும் பரவும் மெய்யினுக்கு உயிர் அளித்து உறுபுகழ் படைத்தான்' என்பது, கவிச்சக்கரவர்த்தி கம்பர், புவிச்சக்கரவர்த்தி தசரதனுக்குச் சூட்டிய புகழ்மாலை.

வழாநிலை வாய்மை வள்ளுவத்திற்கு ஒரு எடுத்துக் கட்டாக வாழ்ந்த தசரதப்பேரரசனுக்குப் பொருத்தமான புகழ்மாலையைக் காப்பியத்தின் இறுதியில் சூட்டிமகிழ்கின்றார் கம்பர் பெருமான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ:

தசரதனும் வாய்மையும்

1. வேறு இலா.........
....
ஊறின உவகையை ஒளிக்கும் சிந்தையான்,
மாறும் ஓர் அளவைசால் வாய்மை கூறினான்.
(கம்-1390)

2. 'ஆ கொடியாய்!' என்னும் .. ..
ஓ கொடிதே அறம் என்னும் உண்மை ஒன்றும்
சாக! எனா எழும், (கம்-1515)

3. 'கையொடு ....
வையகம் முற்றும் நடந்த வாய்மை மன்னன்'
(கம்-1517)

4. 'இன்னே ....
என்னே! மன்னா! யார் உளர் வாய்மைக்கு இனி?
என்றாள். (கம்-1524)

5. 'மெய்யே: என்தன்வேர் அறநூறும் வினைநோக்கி
நையா நின்றேன் .... (கம்-1527)

6. 'இத்திறத்தின்............
பொய்த்திறத்தினன் ஆக்குதியோ?-புகல்
மெய்த் திறத்துநம் வேந்தனை நீ? என்றான்
(கம்-1619)

7. 'மொய்ம்மாண் ....
.... அரசன் மெய்யின் திரிவான் என்னில்
இம்மாண் உலகத்து உயிரோடு இனி வாழ்வு
உகவேன்' (கம் 1647)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8. 'மெய்யின் மெய்யே! .... (கம்-1674)

9. 'என்னே, நிருபன் இயற்கை இருந்தவா!
தன் நேர் இலாத தலை மகற்குத் தாரணியை
முன்னே கொடுத்து முறைதிறம்பத் தம்பிக்குப்
பின்னே கொடுத்தால் பிழையாதோ மெய்!
என்பார் (கம்-1713)

10. 'வினைக்கு அருமெய்ம்மையின் வனத்துவிட்டனன்
மனக்கு அரும்புதல்வனை' என்றல் மன்னவன்
தனக்கு அரும் தவம்...' (கம்-1870)

11. 'கானகம் பற்றிநல் புதல்வன் காய்உண
போனகம் பற்றிய பொய்இல் மன்னற்கு.'
(கம்-1882)

12. 'ஒன்றும் பொய்யா மன்னனை, வாயால்
உயிரோடு
தின்றும். தீரா வன்பழி கொண்டீர்: (கம்-2178)

13. 'மாளும்... மெய்யே உலகுஎல்லாம்
ஆளும் என்றே போயினன் அன்றோ-அரசு
ஆள்வான் (கம்-2180)

14. 'அறம்தானே ... நெறி திறம்பாத்தன் மெய்யை
நிற்பது ஆக்கி
இறந்தான் தன்இளந்தேவி ..' (கம்-2369)

15 ''நந்தா விளக்கு......
அந்தோ! இனி, வாய்மைக்குஆர் உளரே மற்று
என்றான்' (கம்-2434)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

16. வண்மை இயும்......
……………. திறம்பாத
உண்மைஇயும், எல்லாம் உடன்கொண்டு
ஏகினையே' (கம்-2440)

17. பரவல் அரும் கொடைக்கும்.........
புரவலர் தம் புரவலனே! பொய்ப்பகையே!
மெய்க்கு அணியே! புகழின் வாழ்வே. (கம்-2710)

18. 'உய்விடத்து……….. தன்
மெய்விடக் கருதாது விண்ஏறினான்' (கம்-2718)

19. 'உந்தை உண்மையன் ஆக்கி......... (கம்-2729)

20. 'வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர்
துறந்தவள்ளல்
தூயவன்.' (கம்-4018)

21. 'உன்பெரும்..... உன்னைப் பெற்ற
மன்பெருமருகி என்னும் வாய்மைக்கும்.........
தலைமை சான்றாள்.' (கம்-6032)

22. 'வரம் இரண்டு. அளித்து, அழகனை, இளவலை,
மலர்மேல்
விரவு பொன்னினை, மண்ணிடை நிறுத்தி,
வீண்ணிடையே
உரவு மானம்மீது ஏகினான்-உம்பரும் உலகும்
பரவும் மெய்யினுக்கு உயிர்அளித்து உறுபுகழ்
படைத்தான்.' (கம்-10084)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ :

4

விழுச்செல்வம்

செல்வம் :

"அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள" (திருக்குறள் 241)

'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு,
மாடு அல்ல மற்றை யவை" (திருக்குறள் 400)

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை" (திருக்குறள் 411)

"வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டுஇல்லை
ஆண்டும் அஃது ஒப்பது இல்" (திருக்குறள் 368)

என்று, தாம் கண்ட செல்வத்தை ஒரு பட்டியல் போட்டுக் காட்டுகின்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'செல்வம்' என்பது சிந்தையின் நிறைவே' என்ற இலக்கணத்துக்கு ஏற்ப எவைகள் எல்லாம் மனித வாழ்க்கைச் சிந்தைக்கு நிறைவாக அமைகின்றனவோ, அவைகள் எல்லாம் செல்வம் என்ற வரிசையில் சேர்க்கப் பட்டுள்ளன.

பொருள், அருள், கல்வி, கேள்வி, முதலியவைகள் எவ்வாறு செல்வமாக விளங்கி, மனித வாழ்க்கையை நிறைவு செய்கின்றன என்பது, அந்த அந்த அதிகாரங்களில் தெளிவாகப் பேசப்படுகின்றன.

சென்று கொண்டிருப்பது எதுவோ அது செல்வம் எனப்படும், இருந்த இடத்திலிருந்து சென்றுவிட்டால், அந்த இடம் குறைவுடையதாகும். இருந்த இடத்தைக் குறைவுபடுத்திச் செல்லும் செல்வத்தைக் காட்டிலும், சென்றபிறகும், அந்த இடத்தை நிறைவுடையதாகவே அமைப்பது எதுவோ அது 'விழுச்செல்வம்' (விழுப்பம்-சிறந்த) எனப்படும்.

மக்கள் யாவரும் பொதுவாக எதனைச் செல்வமாகக் கருதி, அதனைச் சேர்ப்பதற்காகவே, தன் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கிறார்களோ, அது குறைவுடைச் செல்வம்தான், வள்ளுவர் வாழ்க்கைத் தத்துவ அகராதியில்.

மேலான செல்வம் :

நீங்காதது எதுவோ, அது நிறைவுடையது : விழுப்பம் பெற்றது ஆகும்.

கல்வியை, கேடு (அழிவு) இல்லாத விழுச்செல்வம் என்று மதிக்கின்றார் வள்ளுவப் பெருந்தகையார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இது, யாரைச் சேர்ந்திருக்கிறதோ, அவர் உள்ளத்திலிருந்து வெளியில் சென்றுகொண்டும் இருக்கும்: புறப்பட்ட இடத்தை நிரப்பிக்கொண்டும் இருக்கும்.

அதனால், இது விழுச்செல்வம் ஆகிறது. 'இதனை விட, சிறந்த செல்வமாக மதிக்கத்தக்கது ஒன்று உண்டு. அதுதான், மனித வாழ்க்கையை மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்திவிடும்.' என்று தெய்வப் புலவர் கூறுகின்றார்.

உலகியலில், எந்த ஒன்று மக்களால் 'வேண்டும் வேண்டும்' என்று விரும்பப்படுகிறதோ, அதனை 'வேண்டாம் வேண்டாம்' என வெறுத்து ஒதுக்குகின்ற மனப் பக்குவத்தைத்தான் மிக மேலான செல்வம் என்று மதிப்பிடுகின்றார் வள்ளுவர்.

'வேண்டாமை' என்பதுதான் எல்லாவற்றிலும் மிக மேம்பட்ட விழுச்செல்வம். இச்செல்வத்திற்கு ஒப்பான ஒன்று, காணப்படுகின்ற இந்த மண்ணுலகத்திலும் இல்லை: கேட்கப்படுகின்ற அந்த விண்ணுலகத்திலும் இல்லை ?

'மக்கள் செல்வமும், தேவர் செல்வமும் மேன்மேல் நோக்கக் கீழாதலுடைமையின், தனக்கு மேலில்லாத வேண்டாமையை 'விழுச்செல்வம்' என்றும், அதற்கு இரண்டு உலகினும் ஒப்பது இல்லை' என்றும் கூறினார்! என்பது பரிமேலழகர் தரும் விளக்கம்.

மற்றைய செல்வங்களுக்கு ஒப்பு உண்டு: இது ஒப்பு. உவமை அற்றது. அதனால், வேண்டாமை - அவாவின்மை, விழுச்செல்வம் ஆகிறது.

வள்ளுவர், இந்த அவாவின்மையை-வேண்டாமையை, இவ்வளவு உயர்ந்த செல்வமாக மதிப்பதற்குக் காரணம், மனம் மாசு அற்ற ஒன்றையே அறம்' எனக், கருதுவதனால்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"தூஉய்மை என்பது அவாவின்மை, மற்றது
வாஅய்மை வேண்ட வரும்." (திருக்குறள்-364)

மனத்தூய்மை, அவாவின்மையை அடிப்படையாகக் கொண்டது: அந்த அவாவிமை, வாய்மையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

வாய்மையை அடித்தளமாகக் கொண்ட 'வேண்டாமை' என்னும் விழுச் செல்வத்தின் பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்ட விரும்பினார் கவிச் சக்கரவர்த்தி கம்பர்.

தன் விருப்பத்தை, தன் காப்பியத்துள் 'பரதன்' என்ற பாத்திரப் படைப்பின்மூலம் வெளிப்படுத்தியுள்ளார் புலவர் பெருமான்.

வாய்மைக்கு எடுத்துக்காட்டாக, தசரதனைப் படைத்துக் காட்டிய கம்பர், வேண்டாமை என்னும் விழுச் செல்வத்தின் விளக்கத்திற்கு, அவன் மைந்தன் பரதனை எடுத்துக்கொண்டார்.

இந்த அவாவின்மையை வேண்டாமையை துறவற வாழ்க்கையினர்க்குத்தான் வற்புறுத்துகின்றார் வள்ளுவர்.

கவிச் சக்கரவர்த்தியோ, இதனை-வேண்டாமையை இல்லறத்தான் ஒருவன், தன் வாழ்க்கையில் கடைப்பிடித்து உயர்வு பெறமுடியும் என்பதை உலகுக்குக் காட்டவேண்டும் என எண்ணினார்: எண்ணத்தை 'பரதன்' என்ற பாத்திரப் படைப்பின் மூலம் நிறைவுசெய்து விட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி,
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"
(பெரிய திருக்கூட்டச்சிறப்பு - 8)

என்று, பெரியபுராண ஆசிரியர் சேக்கிழாரும், இந்த வேண்டாமை என்னும் விழுச்செல்வத்தைத் துறவற நெறியினரிடம்தான் கண்டார்! காட்டினார்.

கம்பர்தான், இந்த அவாவின்மையை-வேண்டாமையை இல்லற நெறியினரும் கடைப்பிடிக்கமுடியும்: அதனால் யாவரினும் உயர்வுபெற முடியும்' என்ற கொள்கையில் நம்பிக்கை கொண்டார் தன் நம்பிக்கையைப் புலப்படுத்த, பரதனைப் பற்றிக்கொண்டார்.

பரதன் அறிமுகம் :

'கரதலம் உற்றுஒளிர் நெல்லி கடுப்ப,
விரத மறைப்பொருள் மெய்ந்நெறி கண்ட
வரதன் உதித்திட (திடு) மற்றைய ஒளியை
'பரதன்' எனப்பெயர் பன்னினன் அன்றே' (கம்-297)

பரதனை முதன்முதலாக அறிமுகம் செய்யவந்த இந்தக் கவிதை, கதை நிகழ்ச்சியில் அவன் எவ்வாறு செயல்படப் போகின்றான் என்பதைக் குறிப்பாகக் காட்டி, அவனை, 'மெய்ந் நெறி கண்ட வரதன்' என்று வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறது.

கரதலம்-கை: நெல்லி-நெல்லிக்கனி: கடுப்ப-ஒப்ப: பன்னினன் - பெயரிட்டு அழைத்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பலரும் பலவிதமாகப் பொருள் கொள்வதற்கு ஏற்ப, இந்த அறிமுகக் கவிதை அமைந்துள்ளது.

'கம்ப சூத்திரம்' என்று கருதப்படும் பல கவிதைகளுள் இதுவும் ஒன்று என்று கூறலாம்.

'உள்ளங்கை நெல்லிக்கனிபோல' என்ற உவமைத் தொடர், 'கரதலம் உற்று ஒளிர்நெல்லி கடுப்ப' என்று கவிதை உருவம் பெற்றுள்ளது இங்கு.

உள்ளதை உள்ளபடியே காட்டுவதற்குத்தான் இந்த உவமைத் தொடர் பயன்படுத்தப்படுகிறது.

ஆனால், இந்தக் கவிதையில் அடங்கியுள்ள கருத்து (பொருள்) இதுதான் என்பதை எளிதில் காணமுடியாதபடி இதனை அமைத்துள்ளார் கவிச் சக்கரவர்த்தி.

பரதனைக் கண்டவர்கள் ஒருவர்கூட, அவனது உள்ளக்கருத்தைத் தெளிவாக முதலில் தெரிந்து கொள்ளவில்லை, கருத்து புரியாமல், அவனைச் சந்தேகக் கண்கொண்டே பார்த்தனர் கண்ட அனைவரும். அவன் உள்ளக் கருத்தை உள்ளபடி தெரிந்துகொண்ட பிறகு, அவனை வாயாரப் புகழாதவர்கள் ஒருவரும் இல்லை.

அதுபோன்றே, அவனை அறிமுகம் செய்கின்ற இந்தக் கவிதையும் அமைந்துள்ளது.

பரதனுக்கு, நாமகரணம் சூட்டுதலைப் பற்றிச் (திருப் பெயரிடுதல்) சொல்வதற்கு வந்தது இந்தக் கவிதை.

திருப்பெயரிட்டவர் வசிட்டர். 'தாவா மெய்த்தவன் நாமம் விதிப்ப மதித்தான்' என்று கம்பர் இந்த நிகழ்ச்சியைத் தொடங்குகின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அழியாத உண்மையான தவத்தையுடையவன் வசிட்டன். அவன் இந்தத் தசரதன் குழந்தைகளுக்குப் பெயரிடுதலைப் பற்றி ஆலோசித்தான். (தாவா-அழியாத)

மெய்த்தவன், ஒவ்வொரு குழந்தையின் இயல்பையும், அது எவ்வாறு, வாழ்க்கையில் செயல்படப் போகிறது என்பதையும் ஆராய்ந்தான். அதற்கு ஏற்பத் திருப் பெயரிட்டான்.

" 'பரதன்' என்று திருப்பெயரிடப்பட்ட இந்தக் குழந்தையின் இயல்பாக, அந்த மெய்த்தவன் உணர்ந்தது என்ன? இந்த உணர்வில் பரதனது வாழ்க்கையில் மலரப்போகும் செய்கையாகக் கண்டது என்ன?" என்பதைத் தெளிவாக்கு கிறது இந்தக் கவிதை.

இயல்பை உணர்ந்தபிறகு, எதிர் காலச் செயலை, தன் மெய்த்தவத்து ஞானக் கண்ணால் கண்டபிறகுதான், வசிட்டன் 'பரதன்' என்ற திருநாமத்தைச் சூட்டினான் இந்தக் குழந்தைக்கு.

இந்தக் கருத்துக் கண்கொண்டு நோக்கினால்தான், கவிதையின் பொருள் 'உள்ளங்கை நெல்லிக் கனிபோல்' (கரதலம் உற்று ஒளிர் நெல்லி கடுப்ப) தெளிவாகப் புலனாகும்.

இப்படி நோக்கியவர் அமரர் திரு நாரயணையங்கார் அவர்கள் ஆவார். அவர், செந்தமிழ்ப் பத்திராசிரியாக இருந்தவர்: மிகப்பெரும் நுண்மாண் நுழைபுலம் நிரம்பப் பெற்ற பேரறிஞராகத் திகழ்ந்தவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தக் கவிதைக்கு அய்யங்கார் கூறியுள்ள பொருளைக் காண்பது பொருத்தமாக அமையும்.

இந்தப் பாட்டால், மஹாகவி கம்பநாடர், ஸ்ரீ பரதாழ்வானுக்கு வசிஷ்ட பகவான் நாமகரணஞ் செய்தமை கூறுகிருர்.

வசிஷ்டர் இவனுக்கு இப்பெயரிட்டார் என்று கூற விரும்பியவர், பரதனுக்கு வசிஷ்டர் பரதன் என்று பெயரிட்டார்: என்றால், அது தன்னைப் பற்றுதல் (-ஆத்மாசிரயம்) என்னும் குற்றமுடையதாய் நகைப்புக்கிடமாம் என்று அதனையொழித்தார். 'கைகேயி மைந்தனுக்கு வசிஷ்டர் பரதன் என்று பெயரிட்டார்' என்று சொல்லலாமானாலும் அது புலமையொடு பொருந்திய பொருட் சிறப்பில்லதாம் என்று அதனையும் கழித்தார். பின், வசிஷ்டர் இட்ட பரதன் என்னும் பெயரோடு சொல்லாலும் பொருளாலும் பெரும்பாலும் ஒத்திருக்கும்படி பரதனைச் சுட்டிக் கூற வேண்டி, அவனுக்கு, வரதன் என்று ஒரு நாமகரணம் தாமே செய்து கொண்டார். அதனை அடைமொழிகளால், அவன் சரிதையின் (ஒழுகலாற்றின்) சிறப்பெல்லாம் ஒருங்கு தோன்ற விசேடித்து.

'கரதல முற்றௌிர் நெல்லி கடுப்ப
விரத மறைப்பொருள் மெய்ந்நெறி கண்ட வரதன்'

என்ருர்.

கடைப்பிடியாகக் கைக்கொள்ளப்பட்டிருக்கும் அரு மருந்துபோல்வதொன்றைக் கரஸ்தம் என்றும், கரதலாமலகம் என்றும் வடமொழியுள் வழங்குவதுண்டு, அதனையே இவர் உவமைப்பொருளாக விரித்து, 'கரதலமுற்றௌிர் நெல்லி கடுப்ப' என்று இவன் விரத மறைப்பொருள் மெய்ந்நெறி கண்டமையை விசேடித்தார். +

+ செந்தமிழ் தொகுதி 37எ. பகுதி-2 பக்-24

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பது, அய்யங்கார் இந்தக் கவிதைக்குக் கொடுத்த நுழைவுப் பொருளாகும்.

வசிட்ட முனிவரால் 'பரதன்' என்று பெயரிடப் பட்டவனுக்கு. கவிச்சக்கரவர்த்தி 'வரதன்' என்று ஒரு நாமகரணம் சூட்டியுள்ளார் என்பதே அய்யங்கார் கொண்ட கருத்தாகும்.

'வரதன்' என்பதற்குச் சிறந்த பொருளை அளிப்பவன் என்று பொருள்.

'பரதன்' என்பதற்கு இராஜ்ஜியத்தைப் பாரமாகத் தாங்குபவன் என்று பொருள்.

அரசபதவி, மற்றவர்களால் சுகபோகத்திற்கு உரியதாக மதிக்கப்படும். அது அவர்களது அவாவை ஆசையைக் காட்டுகிறது.

அந்தப் பெரும்பதவி, பரதனுக்குப் பாரமாகச் சுமக்கப்படும் பொருளாகக் காட்சி அளிக்கின்றது. இது அவனது அவாவின்மையை - வேண்டாமையைக் காட்டுகின்றது.

வேண்டாமையாகிய விழுச்செல்வமே சிறந்த பொருளாகும்.இந்தச் சிறந்த பொருளை உலகுக்கு அளிப்பவனாகக் (வரதன்) கண்டதனால், மெய்த்தவன், பரதன் எனப் பெயர் பன்னினான்' என்று புலவர் பெருமான் கூறுகின்றார்.

வரதன் :

பரதனது இயல்பையும், செய்கையையும் உள்ளடக்கிக் கொண்ட ஒரு சொல், வரதன் என்பது, மெய்ந்நெறி கண்டதனால் வரதன் ஆகின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரதன் பின் பற்றிய 'நெறி' மெய்ம்மைக்கு உரியது. (உண்மையானது) மற்றைய எல்லா நெறிகளுக்கும் மெய்யாகவும் (உடலாகவும்) இருப்பது.

இவன் கொண்ட மெய்ந்நெறிக்குச் சான்றாக இருப்பது எது? சான்றுகளுக்கெல்லாம் சான்றாக உள்ள வேதமே சான்றாகும்: என்னும் கருத்தால் விரத மறைப் பொருள் மெய்ந்நெறி என்று கவிதையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

விரத மறைப்பொருள் - கொள்கைகளை வகுக்கும் வேதங்களில் மறைந்து கிடக்கும் பொருள்-அதுதான் இவன் கண்டு-கொண்ட மெய்ந்நெறி.

விரதம்போல் தப்பாமல் நித்தியமாய் ஒழுகற் பாலதாயும், வேதத்தால் சொல்லப்பட்டதாயும் உள்ள நெறி, மெய்ந்நெறியாகும்.

'மறைப்பொருள் நெறி' வேதத்தால் நன்கு மதிக்கப்பட்ட நெறி.

இந்த நெறியே மெய்ந்நெறி என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் கண்டதனால் அவன், வரதன் எனப்பட்டான்.

கரதலநெறி: ஒளிர்நெறி: மறைப்பொருள் நெறி: மெய்ந்நெறி. இதுதான், வேண்டாமையாகிய விழுச்செல்வமாக வேதத்தினின்றும் கண்டுகொண்டவன் 'பரதன்' அதனால் 'வரதன்' என்று கவிஞர் பெருமானால் பெயரிடப்பட்டான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவன் கண்ட மறைப்பொருள் மெய்ந்நெறியை சாதாரணமாக இருக்கும் ஒருவரால் உணரமுடியாது, அதனை உணர்வதற்கு மெய்ஞ்ஞானம் வேண்டும்.

அத்தகைய மெய்ஞ்ஞானக் கண்ணுடையான் இராமபிரான். தம்பி இலக்குவன், பரதன்மேல் ஐயம் கொண்டு, கோபத்தோடு பேசியபோது, இராமபிரான் கூறியவார்த்தையை இங்குப் பொருத்திவைத்துப் பார்க்க வேண்டும்.

"எனைத்துள மறையவை இயம்பற் பாலன,
பனைத்திரள் மதகரிப் பரதன் செய்கையே
அனைத்திறம் அல்லன அல்ல: அன்னது
நினைத்திலை என்வயின் நேய நெஞ்சினால்,"
(கம் - 2418)

என்பது பரதனைப் பற்றி, இராமன் மதிப்பீடு. எல்லா அறத்திற்கும், நீதிக்கும், ஒழுக்கத்திற்கும், நடைமுறைக்கும் சட்டம் வகுத்துக்கூறுவன வேதங்கள். அவைகள் தாம், உலகச் செயல்கள் அனைத்துக்கும் பிரமாணங்கள் ஆகும்.

அந்த வேதங்களே, பரதன் மேற்கொண்டு ஒழுகுகின்ற மெய்ந் நெறியினையே எடுத்துச் சொல்கின்றன. அவன் ஒழுக்கச்செயல் அல்லாதவற்றை, வேதங்கள் சொல்வது இல்லை.

'பரதனது செயல்தான் வேதப்பிரமாணமாகும். வேதங்கள் என்று எத்தனை உள்ளனவோ அத்தனை வேதங்களும், பரதன் மேற்கொண்டுள்ள செயலைத்தான் சொல்லும்' 'இவன் செயலைச் சொல்லாதது வேதம் அல்ல' என்ற அளவிற்கு இராமபிரானால் மதித்துப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பேசப்படப் போகின்றான் பரதன் என்பதை 'மறைப்பொருள் மெய்ந் நெறிகண்ட வரதன்' என்ற கவிதைத் தொடர் உள்ளடக்கிக் கொண்டுள்ளது.

உதித்திட :

இப்படிப்பட்ட வரதன் உலகத்தில் பிறந்தான் என்று சொல்லவில்லை கம்பர். உதித்தான் என்று கூறுகின்றார்.

ஒளிமயமாக இருப்பது எதுவோ அதுதான் உதிக்கும். சூரியன் உதித்தான். சூரியன், தானும் ஒளி உடையவன்: மற்றவைகளுக்கும் ஒளி கொடுப்பவன்: இருளில் கிடந்த எல்லாப் பொருள்களையும் உலகிற்கு வெளிப்படுத்திக் காட்டுபவன்.

வரதனும் உதித்தான்: வரதன் உதித்திட அந்த ஒளியை. 'பரதன்' என்று பெயரிட்டு அழைத்தான் வசிட்டன்.

இந்தப் பரதன், பொய்யில் உள்ளத்தனாகிய குகனால் ஒளிமயமாகக் காணப்பட்டு, புகழப்படப் போவதை, 'உதித்திட, மற்றைய ஒளியை' என்ற தொடர் குறிப்பாகக் காட்டுகின்றது.

"என்புகழ்கின்றது, ஏழைஎயினேன்? இரவி என்பான்,
தன்புகழ்க்கற்றை, மற்றை ஒளிகளைத் தவிர்க்குமா
போல்,
மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்கள்எல்லாம்
உன்புகழ் ஆக்கிக் கொண்டாய்-உயர்குணத்து உரவுத்
தோளாய்." (கம்-2338)

ஏழை-அறிவற்றவன்: எயினன்-வேடன்: இரவி-சூரியன்: கற்றை-தொகுதி: தவிர்த்தல்-அடக்குதல்! மரபினோர்-முன்னோர்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இது, பரதனைப் புகழ்ந்த குகனது புகழ்மொழி. சூரிய ஒளி மற்றைய ஒளிகளை இல்லாதபடி செய்துவிடும். சூரிய உதயத்துக்கு முன்னால், கோள்களும் விண்மீன்களும் ஒளி உடையனவாகத் திகழும். அந்த ஒளி, சூரிய உதயம் கண்டதும், கண்ணுக்குத் தெரியாதபடி மறைந்துவிடும்.

பரதன் உதயத்துக்கு முன்னால், ரகுவம்சத்து முன்னோர்களுக்குப் புகழ் ஒளி உண்டு. இவனுடைய புகழ் ஒளி முன்னோர்களின் புகழ் ஒளியை மங்கவைத்துவிட்டது.

'இரகு வம்சத்தில் பரதன் ஒருவனே, புகழ் ஒளி பரப்பியவன்' என்பது குகனுடைய உள்ளத்து உதித்த உயர்ந்த உணர்வு மொழியாகும்.

இப்படி உணர்ந்து புகழ்ந்ததற்குக் காரணம், குகன், பரதனிடம் கண்ட, வேண்டாமை என்னும் விழுச்செல்வமாகிய மெய்ந்நெறிதான்.

'உதித்திட-உதயமாக: இது, பாஸ்கரஸாம்யசூசகம். இதனால், ராமதிவாகரன் போலே காணும், இவனும் ஒரு உதய பாஸ்கரன் என்றவாறுயிற்று.' என்பது, திரு நாராயணையங்கார் கொடுக்கும் விளக்க உரையாகும். (பாஸ்கரன்-சூரியன்)

ஆக, கதை நிகழ்ச்சியில் பரதனது சொல், செயல் எவ்வாறு அமையப்போகின்றது என்பதைக் குறிப்பாக உணர்த்துவது இந்த அறிமுகக் கவிதை.

அறிமுகத்திலேயே, பாத்திரத்தின் அகத்தோற்றத்-தைக் குறிப்பாக அடக்கிக் காட்டுவது கவிச்சக்கரவர்த்தி கையாளும் உத்திகளுள் ஒன்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்த உத்தியால் உதித்தது இந்தக் கவிதை.

விசுவாமித்திரன் மதிப்பீடு:

அரச பதவியின் சுகத்தைத் துய்த்தவன்! அதனை வெறுத்து ஐம்புலன் அடக்கி அருந்தவம் புரிந்தவன்: திரிசங்கு சுவர்க்கம் என்ற தனி உலகு படைக்கும் ஆற்றல் பெற்றவன்: எல்லாவற்றிற்கும் மேலாக, மெய்த்தவனாகிய வசிட்ட முனிவரால் 'பிரம்மரிஷி' என்று புகழப் பெற்றவன் விசுவாமித்திரன்.

அரச பதவியின் அவாவையும், அதனை வேண்டாம் என வெறுத்த அவாவின்மையையும் கண்ட ஒரு ஞானமுனி பரதனை எவ்வாறு கணிக்கின்றார் என்று, அடுத்த அறிமுக மாகக் காட்டுகின்றார் கவிச்சக்கரவர்த்தி.

மிதிலைநகர் சனகப்பேரரசன் பேரவை: இராம இலக்குவர்களோடு விசுவாமித்திரன் வீற்றிருக்கின்றான்.

'இருந்த குலக்குமரர்தமை இருகண்ணால் முகந்து, அழகுபருக நோக்கி, யார் இவர்கள்?' என்பது சனகமன்னன் கேள்வி.

இதற்கு விடையாக, விசுவாமித்திரன் தன்னுடன் வந்து இருந்த இராம இலக்குவர்களை மட்டும் அறிமுகம் செய்தானில்லை. அங்கு இல்லாத பரதனைப் பற்றியும் பேசுகின்றான் அந்த அருந்தவ முனிவன்.

முனிவன், பரதனை நேரில் கண்டதாகவும், அவனிடம் பேசியதாகவும் கதை நிகழ்ச்சியில் எந்த இடத்திலும் இல்லை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அப்படியிருந்தும், விசுவாமித்திரன், பரதனை மதிப்பிட்டுப் பேசுவது எவ்வாறு பொருத்தமுடையதாகும் என்ற ஒரு சந்தேகம் ஏற்படலாம்.

மெய்த்தவம் உடைய முனிவரது ஞானக்கண் இடம் கடந்தும் காலம் கடந்தும் நிற்கும் பொருள்களைக் காணும் ஆற்றல் பெற்றதாகும்.

அத்தகைய ஆற்றல் பெற்ற ஞானக்கண்ணால் பரதன் கண்ட மெய்ந்நெறியைக் கண்டான் முனிவன். கண்டதைக் கொண்டு, சனகமன்னனுக்கு, பரதனை அறிமுகம் செய்கின்றான் விசுவாமித்திரன்.

"தள்ள அரிய பெருநீதித் தனிஆறு புகமண்டும்
பள்ளம் எனும் தகையானை, பரதன்எனும் பெயரானை
எள்ளஅரிய குணத்தாலும், எழிலாலும் இவ்இருந்த
வள்ளலையே அனையானை கேகயர்கோன் மகள்
பயந்தாள்" (கம்-657)

இது, பரதனைப் பற்றிய விசுவாமித்திரனது கணிப்பு, அங்கு அமர்ந்திருக்கின்ற வள்ளலாகிய இராமபிரானைக் காட்டி, அங்கு இல்லாத பரதனைப் பற்றி விவரிக்கின்றான் ஞானப் பெருவள்ளல்.

இந்த இராமனோடு, குணத்தாலும், அழகாலும் ஒத்திருப்பவன் பரதன். அந்தக் குணம் இகழ்வற்றது. இராமனுடைய குணச்செயல்களாவது, பிறரால் சிலசமயம் இகழ்ந்து பேசப்படும். பெண் (தாடகை) கொலைசெய்தது

தள்ள அரிய-விலக்குவதற்கு முடியாத: மண்டுதல்-நிறைதல்: பள்ளம்-கடல்: எள்ளுதல்-இகழ்தல்: எழில்-அழகு: வள்ளல்-இராமன்: பயந்தாள்-பெற்றாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மறைந்திருந்து வாலியைக் கொன்றது: மனைவியின் பேச்சைக் கேட்டு, மான் பின்சென்று, துன்பத்திற்கு உள்ளானது முதலியன பிறரால் எள்ளுதற்கு (இகழுதற்கு) உரியன. ஆனால் பரதனுடைய குணமோ யாராலும் எள்ளற்கு (இகழ்ந்து பேசுவதற்கு) அரியதாகும்.

இதுவே, இராமபிரானால் 'பங்கம்இல் குணத்து எம்பி பரதன்' என்று பேசப்படுகிறது.

இவனுடைய நற்குணத்தை விவரிக்கின்றன முதல் இரண்டு அடிகள்.

'நீதியால் நிறைந்தவன் பரதன்' என்ற கருத்தை நயமாக அழகுபட உணர்த்துகிறது கவிதையின் முற்பகுதி.

ஆறு ஒன்று புறப்பட்டால், அது கடலைத்தான் சென்று சேரும், கடலைச் சென்று சேர்வது ஆற்றால் தள்ள முடியாத ஒன்றாகும். அந்த ஆற்றை ஏற்றுக் கொள்வதும் கடலால் தள்ளமுடியாத ஒன்றாகும். ஆறு செல்வதும் தள்ள (விலக்க) அரியது கடல் ஏற்பதும் தள்ள அரியது.

இதனை உவமையாக்கிக் கூறலாம். ஆனால், கவிச்சக்கரவர்த்தி, பொருட்செறிவுள்ள உருவக அணியின் மூலம் கவிதையை அழகுபடுத்துகின்றார்.

'நீதி' என்ற ஆறு ஓடியது: அது 'பரதன்' என்ற பள்ளத்தை (கடலை) நிரப்பியது. நீதி, பெருநீதியாக இருப்பதால் ஆறு, தனி (ஒப்பற்ற) ஆறாக ஆகிறது, பெரு நீதி என்ற ஆறு தனித்துவம் பெற்றது போல, அது சேர்ந்து நிரப்பிய கடலாகிய (பள்ளம்) பரதனும் தனித்துவம் பெற்றுள்ளான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நீதி, பெருநீதி, தள்ளரிய பெருநீதி என்று, தன் அனுபவத்தைக் கொண்டு, மூன்றாகப் பிரித்துப் பார்த்து, பரதனின் பெருமையைக் காட்ட முயல்கின்றான் விசுவாமித்திர மாமுனிவன்.

நீதி, அவாவில் மலர்ந்த அரச வாழ்வுக்குரியது: பெருநீதி, அவாவை அறுத்த தவப்பெரும் வாழ்வுக்குரியது இந்த இரண்டிலும் விசுவாமித்திர முனிவனுக்கு அனுபவம் உண்டு.

தள்ளரிய பெருநீதியைப் பரதனிடம்தான் காண முடியும். அவாவின்மை - வேண்டாமையாகிய பெருநீதி, பிறரால் தள்ளமுடியாத (விலக்கமுடியாத) படி பரதனிடம் தான் நிறைந்திருக்கிறது.

வேண்டாமை என்னும் விழுநிதி (செல்வம்)யையே தன்னிடத்திருந்து என்றும் விழாத பெரு நீதியாகக் கொண்டு இருந்தான் பரதன்.

வேண்டாமை என்னும் விழுநிதியாகிய பெருநீதியை இவனிடத்திருந்தும் தள்ளுவதற்கு - விலக்குவதற்கு ஒருவராலும் முடியவில்லை.

அன்புடைத்தாய் கைகேசி பரதன் கொண்ட பெருநீதியைத் தள்ளுவதற்கு முயன்றாள்: தோல்வியுற்றாள். வேண்டாமை - அவாவின்மை என்பது அவனிடமிருந்து விலக்கப்பட்டால் (தள்ளப்பட்டால்) தான் கைகேசி தான் செய்த செயலுக்கு வெற்றி கண்டவள் ஆவாள்.

தாவா மெய்த்தவன் வசிட்ட மாமுனிவர் பரதனுக்கு ஆசிரியர். அவரும் முயன்றார் பெருநீதியைத் தள்ளுவதற்கு, பரதன்பால் தோல்விதான் கண்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரதன், யாரை, எந்தையும், யாயும், எம்பிரானும், எம்முனும் என்று மதித்தானோ, அந்த, அந்தம் இல் பெருங்குணத்து இராமனே, பெருநீதியைத் தள்ளுதற்கு முயன்றான். அவனும், பரதன்பால் தோல்வியைத்தான் சந்தித்தான்.

'பரதன் கொண்ட வேண்டாமையாகிய பெருநீதியை அவனிடமிருந்து தள்ளுவதற்கு மிக முக்கியமானவர்கள் முயன்றும் அவனிடம் தோல்விதான் காண்பார்கள்' என்ற எதிர்கால நிகழ்ச்சியை உணர்ந்துகொண்ட விசுவாமித்திரன், 'தள்ளரிய பெருநீதித் தனியாறு புக மண்டும் பள்ளம் எனும் தகையான் என்று பரதனை, சனகப் பேரவையில் அறிமுகம் செய்தான்.

பள்ளத்தை நோக்கிதான் ஆறுபாயும். தள்ளரிய பெருநீதியாகிய தனி ஆறு ஓடிவந்து பாயும் பள்ளமாக உள்ளான் பரதன்.

யான், எனது என்னும் அகங்கார மமகாரங்கள் மனதை மேடாக்கிவிடுகின்றன. இங்கு நீதி நிற்காது.

இந்த இரண்டும் அற்ற இடம்தான் நீதி நிற்கும் பள்ளமாகும். 'யான், எனது என்ற இரண்டும், அவாவின்மையை - வேண்டாமையைக் கண்டால் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடும்.

பரதனிடம் அவாவின்மை-வேண்டாமை நிலைத்துக் கொண்டதால், யான், எனது என்ற அகங்கார மமகார மேட்டுக்கு வேலை இல்லை. அதனால் அவன் மனம், நீதியாற்றை ஏற்கும் பள்ளமாயிற்று.

நீதியாறு மண்டும் பள்ளம்-நீதியாகிய ஆற்றுநீரைப் பருகும் பணிவுடையன் பரதன் என்பது கருத்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரதனும் கைகேசியும் :

தந்தை தசரதனால் அனுப்பப்பட்டு, தன் பாட்டன் வீட்டுக்குச் சென்றிருந்த பரதன், வசிட்டரால் அனுப்பப்பட்ட தூதுவருடன் கோசலம் வந்து சேர்ந்தான்.

அயோத்தி நகரில் அரண்மனை புகுந்த பரதனை அவன் தாய் கைகேசி வரவேற்றாள். வரவேற்றதும், தன் மைந்தனுடைய வாழ்க்கையின் நன்மைக்காக, அவள் செய்த செயலைச் சொன்னாள்.

கோசல நாட்டுப் பேரரசை, தன் மைந்தன் பரதனுக்கு உரிமையாக்கி வைத்திருக்கும் கைகேசியின் செயலைப் பாராட்டி, அவன் மகிழ்வான் என்று எண்ணியிருந்தாள்.

தன் மைந்தன் பரதன் பெற்றுள்ள அவாவின்மை-வேண்டாமையாகிய விழுச்செல்வத்தின் பெருமையை அறியாள் கைகேசி. அதனால், அவாவுக்கு இருப்பிடமான வீழும் செல்வமாகிய கோசல நாட்டு அரச பதவியை அவனுக்காக, மிகப் பெருந் துக்கச் சூழ்நிலைக்கிடையில் தசரதனிடமிருந்து வாங்கி வைத்திருந்தாள்.

தன் சொந்த மைந்தனது தூய சிந்தையைப் புரிந்துகொள்ளாத தாய் கைகேசி,

"வாக்கினால் வரம்தரக் கொண்டு. மைந்தனைப்
போக்கினேன் வனத்திடை: போக்கி, பார்உனக்கு
ஆக்கினேன்: அவன்அது பொறுக்க லாமையால்,
நீக்கினான் தன்உயிர் நேமிவேந்து" என்றாள்.

(கம்-2172)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரச பதவியைப் பெறுவதற்கு, மனிதன், எவ்வளவோ போர்கள் செய்வதும், கொலைகள் செய்வதும் இம் மண்ணுலகத்து இயல்பு.

இந்த இயல்பில்தான், தன் பிள்ளையும் இருப்பான் என்று அவனைப் பற்றித் தப்புக் கணக்கு போட்ட கைகேசி, பாரை (கோசல சாம்ராஜ்யத்தை) உனக்கு ஆக்குவதற்காக போக்குதலையும், நீக்குதலையும் செய்தேன் என்று சொன்னாள். வனத்திடைப் போக்கியது அவனுடைய தமையனை: உயிர் நீக்கியது அவனுடைய தந்தையை, தன் துணிவான செயலுக்குப் பரதனிடமிருந்து பெரும் பாராட்டுக் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தாள் கைகேசி. ஏமாற்றமே கண்டாள் அவள்.

இவள் பேசிய பேச்சு, பரதன் விருப்பத்திற்கு மாறாக அமைந்ததால் அது, அவன் உள்ளத்தில் கோப உணர்வைத் தூண்டி வைத்துவிட்டது.

உள்ளத்தெழுந்த கோப உணர்வு, சொற்களை உதிர்க்க வைக்கவில்லை. அந்த உணர்வு பரதனது மெய்யின் வழியாகத்தான் வெளிப்பட்டது.

பரதனது மெய்ப்பாடு, அவன் தன் தாயின்மேல் கொண்ட கோபத்தின் உச்சநிலையைக் காட்டுகின்றது.

"சூடின மலர்க்கரம், சொல்லின் முன் செவி
கூடின: புருவங்கள் குனித்துக் கூத்துநின்று
ஆடின: உயிர்ப்பினோடு அழல் கொழுந்துகள்,
ஓடின: உமிழ்ந்தன. உதிரம் கண்களே"

(கம்-2173)

அழல்-நெருப்பு: உதிரம்-இரத்தம்: உயிர்ப்பு-பெருமூச்சு: உமிழ்ந்தன-வெளியிட்டன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இது பரதன் மெய்யின் மூலம் வெளிப்பட்ட கோப உணர்வு மெய்ப்பாடு.

பரதனது மெய்ப்பாட்டுக்குரிய உறுப்புகள் ஒவ்வொன்றும், ஒவ்வொருவிதமாக, அவனது கோப உணர்வை வெளிப்படுத்தின.

கைகேசி சொன்ன சொற்கள் இவன் செவியை வந்து சேர்வதற்கு முன்னால், அவன் கைகள் காதுகளைச் சென்று கூடிவிட்டன. செவிகளை அடைப்பதற்கு முன் அந்தக் கைகள் அவன் தலையில் மலராகச் சூடிக்கொண்டிருந்தன. சூடிய கைகள், உடுக்கையிழந்தவன் கை போல, அவ்வளவு விரைவாகச் சென்று காதுகளை அடைத்து விட்டன. அவள் சொல், இவன் சிந்தைக்கு வேண்டாதது என்பதைக் காட்டுகிறது இம்மெய்ப்பாடு.

தன் தூய சிந்தையின் வெறுப்புக்குரிய சொல்லைச் சொன்ன தாயை வெறுத்து, கொல்லாது விடக்கூடாது என்ற குறிப்புத் தோன்ற புருவங்கள் வீர வெறிகொண்டு கூத்தாடுகின்றன.

இவன் மூக்கினின்றும் வெளியேறிக்கொண்டிருக்கும் பெருமூச்சோடு கூடிய வெப்பம், இவளைச் சுட்டுத் தின்னக் கருதி நட்புக்கொண்ட காற்றுடன்கூடி எழுந்து ஓடும் தீ நாக்கு போலச் சென்றன.

இவன் அவளைப் பார்த்த பார்வையால் பாணம் போலப் பாய்ந்த கண்கள், அவள் நெஞ்சைப் பிளந்து இரத்த பானம் பண்ணி உமிழ்ந்தன போலச் சிவந்தன.

பரதனது கைகள், புருவங்கள், மூக்கு, கண்கள் எவ்வாறு செயல்பட்டன என்பதைக் கூறும் இந்தக்கவிதை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மெய்ப்பாட்டின் மூலம், அவன், தன் தாயின்மேல் கொண்டு இருந்த வெறுப்பையும் கோபத்தையும் வெளிப்படுத்தி விட்டது.

தாயின் அவா, தனயனின் அவாவின்மையை வெல்ல முடியவில்லை. பரதனின் வேண்டாமை என்னும் விழுச் செல்வம், கைகேசி தசரதனிடம் வேண்டிப்பெற்ற அரச செல்வத்தைத் தோற்கடித்துவிட்டது.

பரதன் கொண்ட பெருநீதியை, அன்புடைத் தாயாக இருந்தும் ஆசை வார்த்தைகாட்டி அவனிடமிருந்து விலக்கமுடியவில்லை. தள்ள அரிய பெருநீதிதான். அவன் கொண்ட வேண்டாமை என்னும் மெய்ந்நெறி என்பதைத் தாய் கைகேசி உணர்ந்திருக்கவேண்டும்.

பரதனும் கோசலையும் :

தன் தூய உள்ளத்திற்குப் பொருந்தாத செயல்கள் நடந்த இந்தத் துக்கச் சூழ்நிலையில், பரதன் தன்து பெற்ற தாயை வெறுத்து, வளர்த்த தாயாகிய கோசலையிடம் சென்றான்.

இவனை, கோசலை தன் அந்தப்புரத்தில் வைத்து அன்பு அரவணைப்பில் வளர்த்தவள்; இவனுடைய நல்லியல்பை நன்கு அறிந்தவள், அதனால், தன்வயிற்று மைந்தனாகிய இராமனிடம், 'மும்மையின் நிறைகுணத்தவன் நின்னிலும் நல்லனால், குறைவு இலன்' என்று பரதனைப் பற்றிக் கூறினாள் கோசலை.

அப்படியிருந்தும், பரதன்மேல் சந்தேகம் கொண்டு, அவனைப் பார்த்து,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கைகயர் கோமகள் இழைத்த கைதவம்
ஐய! நீ அறிந்திலை போலுமால்'

என்று கேட்டுவிட்டாள் கோசலை.

'கேகய நாட்டு மன்னன் அசுவபதியினது மகளாகிய கைகேசியின் வஞ்சகச் செயலை, இதற்குமுன் நீ அறிந்து கொள்ளவில்லையா?' என்ற கோசலையின் கேள்வி, பரதனது உடன்பாட்டோடுதான், தன்மைந்தனுக்கு வரவேண்டிய கோசல சாம்ராஜ்யம் பறிக்கப்பட்ட இந்த வஞ்சகச் செயல் நடந்திருக்கவேண்டும் என்ற அவளது உணர்வை வெளிப்படுத்துகின்றது.

எந்தக் கோசலையை, 'தூய உணர்வினள்' என்று மதித்து 'அவளது பொன்னடியைத் தொழுது உய்வு பெறுவோம்' என்று போனானோ, அந்தக் கோசலையே, தன்னைப் பற்றித் தப்புக் கணக்குப் போட்டு இத்தகைய சந்தேகக் கேள்வியைக் கேட்டால், பரதனது அப்பழுக்கற்ற தூய உள்ளம் எவ்வளவு துடித்துப் போயிருக்கும்.

தன் தூய உள்ளத்துடிப்பை, தனது நீண்டதொரு சூளுரையின் மூலம் வெளிப்படுத்தினான் பரதன்.

அவாவின்மை - வேண்டாமை உள்ளத்தினின்றும் கிளர்ந்து எழுந்து வந்த தூய வாசகம் சொன்ன தோன்றலாகிய பரதனை, கோசலை இப்போது உள்ளபடி உணர்ந்தாள், உணர்ந்ததைச் சொல்லிக் காட்டுகிறாள்.

"முன்னை நும்குல முதலுளோர்கள் தாம்
நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையார்?
மன்னர் மன்னவா! என்று வாழ்த்தினாள்-
உன்ன உன்ன நைந்து உருகி விம்முவாள்"

(கம்-2220)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'இவ்வளவு தூய்மையான உள்ளத்தவனை நாம் தவறாக எண்ணிவிட்டோமே' என்று நினைத்து நினைத்து நைந்து உருதுகின்ற கோசலை, பரதனை இதயபூர்வமாக வாழ்த்துகிறாள்.

'மன்னர் மன்னவா! நம் குலத்தில் தோன்றிய முன்னோர்கள், உன்னை ஒத்த உயர் குணம் உடையவர்கள் யார்? ஒருவரும் இல்லை, நீயே. குலமுதலோர்கள் யாவரினும் உயர்ந்தவன்' என்று உளநிறைவோடு பரதனை வாழ்த்தினாள் கோசலை

வளர்ப்புத் தாயின் ஐயப்பாட்டினின்றும் விடுதலை பெற்றான் பரதன் என்பதை இந்த நிகழ்ச்சி காட்டுகின்றது.

பரதனும் வசிட்டனும்:

தசரதனுக்குரிய சரம காரியங்கள் நடைபெற்று முடிந்தபிறகு வசிட்ட மாமுனிவர் பரதனை அணுகுகின்றார் அமைச்சர்களின் எண்ணத்தை அம்முனிவர் பரதனிடம் சொல்கின்றார்.

"உந்தையோ இறந்தனன்: உம்முன் நீத்தனன்;
வந்ததும் அன்னைதன் வரத்தில்: மைந்த! நீ
அந்தம் இல் பேரரசு அளித்தி; அன்னது
சிந்தனை எமக்கு'' எனத் தெரிந்து கூறினான்!

(கம்-2254)

முற்று உணர் முனிவராகிய வசிட்டர், இதுதான் நல்லது என்று ஆராய்ந்து சொன்ன சொல் இது.

உந்தை-உன் தந்தை தசரதன்: உம்முன்-உனது அண்ணன் இராமன்: அந்தம்-முடிவு: அளித்தி-பாதுகாப்பாய்: தெரிந்து-ஆராய்ந்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோசலப் பேரரசு பரதனுக்கே உரிமை உடையது என்று காரண காரியத்தோடு எடுத்துக் கூறுகின்றார் முனிவர்.

'நாட்டை ஆண்டு கொண்டிருந்த உனது தந்தை தசரதனோ, இவ்வுலகத்தைவிட்டு நீங்கினான். உனது அண்ணன் இராமனோ, நாட்டைவிட்டுக் காட்டுக்குச் சென்றுவிட்டான்: உனது தாயின் வரத்தினால், தந்தை கொடுக்க, இந்தப் பேரரசு உன் உரிமைக்கு வந்திருக்கிறது அதனால், நீயே இந்த அரசை ஆளவேண்டும். இது எங்களது விருப்பத்திற்கு உரியதாகும்.'

என்று, கோசலப் பேரரசு பரதனுக்கே உரிமை உடையது என்பதையும், அது,தாய் தந்தையரின் ஆணைக்கு உட்பட்டது என்பதையும், இதுவே அமைச்சர்கள் முதலிய இங்குள்ளார் அனைவரின் விருப்பமுமாகும் என்பதையும் நன்கு தெளிவுபடுத்தினார் முனிவர்.

இதைக் கேட்ட பரதன் நிலை, எப்படியிருந்தது என்பதை அடுத்த கவிதை காட்டுகின்றது.

வசிட்ட மாமுனி சொன்ன இந்தச் சொல் சாதாரண மனிதனுக்கு எவ்வளவு இன்பத்தை தந்து கொண்டிருக்குமோ அதற்கு மாறாக அவ்வளவு துன்பத்தைக் கொடுத்தது பரதனுக்கு.

ஒரு சொல் இனிமையாவதும், இன்னாமை யாவதும் அச்சொல்லைப் கேட்பவரது உள்ளத்தின் இயல்பைப் பொறுத்ததாகும்.

எல்லோருக்கும் இனிமையாக இருக்கும் வசிட்டர் கூறிய சொல் பரதனுக்கு இன்னாமையாகத்தான் இருந்தது,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரச பதவியை ஏற்கவேண்டும் என்ற சொல் அவாவுடையோர்க்கு (ஆசை உடையவர்) இனிமையைத் தரும் பரதனுக்கு அது இன்னாமையைத் தந்தது என்றால் அவனது, அவாவின்மையை - வேண்டாமையை வெளிப் படுத்துவதாகும்.

'தஞ்சம் இவ்உலகம், நீதாங்குவாய்' என,
செஞ்சவே முனிவரன் செப்பக் கேட்டலும்,
'நஞ்சினை நுகர்' என, நடுங்கு வாரினும்
அஞ்சினன் அயர்ந்தனன் - அருவிக்கண்ணினான்.
(கம்-2255)

இந்த விஷத்தை நீ குடித்துதான் ஆகவேண்டும் என்று ஒருவர் ஆணை இட்டால். அதனைக் கேட்டவன் எவ்வளவு நடுங்குவான்? ஏன் குடித்தால் உயிர் போய் விடுமே?

உடலினின்றும் உயிரைப் போக்கக்கூடிய நஞ்சினை ஒருவன் ஏற்பானா? ஏற்பான் என்று எதிர்பார்க்க முடியுமா!

பரதனிடம் அப்படி எதிர்பார்த்தார்கள் அங்குள்ள வர்கள். 'அரச பதவியை ஏற்கவேண்டும்' என்ற சொல், 'நஞ்சினை நுகர்' என்ற பொருளைத் தாங்கியதாகத்தான் பரதன் உள்ளம் உணர்ந்தது.

அரச பதவியை ஏற்றல், விஷத்தைக் குடித்தலுக்குச் சமம் பரதன் உள்ளத்தில், அவாவின்மை - வேண்டாமை யாகிய பெருநீதித் தனியாற்றால் நிரப்பப்பெற்ற உள்ளம், அவாவுக்குரிய அரச பதவியை வெறுக்கத்தானே செய்யும்!

உள்ளத்திற்கு இயைந்த சொல் வந்தால், அது காதுக்கு இனிமையாக இருக்கும். இயையாதது வந்தால் இன்னாத தாகத்தான் இருக்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதப் போர்க்களத்தில் பதினேழாம் நாள் போர், போர் கடுமையாக நடந்து கொண்டிருந்த சமயத்தில். கர்ணன், ஆவி அகத்ததோ புறத்ததோ என்று தடுமாறும் நிலைக்கு உள்ளாகி இருந்தான், அப்போது. அவனிடம் ஏழைப் பிராமணன் ஒருவன் வந்தான். வந்தவன், 'ஈண்டிய வறுமைப் பெருந்துயர் உழந்தேன்: இயைந்தது ஒன்று இக் கணத்து அளிப்பாய்' என்று கேட்டான்,

'கொடு' என்று கேட்டசொல்லை, 'இரு செவிக்கு அமுது' எனக்கேட்டான் கர்ணன் என்று பாரதம் பேசுகின்றது,

'இல்லை என்று இரப்போர்க்கு இல்லை' என்று உரையாத இதயம் பெற்றவன் கர்ணன். அதனால் அந்த இதயத்துக்கு, 'இயைந்தது ஒன்று அளிப்பாய்' என்ற சொல் அமுதமாக இனித்தது.

பரதன் உள்ளம், வேண்டாமை என்ற பெருநீதியால் நிரப்பப்பட்டிருப்பதால், 'வேண்டும்' என்ற அரசநிதியை ஏற்கவேண்டும்; என்றசொல், நஞ்சாக நின்று கசப்பாகியது அந்தத்தூய இதயத்துக்கு

'நஞ்சினை நுகர்' என நடுங்குவாரினும்
அஞ்சினன் அயர்ந்தனன்'

என்ற கவிதைத்தொடர் பரதனது அவாவின்மை என்ற அப்பழுக்கற்ற தூய உள்ளத்தை வெளிப்படுத்துகின்றது.

பரதனும் அமைச்சரும் :

அமைச்சர்கள், முனிவர் விருப்பத்திற்கு இணங்க

தஞ்சம் பாதுகாப்பு: செஞ்சவே-வெளிப்படையாக: செப்ப-சொல்ல! நஞ்சு-விஷம்: அயர்ந்தனன்-சோர்ந்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தான் அரச பதவியை ஏற்க இயலாத, தன் நிலையை விளக்கிப் பேசிக்கொண்டுவந்த பரதன், இறுதியாக,

“நல்நெறி என்னினும், நான், இந்நானில
மன்உயிர்ப் பொறைசுமந்து இருந்து வாழ்கிலேன்;
அன்னவன் தனைக்கொணர்ந்து, அலங்கல் மாமுடி
தொல்நெறி முறைமையின் சூட்டிக் காண்டிரால்,”
(கம்-2261)

என்று உறுதியாக உரைத்தான்.

‘அமைச்சர் பெருமக்களே! நான் அரசை ஏற்றுக் கொள்வது, நீதி தவறாத நெறியாகும் என்று நீங்கள் நிருபித்துக் காட்டுகிறீர்கள். இருந்தாலும், நான் கொண்ட பெருநீதி, அதனை வேண்டாம் என்று தள்ளுகிறது (விலக்குகிறது) அதனால், இந்த மண்ணுலகத்து உயிர்களைப் பாதுகாத்தலாகிய அரசாட்சியைப் பாரமாகச் சுமந்து கொண்டு இங்கு இருந்து வாழமாட்டேன்.’ பிறகு, என்ன செய்வேன் ? தெரியுமா ?

‘அந்த இராமபிரானைக் காட்டினின்றும் அழைத்து வந்து, கோசலப் பேரரசின் முடியை, தொன்று தொட்டு வந்த நீதிமுறைப்படி அவனுக்குச் சூட்டுவேன். இதனை நீங்கள் காணலாம். இதுதான் எனது உறுதியான எண்ணம்.’

என்று தனது கருத்தைத் தெளிவுபடுத்தினான்.

இதனைச் செவியுறக் கேட்ட அமைச்சர்கள், பரதனது அவாவின்மையைக் கண்டு வியந்துபோனார்கள்: ‘அரச குலத்தில் தோன்றிய ஒருவன்-அவா-ஆசையாலேயே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழவேண்டியவன், துறவிகளுக்கே உரிய அவாவின்மையை வேண்டாமையைப் பெற்றிருக்கின்றானே' என்ற ஆச்சரியத்தில் மூழ்கியவராய், பரதனை வாழ்த்தத் தொடங்கினர் அமைச்சர்கள்.

"ஆன்றபேர் அரசனும் இருப்ப, ஐயனும்
ஏன்றனன், மணிமுடி ஏந்த; ஏந்தல் நீ,
வான்தொடர் திருவினை மறுத்தி: மன் இளந்
தோன்றல்கள் யார்உளர்? நின்னின் தோன்றினார்?

"ஆழியை உருட்டியும், அறங்கள் போற்றியும்,
ஏவள்வியை இயற்றியும் வளர்க்க வேண்டுமோ?
ஏழினோடு ஏழ்ஏனும் உலகம் எஞ்சினும்.
வாழிய நின்புகழ்!' என்று வாழ்த்தினார்!

(கம்-2263, 64)

என்பன அமைச்சர்களின், புகழுரை கலந்த வாழ்த்துகள்.

இராமபிரானோடு ஒத்திட்டுப்பார்த்து. பரதனது புகழ் விஞ்சி நிற்பதைக் காணுகின்றார்கள் அமைச்சர்கள்.

'மூத்தவன் இருக்க இளையவன் முடிசூடுதல் முறையன்று: நீதியன்று! நேர்மைஅன்று: நெறி அன்று, இந்த முறையற்ற செயலை நீங்கள் நல்நெறி என்று கூறினாலும் என் பெருநீதி மனம் அதனை ஏற்காது' என்று பரதன் கூறிய கருத்தை மனத்தில் ஏற்றுக்கொண்ட அமைச்சர்கள், அவனை நோக்கிப் பேசுகின்றார்கள்.

ஆன்ற-பெருமைமிக்க: அரசன்-தசரதன்: ஐயன்-இராமன்: ஏன்றனன்-இசைந்தான்: ஏந்தல்-பெருமைமிக்கவன்: திரு-அரச செல்வம்! ஆழி-அரச ஆணைச்சக்கரம்: வேள்வி-யாகம்: எஞ்சினும்-அழிந்திட்டாலும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'புகழ் நிறைந்த பேரரசனாகிய தசரதன் ஆட்சியில் இருக்கும்போதே, இராமன் முடிசூடுதற்கு இசைந்து நின்றான். நீயோ, தந்தையும், தனயனும் இல்லாத இந்த சமயத்திலும், வான் உயர் செல்வமாகிய கோசலப் பேரரசை, வேண்டாம் என்று மறுத்துவிட்டாய். இந்தக் குலத்தில் தோன்றியவர்களில் உன்னைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் யாரும் இல்லை,'

'புகழை வளர்க்க விரும்புவர்கள், ஆணைச் சக்கரத்தை உருட்டுவார்கள்: அல்லது தருமங்களைப் பாதுகாக்கும் செயல்களைச் செய்வார்கள்: அல்லது யாகங்களைச் செய்வார்கள். இவைகள் எதையும் செய்யாமலேயே, உன் புகழை வளர்த்துவிட்டாய் நீ.'

'அதனால், பதினான்கு உலகங்கள் அழிந்தாலும், நீ கடைப்பிடித்த பெருநீதியால் வந்த புகழ் அழியாமல் வாழ்க' என்று உளம்களிக்க வாழ்த்தினார்கள் அமைச்சர்கள்.

'அரசனாய் முயன்று பெறும் புகழைக் காட்டிலும், அரசைத்துறந்து பெற்ற புகழ் பெரியது. ஆகவே, இந்தப் புகழ், ஆதாரமாகிய உலகம் அழிந்தாலும், ஆதேயமாகிய இது அழியாது வேண்டாமையாகிய விழுச்செல்வத்திற்கு ஈடு இணை எதுவும் இல்லை' என்பது அமைச்சர்கள் கருத்து.

பரதனும் குகனும்:

தொல் நெறி முறையின், இராமபிரானுக்கு முடிசூட்டுதலையே நோக்கமாகக் கொண்டு, அண்ணனைக் காட்டினின்றும் நாட்டுக்கு அழைத்துவர, படையுடன் புறப்பட்ட பரதன் கங்கைக் கரையில் வந்து தங்கினான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வடகரையில் படையுடன் தங்கியிருந்த பரதனை. தென்கரையில் நின்ற குகன், சந்தேகக் கண் கொண்டு பார்த்தான்.

சந்தேகப் பார்வை, அவனது உள்ளத்தில், பரதன்மேல் அளவற்ற சினத்தைப் பெருக்கிவிட்டது. கோப உணர்வால், குகன் கொட்டியகொடுஞ் சொற்கள் ஏராளம். பரதனது உள்ளத்தை உணராதமுன்பு உதிர்த்த சொற்கள் இவைகள்.

உண்மை உணர்ந்த பிறகு, தனது அறியாமையால், 'எற்றென்று இரங்கும் சொற்களைப் பேசிவிட்டோமே' என்று குகன் வருந்திய வருத்தமும் ஆழமானதாகும்.

அந்த வருத்தத்தின் ஆழம், கங்கையின் ஆழத்தையும் வென்றது என்பதை, பரதனிடம் குகன் நடந்துகொண்ட செயலும் பேசிய பேச்சும் காட்டும்.

பரதனை அணுகிய குகன், 'எழுவினும் உயர்ந்த தோளாய்! எய்தியது என்னை?' என்று கேட்டான்.

"முழுது உலகு அளித்த தந்தை முந்தையோர்
முறையினின்றும்,
வழுவினன்: அதனை நீக்க மன்னனைக்
கொணர்வான்."

என்று, தான் வந்த காரணத்தைத் தெரிவித்தான் பரதன்.

'என் தந்தை தசரதன் உலகம் முழுவதையும் முறையாகவைத்து அரசாண்டு பாதுகாத்தவன்தான். ஆனாலும், மூத்தவனுக்கு அரசைக் கொடுக்கவேண்டிய முறையினின்றும் தவறிவிட்டான். தந்தைசெய்த தவற்றை நீக்கி மறுபடியும் முறையை நிலைநாட்ட வேண்டியது மைந்தன் கடமை அல்லவா? அந்தக் கடமையினின்றும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மைந்தனும் வழுவி-தவறிவிடக் கூடாதல்லவா? முறையின் குறை நிறைவாக வேண்டுமானால், மூத்தவன் அரசாளவேண்டும். மூத்தவனாகிய என் அண்ணன் இராமபிரானை அழைத்துக்கொண்டு செல்வதற்காக வந்தேன்' என்பது பரதன்தந்த பதில்உரை.

பகைமை உணர்வோடுதான், பரதன் வந்துள்ளான் என்று அவனைத் தவறாக முன்பு மதித்த குகன், இப்போது அவன் உரைத்த பண்பு நிறைந்த பதில்உரையைக் கேட்டுப் பதறிப்போனான். பதறிய குகன் என்னசெய்தான்? என்ன சொன்னான்?

"கேட்டனன் கிராதர் வேந்தன்:
கிளர்ந்து எழும் உயிர்ப்பன் ஆகி,
மீட்டும் மண் அதனில் வீழ்ந்தான்;
விம்மினன் உவகை வீங்க;
தீட்ட அரும் மேனி மைந்தன்
சேவடிக் கமலப் பூவில்
பூட்டிய கையன். பொய்இல்
உள்ளத்தன் புகல லுற்றான். (கம்-2336)

பரதனது பண்பிற் கிளர்ந்தெழுந்த பதில் உரையைக் கேட்ட குகனும் அரசன்தான்: வேடுவர்களுக்கு, அரசனாக இருந்தும். துறவுக் கோலத்தவனான பரதனது பாதங்களில், கீழே விழுந்து, தனது எட்டு உறுப்புக்களும் நிலத்தைத் தொடுமாறு வணங்கினான்: வீறு பெற்றெழுந்துவந்த பெருமூச்சினன் ஆனான்: மகிழ்ச்சியினால் உடல் வீக்கம் உற்றான்: பரதனது திருவடிகளைத் தழுவிக்கொண்ட கையினன் ஆனான்! பொய்கலவாத உள்ளத்தினன் ஆனான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'பொய் இல் உள்ளத்தவனாகிய குகன், பரதனது சேவடிக் கமலப்பூவில், பூட்டிய கையினனாகியிருந்தான்'- என்ற குகன் செய்தசெயல், பரதனை எவ்வளவு உயர்வாக அவன் மதித்துள்ளான் என்பதைக் காட்டுகின்றது.

தான் மதித்திருந்த, தன் உள்ளத்துணர்வைக் குகன் சொல்லால் காட்டுகின்றான்.

'தாய் உரை கொண்டு தாதை உதவிய
தரணி தன்னை,
தீவினை என்ன நீத்து, சிந்தனை
முகத்தில் தேக்கி,
போயினை என்ற போழ்து,
புகழினோய்! தன்மை கண்டால்,
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ
தெரியின் அம்மா!' (கம்-2337)

என்பது, பொய்யில் உள்ளத்து உதித்தெழுந்த குகனது புகழுரை.

பரதனது புகழை அளப்பதற்கு, தனக்குத் தெய்வமாக விளங்கும் இராமபிரானையே அளவு கருவியாக்கிக் கொண்டான் குகன்.

'புகழ் நிரம்பிய பெரியோனே! உனது உள்ளத்தின் இயல்பை ஆராய்ந்து பார்த்தால், ஆயிரம் இராமர்கள் சேர்ந்தாலும் உனக்கு ஒப்பு (கேழ்-ஒப்பு) ஆவார்களா? ஆகமாட்டார்கள். ஏன் ?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'உனக்கு வந்த கோசலப் பேரரசு, உனது தாயின் எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக, உன் தந்தை உனக்குக் கொடுத்தது. இப்படி அரசன் ஆணைப்படியும் உரிமை-யோடும் தானாகவே, உனக்குக் கிடைத்த பேரரசை, நீ 'வேண்டாம்' என்று வெறுத்துவிட்டாயே! 'அந்த அரசின் வருகை. நான் செய்த தீவினைப் பயன்' என்று கருதிய நீ, இந்த அரசுக்கு உரியவனிடம் இதனைச் சேர்ப்பித்து அரசு முறையை எவ்வாறு நிலை நாட்டுவது என்ற சிந்தனையை முகத்தில் தேக்கி வைத்துக்கொண்டு வந்துள்ளாயே !'

'வேண்டாமை என்ற பண்பையே உனக்குரிய விழுச்செல்வமாகப் பெற்றிருக்கின்ற உன்னை எப்படிப் புகழ்வது ?

என்று குகன் பரதனைப் புகழ்ந்து புகழ்ந்து மகிழ்ந்தான்.

பரதனும் பரத்துவாசனும் :

அவாவை அறுத்துப் பெருந்துறவியாக விளங்குபவன் பரத்துவாசன்: 'பரத்தின் நீங்கும் பரத்துவன்' என்றும், வரத்தின் மிக்கு உயர்மாதவன்' என்றும் கம்பரால் அறிமுகம் செய்யப்படுபவன்,

இந்த மாமுனிவனாலும், பாராட்டிப் புகழப் படுகின்றான் பரதன்.

தனது ஆசிரமத்தை அடைந்து, தன்னை வணங்கிய பரதனைப் பார்த்து, பரத்துவாசன்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"எடுத்த மாமுடி சூடி நின்பால் இயைந்து
அடுத்த பேரரசு ஆண்டிலை; ஐய! நீ
முடித்த வார்சடைக் கற்றையை, மூசுதூசு
உடுத்து நண்ணுதற்கு உற்றுளது யாது?"
(கம்-2381)

என்று கேட்டான்.

'உனக்குத்தானாக வந்துசேர்ந்த அரசை ஆள்வதற்கு ஏற்ற முடியை (கிரீடித்தை) உன் தலை தரித்திருக்க வேண்டும். அதற்குமாறாக, துறவிக்குரிய சடைக் கற்றையைப் பெற்றுக்கொண்டுள்ளது உன்தலை, இடையோ அழுக்கு நிரம்பிய மரவுரியை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்தக் கோலத்தோடு வரக்காரணம் யாது?' என்பது பரத்துவாச மாமுனிவன் கேள்வி.

'முறையின் நீங்கிவந்த முதுநிலம் கொள்கிலேன் : முறைமையை நிலை நாட்டவேண்டியது இறைவனாகிய இராமபிரானுடையது. அவன், முறைமைக்குரிய அரசை ஏற்கவில்லை என்றால், எல்லாக் காலத்தும் காட்டில் உறைவதற்காகவே, இந்தத் துறவுக்கோலம் பூண்டேன்' என்று பரதன், தான் கொண்ட கொள்கைக் கோலத்தின் காரணத்தை விளக்கிக்காட்டினான்.

பரதனது பண்புப்பதில், பரத்துவாசன் உள்ளிட்ட அந்த ஆசிரமத்துத் துறவிகளின் உள்ளத்தைக் குளிர்வித்தது: அரைத்த சந்தனத்தை உடலில் அப்பியது போன்றது.

'நாம் ஒன்றும் இல்லாமல் துறவியானோம்: பரதனோ, அனைத்தும் இருந்தும் 'வேண்டாம்' என வெறுத்து வந்தானே!' என்பது துறவிகளின் கருத்து.

எடுத்த-மேலாக ஓங்கிய: வார்-நீண்ட: தூசுமூசு-அழுக்கு மொய்த்த: நண்ணுதல் - அடைதல்:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரதனும் இராமனும் :

சித்திர கூடத்தில் தங்கியிருந்த இராமபிரானைச் சென்று சேர்ந்தான் பரதன்.

சேர்ந்த பரதனுக்கும் இருந்த இராமனுக்கும் நடந்த உரையாடல், அவரவர்கள் கொண்ட கொள்கையினின்றும் சிறிதும் விட்டுக்கொடுப்பவர்களாய் இல்லை என்பதைக் காட்டுகிறது.

முதலில், இராமபிரான் திருவாய்தான், கேள்வியாகச் சொற்களை மலர்வித்தது.

"வரதன் துஞ்சினான்; வையம் ஆணையால்,
சரதம் நின்னதே: மகுடம் தாங்கலாய்,
விரத வேடம், நீ என்கொல் வேண்டுவான்?
பரத! கூறு" (கம்-2470)

என்பது, அண்ணன், தம்பியைக் கேட்டகேள்வி.

'தசரதன் யாவர்க்கும் வேண்டியதை, வேண்டியபடி கொடுப்பவன்: அவனோ இறந்துவிட்டான்: அவனுடைய கட்டளைப்படி கோசலநாடு உண்மையாக உன்னுடைய தாகும்: அதற்குரிய திருமுடியை நீ அணிந்து கொண்டிருக்க வேண்டும்! அந்த அரச கோலம் பூணாமல், அதற்கு மாறாக, இந்தத் துறவுக் கோலத்தை நீ எதற்காக விரும்பினாய்? பரதனே! இதற்கு உன் பதில் என்ன"

இது இராமன் கேட்ட கேள்வியின் விளக்கம்.

சரதம்-உண்மை: வரதன்-வேண்டியதைக் கொடுப்பவன் தசரதன்: துஞ்சினான்-இறந்தான்: வையம்-உலகம்: மகுடம்-முடி(கிரீடம்) விரத வேடம்-தவக்கோலம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'தந்தையின் ஆணைப்படி பரதன் அரசை ஏற்றுக் கொள்வதுதான் நீதி' என்பது இராமபிரான் கருத்து.

வேண்டாமை என்னும் பெருநீதியைத் தன் கொள்கையாகக் கொண்ட பரதன், தன் செயலுக்குரிய காரணத்தை விளக்கிக் கூறியபின் இறுதியாக, செய்ய வேண்டியதைத் தெளிவாக்கினான்.

"உந்தை தீமையும், உலகு உறாதநோய்
தந்த தீவினைத் தாய்செய் தீமையும்;
எந்தை! நீங்க, மீண்டும் அரசுசெய்க'எனா,
சிந்தை யாவதும் தெரியக் கூறினான்."

(கம் 2477)

'தாய் தந்தையர் எண்ணப்படி அரசு என்னுடையது என்பது தவறு. அரசை என்னுடையது என்று ஆக்குவதன் மூலம் உனது தந்தை தசரதன் பெருந்தீமை செய்து விட்டான்: உலகம் தாங்காத துன்பத்தைத்தந்த தீவினையை உடைய என் தாயும் பெரிய தீமையைச் செய்துவிட்டாள்: இருவர் செய்த தீமையும் நீங்கவேண்டுமென்றால், எமது தலைவனே! நீயே வந்து அரசாட்சியை ஏற்றுக்கொள்ள வேண்டும்.'

என்று, தன் சிந்தனை முழுவதையும் தெளிவாக இராமபிரான் தெரிந்துகொள்ளுமாறு கூறினான் பரதன்.

உந்தை-உன் தந்தை : எந்தை-என் தந்தை : உறாத-தாங்காத.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'தாரம் அல்லள் துறந்தேன்: ஆகான் அவனும் உரிமைக்கு,' என்று தசரதன் உறவைத் துறந்தானாதலால், தசரதனை உன் தந்தை என்றான் பரதன். ஆதலால் 'நீயே எனக்குத் தந்தை' என்ற பொருளில் 'எந்தை' என்று அழைத்தான் பரதன்.

பரதனது எண்ணத்தை மாற்ற விரும்பிய இராமபிரான், பல காரணங்களைக் காட்டிக் கூறியபிறகு, இறுதியாக,

"தாய்வரம் கொள, தந்தை ஏவலால்,
மேய நம்குலத் தருமம் மேவினேன்;
நீ வரம் கொளத் தவிர்தல் நீர்மையோ?-
ஆய்வு அரும்புலத்து அறிவு மேவினாய்?
(கம்-2482)

என்று, மனமாற்றத்துக்குரிய காரணத்தை எடுத்துப் பேசினான்.

'ஆராய்வதற்கு அருமையான வேதங்களில் கூறப்பட்ட அறிவு நிரம்பப் பெற்றிருக்கிறாய் நீ. நான் சொல்வதை, யோசித்துப்பார். தாயாரான கைகேசி வரமாகப் பெற்றுக்கொள்ள, தந்தையாரான தசரதனது கட்டளைப்படி நம் குலத்தின் அறத்தை ஏற்றுக் காட்டுக்கு வந்தேன்.

தாய் தந்தையர் ஆணையை ஏற்கும் அறத்தை, நீ கேட்டுக்கொள்வதால் விட்டுவிடுவது நீங்குவது தக்கது ஆகுமா? ஆகாது,

புலம்-வேதம்; மேவினேன்-ஏற்றுக்கொண்டேன்: தவிர்தல்-நீங்குதல்: நீர்மையோ-தக்கதாகுமோ.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாய் தந்தையர் ஆணைப்படி நாடு உனக்கு: காடு உனக்கு. நீ நாட்டிலும், நான் காட்டிலும் வாழ்ந்தால் தான் நம் பெற்றோர்களது விருப்பத்தை நிறைவு செய்தவர்களாவோம்.

சொல்வதை ஏற்றுக்கொள்க. தருமம் மேவிய (அறத்தை ஏற்றுக்கொண்ட) என்னைத் தடுக்காதே' என்பது இராமபிரான் கூறிய மாற்றுரை.

தனது மாற்றுரையை பரதன் ஏற்றுக்கொள்ள இசையாததை, அவனுடைய முகக் குறிப்பால் உணர்ந்து கொண்ட இராமபிரான், இசைவிக்க என்ன சொல்லலாம் என்று சிந்தித்தான்,

பரதன் முறைமையில் நிற்கின்றான்: இராமபிரான் அறத்தில் நிற்கின்றான் 'அரசு, மூத்தவனுக்குத்தான் உரியது: அதை ஏற்பதுதான் முறையானது! இந்த முறையைத் தவறச் செய்தது தாய் தந்தையர்கள் செய்த தீமை' என்பது பரதனது உறுதியான கொள்கை.

'தாய் தந்தையரின் ஆணைவழி நடப்பதுதான் தனக்கு அறம்' என்ற கொள்கைப் பிடிப்புடையவன் இராமன்.

போராட்டம்:

முறைமைக்கும் அறத்திற்கும் போராட்டம் சித்திர கூடத்தில் நன்மைக்கும் நன்மைக்கும் நடக்கும் போராட்டமாக உள்ளது. இது அதிசயப் போராட்டம். இதற்குக் காரணம் இரண்டிடத்திலும் 'வேண்டாமை' என்ற தூய மனப்பான்மையே உள்ளது.

நன்மைக்கும் தீமைக்கும் போராட்டம் என்றால், நன்மை வெல்வதையும் தீமை தோற்பதையும் எல்லோரும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எதிர்பார்க்கலாம். ஒரு வேளை, தீமையே வென்றாலும் அது கதை நீளுவதற்கு உதவும்.

கதை மேற்கொண்டு நடப்பதற்கு, இரண்டு நன்மையில் ஏதாவது ஒன்று தோற்க வேண்டும்: ஒன்று வெல்லவேண்டும்.

கதையின் வளர்ச்சிக்கு - காப்பியத்தின் நீட்சிக்கு, எந்த நன்மை, தோல்வியைத் தழுவ வேண்டும்? எது வெற்றி பெறவேண்டும்' என்பதைக் கவிச்சக்கரவர்த்தி சிந்தித்தார்.

'அறம் தலை நிறுத்த வந்தவன் இராமபிரான். உலகத்தில் பேரறம் நிற்கவேண்டும் என்றால், இங்கும் அறம்தான் வெல்லவேண்டும்: முறை என்பதும், நன்மையே யானாலும், உலக முழுமையின் அறத்திற்காக' அது விட்டுக் கொடுத்தே ஆகவேண்டும்' என்ற தன் சிந்தனையின் முடிவை, காப்பியத் தலைவன் இராமபிரான் மூலம் நிறைவேற்றிக்கொள்ள எண்ணினார் கம்பர் பெருமான்.

'அரசு உரிமை இராமபிரானுக்குத்தான்: அதுதான் முறை' என்ற பரதனது எண்ணத்தை மாற்ற இராமபிரான். தந்தை தந்த 'கன்யாசுல்க' வாக்குறுதியை நினைவு படுத்துகின்றான்.

"வரன்நில் உந்தைசொல் மரபினால், உடைத்
தரணி நின்னதுஎன்று இயைந்த தன்மையால்,
உரனின் நீ பிறந்து உரிமை ஆதலால்,
அரசு நின்னதே ஆள்க" என்னவே. (கம்-2485)

வரன்நில்- வரத்திலே நிலைத்து நின்ற: மரபு-முறை: தரணி-நிலம் (கோசலம்) உரன்-வலிமை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோசல அரசின் உரிமையும், முறைமையும் பரதனுடையதே என்பதை நிரூபித்துவிட்டால், இராமபிரானது அறம் வென்றுவிடும்.

இந்த நிரூபணத்திற்கு உதவ, கன்யாசுல்கத்தைப் பயன்படுத்துகின்றான் இராமபிரான்.

'தம்பி! நீ கைகேசியின் வயிற்றினின்றும் பிறப்பதற்கு முன்பே, கோசல நாட்டை ஆளும் முறைமை உனக்கு வந்துவிட்டது. உன் தந்தை தசரதன் உன் பாட்டனுக்குக் கொடுத்த கன்யாசுல்கமாகிய வரம் என்பது ஒன்று உண்டு. அந்த வரத்தில் தவறாது நிலைத்து நின்ற தந்தை சொன்ன முறைப்படி, அவனுடையதாக இருந்த கோசலப் பேரரசு உன்னுடையது என்று பொருத்தமாக அமைந்துவிட்டது. அதனாலும், கைகேசியின் வயிற்றில் பிறந்து, ஆளுதற்கு ஏற்ற வலிமையும் பெற்றிருப்பதனால், நீ உரிமையும் பெற்றுள்ளாய். அதனாலும் அரசு உன்னுடையதே, நீயே சென்று நாட்டை ஆட்சி செய்வாய்.' என்று தம்பிக்குக் கிடைத்திருந்த முறைமையையும் உரிமையையும் தெளிவுபடுத்திக் கூறினான் இராமபிரான்.

கன்யாசுல்கத்தை, காப்பியத்தில் எங்கும் வெளிப்படையாகக் காட்டாத கவிச்சக்கரவர்த்தி, அறத்தின் வெற்றிக்காக காப்பியத் தலைவன் மூலமாக இங்கு வெளிப்படையாக்கி விட்டார்.

இந்தக் கன்யாசுல்கவரம், இராமன் பிறப்பிற்கு முன்பே தசரதனால் கொடுக்கப்பட்டது.

இது, இராமனுக்குத் தெரிந்தது எப்படி? வரம் கொடுத்தது கேகய மன்னனுக்கும் அவன் மகள் கைகேசிக்கு மட்டுமே தெரியும்:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கைகேசிக்கு மகனாகப் பிறந்திருந்தும் பரதனுக்குத் தெரியவில்லை இந்தப் பழைய செய்தி. கைகேசியின் அந்தப்புரத்தில் வளர்ந்தவன் இராமன். இராமனை வளர்த்த கைகேசியினால் சொல்லப்பட்டிருக்க வேண்டும் இந்தச் செய்தி.

தன்னை வளர்த்த கைகேசியினிடமிருந்து தெரிந்து கொண்ட இந்தப் பழைய செய்தியைச் சொல்லவேண்டிய சமயத்தில் சொல்லி, தான் அறவாழ்க்கையைத் தொடர்வதற்கு இதனைப் பயன்படுத்திக் கொள்கின்றான் இராமபிரான்.

யாரைத் தெய்வமாகக் கருதுகின்றானோ, அந்த இராமபிரானே காரண காரியத்தோடு எடுத்துக்கூறியும், அவாவின்மை-வேண்டாமையில் ஊன்றிய பரதனது உள்ளம் அதனை ஏற்கவில்லை.

அண்ணன் எதனைத் தன் அறக்கொள்கைக்கு ஆதாரமாகக் கொண்டானோ, அதனையே, தன் வேண்டாமைக் கொள்கைக்கு வேண்டியதாக்கிக் கொண்டான் தம்பி.

“முன்னர் வந்து உதித்து உலகம் மூன்றினும்
நின்னை ஒப்புஇலா நீ பிறந்தபார்
என்னது ஆகில், யான்இன்று தந்தனென்;
மன்ன போந்து நீ மகுடம் சூடு” (கம்-2487)

என்று, இராமனையே முடிசூட்டிக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டான் பரதன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'எனக்கு முன்பாகவே வந்து பிறந்து, பிறப்புரிமையாக நீ பெற்ற இந்த அரசு, உன் கூற்றுப்படி, எனக்கு உரிமையானால், நான் இன்று அதனை உனக்குத் தந்தேன் மன்னவனே! நீ நாட்டிற்கு வந்து முடிசூடிக்கொள். இதுதான் நாட்டுமக்கள் அனைவருடைய விருப்பமும் ஆகும்.' என்று இராமபிரானுடைய திருவடிகளைப் பற்றிக்கொண்டு வேண்டுகோள் விடுத்தான் பரதன்.

எப்படியாயினும், நாட்டை இராமனுக்கு உரிமையாக்கிவிடவேண்டும் என்பது பரதனது விருப்பம்.

'தம்பியாகிய நீ தந்து, அண்ணனாகிய நான் பெற்றுக்கொள்வது முறையல்ல' தந்தையின் ஆணைப்படி, பதினான்கு ஆண்டுகள் நான் காட்டில் உறைவதும், நீ நாட்டை ஆள்வதும் தான் அவரது வாய்மைக் கொள்கையை நாம் காப்பது ஆகும்.' என்று கூறிய இராமன், மேலும்,

"வாய்மை என்னும் ஈதுஅன்றி, வையகம்,
தூய்மை என்றும்ஒன்று உண்மை சொல்லுமோ ?
தீமைதான், அதில் தீர்தல் அன்றியே.
ஆய் மெய்யாக: வேறு அறையல் ஆவதே ?
(கம்-2489)

என்று சொல்லி, உண்மையைத் தெளிவாக்கினான்.

'இந்த உலகம், வாய்மை என்ற இந்த நற்குணத்தையே, மனத்தின் தூய்மையாகக் கூறும். இதுவன்றி வேறு எந்தக் குணத்தையாவது மனத் தூய்மைக்கு உரியதாகக் கூறுமா உலகம் ?'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்த வாய்மையினின்றும் தவறுதல்தான் தீமையாகும். அதுவல்லாமல் வேறு சொல்லவும் முடியுமா? இதனை உண்மையாக நீ ஆராய்ந்து பார்?

என்பது, இராமபிரான் தந்த வாய்மை விளக்க உரை.

"புறந்தூய்மை நீரான்அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்."

"தூஉய்மை என்பது அவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்."

என்ற இரண்டு திருக்குறள்களின் கருத்துக்களையும் ஒன்றாக இணைத்துவைத்து. காப்பியத் தலைவன் மூலமாக 'வேண்டாமை' என்னும் விழுச் செல்வத்தின் முன் நிறுத்திக் காட்டுகின்றார் கவிச்சக்கரவர்த்தி.

பதினான்கு ஆண்டுகள் என்பதை, இராமன் காட்டில் உறைவதற்கும், பரதன் நாட்டை ஆள்வதற்கும் எல்லைக் காலமாக்கிக் கொள்வதில் ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர் அண்ணனும் தம்பியும்.

'பதினான்கு ஆண்டுகள் கழிந்ததும், வந்து நாட்டை ஏற்றுக் கொள்ளவேண்டும். அதுவரை, நாட்டை ஆளுவதற்குத் தங்களுடைய பாதுகையைத் தருதல் வேண்டும்! அதன் பிரதிநிதியாகத்தான் நான் இருப்பேன்: பிரதிநிதியாக நான் இருக்கும் காலமும் அந்தப் பதினான்கு ஆண்டுகள் வரைதான்: சொன்னபடி வர்வில்லை என்றால் நான் நெருப்பை நெருங்கி எனது உயிரை மாய்ப்பேன்: இது உண்மை' என்று இறுதியாக, தன் கருத்தை உறுதியாக்-கினான் பரதன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவன் வேண்டுகோளின்படி அடித்தலம் இரண்டை-யும் இராமபிரான் கொடுத்தான்.

"அடித்தலம் இரண்டையும், அழுத கண்ணினான்,
'முடித்தலம்இவை' என, முறையின் சூடினான்.
படித்தலத்து இறைஞ்சினன், பரதன் போயினான்-
பொடித்தலம் இலங்குறு பொலம்கொள் மேனியான்.
(கம்-2510)

பாதுகைகள் இரண்டையும், கோசல நாட்டு அரச முடி (கிரீடம்) என்று மதித்து, அதனைத் தலையில் முறையாக வைத்துக்கொண்ட பரதன், நிலத்தில் விழுந்து வணங்கி விடைபெற்றான். அவன் அழுத கண்ணினனாகத் தான் இருந்தான்: பூமியின் புழுதி படிந்ததாலேயே, அவன் அழகிய உடலினன் ஆனான்.

"நந்தியம் பதியிடை. நாதன் பாதுகம்-
செந்தனிக் கோல்முறை செலுத்த, சிந்தையான்
இந்தியங்களை அவித்து இருத்தல் மேயினான்,
அந்தியும் பகலும் நீர் அறாத கண்ணினான்'
(கம்-2514)

அடித்தலம்-(திருவடி நிற்கும் இடம்): பாதுகை
படித்தலம்-நிலம் (தரை): இறைஞ்சினான்-வணங்கினான்:
பொடித்தலம்-புழுதி: இலங்குதல்-விளங்குதல்;
பொலம்-அழகு: மேனி-உடல்.
நந்தியம்பதி-நந்திக் கிராமம்: நாதன்-தலைவன்: (இராமன்)
இந்தியங்கள்-ஐம்பொறிகள்! அவித்து-அடக்கி:
அந்தி-இரவு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராமபிரான் தந்த பாதுகை, சிம்மாசனத்தில் வைக்கப்பட்டது. அது செம்மையாக ஆட்சி செய்தது: அதைப் பார்த்துக்கொண்டு, அயோத்தி நகரத்துக்குப் பக்கத்தில் உள்ள நந்திக்கிராமத்தில் பரதன் தங்கினான். இரவு பகல் அழுத கண்ணினாய், ஐம்பொறிகளை அடக்கி துறவுள்ளத்தோடு காலம் கழித்துக் கொண்டிருந்தான்.

இராமபிரானது பாதுகை கோசல நாட்டுச் சிம்மாசனத்தில் ஏற்றப்பட்டதால், மரபு காக்கப்பட்டது. பரதன் அதன் பிரதிநிதியாக இருந்து அரசாட்சியைப் பார்ப்பதால் வாய்மை காக்கப்பட்டது.

தசரதன், தனது வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்ட, வாய்மையும் மரபும், 'பரதனது அவாவின்மை வேண்டாமை என்னும் உயரிய கொள்கையால்தான் உலகத்தில் காப்பாற்றப் பட்டுள்ளது.

"மன்னே ஆவான்வரும்அப் பரதன்தனையும் மகன் என்று
உன்னேன்: முனிவா! அவனும் ஆகான் உரிமைக்கு"

என்று தந்தையால் வெறுக்கப்பட்டவனாக இருந்தும், பரதன், தான் கொண்ட 'வேண்டாமை' என்னும் கொள்கையினால், தந்தையின் கொள்கையாகிய வாய்மையையும் மரபையும் உலகத்தில் நிலைக்க வைத்தானே! அவனை எப்படிப் புகழ்வது ?

அதனால், அவன் 'பன்ன அரும்பெரும் புகழ்ப் பரதன்' என்று போற்றிப் பாராட்டப் பெற்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொற்களுக்கு அப்பாற்பட்டது அவன் புகழ்: புகழைச் சொல்ல எந்த சொற்களுக்கும் ஆற்றல் இல்லை: மொழியைக் கடக்கும் பெரும் புகழான் அவன்.

இவ்வளவு பெரும் புகழும், வேண்டாமை என்ற கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்த பரதனைத்தேடி வந்துசேர்ந்து அவனோடு இணைந்துகொண்டுவிட்டது.

'வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டும், இல்லை: ஆண்டும் இல்லை, என்ற வள்ளுவத்தை, இல்லறத்தினனும் அரச குடும்பத்தினனும் ஆன பரதன் மூலம் உலகுக்கு மெய்ப்பித்துக் காட்டிவிட்டார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ :

5

நட்பு

குறள் அமைப்பு :

வாழ்க்கை. பயனுள்ளதாக அமைதற்கு, மனிதன் பின்பற்ற வேண்டியவைகளை, பொய்யில் புலவர் வள்ளுவர் அதிகாரங்களாக வகுத்துச் சொல்லியுள்ளார்.

அவைகள், கொள்ளப் படுவனவாகவும் தள்ளப் படுவனவாகவும் பிரித்துப் பேசப்பட்டுள்ளன திருக்குறளில்.

மனிதனிடம் இருக்கவேண்டிய நற்பண்பு ஒன்றை அழுத்தமாகச் சொல்வது என்றால், அதனை உடன்பாட்டு (விதிமுறை) முறையாலும் எதிர்மறை முறையாலும் கூறுவது வள்ளுவப் பெருந்தகையாரது இயல்பு

'இன்னது செய்' என்று விதித்தலும், 'இதைச் செய்யாதே' என்று எதிர்த்தலும் ஆகிய உத்தியைக் கையாண்டு, மனிதன் வையத்து வாழ்வாங்கு வாழ்வதற்கு ஏற்ற வழியைக் காட்டுவார் வள்ளுவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'சொல்லுக' என்று விதித்தும், 'சொல்லற்க' என்று எதிர்த்தும் ஒரே திருக்குறளில் அமைத்துக் காட்டுவார் செங்கோன்மை, கொடுங்கோன்மை என்றும், கல்வி, கல்லாமை என்றும் அதிகாரங்களாகப் பிரித்தும், உடன் பாடு, எதிர் மறையாகக் காட்டுவார் வள்ளுவர்.

ஒரு அதிகாரத்துக்குப் பத்துக் குறள்கள் என்று வரையறுத்துக் கொண்ட வள்ளுவர், உடன்பாட்டு (விதி) முறையில் சொல்லி முடியாத ஒன்றை வற்புறுத்துவதற்கு எதிர் மறை முறையிலும் ஒரு அதிகாரத்தை வகுத்து அதிலும் பத்துக் குறள்களை அமைத்துக் கொள்வார்.

இன்றியமையாப் பண்பு:

மனிதனிடம் சிறப்பாக அமைந்திருக்க வேண்டிய இன்றியமையாப் பண்பைப் பற்றிச் சொல்லும்போது, அந்த இரண்டு அதிகார எல்லையையும் (20 குறள்கள்) தாண்டிச் செல்வார் வள்ளுவர்.

இரண்டு அதிகார எல்லையையும் தாண்டவைத்தது 'நட்பு' என்ற சிறப்புடைப் பண்பின் முக்கியத்துவம் ஆகும். இந்தப் பண்புதான் தனி மனிதனையும் வாழவைக்கும்: சமுதாயத்தையும் வாழவைக்கும்.

இதுதான், மக்கட் சமுதாயத்தை ஒன்றாக இணைத்து வைக்கும் ஆற்றல் பெற்றது என்பதை உணர்ந்த வள்ளுவர், நட்பை மனித உள்ளங்களில் நடமாட விடுவதற்கு, ஐந்து அதிகாரங்களில்-50 குறள்களில் இதனைப் பற்றிப் பேசுகின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேறு எந்த ஒன்றற்கும் இத்தனை அதிகாரங்கள் இல்லை. ஆகவே, வள்ளுவர் இதற்கு எவ்வளவு முக்கியத் துவம் கொடுத்துள்ளார் என்பதை உணரலாம்.

நட்பு, நட்பாராய்தல், பழைமை என்ற மூன்று அதிகாரங்களில் உடன்பாட்டு முறையிலும் தீ நட்பு, கூடா நட்பு என்ற இரண்டு அதிகாரங்களில் எதிர் மறை முறையிலும் நட்பைப் பற்றிச் சொல்லியிருக்கின்றார் வள்ளுவர்.

தெய்வ மாக்கவி திருவள்ளுவரால் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள நட்பில் நாட்டம் செலுத்தினார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

நட்பின் நலத்தை நானிலத்திற்கு எடுத்துக்காட்ட விரும்பினார் புலவர் பெருமான். தம், விருப்பத்தைத் தமது காப்பியத்தில் ஒரு பாத்திரப் படைப்பின் மூலம் நிறைவு செய்துகொண்டார் அவர்.

அந்த நிறைவின் உருவம்தான் 'குகன்' என்னும் பாத்திரம்.

குகன் :

ஒருவர், ஒருவரோடு நட்புக் கொள்வதற்கு, ஏதேனும் ஒரு காரணம் இருக்கவேண்டும். அந்தக் காரணம் மூன்று வகைப்படும். 'புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி' என்ற மூன்றனுள் ஏதேனும் ஒன்று காரணமாகலாம் நட்புக்கு, இந்த மூன்றினுக்கும் அப்பாற்பட்டவனாய் விளங்குகின்றான் குகன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"புணர்ச்சி பழகுதல் வேண்மா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்" (திருக்குறள்-785)

'ஒருவனோடு ஒருவன் நட்பாதற்குப் புணர்ச்சியும், பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டுவதில்லை: இருவர்க்கும் ஒத்த உணர்ச்சிதானே நட்பாம் உரிமையைக் கொடுக்கும் என்றவாறு.' என்று பொருள் கூறிய பரிமேலழகர்,

'புணர்ச்சி-ஒரு தேயத்தராதல்: 'இன்றே போல்க நும் புணர்ச்சி' (புறம்-58) என்றதும் அதனை. பழகுதல்-பலகால் கண்டும் சொல்லாடியும் மருவுதல். இவ்விரண்டும் இன்றிக் கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சி ஒப்பின், அதுவே உடனுயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும் என்பதாம்' என்றும், 'நட்பிற்குப் புணர்ச்சி பழகுதல், உணர்ச்சி ஒத்தல் என்னும் காரணம் மூன்றனுள்ளும் பின்னது சிறப்புடைத்து என்பது இதனால் கூறப்பட்டது' என்றும் விளக்கம் கொடுத்துள்ளார் இந்தத் திருக்குறளுக்கு.

'யாதினும் இனிய நண்ப!' என்று அழைக்கப்பட்ட குகன், அழைத்த இராமபிரானோடு, ஒரு தேயத்தினனும் அல்லன்: கண்டும் சொல்லாடியும் பலமுறை பழகியவனும் அல்லன்: ஒத்த உணர்ச்சியனும் அல்லன்.

அப்படியிருந்தும், சக்கரவர்த்தித் திருக்குமாரனாகிய இராமபிரான், வேடர் குலத்தானாகிய குகனை, பார்த்த சிறிது நேரத்திற்குள் 'யாதினும் இனிய நண்ப!' என்று அழைத்து, தன்னோடு இருக்க வைத்துக்கொண்டான். அதற்குக் காரணம் என்ன?

கிழமை - உரிமை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருவர் நண்பர்களாக இணைவதற்குத் திருவள்ளுவரால் சொல்லப்பட்ட காரணங்கள் மூன்றற்கும் அப்பாற்பட்ட-மேலான ஒன்று குகனிடத்தில் கண்டதால் தான், இராமபிரான். அவனைக் கண்ட சிறிது நேரத்திற்குள் நண்பனாக்கிக் கொண்டான்.

நட்பு கொள்வது, நன்கு ஆராய்ந்த பிறகுதான் செய்யப்படவேண்டும். நட்புக்கொள்ளும் முன்பு எவ்வாறு ஆராயவேண்டும் என்று வள்ளுவர் சொல்லியுள்ளார்.

"குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்துயாக்க நட்பு." (திருக்குறள்-793)

'ஒருவன் குணத்தினையும், குடிப்பிறப்பினையும் குற்றத்தினையும், குறைவற்ற சுற்றத்தினையும் ஆராய்ந்து அறிந்து, அவனோடு நட்புச் செய்க' என்று, ஒருவனை நண்பனாக்கிக் கொள்ளும் முன்பு இந்த நான்கு வகையாலும் அவனை ஆராயவேண்டும்' என்பது வள்ளுவர் நட்புக்கு வகுத்த வழி.

குகனை எடுத்த எடுப்பிலேயே நண்பனாக்கிக் கொண்ட இராமபிரான், வள்ளுவத்தின்படி, எந்த வகையாலும் அவனை ஆராயவில்லை.

'யாதினும் இனிய நண்ப!' என்று அழைத்த இராமபிரானும் வள்ளுவத்துக்கு மேல் நின்று செயல்பட்டான் அழைக்கப்பட்ட குகனும், நட்புக் காரணங்கள் மூன்றற்கும் மேல்பட்டுக் காட்சியளித்தான்.

நண்ப! என்று அழைத்த இராமபிரான், சக்கரவர்த்தித் திருக்குமாரன்: அயோத்தி நகரத்தினன்: பிறப்பால் உயர்ந்தவன்: கல்வியால் மேம்பட்டவன்: ஆன்று அவிந்து அடங்கிய. கொள்கைச் சான்றோர்களாகிய முனிவர்களின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சூழ்நிலையில் இருப்பவன்: அழைக்கப்பட்ட குகனோ, வேடர் குலத்தவன்! கங்கைச்சிருங்கி பேர நகரத்தினன்: பிறப்பால் தாழ்ந்தவன்: கல்வி அறிவு அற்றவன்: வீரம்நிறைந்த போர் வீரர்களின் சூழ்நிலையில் இருப்பவன்.

இப்படி எல்லா வகையாலும் வேறுபட்டிருந்தும், இருவர்களும் உயிரனைய நண்பர்களானார்கள். இவ்வளவு வேறுபாட்டுக்குரியவர்கள் நண்பர்களாக ஆவதற்கு முன்பு, எந்த ஆராய்ச்சியும் அங்கு நடைபெறவில்லை.

"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை நடைமுறை
தான்சாம் துயரம் தரும்." (திருக்குறள்-792)

'ஆராய்ச்சி செய்யாமல் கொண்ட நட்பு எவ்வளவு துன்பத்திற்குள்ளாக்கும்' என்ற வள்ளுவரின் எச்சரிக்கையும் இங்கு, தள்ளப்பட்டுள்ளது.

(குணமும் செய்கையும் நல்லன் என்பது பலகாலும் பலவாற்றானும் ஆராய்ந்து ஒருவனோடு நட்புக் கொள்ளாதவன். முடிவில்தான் சாதற்கு ஏதுவாய் துன்பத்தினைத் தன்மாற்றார் விளைக்க வேண்டாமல், தானே விளைக்கும்)

ஆராய்ச்சி செய்யாத இராமபிரானும், ஆராய்ச்சிக்கு உட்படாத குகனும் வள்ளுவத்தின் நட்பினும் உயர்ந்து-விட்டார்கள் என்பதைக் கவிச்சக்கரவர்த்தி, தம் காப்பியத்தில் படைத்துக் காட்டிவிட்டார். இதனை வள்ளுவத்தின் வளர்ச்சி என்று கூறலாம்.

வான்மீகியின் குகன் இராமனுக்கு, முன்னரே அறிமுகமானவன்: இராமன் நாடிழந்து வருவதை அறிந்தவன். 'ஒருவரை ஒருவர் ஏற்கனவே அறிந்து கொண்டவர்கள், நட்புக்கொள்வதில் சிறப்பு ஒன்றும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இல்லை' என்பதை உணர்ந்த கவிச்சக்கரவர்த்தி, ஒருவரை ஒருவர் அறியாதவர்களாக இருவர்களையும் கதைக்களத்தில் கொண்டுவந்து நிறுத்துகின்றார்.

கங்கைக் கரை :

பதினான்கு ஆண்டு வனவாசத்தை ஏற்றுக்கொண்ட இராமபிரான், சீதாப்பிராட்டியோடும், தம்பி இலக்குவ-னோடும் வந்து, கங்கைக்கரையில் முனிவர்கள் புடை சூழ அமர்ந்திருக்கின்றான்.

இருந்த வள்ளலைக் காண்பதற்காக, தேனொடு மீன் உபகாரத்தனாய் வந்த குகனை, 'நீ ஆவான் யார்?' என்று இலக்குவன் கேட்டான். அதற்கு, தேவா! நின் கழல் சேவிக்க வந்தனன்' என்பது குகன் தந்த பதில் உரை.

அத்தோடு நில்லாமல், சேவிக்க வந்த, தான், யார் என்பதை 'நாவாய் வேட்டுவன், நாய் அடியேன்' என்று சொல்லித் தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டான் குகன்.

தான் வந்த காரணத்தை முதலில் சொல்லி தன்னைப்பற்றிப் பிறகுதான் சொல்லுகின்றான் குகன். இது எதைக் காட்டுகின்றது? 'நீ யார்?' என்று கேட்டால், 'நான் இப்படிப்பட்டவன்' என்று தானே விடைகொடுக்க வேண்டும்.

அதற்கு மாறாக, வந்த காரணத்தை எடுத்த எடுப்பில் கூறுகின்றான் என்றால், அது, இராமபிரானைச் சேவிக்கவேண்டும் என்ற குகனது அளவற்ற ஆர்வத்தைக் காட்டுகிறது. இலக்குவனையே 'தேவா!' என்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அழைத்ததன் மூலம் இராமபிரானை, இதற்கு முன் கண்டறியாதவன் என்பதையும் காட்டுகின்றது.

அவனது ஆர்வத்தை உய்த்துணர்ந்த, இலக்குவன் 'தாயின் நல்லான்' வந்துள்ளான் என்று குகனைப்பற்றி இராமபிரானிடம் கூறினான்.

'நாவாய் வேட்டுவன்' என்ற புறத்தோற்றத்து அறிமுகத்தோடு, நிறுத்திக் கொண்டிருந்திருந்தால், குகன் 'தாயின் நல்லான்' என்று இலக்குவனால் சொல்லப் பட்டிருக்க மாட்டான்.

'நாய் அடியேன்' என்ற குகனது அறிமுகத்தில் அவனது, அன்புகனிந்த அகத்தோற்றத்தைக் கண்டான்: அதில் தாய்மை உணர்வு மேலோங்கி, நிற்பதை தன் உணர்வுகொண்டு உணர்ந்தான்: அதனால் 'தாயின் நல்லான்' என்று, தன் அண்ணன் இராமபிரானிடம் குகனை அறிமுகம் செய்து வைத்தான் இலக்குவன்.

அடியவனாகத் தன்னை உணர்ந்து கொண்டவன் எவனோ, அவன்தான், சேவிப்பதற்கு வருவான். அடியவன் யாரைச் சேவிப்பான்? ஆண்டவனைச் சேவிப்பதுதான் அடியவர் இயல்பு.

'தேவா! நின் கழல் சேவிக்க வந்தனன்' என்று (தேவனே உனது திருவடியைத் தரிசிப்பதற்காகவே வந்தேன்) எப்பொழுது குகன் சொன்னானோ அப்பொழுதே அவன் உள்ளத்தில், எதிரில் இருப்பவன் (இராமன் என்று கருதியதால்) தெய்வமாகத் தங்கிவிட்டான் என்பதைக் காட்டுகிறது.

எதிரில் காண்பவனை எல்லாவற்றிலும் மிகமிக உயர்ந்தவனாகவும், தன்னை எல்லாவற்றிலும் மிக மிகத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாழ்ந்தவனாகவும் கருதும் உணர்வு, தலைதூக்கி நிற்கும் போதுதான், 'அடியேன்' என்று தன்னைச் சொல்லிக் கொள்வான் மனிதன்.

'அடியேன் சேவிக்க வந்தேன்' என்ற உணர்வு கனிந்த சொல் தொடர், எதிரில் நிற்பவனைப் பகவானாக. குகன் கண்டு கொண்டுள்ளான் என்பதையும், பகவானை விட்டு என்றும் பிரியமனம் இல்லாத பக்தனாகத் தன்னை ஆக்கிக் கொண்டுள்ளான் என்பதையும் உணர்த்துகின்றது.

இந்தச் சொல் தொடர் உணர்த்தும் பொருள் இத்தோடு நிற்கவில்லை. இந்த அளவில் இலக்குவன் இதனை உணர்ந்திருந்தால், தன் அண்ணனிடம் பக்தன் ஒருவன் தங்களைச் சேவிக்க வந்திருக்கின்றான் என்று தான் சொல்லியிருப்பான்.

இராகவனைப் பகவானாகவும் குகனைப் பக்தனாகவும் இணைத்துக்காட்டும் அந்தப்பொருளைவிட, மேலான உயர்ந்த ஒரு ஆழ்பொருளை இந்தச் சொல் தொடரில் இலக்குவன் கண்டதால்தான், 'தாயின் நல்லான்' வந்தனன் என்று தன் அண்ணனிடம் கூறினான்.

இலக்குவன் கண்ட மேலான உயர்ந்த பொருள் என்ன?

எல்லோருக்கும் அருள் பொழிய ஓங்கி நிற்கும் பகவானுக்கும், அவன் திருவருளைப் பெறுதற்கு ஏங்கி நிற்கும் பக்தனுக்கும் உள்ள தொடர்பை, தாய்க்கும், சேய்க்கும் (குழந்தை) உள்ள உறவாகக் காண்பதுதான் பக்தர் உலகின் இயல்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும்
மற்றுஅவள்தன்
அருள் நினைந்தே அழும்குழவி அதுவே போன்று
இருந்தேனே."

என்று குலசேகராழ்வாரும்,

"பால் நினைந்து ஊட்டும் தாயினும்
சாலப் பரிந்து நீ, பாவியேனுடைய
ஊனினை உருக்கி.... .. ..."

என்று மாணிக்கவாசகரும், தம்மைக் குழந்தையாகவும் (சேயாகவும்) தமக்கு அருள் வழங்கும் இறைவனைத் தாயாகவும் தான்கண்டு அனுபவித்துள்ளார்கள்.

வழங்குபவன் பகவான்: வாங்குபவன் பக்தன். கொடுப்பது தாய்: பெறுவது சேய்.

பகவான், எந்தப் பயனையும் எதிர்பாராமல் அருளை வழங்கிக் கொண்டேயிருப்பான்: பக்தன், அதனை வாங்கி வாங்கிப் பயன்பெற்றுக் கொண்டேயிருப்பான்.

தாய், குழந்தைக்கு வேண்டியதை, கொடுத்துக் கொண்டேயிருப்பாள்: சேய், அதனைப்பெற்று மகிழ்ந்து கொண்டேயிருக்கும்.

வழங்கும் பகவானும், கொடுக்கும் தாயும் உயர்ந்தவர்கள்: வாங்கும் பக்தனும், பெறும்சேயும் அவர்களினும் தாழ்ந்தவர்கள்தானே!

இங்கு, பக்தனாக வந்த குகனை, இலக்குவன் பெறுதற்குவரும் சேயாக (குழந்தை)க் காணவில்லை: கொடுப்பதற்கு வந்த தாயாகக் காண்கின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகவான், தாயாக நின்று கொடுக்கும் கொடைச் செயலை, இந்தக் குகப்பக்தன், தான் ஏற்றுக்கொண்டு, 'தேனொடு மீன் உபகாரத்தனாய்' இராகவனைக் காணவந்திருப்பதால், 'தாயின் நல்லான்' ஆக உயர்கின்றான், இலக்குவனது உள்ளக் கணிப்பில்.

'அடியேன்' என்று பக்தனாகத்தான் வந்தான் குகன்: ஆனால், அவனை, பகவான் நிலையில் உயர்த்தி வைத்துக் காண்கின்றான் இலக்குவன்.

'அடியேன் சேவிக்கவந்தேன்' என்ற குகனது உணர்வுத் தொடர், பெறுதற்கு ஏங்கிநிற்கும் பக்த உள்ளத்தை மேம் பொருளாகக் காட்டுகிறது, கொடுப்பதற்காகவே ஏங்கிக்கொண்டு வந்திருக்கும் தாய்மைக் குணத்தை ஆழ்பொருளாகக் காட்டுகிறது.

இந்த ஆழ்பொருளை உணர்ந்ததால்தான் இலக்குவன், குகனை, தாயின் நல்லான்' என்று அறிமுகம் செய்தான் இராமபிரானிடம்.

உயர்வற உயர்ந்து நிற்பவன் இராமபிரான்: நாயினும் கடைப்பட்டவனாய்த் தன்னைத் தாழ்த்திக் காண்பவன் குகன். இந்த உயர்வும் தாழ்வும் சமமாக நின்று நட்பாக இணைகின்றது கங்கைக் கரையில் எப்படி?

இராமபிரானும் குகனும்!

உயர்வு தாழ்வு அற்ற சமமான வாழ்க்கையினர் உள்ளத்து எழும் அன்புதான், இருவர்களையும் நண்பர்களாக இணைத்து வைக்கும். இது உலக இயல்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த உலக இயல்புக்குக் கட்டுப்படாத இதனினும் மேம்பட்ட நட்பு ஒன்று, இங்கு (கங்கைக் கரையில்) வேரூன்றி வளர்ந்து செழித்துப் பலருக்கும் நிழல்தருகிறது.

நட்புக்கு விதை, அன்புதான்: இந்த அன்பு விதையை இராகவன், தன்னைக் கண்ணுறக்கண்டு, மண்ணுறப் பணிந்து, மேனிவளைத்து, வாய்புதைத்து நின்ற குகனிடம் கண்டான்: தன் அருள் என்னும் நீரை அதற்கு ஊற்றினான் நட்பு முளைத்தது வளர்ந்தது.

குகனது அகத்துள் அடங்கிக் கிடந்த அன்பை இராகவன் காண்பதற்கேற்ற சூழ்நிலை ஒன்று, இருவரது உரையாடலுக்கிடையில் உருவாகியது.

'தேனும் மீனும் அமுதினுக்கு அமைவதாகத் திருத்திக் கொண்டு வந்துள்ளேன் என்கொல் திருவுள்ளம்?' என்று அன் பொழுகப் பணிவோடு கேட்டான் குகன்.

"அரிய,தாம் உவப்ப உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால், அமிழ்தினும் சீர்த்த அன்றே?
பரிவினின் தழீஇய என்னின் பவித்திரம்; எம்மனோர்க்கும்
உரியன; இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ?'
(கம்-1967)

காதல்-பக்தி: சீர்த்த-சிறப்புடையன: பரிவு-அன்பு: பவித்திரம்-தூய்மை: எம்மனோர்க்கும்-எங்களைப் போன்ற தவ வாழ்வினர்க்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பது இராமன் தந்த பதில். கையுறைப் பொருள் களின் உயர்வும் தாழ்வும், அப்பொருள்களின் புறத்தோற் றத்தைப் பொருத்தது அல்ல. அது யாரால் கொண்டுவரப் பட்டதோ அவர்களது உள்ளத்தைப் பொருத்ததாகும்.

குகனால் கொண்டுவரப்பட்ட கையுறைப் பொருள், அவனது உள்ளத்துள் அடங்கிக் கிடந்த அன்பு முதிர்வதால் தோன்றுவதான பக்தி உணர்வோடு வந்தது: "பக்தி உணர்வில் தோய்ந்து வந்த எந்தப் பொருளும் கிடைத் தற்கு அருமையான அமிர்தத்தை விட உயர்ந்ததாகும். தூய்மை உடையதுமாகும்'' என்று இராகவன் தன் திருவுளக் கருத்தை வெளிப்படுத்தினான்.

குகன் கொண்டு வந்த கையுறைப் பொருளின் மூலம் அவனது அன்பின் வளர்ச்சியாகிய பக்தி உணர்வைப் புரிந்துகொண்டான் இராகவன்.

குகனது பக்தி உணர்வு, சொல்லால் சொல்லிக் காட்ட முடியாத அளவிற்கு அவன் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது என்பதை, மேற்கொண்டு நடந்த உரையாடல் காட்டுகின்றது.

'அன்பனே! நீ இன்று உன் ஊருக்குப் போய் விட்டு, நாளைக்கு உனது படகோடு வா? என்பது இராமபிரான் குகனுக்கு இட்ட கட்டளை. பகவான் சொல்வதை அப்படியே செயல் படுத்துவதுதானே பக்தன் கடமை!

ஆனால், பகவானைவிட்டுச் சிறிதும் பிரியாத பக்தனாகதான் இருப்பதை, அடுத்து உணர்த்துகின்றான் குகன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"கார்குலா நிறத்தான் கூற, காதலன் உணர்த்துவான், 'இப்
பார்குலாம் செல்வ! நின்னை, இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வனேன் யான். இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன்: ஆனது, ஐய! செய்குவென் அடிமை என்றான்" (கம்-1969)

இராகவன் கூறினான் குகன் காதலனாய் (பக்தனாக) நின்று, தன் உள்ளக்கருத்தை உணர்த்துகின்றான்.

கூறுதல், வாயின் தொழில்: உணர்த்துதல் உள்ளத்தின் இயல்பு. கூற்று இராகவனுடையது: உணர்வு குகனுடையது. கூற்றுக்கு மறுமொழியாக உணர்வு வெளிப்பட்டது. குகப் பக்தனது உணர்வு மொழி, இராகவன் இட்டகட்டளைக் கூற்றை மாற்றிக்கொள்ளச் செய்துவிட்டது. எப்படி?

சடாமுடி தரித்து, மரவுரி புனைந்த கோலத்தனாய், வனவாச வாழ்க்கைக்காக வந்துள்ள இராகவனை இடர்உற்ற வாழ்க்கையனாக உணர்ந்தான் குகன்.

இந்த உணர்வுதான், குகனை. நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை ஈர்கிலாக் கள்வனேன்' என்றும், 'இன்னலின் இருக்கை நோக்கித்தீர்கிலேன் என்றும், 'செய்குவன் அடிமை' என்றும் பேசச் செய்தது,

---

கார்குலா நிறத்தான்-மேகம் போன்ற கருநிறத்தையுடைய இராகவன்: காதலன்-பக்தனாகிய குகன்: ஈர்தல்-இழுத்தல்: இன்னல்-துன்பம்: தீர்கிலேன்-செல்லத்துணிந்திலேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'பெருமானே! உமக்கு, அடியேன் கொண்டுவந்த கையுறைப் பொருள் அன்பினால் தழுவப்பட்டு வந்தது; என்றும், 'அதனால் அடியேனும், உள்ளத்து அன்பினால் அமைந்த காதலன் (பக்தன்)' என்றும் தாங்கள் கூறினீர்கள்.

ஆனால், 'யானும் பொய்: என் நெஞ்சும் பொய்: என் அன்பும் பொய்' என்று இப்போது நான் உணர்கின்றேன் ஏன்? 'உண்மையான அன்புடையவனாக இருந்திருந்தால், துன்பச் சூழ்நிலைக்கு உள்ளாகி இருக்கின்ற உம்மைக் கண்டதும், இவ்வாறு கண்ட கண்களை என் முகத்தினின்றும் இழுத்து எறிந்திருக்க வேண்டுமே? இதுவரை, நான் அதைச் செய்யாததால், இல்லாததை இருப்பதாகக் காட்டி நடித்த வஞ்சகக் கள்வன்தானே நான்?

'என் அன்பு. என்முகத்தினின்றும் கண்களை அகற்றும் வேலையைச் செய்யவில்லை என்றாலும், தங்களது துன்பக் காட்சி, தங்களை விட்டு என்னை அகலாது இருக்கத் தூண்டுகின்றது. அதனால், தீர்மானமாகச் சொல்கின்றேன், நான் இங்கேயே தங்களுக்கு அடிமைப் பணிசெய்து கொண்டிருப்பேன்? என்பது குகன் மொழிந்த உணர்வு மொழி.

அன்பின் மிகுதியினால், என்ன செய்திருக்க வேண்டும் என்பதையும், அதைச் செய்யாததால் ஏற்பட்ட தனது வருத்தத்தையும், குகன் புலப்படுத்தியதோடு, இனிமேல்தான் தான் செய்யப்போவது எது என்பதையும் உறுதிப்படுத்தினான் அந்தப் பக்தன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'செய்குவன் அடிமை' என்பது குகனது அன்பு உணர்வுத் தீர்மானமொழி.

இதனைக் கேட்டதுதான் தாமதம்: உடனே இராமபிரான் குகனை, 'நண்ப!' என்று அழைத்துவிட்டான். பக்தனாகவந்த ஒருவனைத் தனக்குச் சமநிலையில் வைத்து அணைத்துக் கொள்வதற்குரிய நட்புக்கு உரியவனாகக் குகனைக் காணச் செய்துள்ளது அவன் உணர்த்திய அந்த அன்புமொழி.

ஏற்கனவே, நெருங்கிய பழைய நண்பனாக இருந்தவன்கூட, தன் நண்பனுக்குக்கேடு (பொருள் அழிவு) வந்துவிட்டால், உடனே அவனை விட்டுச் சொல்லாமல் அகன்றுவிடுவான்.

இந்தக் குகனோ, இப்பொழுதுதான் புதியவனாய் வருகின்றான். புதியவனாக இருந்தும், தன் அன்புக்கு உரியவர்கேடு (பொருள் அழிவு-நாடு இழந்து) உடையராக வந்துள்ள இந்தச் சமயத்தில், 'நான் உன்னை விட்டுப் பிரியேன்' என்று சொல்கின்றானே! இதுதான் நட்புக்கு அடிப்படையான அன்பின் அடையாளமாகும்.

'இன்னலின் இருக்கை நோக்கித் தீர்கிலேன்' என்ற குகனது அன்பு உணர்வுத் தொடர் மொழிதான், அவனை, 'யாதினும் இனிய நண்ப!' என்று இராகவனால் அழைக்கப்பட வைத்துள்ளது.

தனது வனவாச வாழ்க்கையில் ஏற்படும் இன்னலை நீக்கி தனக்கு இனிமை தருவதற்குத்தான், தன்னைவிட்டுப் பிரியாமல், மனைவி சீதாப்பிராட்டியும், தம்பி இலக்குவனும் தன்னோடு உடன் வந்துள்ளார்கள் என்ற அன்புச் செயலோடு, பழமையோ, உறவுத் தொடர்போ, எதுவும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இல்லாத ஒருவனது செயலை ஒப்பிட்டுப் பார்க்கின்றான் இராகவன். அதனால், 'எனக்கு இனிமை தருவதாக உள்ள யாரைக் காட்டிலும், எந்தப் பொருளைக் காட்டிலும் நீதான் எனக்கு இனிய நண்பன் என்ற கருத்துப்பட, 'யாதினும் இனிய நண்ப' என்று குகனை அடையாளம் கண்டுகொண்டான் இராகவன்.

பகவானாகத் தன்னைக் காணவந்த குகனை, தனக்குச் சமநிலையில் இருத்தற்குரிய 'நண்பன்' என்றும், 'தோழன் நீ எனக்கு' என்றும் இராமபிரான் சொல்கின்றான். இது, பெருமானது, சௌசீல்யத்தையும் (மேன்மைக் குணம்) சௌலப்பியத்தையும் (எளிமை) காட்டுகிறதா? அல்லது, இராகவனை, அவ்வாறு அழைக்கச் செய்யும் அளவிற்கு, ஆழ்ந்துகிடந்த குகனது அன்பைக் காட்டுகிறதா?

இரண்டையும் காட்டுகின்றது என்று கருதும்படி அமைந்துள்ளது இந்நிகழ்ச்சி.

யாவரினும் உயர்வற உயர்ந்த இராகவனையும் யாவரினும் தாழ்ந்தவனாகிய குகனையும் சமநிலைத் தோழராகவும் நண்பர்களாகவும் படைத்துக் காட்டியுள்ளார் கவிச்சக்கரவர்த்தி, 'இப்படிச்செய்யலாமா?' என்ற கேள்வி எழுகின்றது இங்கு.

மற்ற ஒரு நிகழ்ச்சியோடு இதனை ஒத்திட்டுப் பார்த்தால், கம்பர் செய்த புதுமைப் புரட்சியின் உயர்வு விளங்கும்.

காளத்தி நாதரும் கண்ணப்பரும்:

கங்கை ஆற்றங்கரையில் நடந்த இந்த நிகழ்ச்சி போன்றே, ஒரு காலத்தில், காளத்திமலை உச்சியிலும் நடந்தது. ஆகம விதிப்படி, நாள் தவறாமல் நீண்ட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காலமாகப் பூசை செய்து வருகின்றார் சிவகோசரியார் அவரது பக்தியைவிட, புதிதாக வந்து, எந்த விதிமுறையும் இல்லாமல் தன்னை நெருங்கியுள்ள கண்ணப்பரது பக்தி, மேலானது என்பதை உணர்ந்தவர் காளத்தி நாதர், எதனால்?

சிவகோசரியார் பூசை, ஆகம விதிமுறைக்கு உட்பட்டதுதான். பூசை முடிந்ததும் கோயிலை விட்டு அகன்று விடுவார்: மறுநாள்தான் வருவார்.

புதிதாகவந்த கண்ணப்பரோ,

''அவ்வழி அந்தி மாலை அணைதலும் ' இரவு சேரும்
வெவ்விலங்கு உள" என்று அஞ்சி மெய்ம்மையின்
வேறு கொள்ளாச்
செவ்விய அன்பு தாங்கித் திருக்கையில் சிலையும்
தாங்கி
மைவரை என்ன ஐயர் மருங்கு நின்று அகலா நின்றார்
(பெரி. கண். 127)

இரவுக் காலத்தில், இங்கு மிருகங்கள் வந்து, நம் காளத்தி நாதருக்குத் தொல்லை கொடுத்துவிடுமே என்று கருதிய கண்ணப்பர், நாதரை விட்டு அகலாமல் பக்கத்தி லேயே நின்று கொண்டிருந்தார் எப்படி? உள்ளத்தில், நீங்காத அன்பைத் தாங்கிக்கொண்டும், உள்ளங்கையில். அம்பு தொடுத்த வில்லைத் தாங்கிக் கொண்டும் நின்றார் நீங்காத அன்பு, நாதரை விட்டு நீங்காதவராய் நிற்கச் செய்தது கண்ணப்பரை.

இன்னலின் இருக்கை நோக்கித் தீர்கிலேன்' என்ற கங்கை ஆற்றங்கரை வேடனது சொல், 'ஐயர் மருங்கு

விலங்கு-மிருகம்! மெய்ம்மை-உண்மை: மை-கருப்பு: வரை-மலை; மருங்கு-பக்கம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நின்று அகலா நின்ற கண்ணப்பரது செயலையே, தானும் செய்யவேண்டும் என்ற குகனது ஆர்வத்தைக் காட்டுகின்றது.

காளத்தி நாதரது கண் ஒன்றில் உதிரம் (இரத்தம்) பாய்ந்த (சிந்த) இருந்த, துன்பக் காட்சியைக் கண்ட கண்ணப்பர், 'என் கண் அம்பால் இடந்து அப்பின், எந்தையார் கண் அதற்கு இது மருந்தாய்ப் புண்நீர் நிற்கவும் அடுக்கும்' என்று முடிவுசெய்து, தம் கண்ணை அம்பால், தோண்டி எடுத்து முதல்வர் கண்ணில் அப்பினார்.

'நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை ஈர்கிலாக் கள்வனேன்' என்ற குகனது அன்பிற்கனிந்த வருத்த உணர்வுச் சொல், கண்ணப்பரைப் போன்று தாமும் செய்திருக்க வேண்டுமே என்ற அவனது ஏக்கத்தைக் காட்டுகின்றது.

காளத்தி நாதருக்குக் கண் போயிற்று! கண்ணப்பர் தம் கண்ணை, முகத்தினின்றும் தோண்டி எடுத்துக் கொடுத்தார்,

இங்கு, கங்கைக் கரையில், குகன் கண்ணைப் பிடுங்க நினைத்தது, இராமபிரானது துன்பக்காட்சியைக் காணச் சகிக்காமல்தான்.

கண்ணப்பர், தம் அன்புப் பெருக்கினால், எந்த எந்த செயல்களைக் காளத்தி நாதரிடம் செய்தாரோ, அதனை எல்லாம் குகன் இராமபிரானிடம் செய்வதாகச் சொல்கின்றான்.

காளத்தி வேடரது, செயல்: கங்கை வேடனது, சொல், இரண்டுக்கும் அடிப்படை, பகவானிடம் கொண்ட அளவற்ற ஆழ்ந்த அன்பின் முதிர்ச்சியாகிய பக்திதான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருவரும், எண்ணத்தினால் ஒன்றாக இருந்தும் இணைப்பு முறையில் வேறுபடுகின்றனர்.

காளத்தி நாதரோடு கண்ணப்பர் பக்தராகத்தான் இணைந்தார்: குகனோ, தோழனாக, நண்பனாக, இராமபிரானால் சமமாக இணைத்து அணைத்துக்கொள்ளப்பட்டான் ஏன்?

காப்பியத் தலைவன் இராமபிரான் தங்கி இருக்கும் இடத்திற்கு. கதைக் களத்திற்கு, குகனைக் கொண்டுவந்து கம்பர் நிறுத்தியதற்குக் காரணமே, தெய்வமாக்கவியாகிய திருவள்ளுவர் கூறிய நட்பின் (மாட்சி) பெருமையை விளக்குவதற்குத்தான்.

அளவு கோல்:

நண்பனது அன்பு, எந்த அளவிற்கு உள்ளது என்பதை நீட்டி அளந்து காண்பதற்கு ஒரு அளவுகோலைக் கொடுக்கின்றார் வள்ளுவர். அந்த அளவு கோலுக்கு, 'கேடு' என்று பெயர் கொடுத்துள்ளார் அந்தப் பெருங் கவிஞர்.

'கேடு' என்ற அளவு கோலைக் கொண்டு. குகனது அன்பை அளந்து காட்டுகின்றார் கவிச்சக்கரவர்த்தி: இல்லை: இல்லை: இராமபிரானை அளந்து காணச் செய்கின்றார். நட்பு அளவு, சரியாக இருந்ததால், பக்தனாக வந்த குகனை 'நண்ப' என்றும், 'தோழ' என்றும் இராமபிரானை அழைக்க வைத்தார் கம்பர்.

'கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதுஓர் கோல்' (திருக்குறள்-796)

கேடு-பொருள் அழிவு: உறுதி-நன்மை: கிளைஞர்-நண்பர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'ஒருவர்க்கு வறுமை முதலிய கேடு (கெடுதல்) (செல்வ அழிவு) வந்து சேர்ந்த பொழுது, நண்பர்கள் பழையபடியே அன்புடையவர்களாக இருக்கின்றார்களா? அல்லது வேறு பட்டுப் பிரிந்து விடுகின்றார்களா? என்பதை உள்ளபடி காண்பதற்கு, 'கேடு' உதவுவதால், கேட்டிலும் ஒருநன்மை உண்டு' என்பது குறளின் விளக்கம்.

இராகவன், நாட்டில், அரண்மனையில் அரசவாழ்க்கைக்கு ஏற்றவனாய் வாழ்ந்த காலத்தில் குகன் காண வருவில்லை. நாடு இழந்து காடு நோக்கி வசதியற்றவனாய் வந்தபோது தான், இராகவனைக் காணவந்தான் குகன். 'கோடு' வந்த காலத்தும், விடாத-நீங்காத அன்புடையவன் யார்? அவன்தான் நண்பன்.

இந்தக் குறட்கருத்துக்கு விரிவுரை நல்குவதற்குத் தான், கம்பர், கங்கைக்கரையில் இந்த நிகழ்ச்சியை அமைத்துக் காட்டுகின்றார்.

'இன்று போய் நாளை உன் நாவாயோடும் வருக' என்று முதலில் சொன்ன இராகவன், குகனது அன்பை உணர்ந்தபிறகு சொல்வதை, கவிச்சக்கரவர்த்தி, தம் கவிதையில் அழகாக வடித்துக்காட்டுகின்றார்.

"கோதை வில்குரிசில், அன்னான் கூறிய கொள்கை கேட்டான்:
சீதையை நோக்கி, தம்பி திருமுகம் நோக்கி, 'தீராக் காதலன் ஆகும்' என்று கருணையின் மலர்ந்த கண்ணன்,
யாதினும் இனிய நண்ப! இருத்தி ஈண்டு. எம்மொடு, என்றான்' (கம்.1976)

கோதை-மாலை: குரிசில்-இராமன்: அன்னான்-குகன்: கொள்கை கோட்பாடு: தீரா-நீங்காத: காதலன்-பக்தன்: ஈண்டு-இங்கு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வில்லேந்திய குரிசில், (இராகவன்) குகன் கூறிய சொல்லிலிருந்து, அவனது உறுதியான கோட்பாடு இன்னது என்பதை உணர்ந்து கொண்டான்.

இந்த உணர்வு, தன் அன்பு மனைவியையும், தம்பியையும் நோக்கச் செய்தது. அந்த நோக்கம், 'நீங்கள் இருவரும் எனக்கு உறவுடையவர்கள் அதனால் என்னை விட்டு நீங்காதவராக இங்கு வந்தீர்கள்: இவனோ, எந்த உடல் உறவும் அற்றவனாக இருந்தும், முன்பின் அறியாதவனாக இருந்தும், 'இன்னலின் இருக்கை நோக்கித் தீர்கிலேன்' என்ற கோட்பாடு உடைய அன்பனாக வந்துள்ளான்: ஆகவே உடல் உறவால் வந்த அன்புச்செயலைவிட, அந்த உறவுஅற்ற ஒருவரிடமிருந்து எழுந்த அன்புச்செயல் உயர்ந்ததல்லவா!' என்ற இராகவனது கருத்தை அவர்கள் இருவருக்கும் உணர்த்தியது

இராகவன் நோக்கம் தாங்கிவந்த கருத்தை உணர்ந்த சீதாப் பிராட்டியும் இளைய பெருமாளும், 'ஆம் ஆம்! இவன் எம்மைக்காட்டிலும், உம்மிடம் தீராக்காதலனாகத்தான் உள்ளான்' என்பதை, தம் நோக்கத்தால் இராமபிரானுக்குத் தெரிவித்தார்கள்.

அவர்களது நோக்கத்தால், அவ்விருவர்களது உடன்பாட்டைப் பெற்றுக்கொண்ட இராகவன், 'கருணையினால் மலர்ந்த கண்ணனாக' ஆனான் உடனே "தீராக் காதலன்தான் குகன்' என்று உறுதிசெய்துகொண்டு அந்தப் பத்தனை, தனக்குச் சமமான நண்பனாகக் கொள்ள கருதி 'யாதினும் இனிய நண்ப!" என்று அழைத்தான் இராமபிரான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்தக் குகனை. நண்பனாக அடையாளம் காட்டியது மட்டும் அன்று: 'நீ. இங்கேயே. எங்களோடேயே, தங்கியிரு' (ஈண்டு இருத்தி எம்மொடு) என்று அவனுக்கு அனுமதி அளித்து, தம்மோடு அணைத்துக்கொண்டான் இராமபிரான்.

முன்பின் அறியாத ஒருவனைத் (குகனை) தனக்குச் சமமான நண்பனாக ஏற்றுக்கொண்ட இராமபிரானுடைய கருணைச்சொல்லும், செயலும், அப்பெருமானோடு உடன் வந்த சீதாப்பிராட்டியின் உள்ளத்திலும் சென்று தங்கிக் கொண்டு விட்டன.

'யாவரினும் உயர்ந்த இராகவனை, பகவானாகக் கருதி அவன் திருவடியைச் சேவித்து, 'உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்ற கொள்கையோடு (கோட்பாட்டோடு) அவனுக்குக் கைங்கர்யம் செய்யவந்த பக்தனை, அப்பெருமான், தனக்குச் சமமான நண்பனாக ஆக்கிக் கொண்ட கருணையை என்ன என்று வியப்பது!' என்ற வியப்பில் மூழ்கியிருந்தாள் சீதாப்பிராட்டி.

இந்த வியப்பான செயலை, தன்னைத் துன்பத்தில் மூழ்க வைத்த அசோகவனத்தில் சிறையிருந்த பொழுது பிராட்டி நினைத்துப்பார்க்கின்றாள்.

"ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு, 'எம்பி நின்தம்பி: நீ
தோழன்: மங்கை கொழுந்தி' எனச்சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள்."

(கம்-5091)

அம்பி-படகு: கடாவிய-செலுத்திய: எம்பி-என் தம்பி: தோழன்-நண்பன்: உன்னி-நினைத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏழை (கல்வி அறிவற்ற) வேடனைப் பார்த்து, நீ எனக்குத் தோழன்' என்று சொன்னவன், யாவர்க்கும் கல்வி பொருளாய் விளங்கும் எம்பெருமான். இந்த நட்பு உணர்வு (நண்பினை)தான், பெருமான் வந்து, தன்னைக் காப்பாற்றி விடுவான் என்று பிராட்டியை நம்ப வைத்தது.

இராமபிரானுக்கும் குகனுக்கும் இருந்த தொடர்பு நட்புக்குரியதுதான் என்பதைப் பிராட்டியும் உறுதி செய்கின்றாள். பக்தன், நண்பனாகக் கருதப்பட்டுள்ள நிகழ்ச்சி பிராட்டியின் உள்ளத்தில் எவ்வளவு ஆழமாகத் தங்கியிருந்தது என்பதை, அசோக வனத்து நினைவு உறுதிப்படுத்துகின்றது.

தோழமை :

சக்கரவர்த்தித் திருமகன், வேடனைத் தன் நெருங்கிய தோழனாக (நண்பனாக) ஏற்றுக்கொண்ட, இந்த உயர்ந்த செயலைப் பாராட்டிப் பேசுவதற்கு, கவிச்சக்கரவர்த்தி, தம் காப்பியத்துள், கதைப்போக்கிற்கேற்ப ஒரு புதிய வாய்ப்பினையும் ஏற்படுத்திக்கொள்வார்.

அந்த நல்லவாய்ப்பு, அதே கங்கைக் கரையில், ஏழை வேடன் குகனுக்குக் கிட்டுகிறது.

காட்டுக்குச் சென்ற இராமபிரானை அழைத்துக் கொண்டு செல்வதற்காக, பரதன் வருகின்றான். அவனோடு அரண்மனைச் சுற்றத்தினர் அனைவரும், படைவீரர்களும் வருகின்றனர்.

இந்தப் படைகளின் வருகையைத் தவறாகப் புரிந்து கொண்டான் குகன். 'இவ்வளவு படைவருகின்றது என்றால் இராமன்மேல் போர் தொடுப்பதற்காகத்தான் இருக்க வேண்டும்.'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தத் தவறான எண்ணம், அவன் உள்ளத்தில் நிறைந்திருந்த பக்தி ஒளியை வெளியிடச் செய்தது.

இராகவன்பால் கொண்ட அளவற்ற அன்புதான் படையைக் கண்டதும், பரதனது வருகையைத் தவறாக எண்ணச் செய்தது: அது மட்டும் அல்ல! அந்தப் படையை எதிர்க்கும் கோபா வீரனாகவும் ஆக்கியது குகனை.

அயோத்தியின் அளவற்ற சேனைகளின் வருகை, குகனது அளவற்ற அன்பு உள்ளத்தில், கோப உணர்ச்சியை தூண்டிவிட்டு. படையை அழிக்கும் வீர வார்த்தைகளைக் கொட்டச் செய்தது.

கொட்டிய வீர வார்த்தைகள் அனைத்தும், குகன் இராமபிரானிடம் கொண்ட அன்பின் அடையாளங்களாகும்

"ஆழநெடுந்திரை ஆறு கடந்துஇவர் போவாரோ?
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ?"
'தோழமை' என்று அவர் சொல்லியசொல் ஒருசொல் அன்றோ?
"ஏழமை வேடன் இறந்திலன்" என்று எனை ஏசாரோ?
(கம்-2317)

இராமபிரானுக்குப் பரதப்படை வீரர்களால் துன்பம் வரப்போகிறதாக உணர்ந்து கொண்ட குகன், எப்படியாயினும் தன் உயிரைக் கொடுத்தாயினும், அதைத் தடுத்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தவனாய், வீர வார்த்தைகளை அள்ளி வீசுவதாக அமைந்த கவிதைகளுள் இது ஒன்று.

வேழம்-யானை: திரை-அலை: ஒருசொல்-ஒப்பற்ற வார்த்தை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த முடிவுக்குக் குகனை வரச்செய்தது, 'யாவரினும் உயர்ந்த அந்தப் பெருமான், தாழ்ந்த குலத்தவனாகிய என்னை, அறிவற்றவன் என்றும் கருதாது, தனக்கு' சரியாக என்னை உயர்த்திவைத்து 'யாதினும் இனிய நண்ப, என்று அழைத்த அந்த நட்புச் சொல், என் உள்ளத்தில் ஆழமாகத் தங்கிவிட்டது என்று அவன் உணர்ந்த உணர்வுதான்.

'என் உயிர் அனையாய்' என்று என்னை மதித்த அந்தப் பெருமானுக்கு வரும் இடையூறுகளைப் போக்குவதற்கு, எனது உயிரைக் கொடுக்கவில்லை என்றால், 'ஏழமை வேடன் இறந்திலன்' என்று உலகத்தார் ஏசும் ஏச்சுக்கு நான் ஆளாகிவிடுவேனே!' என்றும் அஞ்சினான் குகன்.

'நீ எனக்குத் தோழன்' என்று அந்தப் பெருமான் சொல்லிய சொல், ஒரு சத்திய வாக்கு அல்லவா? ஒரு ஒப்பற்ற சொல் அல்லவா? அந்தச் சொல்லுக்கு நான் ஏற்றவன்தான் என்பதை நிருபிக்க வேண்டுமென்றால், அப்பெருமான்மேல் போர்தொடுக்க வந்துள்ள இந்தப் படையை எதிர்க்கவேண்டும்' எதிர்க்கும் ஆற்றல் எனக்கு போதாது என்றால், இப்படையைத் தாக்கிப்போரிட்டு மாள்வேன்? என்ற உறுதிக்கு வந்துவிட்டான் குகன்.

'தோழமை என்று அவர் சொல்லிய சொல், ஒரு சொல் அன்றோ?' என்ற கவிதைத் தொடர், அன்புருவாய் அமைந்த குகனது அகத்தோற்றத்தை வெளிப்படுத்துகின்றது.

வள்ளுவப்பெருந்தகை கூறிய நட்பு இலக்கணத்துக்கு ஒரு இலக்கியமாகக் குகனைப் படைத்துக் காட்டியுள்ளார் கம்பர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நட்பின் இலக்கணம் :

"உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு" (திருக்குறள்-788)

தன் அன்புக்கு உரிய நண்பனுக்கு, ஏதாவது துன்பம் வந்துவிட்டால், உடனே சென்று அந்தத் துன்பம் வராமல் தடுக்கவேண்டும்: வரும் துன்பத்தை வராமல் தடுப்பதற்கு எவ்வளவு விரைவாகச் செல்லவேண்டும்? அதற்கு ஒரு உவமை கொடுக்கப்பட்டுள்ளது இங்கு. அந்த உவமை, நண்பன் செல்லவேண்டிய காலத்தின் விரைவையும், துன்பத்தைப் போக்குவதற்குச் செல்லாமல் இருந்தால் இவனுக்குவரும் அவமானத்தையும் காட்டுகிறது.

'உடுக்கை இழந்தவன் கை' என்பதுதான் இங்கு கூறப்பட்ட உவமை. 'அவையிடை ஆடை குலைந்தவனுக்கு அப்பொழுதே, கை சென்று உதவி, இவ் விளிவரல் களையுமாறு போல?' என்று இதற்குப் பொருள் கூறிய பரிமேலழகர், அற்றங் காத்தற்கண், கை, மனத்தினும் முற்படுகின்றது' என்று அதற்கு விளக்கமும் தந்துள்ளார்.

உடை இழந்தவன் கை, மனத்தின் ஆணையை எதிர்பார்ப்பது இல்லை: தானே சென்று உதவுகின்றது அந்த உதவியால், வருகின்ற அவமானம் வாராமல் காக்கப்படுகின்றது.

இது போல், தன் அன்புக்குரியவர்க்கு வரும் துன்பத்தை, வாராமல் தடுத்து உதவுதான் நட்பு,

---

உடுக்கை-ஆடை! இடுக்கண்-துன்பம்:
களைவது-போக்குவது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த நட்பின் இலக்கணம், கங்கை ஆற்றங்கரையில் குகன் வாயிலாக ஒரு இலக்கிய உருவம் பெற்றுக்கொண்டு விட்டது, எப்படி?

"அப்படை கங்கையை அடைந்த ஆயிடை,
துப்புடைக் கடலின் நீர்சுமந்த மேகத்தை
ஒப்புடை அண்ணலோடு உடற்றவே கொலாம்
இப்படை எடுத்தது? என்று எடுத்த சீற்றத்தான்"

(கம்-2308)

'இந்தப் படை, இராமபிரானோடு போர் செய்வதற்காகவே பரதனால் எடுத்துவரப்பட்டுள்ளது' என்ற தவறான கருத்துக்கு உரியவனான் குகன். எப்பொழுது' அந்தப்படை கங்கை ஆற்றின் வடகரையை வந்து அடைந்த அந்தச் சமயத்திலேயே, எடுத்து வந்த படைக்காட்சி, குகனை எடுத்த சீற்றத்தினனாக ஆக்கிவிட்டது.

தன் அன்புக்கு உரியவனுக்கு இந்தப் படையினால் துன்பம் வரப்போகின்றது என்று உணர்ந்ததும், அதனைத் தடுப்பதற்குக் கோபத்தால் உந்தப்பட்ட வீரனாகிவிட்டான் குகன்.

அவனுடைய சீற்றத் தோற்றத்தை ஏழு கவிதைகளாலும், சீற்றத்தால் வந்த கூற்றுக்களை பத்துக் கவிதைகளாலும் காட்டுகின்றார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

இதற்கு முன்னும் பின்னுமாக அமைந்த இந்த இருபது கவிதைகளும், 'உடுக்கை......... நட்பு.' என்ற திருக்குறளுக்கு விரிவுரையாக அமைந்துள்ளது என்னலாம்.

துப்பு-பவழம்: அல்லது வலிமை: அண்ணல்-இராமன்: உடற்றவே-போர் செய்வதற்காகவே: சீற்றம்-கோபம்:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பக்தனாக வந்த குகனையும், பகவானாக இருந்து அவனை ஏற்றுக்கொள்ள வேண்டிய இராகவனையும் சரிசமமான தோழர்களாக, நண்பர்களாகப் படைத்துக் காட்டிவிட்டார் கம்பர், தம் காப்பியத்துள். ஏன்? வள்ளுவர் கூறிய நட்பின் பெருமையை விளக்குவதற்கு பகவானையும் பக்தனையும் தோழர்களாக இணைத்துக் காட்டுவதற்குக் கம்பருக்கு எப்படி இந்தத் துணிவு வந்தது?

அந்தத் துணிவைக் கம்பருக்குக் கொடுத்தவர் திருமங்கை ஆழ்வார்.

"ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது
இரங்கி மற்றவற்கு இன்னருள் சுரந்து
'மாழை மான்மட நோக்கிஉன் தோழி;
உம்பி எம்பி'என்று ஒழிந்திலை, உகந்து
'தோழன் நீஎனக்கு இங்குஒழி' என்ற
சொற்கள் வந்துஅடி யேன்மனத்து இருந்திட
ஆழி வண்ண நின் அடியிணை அடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத்து அம்மானே."
(திவ். பிர-1418)

'தோழன் நீ எனக்கு' என்ற அழ்வாரது அருள் மொழிதான், இராமனையும் குகனையும் நண்பர்களாக தோழர்களாக இணைத்துக் காட்டுவதற்கு, கம்பருக்குக் கைகொடுத்து உதவியுள்ளது எனக் கருதலாம்.

தோழன் என்பான் துயர் துடைப்பான் அல்லவா? இராகவனுக்கு வருவது துயரமாக எண்ணியதால் குகன் அத்துயரைத் துடைக்க முற்பட்டான்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருமங்கை ஆழ்வாரது அருள் மொழியைத் தன் கருத்துக்குப் பக்கபலமாக்கிக் கொண்டு, வள்ளுவரது நட்பின் இலக்கணத்துக்கு, இராம குக இணைப்பை ஒரு இலக்கியமாகக் காட்டிவிட்டார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

அதுமட்டும் அல்ல!

இந்த நண்பர்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் எந்தப் பயனையும் பெற்றுக்கொள்ளவும் இல்லை. பெற விரும்பவும் இல்லை. பயன் வேண்டாப் பண்புடை நட்பாக வளர்ந்து செழித்துள்ளது என்று காட்டி மனம் மகிழ்கின்றார் கவிஞர் பெருமான்.

பகவான், பக்தனாக வந்த குகனைத் தனக்குச் சரிசமமாக ஏற்றுக்கொண்டு அவனைத் தோழனாக வைத்துக் கொண்டதை வைணவ சமய உலகமும் ஏற்றிப் போற்றுகிறது.

அதனால்தான், இராமபிரானை, பெரியபெருமாள் என்று போற்றும் வைணவப் பெருமக்கள், வேட்டுவக் குகனை, 'குகப்பெருமாள்' என்று பாராட்டி வழிபாடு செய்கின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ:

6

சொல் வன்மை

சொல் :

வாயினின்றும் உதிர்வன எல்லாம் சொல்லாகிவிடாது வள்ளுவரது இலக்கணப்படி.

பேசுபவனுக்கும் கேட்பவனுக்கும் பயன் தருவதாக அமைவதுதான் 'சொல்' என்று கருதப்படும் வள்ளுவர் அகராதியில்.

அப்படிப்பட்ட சொல்தான், இருவர்களையும் (சொல்பவனையும் கேட்பவனையும்) ஒன்றாக இணைத்து வைக்கும்.

புதிதாகச் சந்திக்கும் இருவர்களை என்றும் பிரியாதவர்களாக இணைத்து வைக்கும்போது, அந்தச்சொல் மேலும் உயர்வுபெறுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொல்லுக்கு உயர்வைத் தருவது, எது? அது புறப்படும் மனத்தின் தூய்மைதான்.

தூய மனத்தினின்றும் எழும் உணர்வுகள், வாய்வழியாக வெளியேறி, சொல்லுருவம் பெறும்போது, அவைகள் உயர்வுக்குத் தகுதியுடையதாகின்றது.

அந்தத் தூய உணர்வுச் சொல்தான், கங்கை ஆற்றங்கரையில், புதிதாகச் சந்தித்த, உயர்வற உயர்ந்த ஒருவனையும், தாழ்ந்த குலத்தவன் ஒருவனையும் இணை பிரியாத் தோழர்களாக்கியது. அதனால் அந்தச் சொல், உயர்வு பெற்றுக்கொண்டுவிட்டது.

சீதாப்பிராட்டி சிறையிருந்த காலத்தும், அப்பிராட்டியின் சிந்தனையில் தங்கியிருந்தது என்றால், அந்த, 'தோழன் நீ' என்ற சொல்லின் உயர்வை எழுத்தால் எழுதிக் காட்ட முடியுமா?

அந்தச் சொல், உயர்வோடு வன்மையையும் சேர்த்துப் பெற்றுக்கொண்ட ஒன்றைக் காண்பதற்கு வாசகர்களை, கிட்கிந்தை மலை உச்சிக்கு வருமாறு அழைக்கின்றார் கவிஞர் பெருமான்.

மலையில் நிகழ்ந்ததும் புதிய சந்திப்புதான். ஒருவரை ஒருவர் முன்பின் அறியாதவர்கள்தான். ஆனால், சிக்கலுக்கு உள்ளானது: முதலில் சந்தேகத்தைத் தோற்றுவிப்பது: அரசியல் கலப்பிற்குரியது,

இத்தனை சூழ்நிலைக்கிடையில் புதிய சந்திப்பு நிகழ்கின்றது ஆயினும், சந்தித்த புதிய இருவர்களையும் என்றும், யாவராலும் பிரிக்க இயலாதவர்களாய் பிணைத்துவிட்டது அங்கு நிகழ்ந்த சொல்லாடல். அதனால் இந்த சொற்கள் உயர்வும் வன்மையும் உடையனவாகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தச் சொல் வன்மைக்குரிய பாத்திரத்தை, கவிச்சக்கரவர்த்தி, தெய்வப்புலவர் திருவள்ளுவர் கூறிய சொல்வன்மை என்ற அதிகாரக் குறள்களுக்கு ஏற்ற வண்ணம் படைத்துக் காட்டுகின்றார்.

'சொல்' இலக்கணம்:

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்" (திருக்குறள்-643)

'நட்பாய் ஏற்றுக்கொண்டாரைப் பின் வேறுபடாமல் பிணிக்கும் குணங்களை அவாவி; மற்றைப் பகையாய் ஏற்றுக்கொள்ளாதாரும். பின் அப்பகைமை ஒழித்து நட்பினை விரும்பும் வண்ணம் சொல்லப்படுவதே அமைச்சர்க்குச் சொல்லாவது.' என்பது இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தரும் உரை. மேலும், 'அக்குணங்களாவன: வழுவின்மை சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன் தருதல் என்றிவை முதலாயின' என்றும், அவற்றை அவாவுதலாவது: சொல்லுவான் குறித்தனவேயன்றி, வேறு நுண்ணுணர் உடையோர் கொள்பவற்றின் மேலும் நோக்குடைத்தாதல்' என்றும் விளக்கம் தருவார் அந்த உரையாசிரியர்.

சொல் வன்மை, எல்லார்க்கும் வேண்டியதொன்றாக இருந்தாலும், அமைச்சர்களுக்கே சிறப்பாக அமைய வேண்டிய ஒன்றாகும்.

அமைச்சுத் தொழில் புரிந்த ஒருவன் மூலம்தான், இந்தச் சொல் வன்மையின் பெருமையைப் புலப்படுத்துகின்றார், கவிச்சக்கரவர்த்தி.

கேட்டார்-நண்பர்: கேளார்-பகைவர்: அவாய்-அவாவி: வேட்ப-விரும்பும் வண்ணம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'தான் பெற்ற சொல் வன்மையைத் தக்க இடத்தில் திறனறிந்து பயன்படுத்தியதால், அந்த அமைச்சன், தான் வகித்த அமைச்சர் பதவி மிகமிகச் சிறியது என்று சொல்லும் அளவிற்கு, யாரும் பெறுதற்கு அரிய உயர் பதவியைப் பெற்றுவிட்டான்.' என்று சொல் வன்மையின் பெருமையைக் காரண காரியத்தோடு காட்டுகின்றார் கம்பர்.

அமைச்சர்கள் சொல்லும் சொல், எப்படி இருக்க வேண்டும் என்று வள்ளுவர் சொன்னாரோ, அந்த சொல்லாற்றலை, இயற்கையிலேயே பெற்ற ஒருவன்தான் கிட்கிந்தை அரசாங்கத்தில் அமைச்சுத் தொழில் புரிந்து வந்தான்! தனது அரசனுக்கு என்ன நன்மை வேண்டுமோ, அதனைத் தன் சொல்லாற்றல் மூலம் செய்து முடித்தான். பிறகு, அந்தச் சொல் வன்மையைத் தன் அரசனுக்குப் பயன்படுத்தவில்லை.

கிட்கிந்தைக்கு மட்டும் பயன்பட்டுக் கொண்டிருந்த அந்த அமைச்சனது சொல்லாற்றல், உலக நன்மைக்காகப் பயன்படும் முறையில், அங்கு புதிய சந்திப்பு ஒன்று நிகழ்கின்றது.

சுக்கிரீவனும் அனுமனும்:

மாயாவியோடு வாலி போர் செய்யச் சென்றபோது, அவன் தம்பி சுக்கிரீவன், கிட்கிந்தையின் அரசன் அந்த அரசனுக்கு அமைச்சனாய் அமர்ந்திருந்தவன் அனுமன்.

மாயாவிப் போரில் வெற்றிபெற்று மீண்ட வாலி, சுக்கிரீவன் எந்த நிலையில் அரச பதவி ஏற்றான் என்று ஆராய்ந்து பார்க்காமல் தம்பியை அடித்துத் துரத்தினான். துரத்தப்பட்ட சுக்கிரீவனோடு அனுமனும் வந்தான்' இருவருமாக நாடு இழந்த நிலையில் இரலை மலைக் குகையில் உள்ளனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுக்கிரீவனது இழப்பு, நாட்டின் அரச பதவி மட்டும் அல்ல! அவன் மனைவியாரும் ஆவாள். தன் அரசன் இழந்த அரச பதவியையும், அவனுடைய மனைவியையும் மீட்டுக்கொடுக்க வேண்டும், அமைச்சனாகிய அனுமன். இதனைச் செய்தால்தான், அரசனுக்கு நல்லது தேடிக் கொடுத்த அமைச்சனாவான் அனுமன்.

நன்மையையே நாடும் அனுமனை அமைச்சனாகப் பெற்றிருந்ததால், சுக்கிரீவனுக்கு, இழந்ததை மீட்டுக் கொடுத்து, உதவுவதற்காக, அவன் இருக்கும் இடம் தேடி கொண்டு, இரலை மலைக் குகையினை நோக்கி ஒரு நல்வினை வருகின்றது

இராமனும் இலக்குவனும்:

இராமனும் இலக்குவனும், சுக்கிரீவனின் நல்வினைப் பயனால், இரலை மலைக் குகையினைத் தேடிக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தனர்.

தேடி, நாடிவந்த இராமபிரானுக்கும் ஓர் உதவி வேண்டும்: தேடப்பட்ட சுக்கிரீவனுக்கும் இராமபிரான் மூலம் பெறுதற்கு அரிய ஓர் பேர் உதவி வேண்டும்.

உதவி வேண்டிய இருவர்களையும் சந்திக்கவைத்து, உரையாடச் செய்து, அவ்விருவர்களும், அவரவர்களுக்கு வேண்டிய உதவிகளைப் பெற்றுக்கொள்ளச் செய்த பெருமை அனுமனுக்கே உரித்தாகும்.

இந்தப் பெருமை அனுமனுக்குக் கிடைத்ததற்குக் காரணம், அவன் பெற்றிருந்த சொல் வன்மையே ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தூரத்தில், இராம இலக்குவர்களது வருகையைக் கண்ட சுக்கிரீவன், 'வாலியினால் அனுப்பப்பட்ட பகைவர்கள்தாம் இவர்கள்' என்று அஞ்சி ஓடி ஒளிந்து கொண்டான்.

இறைவனே, துன்பப்படும் மனிதனுக்கு உதவுவதற்கு, இடம் தேடி வந்தாலும், சந்தேக உணர்வால், நம்பிக்கையற்றவனாய் வாழும் மனிதன், தனக்கு உதவ வந்தவனை, விரும்பி வரவேற்க இயலாதவனாகி விடுகின்றான். உதவ வந்தவனைக் கண்டு அஞ்சவும் செய்கின்றான்; வெறுக்கவும் செய்கின்றான்.

இந்த மனநிலையில்தான் சுக்கிரீவன் இப்போது உள்ளான். அஞ்சிக் கிடக்கும் அரசனையும் அச்சம் தவிர்க்க வரும் அருளாளனையும் சந்திக்க வைப்பதற்கு, காலதேவன் இதுவரைக் காத்துக் கிடந்தான்.

தக்க சூழ்நிலை உருவானதும் காலதேவன், அனுமன் மூலம் செயல்படுகின்றான்.

அனுமன் :

அஞ்சி ஓடி ஒளிந்துகொள்ளச் சென்ற தன் அரசன் சுக்கிரீவனை, 'அஞ்சவேண்டாம்' என்று சொல்லி, அவனை மலைக் குகையிலேயே இருக்கவைத்துவிட்டு, புதிதாக வந்த இருவர்களையும் யார் என்று அறிவதற்கு வருகின்றான் அனுமன்.

இருவரின் பக்கத்தில் வந்த அனுமன், அவர்களுக்குத் தெரியாமல் (அயல் மறைய) நின்று, தான் கற்ற கல்வியின் துணை கொண்டு (கற்பினின் நினையும்) உய்த்துணர்ச்சியினால், வந்த புதியவர்களை இன்னார் என்று தெளிவாகத் தெரிந்துகொண்டான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிறகு அவ்விருவர்களின் எதிரில் சென்று, முதன் முதலாகப் பேசத் தொடங்கினான் அனுமன். இவன் வாயிலிருந்து வந்த முதல் சொல்லே, கேட்பவனைப் பிணித்துவிட்டது.

'கவ்வை இன்றாக நுங்கள் வரவு' என்பதுதான், அனுமன் வாயினின்றும் வெளியேறிய முதல் சொல் தொடர் இந்தச் சந்திப்பில், முதன் முதலாகச் சொல்லை வழங்கியவன் அங்கு இருந்த அனுமன்: அதனை வாங்கிக்கொண்டவன் அங்கு வந்த இராமபிரான்.

இருந்த அனுமனையும் வந்த இராமனையும் ஒன்றாக இணைத்துவைக்கும் உயர்வையும் வன்மையையும் பெற்றுக்கொள்கிறது இந்தச் சொல் தொடர்.

இதன் உயர்வுக்குக் காரணம் இதனை வழங்கியவன் செவ்வழி உள்ளத்தான்: இதன் வன்மைக்குக் காரணம், இதனால் பிணிக்கப்பட்டவன் கருணையோன்.

செவ்வழி உள்ளத்தனாகிய அனுமன், 'நுங்கள் வரவு. கவ்வை இன்றாக' என்ற எழுவாய் பயனிலை இலக்கணவிதிப்படி சொல்லவில்லை.

'கவ்வை இன்றாக நுங்கள் வரவு' என்று இலக்கண விதியை மாற்றிச் சொன்னதால்தான், அனுமன், 'செவ்வழி உள்ளத்தான்' என்பதும், சொல்லாற்றல் உடையவன் என்பது விளங்குகின்றது.

கவ்வை:

கவ்வை என்றால் துன்பம் என்று பொருள் இப்பொழுது, வாழ்க்கையில் துன்பத்தைச் சந்தித்துக் கொண்டிருப்பவர்கள், அங்கு தங்கியிருக்கும் சுக்கிரீவனும், அங்கு வந்திருக்கும் இராமனும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அங்கு தங்கியிருக்கும் சுக்கிரீவன் எதனை இழந்து, எப்படித் துன்புற்றுக் கொண்டிருக்கின்றான் என்பது அனுமனுக்குத் தெரியும்.

அங்கு வந்திருக்கும் இராமனது இழப்பையும், அவன் துன்பத்தையும் யாரும் சொல்லவில்லை அனுமனுக்கு. ஆனாலும்,

"அருமருந்து அனையது இடை அழிவு வந்துள்ளது: அதனை
இருமருங்கினும் நெடிது துருவுகின்றனர், இவர்கள்"

என்று, இராம இலக்குவர்களைப் பார்த்ததும், அவர்களது இழப்பையும், துன்பத்தையும் உய்த்து உணர்ந்து கொண்டான் அனுமன்.

அதனால். எடுத்த எடுப்பில் 'துன்பம் இல்லாமல் போகட்டும்' என்ற பொருளில் 'கவ்வை இன்றாக' என்று சொன்னான் அனுமன்.

'உங்களுக்கு இருக்கும் துன்பமும். எங்களுக்கு இருக்கும் துன்பமும் இல்லாது ஒழியட்டும்'

துன்பத்தில் துவண்டு வந்திருக்கும் இராமனை 'துன்பம் ஒழியட்டும்' என்று வாழ்த்தி வரவேற்ற அனுமனது முதல் சொல்லே பிணித்துவிட்டது

இந்தச் சொல்லால் இராமபிரான் பிணிக்கப்பட்டான் என்பதை, தன் தம்பி இலக்குவனிடம் அப்பெருமான் பேசிய பேச்சிலிருந்து தெரிந்துகொள்ளலாம்

"நம்பியைப் பெற்றோம்: நம்பால் இல்லையே, துன்ப மானது: இன்பமும் எய்திற்று" என்று, இராமபிரான் தன் தம்பியிடம் பேசிய பேச்சு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அனுமன் சந்திப்பின் முதல் சொல், அப்பெருமானை எவ்வளவு கவர்ந்துள்ளது என்பதைக் காட்டுகிறது.

'நம்மிடத்தில் இருந்த துன்பம் இனி இல்லாது போகும்: அந்தத் துன்பம் இருந்த இடத்திற்கு இன்பம் வரும்.' இது, எதனால்? இந்த நம்பியாகிய அனுமனை நாம் பெற்றுக்கொண்டதால்.' என்று பேசிய இராகவனது பேச்சு, இந்த நம்பியை (அனுமனை) அப்பெருமான் எவ்வளவு நம்பியுள்ளான் என்பதையும் காட்டுகிறது: 'அனுமன்', இராகவனது நம்பிக்கைக்கு உரியவனாகி விட்டான் என்பதையும் புலப்படுத்துகிறது.

'இதுவரை, நாங்களும் துன்பத்தில் துவண்டு கொண்டு இருந்தோம்: நீங்களும் துன்பத்தில் துவண்டு கொண்டிருந்தீர்கள்; இங்கு இருந்த எங்களது துன்பமும் இங்கு வந்த உங்களுடைய துன்பமும் இல்லாது ஒழியும். இது, எதனால்? உங்களது வருகையால்' என்ற அனுமனது சொல்லின் மூலம், தான் கண்ட வள்ளுவத்தைக் கொண்டு வந்து நிறுத்துகின்றார் கவிச்சக்கரவர்த்தி.

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம், நிரந்துஇனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

(திருக்குறள் - 648)

'சொல்லப்படும் காரியங்களை, நிரல்படக் கோத்து, இனிதாகச் சொல்லுதல் வல்லாரைப் பெறின் உலகம் அவற்றை விரைந்து ஏற்றுக்கொள்ளும்' என்று உரை எழுதிய பரிமேலழகர், 'நிரல்படக் கோத்தல் முன் சொல்வனவும் பின் சொல்வனவும் அறிந்து, அம்முறையே வைத்தல்' என்றும், 'இனிதாதல் - கேட்டார்க்கு இன்பம் பயத்தல்' என்றும் விளக்கம் தருகின்றார் இந்தக் குறளுக்கு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கவ்வை இன்றாக நுங்கள் வரவு' என்பது நிரந்து இனிது சொல்லப்பட்டது அதனால், இதனைக்கேட்ட இராமன் இனிமை பெற்றான் சொல்லால் பிணிக்கப் பட்டான்.

நீ யார்?

இந்தச் சொல்லால் கவரப்பெற்ற இராமபிரான், புதிதாகத் தன்முன் வந்து நின்று, 'துன்பம் நீங்கும்' என்று எதிர்காலத்துப் பயனை அறிந்து சொன்னவனைப்பற்றித் தெரிந்துகொள்ள விரும்பி, 'எவ்வழி நீங்கியோய்? நீ யார்? என்று கேட்டான்.

'நீ எந்த இடத்திலிருந்து வந்தவன்? நீ யார்' என்ற இராகவன் கேள்விக்கு அனுமன் அளித்த பதிலிலும், அவனுடைய சொல்லாற்றல் ஒளிவிட்டு நிற்கிறது.

"மஞ்சுஎனத் திரண்ட கோல மேனிய' மகளிர்க்கு எல்லாம்
நஞ்சுஎனத் தகைய ஆகி நளிர்இரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சம் ஒத்து அலர்ந்த செய்ய கண்ண! யான் காற்றின் வேந்தற்கு
அஞ்சனை வயிற்றின் வந்தேன்: நாமமும் அனுமன் என்பேன்." (கம்.3765)

'மேனிய! கண்ண! 'என்று இராகவனை விளித்ததன் மூலம் அவனை அனுமன் புரிந்துகொண்டுவிட்டான் என்பதை உணரலாம்

மஞ்சு-மேகம்: கோலம்-அழகு: நஞ்சு-விஷம்:
நளிர்-குளிர்ச்சி: தேம்பா-வாடாத: கஞ்சம்-தாமரை:
நாமம்-பெயர்: அஞ்சனை-அனுமனுடைய தாய்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'மேகம் போன்ற அழகிய கருமை பூத்த உனது திருமேனியும், தாமரை மலர் போன்ற செம்மை தவழும் உன் கண்ணும், நீ எப்படிப்பட்ட இயல்பினன், எத்தகையை வாழ்க்கையினன் என்பதை உணர்த்திவிட்டன: நான் அதை உணர்ந்துகொண்டுவிட்டேன்' என்பதைச் சொல்லாமல் சொல்கின்றான் அனுமன். பிறகு, தனது பெயர், தாய் பெயர் தந்தை பெயரைச் சொல்கின்றான் அவன்.

பிறகுதான், 'எவ்வழி நீங்கியோய்?' என்ற வினாவுக்கு விடையாக,

"இம்மலை இருந்து வாழும் எரிகதிர்ப் பரிதிச்செல்வன்
செம்மலுக்கு ஏவல் செய்வேன், தேவ! நும்வரவுநோக்கி
விம்மல் உற்று அனையான் ஏவ, வினவிய வந்தேன்"
(கம்-3766)

என்று இதனைச் சொன்னான் அனுமன்.

இப்படிச் சொன்னவன் யார் என்பதைக் கவிதையின் ஈற்றடி காட்டுகின்றது.

'எம்மலைக் குலமும் தாழ இசைசுமந்து எழுந்த தோளான்.'

'சுக்கிரீவனுக்கு அமைச்சனாக இருந்தவன், இனி, இராமபிரானோடு சேர்ந்து கொண்டு, புகழுக்குரிய காரியங்களைச் செய்யப்போகின்றான் அனுமன்' என்பது இதன் குறிப்புப்பொருள்.

"எவ்வழி நீங்கியோய்? நீ யார்" என்ற தனது கேள்விக்கு. அனுமன் அளித்த பதிலில், வழுவின்மை, சுருக்கம், விளக்கம், தெளிவு இனிமை, விழுப்பயன் ஆகிய

பரிதிச் செல்வன்–சூரியன்: செம்மல்-சுக்கிரீவன்:
விம்மல் உற்று–கலக்கம் அடைந்து: இசை-புகழ்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொல்லுக்கு இருக்கவேண்டிய குணங்கள் அத்தனையும் அடங்கியிருத்தலைக் கண்ட இராகவன், 'யார் கொல் இச்சொல்வன்?' என்ற ஐயத்துக்கு உரியவனானான். இந்தச் சந்தேகக் கேள்வியே, இராமன், அனுமனது சொல்லால் எவ்வளவு கவரப்பட்டிருக்கின்றான்! எப்படிப் பிணிக்கப்பட்டிருக்கின்றான் என்பதைக் காட்டுகிறது.

முதல் சந்திப்பிலேயே, முன்பின் அரியாத ஒருவரிடம் 'சொல்லின் செல்வன்' என்ற பட்டத்தைப் பெற்றுக்கொண்டு விட்டான் அனுமன்.

'இனிமையான சொற்களையே செல்வமாகப் பெற்றுள்ளான் இவன்' என்ற இராகவனது புகழ்ச் சொல்லை வாய்ப்பு நேரும் இடங்களில் எல்லாம் மெய்ப்பித்துள்ளான் அனுமன்.

அடுத்த வாய்ப்பு :

வள்ளுவர், சொல்லுக்கு வகுத்த இலக்கணம் இரண்டாக அமைந்தது. ஒன்று கேட்டாரைப் (நண்பரை) பிணிக்கவேண்டும்: மற்றொன்று கேளாரையும் (பகைவரும் மாறுபட்ட கருத்தினரும்) விரும்ப வைக்கவேண்டும்.

அனுமனது சொல், முதல் இலக்கணத்தைப் பூர்த்தி செய்ததை இராமபிரான் மூலம் காட்டினார் கம்பர்.

இரண்டாவது இலக்கணத்தைப் பூர்த்தி செய்ததைக் (கருத்து மாறுபட்டவரும் விரும்புமாறு சொல்வது) காட்டுவதற்கு, கதைப் போக்கில் ஒரு களத்தை ஏற்படுத்திக் கொண்டார் தம் காப்பியத்துள் கம்பர்.

இராவணன் தம்பி வீடணன், 'அறிஞரின் மிக்கான்' என்றும், 'குணங்களால் உயர்ந்தான்' என்றும் புகழப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படுபவன். ஆனாலும், தன் உடன்பிறப்பினனான அண்ணனோடு இருக்க முடியவில்லை. அவனது வெறுப்புக்கு உரியவனானான் வீடணன். ஆகவே, அண்ணனை விட்டுப் பிரிந்து, அறத்தின் பக்கம் சேரலாம் என்ற எண்ணத்தோடு, இராமபிரானை நோக்கி வருகின்றான் வீடணப் பெரியோன்.

எதிரியிடமிருந்து வரும் வீடணனை ஏற்றுக் கொள்வதா? ஏற்காமல் தள்ளுவதா? என்ற ஆலோசனையை நடத்துகின்றான் இராமபிரான்.

அந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட, சுக்கிரீவனை உள்ளிட்ட அனைவரும், வீடணன் சேர்க்கையை எதிர்க்கின்றனர். வீடணனை ஏற்றுக்கொள்வதில், கருத்து மாறுபாடு உடையவர்களாகவே அனைவரும் இருந்தனர் அந்த ஆலோசனை கூட்டத்தில்.

இறுதியாக, 'கருத்து என்? செப்பு' என,

'நெறிதரு மருதி என்னும் நேர்இலா
அறிவனை நோக்கினான் அறிவின் மேலுளான்!

அறிவன், அனுமன், அவன் யாருக்கும் சமமாகாது உயர்ந்த அறிவு நிரம்பப் பெற்றவன்.

அந்த அறிஞன், அங்கு முன்பு பேசிய அனைவரின் கருத்துக்கு மாறுபட்ட கருத்தாக, வீடணனை ஏற்கலாம் என்று காரண காரியத்தோடு எடுத்துச் சொன்னான். நிறைவாக, 'ஆதலால் இவன் வரவு நல்வரவே' என்று கூறி முடித்தான் சொல்லின் செல்வன்.

'கவ்வை இன்றாக நுங்கள் வரவு' என்று சொல்லிக் கேட்டாரைப் பிணித்தான்! 'இவன் வரவு நல்வரவே' என்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொல்லி, கேளாரை (கருத்து மாறுபட்டவர்) வேட்கச் (விரும்பச்) செய்தான் சொற்செல்வன்.

முன்பு, பலராலும் தெரிவிக்கப்பட்ட ஒரு கருத்தை மறுத்து, தனது கருத்தை அனைவரும் ஏற்கும் வண்ணம் சொல்வதென்றால், அது எவ்வளவு ஆற்றல் பெற்ற சொல்லாக இருக்கவேண்டும் என்பது, அறிவின் மேலுளானாகிய இராகவனுக்குத் தெரியும்.

அதனால் 'மாருதி வடித்துச் சொன்ன பெற்றியே பெற்றி' என்று அனைவரும் அறியச் சொல்லிய இராமபிரான், முதலில் மறுத்துச் சொன்ன சுக்கிரீவனையே, வீடணனை அழைத்து வருமாறு ஏவுகின்றான்.

கருத்து மாறுபட்டவரும் விரும்பும் வண்ணம் சொன்ன அனுமனது சொல், வள்ளுவத்தால் உருவானது.

"சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து" (திருக்குறள்-645)

என்ற வள்ளுவரது, சொல் இலக்கணப்படி, கருத்து மறுபட்டவரது சொல், தன் சொல்லை வெல்ல முடியாத படியான சொல்லை அறிந்து சொன்னதால், அனுமன் சொல்லின் செல்வன் என்பதும், வள்ளுவத்தால் உருவானவன் என்றும் உணரலாம்.

மாசற்றார் கோள் :

"வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்." (திருக்குறள்-646)

வேட்ப-விரும்புமாறு: மாட்சி-பெருமை: மாசு-குற்றம்: கோள்-கொள்கை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குற்றம் அற்ற பெரியவர்களது கொள்கை இரண்டு வகைப் படும். ஒன்று, தாம் சொல்லும்போது, கேட்கின்றவர், பின்னும் கேட்டலை விரும்புமாறு சொல்லவேண்டும். மற்றொன்று, பிறர் தமக்குச் சொல்லும்போது, அச்சொல்லின் பயனைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதுதான், சொல்லைப் பொறுத்த அளவில் குற்றமற்றவரது கோட்பாடு (கொள்கை) ஆகும்.

அனுமன் இந்தக் கொள்கையைக் கடைப்பிடித்தவனாக இருந்தான் என்பதை, அசோகவனத்தில் ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தி விளக்குகின்றார் கம்பர் பெருமான்.

அசோக வனத்தில், இராவணனால் பெரும் தொல்லைக்கு உள்ளான சீதாப்பிராட்டி, பலவற்றை நினைத்துப்பார்த்து, இறுதியாக, 'இறத்தலே அறத்தின் ஆறு' என்ற முடிவுக்கு வந்தவளாய், மாதவிப் பொதும்பர் எய்தினாள்.

இதனைக் கண்டனன், அங்கு மறைந்துகொண்டு மரத்தின் மேலிருந்த அனுமன்: மெய்தீண்டுவதற்குக் கூசினான். கூசியவன், பேசினான் அப்பேச்சு, உயிர்விடத் துணிந்த பிராட்டியைப் பிழைக்கவைத்தது.

உயிரைப் போக்கிக் கொள்ளத்துணிந்த பிராட்டியின் துணிவை மாற்றிக்கொள்ளும் வண்ணம் அனுமன் சொன்ன சொல், அவள் விருப்பத்திற்கு உரியதாக இருந்தது. அந்தப் பிராட்டி வேட்ப (விரும்புமாறு) சொன்னசொல் எது? 'அண்டர் நாயகன் அருள்தூதன் யான்' என்பது தான் அச்சொல்லாகும்.

இது, பிராட்டியின் உயிரைக் காத்தது; பின்னும் கேட்க வேண்டுமென்ற விருப்பத்தை பிராட்டியினிடம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோற்றுவித்தது, மேலும் கேட்க விரும்பிய பிராட்டியின் விருப்பத்தை அனுமன், தன் சொற்களால் நிறைவேற்றி யதைச் சொல்வதற்கு முப்பத்தைந்து கவிதைகளை ஒதுக்கியுள்ளார் கவிஞர் பெருமான்,

பயன் கோடல் :

மாசற்றார் கோட்பாட்டில் மற்றொன்று, தம் சொல்லைக் கேட்டவரது சொல்லின் பயனைத் தெரிந்து கொள்வது ஆகும்.

இராவணனது மிரட்டலுக்கு அஞ்சிக்கொண்டிருக்கும் சீதாப்பிராட்டியை, அப்பொழுதே காப்பாற்ற எண்ணிய அனுமன், 'கேட்டி அடியேன் உரை: முனிந்தருளல்:' என்று சொல்லத் தொடங்கி, முடிவாக, அடியேன் தோள் ஏறுகடிது' என்று விண்ணப்பித்து, பிராட்டியின் திருவடியைத் தொழுது பணிந்து நின்றான்.

இதனைக் கேட்ட பிராட்டி, அனுமன் செய்ய விரும்பும் செயல், தனக்கோ. தமது கணவருக்கோ பெருமை தருவதல்ல என்பதை அவனுக்கு உணர்த்த எண்ணி, 'அரியது அன்று: நின் ஆற்றலுக்கு ஏற்றதே:

'தெரிய எண்ணினை: செய்வதும் செய்தியே' என்று சொல்லத் தொடங்கினாள்.

"அல்லல் மாக்கள் இலங்கையது ஆகுமோ?
எல்லை நீத்த உலகங்கள் யாவும், என்
சொல்லினால் சுடுவேன்: அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசுஎன்று வீசினேன்."
(கம்-5362)

என்று தன் ஆற்றலை உணர்த்திய பிறகு, 'இன்னும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஈண்டு ஒரு திங்கள் இருப்பல் யான்' என்ற தனது முடிவைச் சொன்னாள் பிராட்டி.

இந்தச் சொல்லின் பயனைத் தெரிந்துகொண்ட அனுமனது மகிழ்ச்சியையும், செயலையும்,

"நன்று! நன்று! இவ்உலகுடை நாயகன்
தன்துணைப் பெருந்தேவி தவத் தொழில்,
என்று சிந்தை களித்து உவந்து ஏத்தினான்-
நின்ற சங்கை இடரொடும் நீங்கினான்."
(கம்-5371)

என்று, கவிதை வெளியிடுகின்றது,

இவ்வாறு, சொல்லைப் பொறுத்த அளவில், சொல்லின்-செல்வன் அனுமன், வள்ளுவர் கூறிய மாசற்றார் கொள்கையைக் கடைப்பிடித்துள்ளான் என்பதைக் கவிஞர் பெருமான் காட்டியுள்ளார்.

யார்க்கும் அரிது :

"சொலல் வல்லன், சோர்விலன், அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது" (திருக்குறள்-647)

'தான் எண்ணிய காரியங்களைப் பிறர்க்கு ஏற்பச் சொல்லுதல் வல்லனாய்: அவை மிகப் பலவாய வழி ஒன்றிலும் சோர்விலனாய்: அவைக்கு அஞ்சானாயினான் யாவன்: அவனை மாறுபாட்டின் கண் வெல்லுதல் யாவர்க்கும் அரிது.' என்பது இந்தக் குறளின் பொருள்.

நாயகன்-இராமன்: பெருந்தேவி-சீதாப் பிராட்டி:
சிந்தை-மனம்! சங்கை-சந்தேகம்: இடர்-துன்பம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'ஏற்பச் சொல்லுதல், சோர்வின்றி இருத்தல் அவைக்கு அஞ்சாமை' என்ற, வள்ளுவர் கூறிய மூன்று குணங்களும் நிரம்பப் பெற்றவன் அனுமன் என்பதை, இராவணனது அவைக்களத்தில் அனுமனை நிறுத்திக் காட்டுகின்றார் கவிச்சக்கரவர்த்தி.

இந்திரசித்தன் விட்ட பிரம்மாத்திரத்திற்குக் கட்டுப் பட்டவனாய், இராம தூதுவனாக வந்த அனுமன், இராவணனது அவைக்களத்திற்குச் செல்கின்றான்.

அங்கு, அனுமனது சொல்லாற்றலும், சோர்வின் மையும் அஞ்சாமையும வெளிப்படுதற்கு ஏற்ற வாய்ப்பு கிட்டுகிறது.

இதற்கு முன் காணாத ஒரு இடத்தில், எதற்கும் அஞ்சாதவனாக நிற்கும் அனுமனைப் பார்த்து, இராவணன்,

"யாரை நீ? என்னை, இங்கு எய்து காரணம்?
ஆர் உனை விடுத்தவர்? அறிய, ஆணையால்
சோர்விலை சொல்லுதி" என்று கேட்டான்.

இந்தக் கேள்விக்கு விடையாக,

"சொல்லிய அனைவரும் அல்லென்: சொன்ன அப்
புல்லிய வலியினோர் ஏவல் பூண்டிலேன்:
அல்லிஅம் கமலமே அனைய செங்கண்ஓர்
வில்லிதன் தூதன்யான் இலங்கை மேயினேன்."

(கம்-5879)

என்று, அனுமன் கூறினான்.

புல்லிய-அற்பமான, ஏவல்-பணி: கமலம்-தாமரை: வில்லி-இராமன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'நீ, திருமலா? சிவனா? எமனா? பிரம்மனா? ஆதிசேடனா?' என்று கேட்ட இராவணனது ஐயத்தை, 'சொல்லிய அனைவரும் அல்லன்' என்ற சொல்லால் ஒழித்து தன் சொல்லாற்றலைக் காட்டினான் அனுமன்.

'அப்புல்லிய வலியினோர் ஏவல் பூண்டிலேன்' என்ற, அனுமனது கூற்று, அவனுடைய சோர்வின்மையை வெளிப்படுத்துகின்றது.

'வில்லிதன் தூதன் யான்' என்று தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டு, அப்பெருமானுடைய தூதுவனாக இலங்கையை வந்து சேர்ந்துள்ளேன்' என்றுதான் வந்த காரியத்தையும் அஞ்சாதவனாக எடுத்துப் பேசினான் அனுமன்.

இந்த மூன்று இயல்புகளையும் உடைய அனுமனை இகலில் (மாறுபாட்டில்) வெல்ல இயலாத இராவணன், அனுமனது வாலில் நெருப்பு வைத்தான், வைத்த நெருப்பு இலங்கையையே சுட்டு எரித்தது.

'சுட்டது குரங்கு-இட்ட இவ் அரியணை இருந்தது என் உடல்' என்று தான்பட்ட அவமானத்தை, சொல்லிச் சொல்லிப் புலம்புகின்றான் இராவணன்.

தன்னை வெல்ல முடியாதவனாக எதிரியை ஆக்கி அவனை அவமானப் படச் செய்தது, வள்ளுவத்தில் வளர்ந்த அனுமனது சொல்லும் செயலும்தான்.

இவ்வாறு, வள்ளுவர் வகுத்துக் காட்டிய சொல் வன்மைக்கு ஏற்ற ஒரு பாத்திரமாக அனுமனைப் படைத்துக் காட்டிவிட்டார் கவிஞர் பெருமான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ :

7

செய்ந் நன்றி அறிதல்

நன்றி :

'நன்றி' என்றால் நன்மை என்று பொருள். இந்தப் பொருளில்தான் வள்ளுவர் நன்றி என்ற சொல்லைக் கையாளுகின்றார்.

"தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்." (திருக்குறள்-67)

'தந்தை புதல்வனுக்குச் செய்யும் நன்மையாவது, கற்றார் அவையின்கண் அவரினும் மிக்கிருக்குமாறு கல்வி யுடையனாக்குதல்' என்பது இதன் பொருள்.

தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமல், அதனை என்றும் நினைத்துக்கொண்டிருக்கவேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தன்னுடைய நன்மைக்காகப் பிறர் செய்த உதவியை என்றும் மறக்காமல் இருப்பதுதான், உதவி பெற்றவனது உயர்வுக்குக் காரணமாக இருக்கும்.

பிறர்க்கு நன்மையைச் செய்தவன், தான்செய்த நன்மையை (உ த வி யை) அன்றைக்கே மறந்துவிடுவது செய்தவனுக்கு உயர்வாகும்.

உதவி பெற்றவனுக்கு நன்மை அ த னை என்றும் மறவாமல் இருப்பது: உதவி செய்தவனுக்கு நன்மை, அதனை அன்றைக்கே மறந்துவிடுவது.

மக்களது நல்வாழ்க்கைக்கு இன்றியமையாத இந்த 'நன்றி'யைப் பற்றி, தெய்வப் புலவர் திருவள்ளுவர் செய்ந் நன்றி அறிதல் என்ற அதிகாரத்தில் விவரிக்கின்றார்.

செய்ந் நன்றி :

'செய்யாமல் செய்த உதவி, காலத்தினால் செய்த நன்றி, பயன்தூக்கார் செய்த உதவி, தி னை த் து ணை உதவி, என்று, பிறரது நன்மைக்காகச் செய்த உதவியின் பெருமையைப் பேசிக் கொண்டுவந்த வள்ளுவர், மறக்க வேண்டியது எது? மறக்க வேண்டாதது எது? என்பதைச் சுட்டிக் காட்டுகின்றார்.

''நன்றி மறப்பது நன்றுஅன்று: நன்றுஅல்லது
அன்றே மறப்பது நன்று.' (திருக்குறள் - 108)

(ஒருவர் செய்த நன்மையை மறப்பது நல்லது அல்ல ஒருவர்செய்த குற்றத்தை அன்றைக்கே மறந்துவிடுவது நல்லது)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேலும், ஒருவர் செய்த தீமையை-குற்றத்தை எப்படி மறப்பது என்பதற்கும் வழி காட்டுகின்றார் வள்ளுவர்.

"கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்று நன்று உள்ளக் கெடும்.' (திருக்குறள்-109)

(தமக்கு, முன்ஒரு நன்மை செய்தவர் பின் தம்மைக் கொன்றால் ஒத்த பொல்லாங்கு செய்தாலும், அவை யெல்லாம், அவர் செய்த நன்மை ஒன்றை நினைத்துக் கொண்டால். அத்தீமை எல்லாம் கெடும்.)

தீமையை மறத்தலுக்கு வழிகாட்டிய வள்ளுவர், ஒருவர் செய்த நன்மையை மறந்தால், எவ்வளவு பெரிய தீமையாகும் என்பதை அதிகாரத்தின் இறுதியில் கூறி, செய்ந்நன்றி மறப்பவர்களை எச்சரிக்கின்றார்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்: உய்வு இல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (திருக்குறள்-110)

(அருள், அறம், வாய்மை முதலாகிய எல்லா நன்மை களையும் அழித்த பாவிக்கும். கொடு நரகத்தினின்றும் ஏதேனும் ஒரு காரணத்தால், ஒரு காலத்தில் பிழைத்துக் கொள்ள வழி உண்டு: தனக்கு ஒருவர் செய்த நன்றியை மறந்த பாவிக்கு, கொடு நரகத்தினின்றும் பிழைத்துக் கொள்ளும் வழி ஒருக்காலத்தும் கிட்டாது.)

இந்த செய்ந்நன்றி மறவாமையாகிய நற்குணத்தின் பெருமையை உலகுக்கு விளக்கிக்காட்ட விரும்பினார் கவிச்சக்கரவர்த்தி.

அவருடைய விருப்பம் 'கும்பகர்ணன்' என்ற பாத்திர மாக உருவெடுத்தது காப்பியத்துள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாத்திரம் என்பது பண்பிற்கு ஓர் அடையாளமாகும் செய்ந்நன்றி மறவாமை என்ற பண்பை அடையாளம் காணவேண்டுமானால் கும்பகர்ணனிடத்தில் கண்டுக் கொள்ளலாம்.

கும்பகர்ணன் :

இலங்கை மன்னன் இராவணனது அடுத்த தம்பியாக உள்ள கும்பகர்ணன், கதைக் களத்தில் முதன்முதலாக அறிமுகமாவது அவனது உறக்க காலத்தில்தான்.

சொல்லின் செல்வன் அனுமன் மூலமாகத்தான், உறங்குகின்ற கும்பகர்ணனை நமக்கு அறிமுகம் செய்து வைக்கின்றார் கவிச்சக்கரவர்த்தி.

"தடைபுகு மந்திரம் தகைந்த நாகம் போல்
இடைபுகல் அரியதுஓர் உறக்கம் எய்தினான்"

என்று உறக்கத்தில் அறிமுகம் செய்யப்பட்ட கும்பகர்ணன், அடுத்து, விழித்த நிலையில் தோன்றுவது. இராவணனது மந்திராலோசனை அவைக்களத்தில்.

இரண்டாவது காட்சி :

அனுமனால் எரிக்கப்பட்ட இலங்கை புதுப்பிக்கப் பட்டு, அதில் இருந்துகொண்டு, இந்த அவமானத்தை எப்படிப் போக்கிக்கொள்வது என்று, இராவணன் ஆலோசனை கேட்கின்றான். பலரும் இராவணனது தீய எண்ணத்தை ஒட்டியே தம் கருத்தைக் கூறுகின்றனர்.

கும்பகர்ணனோ, இந்த அவமானம் வந்ததைக் காரண காரியத்தோடு எடுத்துக்காட்டி, தன் அண்ணன் செய்த செயலைக் கண்டித்துப் பேசுகின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"நன்னகர் அழிந்தது' என நாணினை: நயத்தால்
உன்உயிர் எனத்தகைய தேவியர்கள் உன்மேல்
இன்நகை தரத்தர, ஒருத்தன்மனை உற்றாள்,
பொன்அடி தொழத்தொழ, மறுத்தல் புகழ்போலாம்."
(கம்-6120)

என்றும்,

"ஆசுஇல் பரதாரம்அவை அஞ்சிறை அடைப்பேம்:
மாசுஇல் புகழ்காத லுறுவேம்: வளமை கூரப்
பேசுவது மானம்: இடைபேணுவது காமம்:
கூசுவது மானுடரை நன்றுநம கொற்றம்"
(கம்-6122)

என்றும்

கூறி, இராவண்ன் செய்த செயலின் தீமையைச் சுட்டிக் காட்டி, அண்ணனைப் பழித்தான். தமது குலத்து மானத்தை அழித்துவிட்டானே அண்ணன் என்ற வருத்தம் மேலிடுகிறது கும்பகர்ணனது பேச்சில்.

இந்த அவைக்களத்தில் கும்பகர்ணன், 'குலப் பெருமையைக் கெடுத்து விட்டானே நம் அண்ணன்' என்ற உணர்வோடு பேசிய பேச்சில்,

"குன்றின் அனையாரும் குன்றுவர்: குன்றுவ
குன்றி அனைய செயின்." (திருக்குறள்-965)

என்ற திருக்குறள் கருத்து ஒளி விடுவதைக் காணலாம்.

(குடிப் பிறப்பால் மலைபோல் உயர்ந்தோரும், தாழ்வதற்கு ஏதுவாகிய செயல்களை ஒரு குண்டுமணி அளவு செய்தாலும், தாழ்ந்து போய்விடுவர்)

குன்று-மலை: குன்றுதல்-தாழ்தல்: குன்றி-குண்டுமணி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த இரண்டாவது காட்சியில், கும்பகர்ணன், குடிப் பெருமையைக் காக்கவேண்டும் என்ற குறள் நெறியால் இயக்கப்படுகின்றான்.

மூன்றாவது காட்சி :

முதல் நாள் போரில் தோல்வியுற்று, வெறுங்கையோடு இலக்கை புக்க இராவணன், மறுநாள் போருக்கு அனுப்புவதற்கு, கும்பகர்ணனை அழைத்து வரச் செய்கின்றான்.

போர்க் கோலத்தோடு கொண்டுவந்து நிறுத்தப் பட்டுள்ளான் கும்பகர்ணன், தன் அண்ணன் முன்னிலையில்.

குலப் பெருமையைக் குலைக்கக் கூடிய செயலைத் தான், அண்ணன் இராவணன் செய்துள்ளான்: அதனால்தான், முன்பு அனுமனால் எரிக்கப்பட்டது. இப்பொழுது போரில் தோல்வி ஏற்பட்டது. என்பதை நன்கு உணர்ந்தவன் கும்பகர்ணன்.

இப்போதும் அவன், 'குலப்பெருமை அழிந்துவிடக் கூடாதே. அதனை எப்பாடுபட்டாயினும் காக்கவேண்டுமே' என்ற நல்லுணர்வால் உந்தப்பட்டுதான் பேச்சைத் தொடங்குகின்றான்.

**''ஆனதோ வெஞ்சமம்? அலகில் கற்புடைச்
சானகி துயர்இனம் தவிர்ந்தது இல்லையோ?
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ? புகுந்ததோ, பொன்றும் காலமே''**

(கம்-7350)

வெஞ்சமம் - கொடியபோர்: அலகில் - அளவற்ற:
பொன்றுதல் - அழிதல்:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(கொடுமையான போர் வந்துவிட்டதா? அளவற்ற கற்பினை உடைய சானகிப் பிராட்டியின் துன்பம் இன்னும் நீங்கவில்லையா! மண்ணும் விண்ணுமாக வளர்ந்திருந்த உயர்ந்த புகழ் போய்விட்டதா? நாம் அழியும் காலம் வந்துவிட்டதா)

என்ற கேள்விகளோடு தொடங்கிய தன் பேச்சை,

''தையலைவிட்டு அவன் சரணம் தாழ்ந்து, நின்
ஐயறு தம்பியோடு அளவ ளாவுதல்
உய்திறம்; அன்று எனின், உளது. வேறு ஓர்
செய்திறம்; அன்னது தெரியக் கேட்டியால்'

(கம்-7359)

என்று முடித்து. 'நம் வலி எலாம் உடன் உந்துதல் கருமம்' என்று செய்திறம் இன்னது என்பதையும் சுட்டிக்காட்டி நிறுத்தினான் கும்பகர்ணன்.

(சீதையை, இராமனிடம் கொண்டுபோய் விட்டுவிட்டு அவன் திருவடியில் அடைக்கலம் புகுந்து. சந்தேகம் இல்லாத தம்பி வீடணனோடு அளவளாவிக் கொண்டிருத்தல்தான் நாம் பிழைக்கும் வழி)

'உய்திறம் இது: செய்திறம் இது.' என்று கும்பகர்ணன் தெளிவாக எடுத்துப் பேசியுள்ளான். இந்தப் பேச்சுக்கு அடிப்படையாக அமைந்தது,

"ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந்தார்." (திருக்குறள்-952)

தையல்-சீதை: சரணம்-திருவடி:
உய்திறம் - பிழைக்கும் வழி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற திருக்குறள்தான் என்பதை, ஊன்றிக் கவனித்தால் விளங்கும்.

வள்ளுவர் காட்டிய குடிப்பிறப்பின் பெருமை உணர்வால்தான், கும்பகர்ணனை இங்கும் இயங்க வைக்கின்றார் கம்பர்.

கும்பகர்ணன், 'செய்ந்நன்றி மறவாமை' என்ற நல்லுணர்வால் உந்தப்பட்டு, செயல்படுதற்கு ஏற்ற சூழ்நிலையினை, இராவணன்தான் ஏற்படுத்துகின்றான்.

தனது செயலைப் பழித்துப் பேசிய கும்பகர்ணன் மேல் கோபம்கொண்ட இராவணன், தன் தம்பியைப் பார்த்து,

"மறம் கிளர் செருவினுக்கு உரிமை மாண்டனை;
பிறங்கிய தசையொடு நறவும் பெற்றனை:
இறங்கிய கண்முகிழ்த்து. இரவும் எல்லியும்
உறுங்குதி, போய்' என, உளையக் கூறினான்"
(கம்-7362)

'வீரம் காட்டவேண்டிய போருக்கு, நீ தகுதியற்றய வனாக ஆகிவிட்டாய்: நான் கொடுத்த மாமிசத்தையும் கள்ளையும் உணவாகப் பெற்று உடலை வளர்த்துக் கொண்டாய்: நீ. இரவு பகலாக மறுபடியும் உறங்குவதற்குப் போ' என்ற இராவணனது பேச்சு, கும்பகர்ணனது நன்றி உணர்வைத் தட்டி எழுப்பி வைத்துவிட்டது.

மறம்-வீரம்: செரு-போர்: உரிமைமாண்டனை - தகுதியில்லாதவனாயினாய்: தசை-மாமிசம்: நறவு-கள்: கண்முகிழ்த்து-கண்ணை மூடிக்கொண்டு: எல்லி-பகல்: உளைய - வருந்துமாறு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதுவரை குலத்து மான உணர்வால் உந்தப்பட்டுப் பேசிய கும்பகர்ணன், இனி, 'செய்ந் நன்றி மறவாமை, என்ற நல்லுணர்வால் இயக்கப்பட்டுச் செயல்படப் போகின்றான்.

'அண்ணா! நீ, தந்த உணவை உண்டு வளர்த்த இந்த உடலை, இனி, உறங்குவதற்குப் பயன்படுத்த மாட்டேன்: உனக்காகவே பயன்படுத்துவேன்' என்ற நன்றி உணர்வோடு பேசிவிட்டு, போர்க்களம் நோக்கிப் புறப்படுகின்றான் கும்பகர்ணன்.

போர்க்களத்திற்குச் செல்வதற்கு முன், இறுதியாக இராவணனிடம் கும்பகர்ணன் பேசிய பேச்சு, அவன் உள்ளத்தில் ஆழ்ந்துகிடந்த நன்றி உணர்வைக் காட்டுகின்றது.

"இற்றை நாள்வரை, முதல்,யான் முன்செய்தன
குற்றமும் உளஎனின் பொறுத்தி: கொற்றவ!
அற்றதால் முகத்தினில் விழித்தல்; ஆரிய!
பெற்றனென் விடை. "என, பெயர்ந்து போயினான்.

(கம்-7369)

'இன்றுவரை, நான் முன்செய்த குற்றங்களை எல்லாம் பொறுத்துக் கொள்ளவேண்டும்: இன்றோடு உன் முகத்தில் விழித்தல் என்பது தீர்ந்துபோய்விட்டது நான் போர்க்களம்போக விடை பெற்றுக் கொண்டு விட்டேன்' என்பதுதான் தன் அண்ணனிடம் கும்பகர்ணன் பேசிய இறுதிப் பேச்சு.

இற்றை-இன்று; கொற்றவன்-அரசன்; அற்றது-முடிந்து விட்டது: ஆரியன்-உயர்ந்தவன்; பெயர்ந்து-நீங்கி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'நிச்சயமாக இறந்துவிடுவோம்' என்று தெரிந்தும்' (விதி நின்றது: பிடர்பிடித்து உந்தநின்றது: பொன்றுவென்) போர்க்களத்துக்கு. அண்ணனுக்காகச் செல்கின்றான் கும்பகர்ணன் என்றால், அவனது நன்றி உணர்வு எவ்வளவு ஆழமானது என்பதை உணரலாம்.

நான்காவது காட்சி:

இராவணனது அவைக்களத்தில் காணப்பட்ட கும்பகர்ணன், நான்காவதாகக் காணப்படும் இடம் போர்க்களம்.

இலங்கைப் போர்க்களத்தில் தான், கும்பகர்ணனது நன்றி உணர்வு, பீறிட்டெழுந்து செயல்படுகின்றது.

நீதி உணர்ந்த கும்பகர்ணனைத் தன்பக்கம் சேர்த்துக் கொள்வதற்காக, அவனை அழைத்துவருமாறு இராகவன், வீடணனை, கும்பகர்ணன் பக்கம் அனுப்பி வைக்கின்றான்.

தன்பக்கம் வந்த தம்பி வீடணன் எதற்கு இங்கு வந்துள்ளான் என்பதை நன்கு உணராத கும்பகர்ணன், தம்மோடு சேர்ந்து கொள்வதற்காகவே வந்துவிட்டானோ, 'என்று எண்ணி, அவன்மேல் இரக்கம்கொண்டு பேசுகின்றான்.

'தம்பி! நீ உய்ந்தனை ஒருவன் போனாய் என மனம் உவக்கின்றேன். தெளிவிலார் போல மீளவந்தது தனியேவந்தது ஏன்?' என்று பேச்சைத் தொடங்குவதற்கு முன், வந்து, தன்னை வணங்கிய தம்பியை அன்போடு தழுவிக்கொண்டான் கும்பகர்ணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உரையாடல் :

"அவயம் நீ பெற்றவாறும், அமரும் பெறுதல் ஆற்றா-
உவய லோகத்தினுள்ள சிறப்பும் கேட்டேன்
உவந்தேன், உள்ளம்.
கவிஞரின் அறிவு மிக்காய்! காலன்வாய்க்
களிக்கின்றேம் பால்,
நவைஉற வந்ததுஎன்,நீ? அமுது உண்பாய்
நஞ்சுஉண் பாயோ ?
(கம்-7402)

'தம்பி நீ கவிஞர்களைக் காட்டிலும் அறிவு மிக்கவன், உன் அறிவுடைச் செயலால், இராமபிரானிடம் அடைக்கலம் பெற்றுக்கொண்டுவிட்டாய். அது, விண்ணுலகிலும் மண்ணுலகிலும் பெறுதற்கு அரிய சிறப்புடையது. அதனைக் கண்டு நான் மனம் மகிழ்ந்து கொண்டிருக்கின்றேன். அப்படியிருக்கும்போது அந்த இடத்தை விட்டுவிட்டு, குற்றம் பொருந்த இங்குவந்தது ஏதற்காக? நாங்களோ எமன் வாயை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம். சாவா மருந்தாகிய அமுதம் உண்ட நீ, மரணம்தரும் விஷம் உண்ண இங்கு வருகின்றாயா?'

என்ற முன்னுரையோடு தொடங்கிய கும்பகர்ணனது நீண்ட பேச்சில், தம்பி செய்த செயல்தான் உயர்ந்தது என்றும், அவன் திரும்ப இங்குவருவது விரும்பத்தக்கது அன்று என்றும், அவன் உணர்ந்துள்ளான் என்பது தெரிகிறது.

அவயம்-அடைக்கலம்: அமரர்-தேவர்கள்:
உவயலோகம்-இரண்டு உலகம் (விண், மண்):
காலன்-எமன்: நவை-குற்றம்: நஞ்சு-விஷம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த நீண்ட பேச்சைக் கேட்ட, வீடணன், தானும். அண்ணன் கும்பகர்ணனைத் தன்பக்கம் அழைப்பதற்கு, காரண காரியத்தோடு நீண்டதொரு உரை நிகழ்த்தினான். தம்பிசெய்த செயலைப் பாராட்டும் அண்ணனாக, இருக்கின்றான் கும்பகர்ணன். ஆனால், தம்பியின், நற்செயலைத்தான் செய்வதற்குத் தயங்குகின்றான் அவன். ஏன்? கும்பகர்ணனது 'செய்ந்நன்றி மறவாமை 'என்ற நற்பண்புதான் தம்பி கொண்ட நற்செயலைச் செய்ய முடியாதபடி தடுக்கின்றது.

"எனக்கு அவன் தந்தசெல்வத்து இலங்கையும்
அரசும் எல்லாம்
நினக்கு நான் தருவன்: தந்து, உன் ஏவலின்
நெடிது நிற்பென்:
உனக்கு இதின் உறுதி இல்லை: உத்தம! உன்பின்
வந்தேன்
மனக்கு நோய்துடைத்து வந்த மரபையும் விளக்கு
வாழி" (கம்-7411)

'அண்ணா! நீ உத்தமன், உனக்கு நன்மை தருவது எதுவோ அதனைச் சொல்கின்றேன். கேள்: எனக்கு இராமபிரான் கொடுத்த செல்வத்தையும் இலங்கை அரசையும் ஆகிய எல்லாவற்றையும் உனக்கு நான் தருகின்றேன்: பிறகு உன்னுடைய ஏவலின்படி நடக்கின்ற வேலைக் காரனாக நான் இருப்பேன்: இதனைவிட உனக்கு நன்மை தரக்கூடியது வேறு என்ன இருக்கிறது? இதனை நீ செய்தால், உனது தம்பியாகிய என்னுடைய மனத்துயரை நீக்கியவனாவாய். அரக்கர் குலத்தையும் காத்தவனாக இருப்பாய்' என்ற நீண்ட முன்னுரையோடு தொடங்கிய வீடணன் பேச்சு பதினைந்து கவிதைகளால் நிறைவு பெறுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதனை எல்லாம் அமைதியாகக் கேட்டுக்கொண்டு இருந்த கும்பகர்ணன், வீடணன் சொன்ன நற்கருத்துக் களை ஏற்றுக்கொண்டு, அதனைச் செயல்படுத்த இயலாத தனது நிலைமையை விளக்குகின்றான் கும்பகர்ணன்.

'செய்ந் நன்றி கொன்ற மகற்கு உய்வு இல்லை' என்ற வள்ளுவ அறத்தை, தனது முதன்மை அறமாகக் கொண்டதால்தான், கும்பகர்ணன், தன் தம்பி, சென்ற நல்வழியில் செல்ல முடியாதவனாகின்றான்.

அவனது நன்றி உணர்வுக்கு முன்னால்' இராமபிரானது அருள், முனிவரின் கருணை, செல்வம், இலங்கை அரசு, தம்பியின் பணிவிடை அத்தனையும் கீழ்மையானதாகவே-தாழ்ந்ததாகவே-குறைவுடையதாகவே காட்சியளிக்கின்றன.

'நன்றி மறப்பது நன்று அன்று' என்ற வள்ளுவ அறம் கும்பகர்ணன் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது அதனால், அவன், இறுதியாக. உறுதியாக,

"நீர்க்கோல வாழ்வை நச்சி,
நெடிதுநாள் வளர்த்து. பின்னை
போர்க்கோலம் செய்து விட்டாற்கு
உயிர்விடாது அங்குப் போகேன்"

என்று உரைத்தான். மேலும், 'அண்ணனுக்காக உயிர் கொடுப்பதுதான் தம்பியின் கடமை' என்ற கருத்தை வற்புறுத்த

"உம்பரும் பிறரும் போற்ற,
ஒருவன் மூவுலகை ஆண்டு,
தம்பியை இன்றி மாண்டு
கிடப்பனோ தமையன் மண்மேல்.'

இவ்வாறு எடுத்துப் பேசினான் கும்பகர்ணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'பொரு தொழிற்கு உரியர் ஆகி,
ஒருத்தரின் முன்னம் சாதல்
உண்டவர்க்கு உரியது, என்று, தன்

நன்றி உணர்வால் உந்தப்பட்ட கும்பகர்ணன், தான் கொண்ட நற்கொள்கையினின்றும் பிறழ முடியாததைக் காரணம் காட்டிப் பலவாறாக எடுத்துரைத்தான்,

வீடணனுக்கு விடையாகக் கொடுத்த கும்பகர்ணனது கருத்துக்கள், பதின் மூன்று கவிதைகளாக விரிந்துள்ளன. அவ்வளவு விரிவிற்கு அடிப்படை, அவன் உள்ளத்தில் வேரூன்றி இருந்த, 'கொன்று அன்ன இன்னா செய்யினும் அவர் செய்த ஒன்று நன்று உள்ளக் கெடும்' என்ற வள்ளுவரது அறம்தான்.

உணர்வுகள் உற்பத்தியாகும் இடம், மனித உள்ளம் தான், அதில் உற்பத்தியாகும் உணர்வுகள் நல்லனவாகவும் இருக்கலாம்: தீயனவாகவும் இருக்கலாம். ஒவ்வொன்றற்கும் ஒரு கூட்டம் உண்டு. அந்தக் கூட்டத்துள் எந்த உணர்வால் மனிதன் இயக்கப்படுகின்றானோ, அந்த உணர்வுக்கு ஒரு அடையாளப் பொருளாக நின்று மனித சமுதாயத்தில் காட்சி அளிக்கின்றான் அவன்.

கும்பகர்ணனிடத்தில், குலப்பெருமையைக் காத்தல், அண்ணனிடம் அன்பு, தம்பியிடம் அளவற்ற பாசம், அறத்தின் மேன்மையைப் புரிந்துகொள்ளுதல், தீமைகண்ட இடத்து அதனை எதிர்த்துத் தடுத்துப் பேசும் அஞ்சாமை, வீரம், முதலிய நற்குணங்கள் பல இருந்தன. இவைகள் எல்லாம் நல்லுணர்வின் குழுவைச் சார்ந்தவைகள்தான்.

அனால், இவைகள் எல்லாவற்றையும் அடக்கி வைத்துவிட்டு, செய்ந்நன்றி மறவாமை என்ற நல்லுணர்வே கும்பகர்ணனிடம் தலைதூக்கி நின்றது. அந்த நல்லுணர் வாலேயே அவன் இயக்கப்பட்டதால் 'செய்ந்நன்றி அறிதல்' என்ற வள்ளுவ அறத்திற்கு அடையாளப் பெருமகனாக விளங்குகின்றான் கும்பகர்ணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ :

8

சான்றாண்மை

சால்பு :

பல நற்குணங்களும் நிறைந்து அமைதி பெற்ற ஒரு மன நிலைக்கே சால்பு என்று பெயர். இதனை, தெய்வப் புலவர் திருவள்ளுவர் அணிநயம்படக் கூறுகின்றார்.

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்." (திருக்குறள்-983)

'சால்பு என்பது ஒரு மண்டபம்: அதனைத் தாங்கிக் கொள்வதற்குத் தூண்கள் வேண்டும். அந்தத் தூண்களுக்கு. அன்பு. நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்று பெயர்கள். இந்தத் தூண்களில் எது இல்லை என்றாலும் மண்டபம் சரியாக நிற்காது. ஆகவே இந்த ஐந்து நற்குணங்களும் எங்கு சேர்ந்து இருக்கிறதோ, அங்குதான் 'சால்பு' என்ற பெரும் பண்பு இருக்கும். இதனை உடையவர்கள்தான் சான்றோர் எனப்படுவர்' என்பது இக்குறளின் கருத்தாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்' என்று புறநானூறு சான்றோரை அடையாளம் காட்டிக் கொடுக்கும்.

'பல நற்குணங்களாலும் நிறைந்து அவற்றை ஆடல்-தன்மை'-சான்றாண்மை என்று விளக்கம் கொடுப்பார் பரிமேலழகர்.

இத்தகைய சான்றோர்கள் எப்படி வாழ்வார்கள், அவர்களால் உலகுக்கு என்ன நன்மை என்பதை எல்லாம், சான்றாண்மை என்ற அதிகாரத்தில் விவரமாகத் தெரிவிக்கின்றார் வள்ளுவப் பெருந்தகையார்.

"ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார். (திருக்குறள்-989)

'சால்புடைமையாகிய கடற்குக்கரை என்று சொல்லப்படுவார், ஏனைக் கடலும் கரையுள் நில்லாமல் காலந்திரிந்தாலும் தாம் திரியார்' என்று உரை, கூறிய பரிமேலழகர். 'சான்றாண்மையது பெருமை தோன்ற அதனைக் கடலாக்கியும், அதனைத் தாங்கிக் கொண்டு நிற்றலின், அஃது உடையாரைக் கரையாக்கியும் கூறினார்' என்று இந்தக் குறளுக்கு விளக்கமும் தருவார்.

"சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை." (திருக்குறள்-990)

'பல குணங்களானும் நிறைந்தவர் தம் தன்மை குன்றுவாராயின், பெரிய நிலமானது உயிர் முதலாகிய

ஆழி-கடல்: பெயரார்-திரியார்: குன்றின்-குறைந்தால்: இருநிலம்-பெரிய உலகம்: பொறை-பொறுமை:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரத்தைத் தாங்குதல் செய்யாது' என்று சான்றோர்களது பெருமையைச் சொல்வார் வள்ளுவர். உலகம் இந்த உயிர் முதலான பாரத்தைத் தாங்கிக்கொண்டு இருக்கவேண்டும் என்றால், சான்றோர்கள் பொறுமையைத் தாங்கிக்கொண்டு இருக்கவேண்டும். அடுத்து, ஒரு கேள்வியாக அமையும் ஒரு குறள்.

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யக்கால்
என்ன பயத்ததோ சால்பு" (திருக்குறள்-987)

தமக்குத் துன்பம் செய்தவர்க்கும் இன்பமே செய்ய வேண்டும்: அப்படிச் செய்யவில்லை என்றால், சான்றாண்மையால் என்ன பயன்? என்பது வள்ளுவர் கேள்வி. செய்யவேண்டும் என்ற பதில், இந்தக் குறளிலியே அடங்கி உள்ளது.

இத்தகைய சான்றாண்மையின் பெருமையைத் தன் காப்பியத்துள் விளக்கிக்காட்ட எண்ணம் கொண்டார் கவிச்சக்கரவர்த்தி.

அந்த நல்லெண்ணத்தைக் காப்பியத் தலைவன் மூலமாகவே நிறைவுசெய்து கொண்டார் கவிஞர் பெருமான்.

காப்பியத் தலைவன் :

இராமபிரான், காப்பியத் தலைவன். இந்தப் பெருமானை, 'நவை அறு குணங்கள் என்னும் பூண் எலாம் பொறுத்தமேனிப் புண்ணிய மூர்த்தி' என்றும், செப்ப அருங்குணத்து இராமன் என்றும், அழியா அழகு உடையான் என்றும், அறத்தின் மூர்த்தி என்றும், வள்ளல் என்றும், அவனது குணத்தை வைத்தே அறிமுகம் செய்வார் கவிஞர் பெருமான்.

இன்னா-துன்பம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எல்லா நற்குணங்களும் நிறைந்த இராமபிரான், தான் கடைப்பிடித்து வாழ்ந்த வாழ்க்கை நெறி, வள்ளுவர் வகுத்துக் காட்டிய சான்றாண்மையைத் தழுவியதுதான் என்பதை, சில நிகழ்ச்சிகளின் மூலம் விளக்கிக் காட்டுவார் கவிச்சக்கரவர்த்தி.

காப்பியத் தலைவன், நடையில் நின்று உயர்நாயகன் (நடை-ஒழுக்கம்) ஆகையால், அப்பெருமானுடைய இல்வாழ்க்கை அமைப்பே, வள்ளுவரின் சான்றாண்மையை அடிப்படையாக்கிக் கொண்டதாகும்.

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு" (திருக்குறள்-148)

'பிறனது மனையாளைத் தமது உள்ளத்தாலும் கருதாது இருப்பதுதான் பேராண்மை எனப்படும். பெரிய ஆண்தகைமை என்பது பிறன்மனை நோக்காமை. இதுதான், சான்றாண்மை உடையவர்க்கு, அறமும், நிரம்பிய ஒழுக்கமும் ஆகும்.' என்று சான்றோர்க்கு உரிய அறத்தையும் ஒழுக்கத்தையும் கூறுகின்றார் வள்ளுவர்.

அறத்தின் மூர்த்தியாய், நடையில் (ஒழுக்கம்) நின்று உயர் நாயகனாய் விளங்கும் காப்பியத் தலைவன், 'இந்த இப்பிறவியில் இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்' என்ற ஏகதாரக் கொள்கையனாய் வாழ்ந்தான் என்று கவிச்சக்கரவர்த்தி, இராமபிரானது இல்வாழ்க்கை அமைப்பைக் காட்டுவார்.

சான்றோர்க்கு அறமாகவும் ஒழுக்கமாகவும் அமைய வேண்டியது, பிறன்மனை நோக்காமை. இந்த வள்ளுவ நெறியையே, நன்னெறியாகக் கொண்டு வாழ்ந்த இராமபிரான், சான்றாண்மையோடு பேராண்மையும் பெற்று விளங்குகின்றான்.

ஆன்ற-நிறைந்த: ஒழுக்கு-ஒழுக்கம்:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காவிய நாயகனது பேராண்மையை இல்வாழ்க்கையில் காட்டிய கவிச்சக்கரவர்த்தி, அந்த நாயகனது ஊராண்மையைப் போர்க்களத்தில் காட்டுகின்றார்,

ஊராண்மை :

'போராண்மை, பேராண்மை, சான்றாண்மை என்ற வரிசையில் சேர்க்கப்படவேண்டிய ஒன்று, ஊராண்மையாகும். ஆளும் தன்மைக்குத்தான் ஆண்மை என்று பெயர். உதவி செய்தலை ஆளும் தன்மைக்கு, ஊராண்மை என்று பெயர்.

"பேராண்மை என்ப தறுகண்: ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு. (திருக்குறள்-772)

'போர்க்களத்தில் பகைவர்க்கு அஞ்சாது நின்று எதிர்த்துப் போர் செய்தலை, பேராண்மை என்று சொல்வார்கள் பெரியோர்கள். அந்தப் பேராண்மைக்கு, கூர்மை அடையும் வாய்ப்பும் போர்க்களத்தில் கிட்டலாம்.'

போர் செய்து கொண்டிருக்கும் பகைவனுக்கு, அந்தப் போர்க்களத்தில் ஒரு தாழ்வு வந்துவிட்டால், அப்போது அவனோடு போர் செய்யாது, அவனுக்கு உதவி செய்வதுதான், அந்தப் பேராண்மையின் கூர்மையாகும்.' என்பது இந்தத் திருக்குறளின் பொருள்.

ஏகதாரக் கொள்கைக்கு, விரோதமாக வரும் பிறன்மனைப் பார்வையை எதிர்த்து வெல்வது இல்வாழ்வில் பேராண்மை. அகப்போரில் காட்டும் பேராண்மை இது.

புறப்போரில் காட்டும் பேராண்மை, அஞ்சாமல், தனக்கு எதிராகவரும் பகைவனோடு போர்செய்து,

---

தறுகண்-அஞ்சாமை: ஊராண்மை - உபகாரியாந் தன்மை: எஃகு-கூர்மை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவனை வெல்லுதல். அவனுக்கு உதவுவது, எப்படி பேராண்மையின் கூர்மையாகும்?

பேராண்மையை, எதிரியைக் கொல்லும் ஒரு படைக்கலம் என்று வைத்துக்கொண்டால், அவனுக்கு உதவுதல் என்பது, அந்தப் படைக்கலத்தை நன்கு கூர்மை யாக்கிக் கொள்வதற்குச் சமமாகும், என்பது இக்குறளின் கருத்தாகும்.

படைக்கலம் கூர்மை பெற்றுவிட்டால் தனக்குத் துன்பம் கொடுத்த பகைவனைக் கொல்வதற்கு-வெல்வதற்கு எளிதாகிவிடும்.

பேராண்மை, ஊராண்மை (உதவுதல்) யால்தான் கூர்மை பெறுகிறது என்ற கருத்தை, விளக்கமாகத் தெரிந்து கொள்ள, மற்றொரு குறளின் பொருளை நாடவேண்டும்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்." (திருக்குறள்-314)

'நமக்குத் துன்பம் கொடுத்தவரைத் தண்டிக்க வேண்டும், தண்டிக்கவில்லை என்றால், மேலும் அவர் துன்பம் கொடுத்துக் கொண்டேயிருப்பார். அந்தத் தண்டனையை எப்படிக் கொடுப்பது ?

துன்பம் கொடுத்தவர் வெட்கம் அடையும்படி, அவர்க்கு, நல்லதையே செய்யவேண்டும். 'இவ்வளவு நன்மையை நமக்குச் செய்தவருக்கு, துன்பம் கொடுத்து விட்டோமே' என்று முன்பு துன்பம் கொடுத்தவர், தன் செயலுக்கு இரங்கி, நாணம் அடைவார், அவரது பகைமை எண்ணம் ஒழியும்'-இதுவே இதன் பொருள்.

இன்னா-துன்பம்: ஒறுத்தல்-தண்டித்தல்: நன்னயம்-நன்மை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதுவே, பகைவனை வெல்வதற்குச் சரியான வழியாகும். அதனால், இன்னா (துன்பம்) செய்த பகைவனுக்கு நன்மை செய்வதுதான் பேராண்மையின் கூர்மையாகும்.

இன்னா செய்தாருக்கு நன்மை செய்தலும், போர்க்களத்தில், தன்னை எதிர்த்த பகைவனுக்கு உதவுதலும் யாரால் செய்யமுடியும்? 'சான்றோரால்தான், இந்த அரியகாரியம் செய்யமுடியும்.

காப்பியத்துள் சான்றோனாக விளங்கும் காப்பியத் தலைவன் இராமபிரான் மூலமாகத்தான் இதனை மெய்ப்பித்துக் காட்டுகின்றார் கவிச்சக்கரவர்த்தி.

போர்க்களம் :

இலங்கையில் முதல்நாள் போர். இராவணன், தன் பெரும் படைகளுடன் வந்து இராமபிரானை எதிர்த்து நின்றான். நிறைகுணத்தவன் முன்னால், முறைதுறந்தவன், தன் படைகளை எல்லாம் இழந்து, தான் ஏறிவந்த தேரையும் இழந்து, வெறுங் கையினனாக நிற்கின்றான்.

ஆணவத்தால் வந்த இராவணன் அனைத்தையும் இழந்து, தோல்வியைத் தழுவியவனாக நிற்கும் காட்சியைக் கவிதையில் வடித்துக் காட்டுகின்றார் கம்பர்,

"அறம்கடந்தவர் செயல்இது' என்று, உலகுஎலாம்
ஆர்ப்ப
நிறம்கரிந்திட, நிலம்விரல் கிளைத்திட நின்றான்-
இறங்கு கண்ணின், எல்அழி முகத்தினன், தலையன்,
வெறுங்கை நாற்றினன், விழுதுடை ஆல்அன்ன
மெய்யன்." (கம்-7265)

இறங்கு கண்ணினன்-கீழ்நோக்கிய கண்களை உடையவன்: எல்-ஒளி: நாற்றினன்-தொங்கவிட்டவன்: ஆல்-ஆலமரம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கால் விரல், நிலத்தைக் கீறுகிறது: கண்கள், கீழ்நோக்குகின்றன: முகம், ஒளி இழந்தது: தலை, குனிந்தது: கைகள் வெறுமையாக ஆயுதம் இன்றித் தொங்குகின்றன. விழுதுகள் தொங்குகின்ற ஆலமரம் போன்ற உடலினனாக நிற்கின்றான் இராவணன். 'அறத்தைக்கடந்த பாவியின் செயல் இத்தகையதுதான்' என்று இவன் காட்சியைக்கண்ட உலகத்தவர் மகிழ்ச்சி ஆரவாரம் கொள்கின்றனர்.

இந்தப் பாவியை இப்பொழுதே கொன்றுவிட்டால், உலகத்தினர் அனைவரும் மகிழ்வர்.

உலகினர் மகிழ்ச்சிக்காக, தனது சான்றாண்மை குன்றும் செயலைச் செய்ய விரும்பவில்லை இராமபிரான்.

எல்லாம் இழந்து தாழ்வுற்று நிற்கும் அந்த பாவியின் மேல் கருணை காட்டுகின்றான் காப்பியத் தலைவன்.

தனக்கு, அந்த இராவணன் செய்த கொடுஞ் செயல் அளவற்றதாக இருந்தாலும், அதனைப் பொறுத்துக் கொண்டு, அவனுக்கு மன்னிப்பு நல்கத் தயாராகின்றான் இராகவன்.

ஆள்ஐயா! உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை: இன்றுபோய். போர்க்கு
நாளை வா'என நல்கினன்-நாகு இளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்."

(கம்-7271)

'மூன்று உலகங்களையும் ஆளுதற்கு ஏற்ற வன்மை பெற்ற ஐயனே! உனக்குத் துணையாக வந்த அத்தனைப் படைகளும், காற்றால் மோதப் பெற்ற பூளைப் பூவைப்

மாருதம்-காற்று: நல்கினன்-கொடுத்தான்:
கமுகு-பாக்குமரம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போல அழிந்துவிட்டன. நீயும் கண்டாய். ஆயுதம் இல்லாத உன்னை-வலியிழந்த உன்னை நான் கொல்லமாட்டேன்: நீ உன் இருப்பிடத்திற்கு இன்று போ! நாளை வா: நாளைய உன்னுடைய வருகை, போருக்காயினும் சரி: அல்லது நீ செய்த தீய செயலை எண்ணிப் பார்த்து, அதன் மன்னிப்புக்கு ஆயினும் சரி: எப்படி இருப்பினும், இன்று போ: நாளை வா.' என்பது. இராவணனுக்கு, இராம பிரான் சொன்ன அருள்-உரை.

'நாளை வா' என்று சொன்னான் எனக் கவிதையில் இல்லை. 'நல்கினன்' என்ற சொல்தான் 'சொன்னான்' என்ற இடத்தில் இருக்கிறது

இப்பொழுது, இராவணன் உயிரைப் பறித்திருக்கலாம், இராமன். 'நீ இன்று போ நாளை வா என்பதன் மூலம் அந்த பாவியின், உயிரைக் கொடுத்துள்ளான் இராமபிரான்.

வள்ளல்தானே நல்க முடியும்! கோசல நாடுடை வள்ளல் இராமபிரான். இராவணன் நாளை, மன்னிப்பு வேண்டி வந்தால், தனது கோசலத்தை நல்குவான்.

இந்தக் கவிதையில் அமைந்த சொற்கள் ஒவ்வொன்றற்கும் ஆழ்பொருள் உண்டு.

இங்கு காணவேண்டியது, கவிதை நயம்அல்ல! காவிய நாயகன். இந்தச் சூழ்நிலையில் வள்ளுவ நெறியை எந்த அளவில் கடைப் பிடித்துள்ளான் என்பதுதான், தனக்கு இன்னா (துன்பம்) செய்த ஒரு பாவிக்கு, அழிய வேண்டிய உயிரை அழிக்காமல் கொடுத்து உதவுதல் மூலம் இராமன் நன்னயம் செய்துள்ளான். இந்த நன்னயத்தைப் பெற்றுக் கொண்ட இராவணன் இலங்கை நகருக்குச் சென்று நாணத் தால் சாம்புகின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்னா செய்தார் நாணும்படி அவர்க்கு நன்னயம் செய்வதுதானே சான்றோர் கடமை.

இராமபிரான் அத்தகைய சால்புடைப் பெருமகனாக விளங்குவதை இக்கவிதை காட்டுகின்றது.

காப்பியத்தலைவனது சான்றாண்மையை வெளிப் படுத்திக் காட்டுவதற்கு, மேலும் ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்கின்றார் கவிச்சக்கரவர்த்தி.

தயரதனும் இராமனும்:

இலங்கைப் போர் முடிந்தது. சீதை அக்கினிப் பிரவேசம் நிறைவேறியது. இதற்குப் பிறகு, விண்ணுலகம் சென்றதயரதன், தேவர்களது வேண்டுகோளுக்கு ஏற்ப மண்ணுலகம் வருகின்றான்.

வந்த தந்தையை, மைந்தன் வந்தித்து மகிழ்ந்தான். 'வேத வேந்தனும் அவன் மலர்த்தாள் மிசை விழுந்தான்' என்பது கவிதைத் தொடர்.

தனது பாதங்களில் விழுந்து வணங்கிய மைந்தன் இராமனை, தந்தை தயரதன் எடுத்து தழுவிக்கொண்டான்.

அடுத்து இருவர்க்கும் உரையாடல்கள் நிகழ்ந்தன. உரையாடலின் இறுதியில், தயரதன் தன் மைந்தன் இராமனிடத்தில், நீ, ஏதேனும் என்னிடம் பெற்றுக்கொள்ள வேண்டும். அதனைக்கேள், தருகின்றேன் என்றான் 'யான் உனக்கு ஈவது ஒன்று உறுதி உயர்குணத்தோய்' என்பது தசரதன் மொழிந்த அன்புமொழி.

இந்த அன்புமொழி, இராமனை வாய்திறக்க வைத்துவிட்டது இராமபிரானது திருவாயினின்றும் வெளியேறிய சொற்கள், உலகத்து உயிர்கள் எல்லாம் இராமபிரானை, 'வாழ்க வாழ்க' என்று வாழ்த்தும்படிச் செய்துவிட்டன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"ஆயினும், 'உனக்கு அமைந்தது ஒன்றுஉரை' என,
அழகன்'
'தீயள்என்று நீ துறந்த என்தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்வரம் தருக!'எனத் தாழ்ந்தான்:
வாய்திறந்து எழுந்து ஆர்த்தன, உயிர்எலாம்,
வழுத்தி." (கம்-10079)

'அப்பா, என் தாரம் அல்லள், தீயவள்' என்று யாரைத் துறந்தாயோ, அந்தத் தெய்வம் எனக்குத் தாய் ஆகவேண்டும்: 'அவன் எனக்கு மகனும் அல்லன்' என்று எந்தப் பரதனை வெறுத்தாயோ, அவன் எனக்குத் தம்பி ஆகவேண்டும். இந்த வரத்தைக் கொடு' என்று சொல்லி, தயரதனது பாதங்களில் வீழ்ந்து வணங்கினான் இராமன்.

இந்த சொற்களைக் கேட்டன உலகத்து உயிர்கள், உடனே 'ஸ்ரீராம் ஜெயராம்' என்று பெருமானை வாழ்த்தத் தொடங்கிவிட்டன.

வாழ்த்தும் வண்ணம் அந்த சொற்களில் என்ன அடங்கியிருக்கிறது ?

'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் சான்றாண்மையைத் தழுவிக்கொண்டுள்ளன அந்தச் சொற்கள்.

'தனது சிற்றன்னை கைகேசிதான், இராமன் பட்ட துன்பங்களுக்கெல்லாம் காரணம்: அப்படியிருந்தும், அவளைத் தாயாகவும் தெய்வமாகவும் அழைப்பதற்கு, வணங்குவதற்கு அருள் செய்யவேண்டும் என்று இராமபிரான் கேட்கின்றான் என்றால், இந்த, சால்புடைமையை என்ன என்று வியப்பது !

நிறைவாக :

கவிச்சக்கரவர்த்தி கம்பர், தெய்வப் புலவர் திருவள்ளுவர் தந்த சான்றாண்மைக்கு ஏற்ப, காப்பியத் தலைவன் இராமபிரான் செயல்பட்டுள்ளான் என்பதை அழகுபட, நயம்பட, தம் காப்பியத்துள் காட்டியுள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதனுள் எடுத்தாளப்பட்ட திருக்குறள் முதற்குறிப்பு

1	பண்புடையார்	21	வேண்டாமை
2	வாய்மை	22	தூஉய்மை
3	மலர்மிசை	23	புணர்ச்சி
4	நிறைமொழி	24	குணனும்
5	கற்றதனால்	25	ஆய்ந்தாய்ந்து
6	தள்ளா	26	விரைந்து
7	மனத்துக்கண்	27	வேட்ப
8	உழுவார்	28	சொல்லும்
9	உறுபசியும்	29	தந்தை
10	புறந்தூய்மை	30	நன்றி மறப்பது
11	யாம் மெய்யா	31	கொன்றன்ன
12	பொய்யாமை	32	எந் நன்றி
13	பொய்யாமை அன்ன	33	குன்றின்
14	தன்நெஞ்சு	34	ஒழுக்கமும்
15	பொய்ம்மை	35	அன்பு, நாண்
16	உள்ளத்தால்	36	ஊழி பெயரினும்
17	ஒன்றா	37	சான்றவர்
18	அருட்செல்வம்	38	இன்னா செய்தார்க்கும்
19	கேடில் விழுச்செல்வம்	39	பிறன் மனை
20	செல்வத்துள்	40	இன்னா செய்தாரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதனுள் வந்துள்ள கம்பராமாயணச் செய்யுள்கள் முதற்குறிப்பு. எண்கள், சென்னைகம்பன் கழகப்பதிப்பில் கண்டவை

1	வையம்	31	எடுத்த
2	நொய்தின்	32	வரதன்
3	கதிர் படு	33	உந்தை தீமை
4	வண்மை இல்லை	34	வரன் நில்
5	தெள்வார்	35	முன்னர்வந்து
6	கல்லாது	36	வாய்மை
7	அம்மாண்	37	அடித்தலம்
8	புக்குப்பெருநீர்	38	நந்தியம்
9	உண்நீர்	39	அரியதாம்
10	ஐயா யான்	40	கார்குலா
11	திசைத்ததும்	41	கோதைவில்
12	ஏயவரங்கள்	42	ஆழ் நீர்க்கங்கை
13	ஆகொடியாய்	43	ஆழ நெடுந்திரை
14	நாரியர்	44	மஞ்சுஎன
15	மெய்யே	45	இம்மலை
16	நின்மகன்	46	அல்லல் மாக்கள்
17	கரதலம்	47	நன்று நன்று
18	எனைத்துள	48	சொல்லிய
19	என்புகிழ்கின்றது	49	நன்னகர்
20	தள்ள அரிய	50	ஆசுஇல்
21	வாக்கினால்	51	ஆனதோ
22	சூடினமலர்க்கரம்	52	தையலை
23	முன்னைநும்குல	53	மறம் கிளர்
24	உந்தையோ	54	இற்றைநாள்
25	நல்நெறி	55	அவயம்
26	தஞ்சம் இவ்உலகம்	56	எனக்கு
27	ஆன்றபேர்	57	அறம் கடந்தவர்
28	ஆழியை	58	ஆள் ஐயா
29	கேட்டனன்	59	ஆயினும்
30	தாய் உரை		

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"Formed free of cost, and with the compliments of the Department of Education, Govt. of India, New Delhi."

உதவிய நூல்கள்

1. புறநானூறு
2. கவிதைக் கலை—ரா. ஸ்ரீ. தேசிகன்
3. திருவள்ளுவ மாலை
4. பாரதியார் பாடல்கள்
5. மலரும் மாலையும்
6. கம்ப நாடர்—செல்வக் கேசவராய முதலியார்
7. 'க-தி' தரும் கரதற்சுவை—இராமசாமி
8. கம்பராமாயணசாரம்—வெ. ப. சுப்ரமணிய முதலியார்
9. டி. கே. சிதம்பரநாத முதலியார்—ல. சண்முகசுந்தரம்
10. கம்பன் கவிதை—கட்டுரைத் தொகுப்பு
11. கம்பராமாயணம்—உரை. வை. மு. கோ
12. கம்பராமாயணம்—உரை. அ. ப. க. க. பதிப்பு
13. கம்பராமாயணம்—மூலம், சென்னைக் கம்பன் கழகப் பதிப்பு
14. கம்பராமாயணம்—மூலம் மர்ரே அண்டு கம்பெனி.
15. கம்பன் புதிய பார்வை— அ ச. ஞானசம்பந்தன்
16. கம்பருக்குக் கதை கொடுத்தவர் வான்மீகியா? —கு. திருமேனி.
17. திருக்குறள் உரைக்கொத்து
18. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் —மு.வ.
19. கலித்தொகை—நச்சினார்க்கினியர் உரை.
20. நற்றிணை
21. செந்தமிழ்-பத்திராசிரியர், நாராயணசாமி அய்யங்கார்
22. பெரிய புராணம்

6855

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

GURUKUL KANGRI LIBRARY
Accession 16.2.91
Class on
Cat on
Tag etc.
Checked
Any Other

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"Forwarded free of cost, and with the compliments of the Department of Education, Govt. of India, New Delhi."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிச்சக்கரவர்த்தி

சன்-மூன் பிரிண்டர்ஸ், அம்மாப்பேட்டை, சேலம்-3

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar